வெளியீடு 9-4-2007

Issued 9-4-2007

776
04/07/07
6
04/07/07

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஜனவரி 22, 2007—தொகுதி 19—எண் 1

Monday, the 22nd January, 2007—Volume 19—No. 1

1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

D
V21, 31/07
227442

[Price Rs. 3.00

**22–1–2007**

## உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| | ஆளுநரும் அமைச்சரவையும் | iii-viii |
| | Governor and Council of Ministers | ix-xiii |
| | பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xvii |
| | பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| 1. | **இரங்கற் குறிப்பு—** | |
| | முன்னாள் உறுப்பினர் மறைவு | 1-2 |
| 2. | **வினாக்கள்–விடைகள்—** | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 2-37 |
| 3. | **அறிவிப்பு—** | |
| | மாற்றுத் தலைவர்கள் பட்டியல் | 38 |
| 4. | **தகவல் கோரல்—** | |
| | (அ) சென்னை மாநகராட்சித் தேர்தல் தொடர்பான வழக்கு | 38-43 |
| | (ஆ) திருப்பூர் பின்னலாடைத் தொழில் பாதிப்பு | 44 |
| 5. | **அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| | (அ) சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 44-45 |
| | (ஆ) தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 45-46 |

| | பக்கங்கள் |
|---|---|
| **6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—** | 46-1[illegible] |
| * திரு. வீ. கருப்பசாமி பாண்டியன் | 46-64 |
| திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் | 64-82 |
| திரு. தி. வேல்முருகன் | 82-95 |
| செல்வி கே. பாலபாரதி | 95-105 |
| * திரு. அ. சௌந்திரபாண்டியன் | 106-110 |
| திரு. தி. இராமசாமி | 111-117 |
| **7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 117-118 |




## ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப பணி, இந்தியக காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி & தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள் மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

**2. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள்

**3. மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

**4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

**5. கூட்டுறவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

கூட்டுறவு மற்றும் புள்ளியியல்

**6. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**7. பொதுப் பணித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம் மற்றும் செயற்திட்டப் பணிகள்

**8. உயர் கல்வித் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன

22744-13
சென்னை-600 008
நூலகம்



**9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

**10. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

**11. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

**12. வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள் மற்றும் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள்–அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

**13. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

**14. செய்தித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**15. உணவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

**16. வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு

**17. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

**18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர்கள், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



**19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

**20. கைத்தறித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

**21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல

**22. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

**23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

**24. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

**25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

26. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவலர் மறுவாழ்வு

27. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள்

29. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

30. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

31. கதர்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** – **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Mines and Minerals, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports and Special Initiatives

2. **Minister for Finance** – **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislative Assembly and Elections

3. **Minister for Electricity** – **The Hon. Thiru Arcot N. Veerasamy:**

Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

4. **Minister for Rural Development and Local Administration** – **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

5. **Minister for Co-operation** – **The Hon. Thiru Ko.Si. Mani:**

Co-operation and Statistics

6. Minister for Agriculture .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development

7. Minister for Public Works .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works

8. Minister for Higher Education .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology and Welfare of Ex-Servicemen

9. Minister for Transport .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. Minister for Backward Classes .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act

11. Minister for Rural Industries .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**

Rural Industries including Cottage Industries and Small Industries



12. Minister for Revenue and Law .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors and Law, Courts, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies

13. Minister for Tourism .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism and Tourism Development Corporation

14. Minister for Information .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing and Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

15. Minister for Food .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

16. Minister for Housing and Slum Clearance .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Housing, Rural Housing, Housing Development, Slum Clearance Board and Accommodation Control

17. Minister for Health .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Health, Medical Education and Family Welfare

18. Minister for Labour .. **The Hon. Thiru T.M. Anbarasan:**

Labour, Population, Employment and Training, Steel Control and Newsprint Control, Census and Urban and Rural Employment

19. Minister for Hindu Religious and Charitable Endowments .. **The Hon. Thiru K.R. Periakaruppan:**

Hindu Religious and Charitable Endowments

20. Minister for Handlooms .. **The Hon. Thiru NKK. P. Raaja:**

Handlooms and Textiles

21. Minister for School Education .. **The Hon. Thiru Thangam Thenarasu:**

School Education and Archaeology

22. Minister for Commercial Taxes .. **The Hon. Thiru S.N.M. Ubayadullah:**

Commercial Taxes

23. Minister for Environment .. **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**

Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs

24. Minister for Forests .. **The Hon. Thiru N. Selvaraj:**

Forests and Cinchona



25. Minister for Highways .. **The Hon. Thiru M.P. Saminathan:**

Highways and Ports

26. Minister for Social Welfare .. **The Hon. Dr. (Tmt.) Poongothai:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes

27. Minister for Animal Husbandry .. **The Hon. Tmt. P. Geetha Jeevan:**

Animal Husbandry

28. Minister for Adi Dravidar Welfare .. **The Hon. Tmt. A. Tamilarasi:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

29. Minister for Fisheries .. **The Hon. Thiru K.P.P. Samy:**

Fisheries and Fisheries Development Corporation

30. Minister for Dairy Development .. **The Hon. Thiru U. Mathivanan:**

Milk and Dairy Development

31. Minister for Khadi .. **The Hon. Thiru K. Ramachandhiran:**

Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வி.பெ. துரைசாமி

## மாற்றுத் தலைவர்கள்#

திரு. ப. ரங்கநாதன்

திரு. துரை சந்திரசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. தி. வேல்முருகன்

செல்வி கே. பாலபாரதி

திரு. வை. சிவபுண்ணியம்

## செயலாளர்

திரு. மு. செல்வராஜ்

---

# 22-1-2007 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வெ.சி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்ரமணியன், எம்.ஏ. | .. குழு அலுவலர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எல்., பி.எட். | .. துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. கோ. தேவராசன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |



| | |
|---|---|
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | - தலைமை நிருபர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | - தலைமை நிருபர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | - பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - தலைமை நிருபர் |

## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

1. அங்கையற்கண்ணி, செல்வி ஆ. - சங்கராபுரம்
2. அப்துல் பாசித், திரு. எச். - வாணியம்பாடி
3. அப்பாவு, திரு. மு. - ராதாபுரம்
4. அமரமூர்த்தி, திரு. து. - அரியலூர்
5. அரி, திரு. கோ. - திருத்தணி
6. அருண்மொழிதேவன், திரு. ஆ. - சிதம்பரம்
7. அருள் அன்பரசு, திரு. - சோளிங்கர்
8. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. - திருச்செந்தூர்
9. அன்பரசன், திரு. தா.மோ. - ஆலந்தூர்
10. அன்பழகன், திரு. எம். - பழனி (செ.வ.)
11. அன்பழகன், திரு. கே.பி. - பாலக்கோடு
12. அன்பழகன், பேராசிரியர் க. - துறைமுகம்
13. அன்பில் பெரியசாமி, திரு. - திருச்சிராப்பள்ளி—I
14. ஆவுடையப்பன், திரு. இரா. - அம்பாசமுத்திரம்
15. ஆறுமுகம், திரு. கி. - செங்கல்பட்டு
16. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
17. இராசசேகரன், திரு. எஸ். - ஆலங்குடி
18. இராணி, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆ.வா.)
19. இராமகிருஷ்ணன், திரு. நா. - கம்பம்
20. இராமசாமி, திரு. கரி. - திருவாடனை

| | | |
|---|---|---|
| 21. | இராமசாமி, திரு. தி. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 22. | இராமசுவாமி, திரு. கே.பி. | ராசிபுரம் |
| 23. | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | சாத்தூர் |
| 24. | இராமச்சந்திரன், திரு. டி. | தளி |
| 25. | இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். | பள்ளிப்பட்டு |
| 26. | இராம்பிரபு, திரு. இரா. | பரமக்குடி (செ.வ.) |
| 27. | இராஜா, திரு. எஸ்.ஆர். | தாம்பரம் |
| 28. | இராஜேந்திரன், திரு. ஆ. | வீரபாண்டி |
| 29. | இராஜேந்திரன், திரு. இரா. | பனமரத்துப்பட்டி |
| 30. | இராஜேந்திரன், திரு. க. | ஜெயங்கொண்டம் |
| 31. | இராஜேந்திரன், திரு. சபா. | நெல்லிக்குப்பம் |
| 32. | இராஜ்குமார், திரு. ம. | பெரம்பலூர் (செ.வ.) |
| 33. | இளமதி சுப்பிரமணியன், திருமதி | வலங்கைமான் (செ.வ.) |
| 34. | இளவரசன், திரு. வீர. | திருமங்கலம் |
| 35. | இளவழகன், திரு. கே.எல். | ஆற்காடு |
| 36. | உதயசூரியன், திரு. தா. | சின்னசேலம் |
| 37. | உதயம் சண்முகம், திரு. | அறந்தாங்கி |
| 38. | உபயதுல்லா, திரு. சி.நா.மீ. | தஞ்சாவூர் |
| 39. | உலகநாதன், திரு. கே. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 40. | எதிரொலி மணியன், திரு. கோ. | பெரணமல்லூர் |
| 41. | ஐயப்பன், திரு. கோ. | கடலூர் |
| 42. | கணபதி, திரு. ந. | வானூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 43. | கணேசன், திரு. ஆர்.டி. | தேனி |
| 44. | கண்ணப்பன், திரு. மு. | தொண்டாமுத்தூர் |
| 45. | கண்ணன், திரு. பெ. | தாரமங்கலம் |
| 46. | கண்ணன், திரு. வே. | செஞ்சி |
| 47. | கமலாம்பாள், திருமதி பெ. | காஞ்சிபுரம் |
| 48. | கருணாநிதி, கலைஞர் மு. | சேப்பாக்கம் |
| 49. | கருப்பசாமி, திரு. சொ. | சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 50. | கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. | தென்காசி |
| 51. | கலியவரதன், திரு. வீ.ஏ.டி. | முகையூர் |
| 52. | கலீலூர் ரஹமான், திரு. ம.அ. | அரவக்குறிச்சி |
| 53. | கலைராஜன், திரு. வி.பி. | தியாகராய நகர் |
| 54. | காந்தி, திரு. ஆர். | இராணிப்பேட்டை |
| 55. | காமராஜ், திரு. பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 56. | காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. | மதுராந்தகம் |
| 57. | காவேரி, திரு. வை. | எடப்பாடி |
| 58. | கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். | கலசப்பாக்கம் |
| 59. | கீதா ஜீவன், திருமதி பி. | தூத்துக்குடி |
| 60. | குணசேகரன், திரு. சு. | சிவகங்கை |
| 61. | குணசேகரன், திரு. ம. | மானாமதுரை (செ.வ.) |
| 62. | குத்தாலம் க. அன்பழகன், திரு. | குத்தாலம் |
| 63. | குமரகுரு, திரு. இரா. | திருநாவலூர் |

64. குருசாமி, திரு. செ. .. அந்தியூர் (செ.வ.)

65. கோபாலன், திரு. போ. .. உதகமண்டலம்

66. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்

67. கோவிந்தசாமி, திரு. சி. .. திருப்பூர்

68. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)

69. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்

70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி .. அச்சரப்பாக்கம் (செ.வ.)

71. சண்முகம், திரு. எஸ்.வி. .. மதுரை மேற்கு

72. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்

73. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை

74. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)

75. சந்திரகாசி, திரு. மா. .. வரகூர் (செ.வ.)

76. சந்திரா, திருமதி மு. .. ராஜபாளையம் (செ.வ.)

77. சாமி, திரு. ஆர். .. மேலூர்

78. சாமி, திரு. கே.பி.பி. .. திருவொற்றியூர்

79. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்

80. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். .. ஆண்டிமடம்

81. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி

82. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்

83. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி

84. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருவள்ளூர்

85. சின்னசாமி, திரு. அ. .. பேரணாம்பட்டு (செ.வ.)



86. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்

87. சின்னச்சாமி, திரு. செ. - மருங்காபுரி

88. சின்னதுரை, திரு. கு. - தலைவாசல் (செ.வ.)

89. சின்னப்பன், திரு. பொ. - விளாத்திகுளம்

90. சின்னராஜ், திரு. ஓ.கே. - மேட்டுப்பாளையம்

91. சீனிவாசன், திரு. கு. - பூங்கா நகர்

92. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி

93. சுந்தரம், திரு. எம்.ஆர். - ஆத்தூர்

94. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி

95. சுந்தர், திரு. க. - உத்திரமேரூர்

96. சுப்பிரமணியம், திரு. ஓ. - பவானிசாகர்

97. சுப்புராம், திரு. ராம. - திருமயம்

98. சுப்ரமணியன், திரு. ந. - குளத்தூர் (செ.வ.)

99. சுரேஷ் ராஜன், திரு. என். - கன்னியாகுமரி

100. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். - நாட்றாம்பள்ளி

101. செங்குட்டுவன், திரு. டி. - கிருஷ்ணகிரி

102. செங்கோட்டையன், திரு. கே.ஏ. - கோபிசெட்டிப்பாளையம்

103. செந்தமிழன், திரு. ஞா. - சைதாப்பேட்டை

104. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. - மேல்மலையனூர்

105. செந்தில் பாலாஜி, திரு. வே. - கரூர்

106. செல்வம், திரு. கு. - மங்களூர் (செ.வ.)

107. செல்வராஜ், திரு. என். - முசிறி

108. செல்வராஜ், திரு. து. - ஸ்ரீவைகுண்டம்

109. செல்வி ராமஜெயம், திருமதி .. புவனகிரி

110. சேகரன், திரு. கூ.ந. .. திருவெறும்பூர்

111. சேகர், திரு. எஸ்.வி. .. மயிலாப்பூர்

112. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

113. சையது கௌஸ் பாஷா, திரு. சை. .. மதுரை மத்தி

114. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி

115. சௌந்திரபாண்டியன், திரு. அ. .. குன்னூர் (செ.வ.)

116. ஞானசேகரன் திரு. சி. .. வேலூர்

117. ஞானதாஸ், திரு. ஆர். .. சிவகாசி

118. டில்லி பாபு, திரு. ப. .. அரூர் (செ.வ.)

119. தங்கமணி, திரு. பி. .. திருச்செங்கோடு

120. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை

121. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி

122. தண்டபாணி, திரு. மா. .. வேடசந்தூர்

123. தமிழரசி, திருமதி ஆ. .. சமயநல்லூர் (செ.வ.)

124. தமிழரசு, திரு. அ. .. ஓமலூர்

125. தமிழ்செல்வன், திரு. ஏ. .. ஏற்காடு (ஆ.வா.)

126. தம்பிதுரை, முனைவர் மு. .. பர்கூர்

127. தர்மலிங்கம், திரு. எல்.பி. .. சத்தியமங்கலம்

128. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு

129. தியோடர் ரெஜினால்டு, திரு. த. .. பத்மநாபபுரம்

130. திருநாவுக்கரசு, திரு. கே. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)



131. துரைக்கண்ணு, திரு. இரா. .. பாபநாசம்

132. துரை சந்திரசேகரன், திரு. .. திருவையாறு

133. துரைசாமி, திரு. வி.பெ. .. சங்கரி (செ.வ.)

134. துரைமுருகன், திரு. .. காட்பாடி

135. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி

136. தேன்மொழி, திருமதி எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)

137. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு

138. நெடுஞ்செழியன், டாக்டர் க. .. கபிலர்மலை

139. நெடுஞ்செழியன், திரு. ரெ. .. புதுக்கோட்டை

140. நேரு, திரு. கே.என். .. திருச்சிராப்பள்ளி-2

141. பதர் சயீத், திருமதி .. திருவல்லிக்கேணி

142. பத்மாவதி, திருமதி பி. .. நன்னிலம் (செ.வ.)

143. பரஞ்ஜோதி, திரு. மு. .. ஸ்ரீரங்கம்

144. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)

145. பலராமன், திரு. பி. .. பொன்னேரி (செ.வ.)

146. பழனிசாமி, திரு. ஆர்.எம். .. மொடக்குறிச்சி

147. பன்னீர்செல்வம், திரு எம். .. சீர்காழி (செ.வ.)

148. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி

149. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்

150. பாண்டுரங்கன், திரு. சு. .. அணைக்கட்டு

151. பாபு, திரு. வி.எஸ். .. புரசைவாக்கம்

152. பாரதி மோகன், திரு. ஆர்.கே. .. திருவிடைமருதூர்

153. பாலபாரதி, செல்வி கே. .. திண்டுக்கல்

154. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
155. பிரபாவதி, திருமதி பெ. .. தாராபுரம் (செ.வ.)
156. பிரேமா, திருமதி ஆர். .. அவினாசி (செ.வ.)
157. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். .. கடையநல்லூர்
158. புஷ்பராஜ், திரு. செ. .. கண்டமங்கலம (செ.வ.)
159. பூங்கோதை, டாக்டர் (திருமதி) .. ஆலங்குளம்
160. பெரியகருப்பன், திரு. கே.ஆர். .. திருப்பத்தூர்
161. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
162. பெரியசாமி, திரு. மு.க. .. பூம்புகார்
163. பெரியண்ணன், திரு. பி.என். .. பெண்ணாகரம்
164. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. கோயம்புத்தூர் கிழக்கு
165. பொள்ளாச்சி
வி. ஜெயராமன், திரு. .. பொள்ளாச்சி
166. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
167. பொன்னுசாமி, திரு. கே. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
168. பொன்னுதுரை, திரு. செ. .. பெருந்துறை
169. போளூர் ம. வரதன், திரு. . செங்கம் (செ.வ.)
170. போஸ், திரு. ஏ.கே. .. திருப்பரங்குன்றம்
171. மகேந்திரன், திரு. இ. .. உசிலம்பட்டி
172. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
173. மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. .. திருவோணம்
174. மணி, திரு. எஸ். .. பொங்கலூர்
175. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
176. மணி, திரு. ஜி.கே. .. மேட்டூர்



177. மதிவாணன், திரு. உ. .. திருவாரூர் (செ.வ.)
178. மலரவன், திரு. தா. .. கோயம்புத்தூர் மேற்கு
179. மாணிக்கம், திரு. இரா. .. குளித்தலை
180. மாரிமுத்து, திரு. வே. .. நாகப்பட்டினம்
181. மாலைராஜா, திரு. என். .. திருநெல்வேலி
182. முருகவேல், திரு. கே. .. முதுகுளத்தூர்
183. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
184. மூர்த்தி, திரு. டி. .. திருப்போரூர் (செ.வ.)
185. மூர்த்தி, திரு. பி. .. சோழவந்தான்
186. மேகநாதன், திரு. த.அ. .. காவேரிப்பட்டினம்
187. மோகன், திரு. பெ. .. ஒட்டபிடாரம் (செ.வ.)
188. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
189. யசோதா, திருமதி டி .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
190. ரங்கநாதன், திரு. ப. .. வில்லிவாக்கம்
191. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
192. ரவிக்குமார், திரு. து. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
193. ரவிச்சந்திரன், திரு. எல். .. சேலம்–I
194. ராணி வெங்கடேசன், திருமதி .. சாத்தான்குளம்
195. ராதாகிருஷ்ணன், திரு. ல. .. கோவில்பட்டி
196. ராமச்சந்திரன், திரு. கா. .. கூடலூர்
197. ராமநாதன், திரு. கே.வீ. .. பவானி
198. ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். .. இளையான்குடி
199. ராஜகுமார், திரு. எஸ். .. மயிலாடுதுறை

| | | |
|---|---|---|
| 200. | ராஜசேகரன், திரு. மா. | .. தொட்டியம் |
| 201. | ராஜன், திரு. அ. | .. நாகர்கோவில் |
| 202. | ராஜா, திரு. என்கேகே.பி. | .. ஈரோடு |
| 203. | ராஜா, திரு. தி.க. | .. திருப்பத்தூர் |
| 204. | லட்சுமணன், திரு. ச. | .. போடிநாயக்கனூர் |
| 205. | லதா, திருமதி ஜி. | .. குடியாத்தம் |
| 206. | லீமா றோஸ், திருமதி ரா. | .. திருவட்டாறு |
| 207. | வசந்தகுமார், திரு. எச். | .. நாங்குநேரி |
| 208. | வாதராஜன், திரு. ரா. | .. விருதுநகர் |
| 209. | விசுவநாதன், திரு. இரா. | .. நத்தம் |
| 210. | விடியல் எஸ். சேகர், திரு. | .. காங்கேயம் |
| 211. | விஜயகாந்த், திரு. | .. விருத்தாசலம் |
| 212. | விஜயகுமார், திரு. கே.எஸ். | .. கும்மிடிப்பூண்டி |
| 213. | விஜயகுமார், திரு. பெ.சு. | .. போளூர் |
| 214. | விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. | .. செய்யாறு |
| 215. | வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். | .. பேராவூரணி |
| 216. | வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. சேலம்–2 |
| 217. | வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. வேதாரண்யம் |
| 218. | வேலு, திரு. எ.வ. | .. தண்டராம்பட்டு |
| 219. | வேலுசாமி, திரு. இல. | .. தருமபுரி |
| 220. | வேலுசாமி, திரு. செ.ம. | .. பல்லடம் |
| 221. | வேலுமணி, திரு. சு.ப. | .. பேரூர் |
| 222. | வேல்துரை, திரு. பா. | .. சேரன்மகாதேவி |



| | | |
|---|---|---|
| 223. | வேல்முருகன், திரு. தி. | .. பண்ருட்டி |
| 224. | வைத்திலிங்கம், திரு. ஆர். | .. ஒரத்தநாடு |
| 225. | ஜாண் ஜேக்கப், திரு. எஸ். | .. கிள்ளியூர் |
| 226. | ஜாண் ஜோசப், திரு. ஞா. | .. விளவங்கோடு |
| 227. | ஜெகன்மூர்த்தி, திரு. பூ. | .. அரக்கோணம் (செ.வ.) |
| 228. | ஜெயக்குமார், திரு. டி. | .. இராயபுரம் |
| 229. | ஜெயக்குமார், முனைவர் கு. | .. நாமக்கல் (செ.வ.) |
| 230. | ஜெயபால், திரு. எஸ். | .. குளச்சல் |
| 231. | ஜெயராமன், திரு. எஸ்.பி. | .. வந்தவாசி (செ.வ.) |
| 232. | ஜெயலலிதா, செல்வி ஜெ | .. ஆண்டிபட்டி |
| 233. | ஸ்டாலின், திரு. மு.க. | .. ஆயிரம் விளக்கு |
| 234. | ஹசன் அலி, திரு. கு. | .. இராமநாதபுரம் |
| 235. | ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் | .. நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. இரா. விடுதலை | .. | மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## தை 8, விய - திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 ஜனவரி 22, திங்கட்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்*
*கிறையென்று வைக்கப் படும்."*

*நீதிநெறியுடன் அரசு நடத்தி, மக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளன்தான் மக்களுக்குத் தலைவன் எனப் போற்றப்படுவான்.*

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் திருமதி கவிநிலவு தர்மராஜ அவர்கள் 11-12-2006 அன்று மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி கவிநிலவு தர்மராஜ் அவர்கள் மொடக்குறிச்சி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1991 முதல் 1996 வரை சிறப்பான முறையில் பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மறைந்த உறுப்பினருக்கு மரியாதை செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

[2007 ஜனவரி 22

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா எண்கள் 1 மற்றும் 2, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**3—**

### மண் பரிசோதனை நிலையம்

***9454 —திரு. ம. குணசேகரன்:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

*மானாமதுரையில் மண் பரிசோதனை நிலையம் ஒன்று அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மானாமதுரையில் மண் பரிசோதனை நிலையம் ஒன்று கட்டத் தற்போது அரசிடம் உத்தேசத் திட்டம் ஏதுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மானாமதுரை தொகுதி, விவசாயத்தை நம்பிய தொகுதி ஆகும். என்னுடைய தொகுதியில் நகர்ப்புறமே இல்லை. அதிகமான கிராமப்புற மக்கள்தான் வசித்து வருகிறார்கள். இந்தப பகுதியில் அனைத்து மக்களும விவசாயத்தை நம்பித்தான் வாழ்ந்து வருகிறார்கள். அப்படியிருக்கின்ற சூழ்நிலையில் என்னுடைய தொகுதியில் கரும்பு, வாழை, நெல், பருத்தி போன்றவை பயிரிடப்படுகின்றன. இந்தச் சூழ்நிலையில் எங்களுடைய மானாமதுரை பகுதிக்கு ஒரு மண் பரிசோதனை நிலையத்தை அமைத்துக் கொடுத்தால் என்னுடைய



2007 ஜனவரி 22]

பகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளும அந்தப் பகுதியிலுள்ள விளை நிலங்களை, அந்த மண்களைப் பரிசோதனை செய்து, எந்த மண்ணில் எதைச் சாகுபடி செய்தால் அந்தப் பகுதிகளில் அதிகமான விளைச்சலைப் பெற முடியும் என்பதை அறிவார்கள். அதனால் என்னுடைய மானாமதுரை தொகுதியில் ஒரு மண் பரிசோதனை நிலையம் அமைத்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டத்திலே மானாமதுரை இடம் பெறுகிறது. சிவகங்கையில் இப்பொழுது மண் பரிசோதனை நிலையம செயல்பட்டு வருகிறது. மானாமதுரைக்கும், சிவகங்கைக்கும் இடையே 35 கிலோ மீட்டர் தொலைவுதான். இப்பொழுது அந்த மண் பரிசோதனை நிலையம் அங்கே செயல்பட்டு வரக்கூடிய காரணத்தினால், அதை மானாமதுரை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் சட்டமன்றத் தொகுதி, கரூர் ஊராட்சி ஒன்றியம் முழுவதும் காவிரி ஆறு, நொய்யல் ஆற்றுப் பாசன விவசாயத்தை நம்பியுள்ளது. இப்பகுதியில், இந்த ஆற்றில் திருப்பூர் சாயக் கழிவு நீர் வந்து விவசாயத்தையே முழுமையாகப் பாழ்படுத்திவிட்டது. ஆகையால், கரூர் சட்டமன்றத் தொகுதி, கரூர் ஊராட்சி ஒன்றியத்தில் எத்தகைய விவசாயப் பயிர்களைப் பயிரிட முடியும் என்பதை அறிய மண் பரிசோதனை நிலையம் அமைக்க அரசு முன் வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9—35*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள ஏழை எளிய சுமார் 18,40,000 பம்புசெட் விவசாயிகளுக்கு

[2007 ஜனவரி 22

இலவச மின்சாரம் தந்து, ஏழை விவசாயிகள் வாங்கிய கடனைத் திரும்ப அடைக்க முடியாத நிலையிலிருந்தபோது, 6,866 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்து, விவசாயிகள் வாழ்வில் ஒளியேற்றிய தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் விவசாயிகள் மகிழ்ச்சியோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலையில் மண் பரிசோதனை நிலையம் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் இருந்துகொண்டிருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக்கொள்வது, மண் பரிசோதனை நிலையத்திற்கு எப்போது மண்ணை எடுத்துச் சென்றாலும் உடனடியாகப் பரிசோதனை செய்து தருகின்றார்கள். ஆனால், எல்லா விவசாயிகளும் விவசாயத்திற்கு முன்னால் அந்த மண்ணை எடுத்துக்கொண்டு போய்ப் பரிசோதனை செய்ய வேண்டுமென்ற ஒரு awareness அவர்களுக்கு இன்னும் உருவாகவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லா மாவட்டங்களிலும் இருக்கின்ற மண் பரிசோதனை நிலையங்களிலும், ஒவ்வொரு பருவ காலத்திலும், சாகுபடி செய்வதற்கு ஒரு மாதத்திற்கு முன்னால், பத்திரிகைகள் மூலமாகவும், மற்ற நாளிதழ்கள் மூலமாகவும் விளம்பரங்களைச் செய்து, ஒவ்வொரு தாலுகா வாரியாக எடுத்து, அவர்களுடைய பெயரைக் குறித்து அந்தந்த இடங்களில் வைத்து, மண் பரிசோதனை செய்கின்ற அதிகாரிகளே ஒட்டுமொத்தமாக அவற்றையெல்லாம் பெற்று மண் பரிசோதனை செய்து, ஒரு வாரம் அல்லது 10 நாட்களுக்குள் அவர்களுக்கு அந்த மண்ணில் என்னென்ன சத்துக்கள் இருக்கின்றன, என்ன சத்து குறைவாக இருக்கிறது, எவ்வாறு அந்த மண்ணை வளப்படுத்த வேண்டுமென்ற தகவலைத் தெரிவிக்கின்ற வாய்ப்பை உருவாக்கித் தர இந்த அரசு முன் வருமா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது 19 மாவட்டங்களில் மண் பரிசோதனை நிலையங்களும், 16 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்களும் தமிழகத்திலே செயல்பட்டு வருகின்றன. மண் பரிசோதனை, ஆய்வு, ஆலோசனை, முறையாக இப்போது வழங்கப்பட்டு வருகிறது. அதை இன்னும் வேகப்படுத்த வேண்டுமென்று இந்த அரசு தற்போது துறைக்கு ஆணையிட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.



2007 ஜனவரி 22]

**4—**

## ஏரியை ஆழப்படுத்துதல்

***141—திரு. கு. செல்வம்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், வெலிங்டன் ஏரியை ஆழப்படுத்தவும், கரையை உயர்த்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** பேரவைத் தலைவர் அவர்களே,

தங்கள் அனுமதியோடு, ஏற்கெனவே இங்கே அச்சடிக்கப்பட்டுத் தந்திருக்கிற அந்தப் பதிலை, நான் படிப்பதன் அடிப்படையில் மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால், அது ரொம்ப old one ஆக இருக்கிறது. இது latest.

இந்த அணையை I.I.T. மற்றும் வேறு பல மண் தன்மை ஆராய்ச்சி வல்லுநர்கள் ஆராய்ச்சி செய்து கொடுத்த அறிக்கையும், இவ்வணைக்குக்கீழே 50 மீட்டரில் அங்கே இருக்கிற அஸ்திவாரம் சரியாக இருக்குமானால், புதிய மண் அணையைக் கட்டி இணைக்கலாம் என்ற கருத்தும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இறுதியில், அணையின் முன் பக்கத்தில் ஒரு concrete cut off wall—சுவர் அமைத்து, அணையின்கீழே உள்ள மண் மற்றும் சிதைந்த கல் படிமங்களில் தண்ணீர் புகாமல் தடுத்துச் சீரமைக்கும் பணியை ஏற்றுக்கொள்வது என முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மேலும், 2006—ல் திரும்பவும் 25.6 அடி ஆழம் தண்ணீர் நிரப்பியபோது, மேலும் 80 மீட்டர் நீளத்திற்கு வெடிப்பும், சரிவும் ஏற்பட்டுள்ளதால், வடிவமைப்பு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் அந்தப் பகுதியிலுள்ள களிமண் முழுவதையும் எடுத்துவிட்டு, அதன்கீழேயுள்ள நெருங்கிய கற்கள் பகுதிக்குப் புதிய கான்கிரீட்டினால் நீர்க் கசிவுத் தடுப்புச் சுவர் கட்டி, அதன்மீது மண் அணையைக் கட்ட வடிவமைப்பு தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதற்கான வடிவமைப்பு மற்றும் மதிப்பீடு, ஓரிரு மாதங்களில் முடிந்துவிடும். ஏப்ரல் 2007—ல் நீர்த்தேக்கத்தில் தண்ணீர் காலியானதும், பணி துவங்க வாய்ப்புள்ளது. இதற்கான தோராய மதிப்பீடு, சுமார் ரூ. 15 கோடி செலவாகும் என்று தெரிகிறது.

[2007 ஜனவரி 22

முற்பகல் 9—40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 67 கிராமங்கள் விவசாயத்திற்காக வெலிங்டன் ஏரியை நம்பி இருக்கின்றன. ஏறக்குறைய 40,000 ஏக்கரில் அந்த ஏரியை நம்பி விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், கடந்த 10, 15 ஆண்டுகளாகத் திடீர், திடீரென்று மண் சரிவு ஏற்பட்டு, அங்கே விவசாயிகளுக்குச் சரியான முறையிலே தண்ணீர் செல்ல இயலாத நிலை இருக்கிறது. அதை நம்பி இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் ஊரை விட்டே காலி செய்துகொண்டு, சென்னை கோயம்பேட்டிலும், கொல்கத்தா, மும்பை போன்ற பகுதிகளிலும் குடியேறி வருகிறார்கள். விவசாயிகளுக்காக அதிகம் செய்கின்ற நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய அரசு, என்னுடைய தொகுதியில் இருக்கின்ற வெலிங்டன் ஏரியை, 15 கோடி ரூபாய் செலவானாலும், அதைச் சரிசெய்து 40,000 விவசாயிகளைப் பாதுகாத்துத் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இது 1913—லே ஆரம்பித்து, 1923—லே முதல் உலகப் போர் நடந்த காலத்திலே கட்டப்பட்டது. அப்போது மண் ஆராய்ச்சி எல்லாம் கிடையாது. எங்கேயோ மேட்டிலிருந்த மண்ணை எடுத்து வந்து தட்டி, கொட்டிவிட்டார்கள். அன்றையிலிருந்து இந்த அரிப்பு, தரை சரிவது, தரை அழுத்துவது என்பது தொடர் கதையாகத்தான் இருந்துகொண்டே இருக்கிறது. ஆகையால், அப்போதைக்கப்போது ஏற்படுகின்ற அந்தச் சரிவுகளைச் சரிசெய்வது, பிறகு மறுபடியும் சரிவது என்ற நிலையிலேதான் 1923—லேயிருந்து இன்று வரையிலே இருக்கிறது. அதற்கு ஒரு நிரந்தரப் பரிகாரம் காண வேண்டுமானால், அந்த மண் சரியில்லை. அதற்குக்கீழே இருக்கின்ற மண்ணை எடுத்து concrete போட்டுவிட்டால்தான் ஒரு cut off wall கட்டி, இந்த அணையிலிருந்து புதியதாக ஒரு அணை கட்டினால்தான் நிற்கும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இது நீண்ட நெடுங்காலமாக இருக்கின்ற ஒரு பிரச்சினை. 40,000 ஏக்கர் நீண்ட 28,000 ஏக்கர். எத்தனை ஏக்கராக இருந்தாலும் இதைச் செய்ய வேண்டும் என்ற முனைப்போடுதான், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடிக்கடி ஞாபகப்படுத்தியதால், இதை விரைவுபடுத்தியிருக்கிறோம். இந்த ஆண்டு எடுத்துக்கொள்வதற்கு எல்லாவித முயற்சிகளையும் நான் மேற்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.



2007 ஜனவரி 22]

**திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கிருஷ்ணராயபுரம் தொகுதியிலுள்ள பஞ்சப்பட்டி ஏரி புதர் மண்டி இருக்கின்றது. மிகப் பெரிய ஏரியான அந்த ஏரியைத் தூர் வாரி, ஆழப்படுத்தவும், கரையை உயர்த்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வளவு பெரிய ஏரி புதர் மண்டி இருந்தால், இவ்வளவு நாள் காத்திராமல், முன்பே ஒரு கேள்வி போட்டிருக்கலாம். இருந்தாலும் பரவாயில்லை. மாண்புமிகு உறுப்பினர் எழுதிக் கேட்டால், இந்த ஆண்டு எடுத்துக்கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்தில் இருக்கிற ஏரிகளில் வெலிங்டன் ஏரி, வீராணம் ஏரி, பெருமாள் ஏரி ஆகியவை மிகப் பெரிய ஏரிகள் என்பது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சருக்கு மிக நன்றாகத் தெரியும். சமீபத்தில், கொஞ்ச காலத்திற்கு முன்பு பெய்த அடைமழையின் காரணமாக வீராணம் ஏரி நிரம்பி, அது உடைகின்ற ஒரு ஆபத்து ஏற்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரே பல நாட்கள் அங்கே முகாமிட்டு, பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டார். அது உடையாமல் இருப்பதற்கு, அந்த ஏரியைத் தூர் வாரி, ஆழப்படுத்தி, கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அந்த அணை பலப்படுத்தப்பட்டது. மீண்டும் தற்போது அந்த அணையைப் பலப்படுத்தி, இதுபோன்று எப்பொழுதாவது ஒரு முறை நிரம்புகின்ற அந்த வீராணம் ஏரியில் உடைப்பு ஏற்பட்டால், சிதம்பரம், புவனகிரி, பரங்கிப்பேட்டை பகுதிகள் முழுவதும் அழிவதற்கான வாய்ப்பிருக்கிறது என்று மக்கள் பெரும் பீதிக்குள்ளாகின்றார்கள். ஆகவே இந்த அரசே அதைத் தூர் வாரி, அந்த அணைகளைப் பலப்படுத்தி, அதற்கு வருகின்ற இணை வாய்க்கால்களை எல்லாம் செப்பனிடுவதற்கு ஆவன செய்ய வேண்டும். அதேபோல், பெருமாள் ஏரி உடைந்தால், ஆலப்பாக்கம், பூவாணைக்குப்பம், நடுத்திட்டு, நொச்சிக்காடு, தியாகவள்ளி போன்ற பல்வேறு கிராமங்கள் வெள்ளத்தால் மூழ்கக்கூடிய ஆபத்து இருக்கிறது. இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடப்பு ஆண்டில் இதற்கு முன்னுரிமை அளித்து, இந்த ஏரிகளைப் பலப்படுத்துவதற்கும், கரைகளைப் பலப்படுத்துவதற்கும், ஆழப்படுத்தி, அந்த நீர் வருகின்ற வாய்க்கால்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, போதுமான பாதுகாப்பு

[2007 ஜனவரி 22

நடவடிக்கைகளை எடுப்பதற்கும் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீராணம் ஏரியை ஏற்கெனவே தூர் வாரி, ஆழப்படுத்தி இருக்கிறோம். தண்ணீர் தேங்குகின்றபோது அதிகமான கொள்ளளவு வந்தால், தடுப்பதற்காக அதனுடைய கரையை உயர்த்தியிருக்கிறோம். இப்போது கரை ஓரத்தில் இருக்கிற மண்ணை forefront—ல் கொண்டு வந்து கொட்டி, அதாவது 1,200 m.c.ft. இருக்கக்கூடிய இடத்திலே 900 m.c.ft. வந்துவிடுகிறது. மீண்டும் அந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறோம். அதன்மீது இணைக்கிற சாலை இருக்கிறது. அந்தச் சாலையைக்கூட, 5 கோடி ரூபாய் கொடுத்துப் பலப்படுத்தியிருக்கிறோம். மீண்டும் அதைப் பலப்படுத்துகின்ற பணி தேவைப்படுகிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அதை அரசு கருத்திற்கொண்டு, அதற்கு வேண்டிய தக்க நடவடிக்கையை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.

**திரு. என். மாலைராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி தொகுதியில் அமைந்துள்ள நயினார்குளம் என்பது 3 கிலோ மீட்டர் சுற்றளவு உள்ளது. கடந்த ஆட்சிக் காலத்தில், அதில் 1 கிலோ மீட்டருக்குத்தான் ஒரு தடுப்புச் சுவர் அமைத்திருக்கின்றார்கள். மீதி இருக்கின்ற 2 கிலோ மீட்டரை விட்டுவிட்டார்கள். நம்முடைய தலைவர் அரசு, விவசாயிகள் நலன் கருதி, அந்த 2 கிலோ மீட்டருக்கும் இந்த ஆண்டிலேயே சுற்றுச் சுவர் அமைப்பதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 9—15

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அது குறித்து எழுதிக் கொடுத்தால், அந்தச் சுற்றுச் சுவர் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 5, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.



2007 ஜனவரி 22]

5—

## சாலை விபத்து

***954 செல்வி கே. பாலபாரதி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா

சாலை விபத்தில் மரணமடைவோர் எண்ணிக்கையைக் குறைக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளின் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சாலை விபத்தில் மரணமடைவோர் எண்ணிக்கையைக் குறைக்க, போக்குவரத்துத் துறை மற்றும் போக்குவரத்துக் காவல் பிரிவினர் இணைந்து, பல்வேறு சாலைப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். சாலை விபத்துகள் குறித்துப் பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஓட்டுநர்களுக்குச் சிறப்புப் பயிற்சிகள் அளிப்பதுடன், அவர்களுக்கு வருடந்தோறும் கண் பரிசோதனையும் செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மோட்டார் வாகனப் பிரிவின் 405—வது விதியைக் கடுமையாக அமல்படுத்த வேண்டுமென்று அனைத்துக் காவல் துறை ஆணையர் மற்றும் காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். குடித்து விட்டு வாகனத்தை ஓட்டுபவர்களின் ஓட்டுநர் உரிமங்களை இரத்துச் செய்வதற்கும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், தமிழகத்தில் இயங்கி வரும் அவசர விபத்து சிகிச்சை மையங்களில் முதலுதவி அளிக்கப்பட்டு, மேற்சிகிச்சைக்காக அவர்கள் விரும்பும் அருகிலுள்ள மருத்துவமனைக்குக் கொண்டு சென்று காப்பாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேற்கண்டவாறு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் தமிழகத்தில் இதுவரை விபத்துக்குள்ளான 11,977 நபர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர். சாலை விபத்துகளில் மரணமடைவோர் எண்ணிக்கை தற்போது குறைந்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு

நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இருந்தாலும் சாலை விபத்துகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. குறிப்பாக, இரவில் செல்லக்கூடிய வாகனங்களை அதிகமான வெளிச்சத்துடன் இப்போதும் ஓட்டிச் சென்றுகொண்டிருக்கிறார்கள். அந்த லைட்டினுடைய நடுப் பகுதியில், மையப் பகுதியில் கறுப்பு (black) பெயின்ட் பூசுவது உட்பட, அதற்கான விதிகளை அவர்கள் பின்பற்றுவதே இல்லை, நாமும் நேரடியாகப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். எந்த வாகனமுமே அத்தகைய விதிமுறையைப் பின்பற்றியதாகத் தெரியவில்லை. ஆகவே, அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? இது தடுக்கப்படாமல் விபத்துகளைக் குறைப்பது என்பது சாத்தியம் இல்லை என்பது என்னுடைய கருத்து. ஆகவே, இந்த விதியைப் பின்பற்றாதவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பது குறித்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே இதைப் பற்றி அனைவருக்கும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு சாலைப் பாதுகாப்பு வாரம் என்று கொண்டாடி, பல கல்லூரி மாணவர்கள் சாலைகளிலே வருகின்ற வண்டிகளின் முகப்பிலே இருக்கின்ற அந்த விளக்குகளுக்கு மையப் பகுதியிலே கறுப்பு வண்ணம் தடவுகின்ற பணியை எடுத்து இருக்கிறார்கள், தொடர்ந்து அது அறிவுறுத்தப்பட்டு வருகிறது. இன்னும் தீவிரமாக அது செயல்படுத்தப்பட்டு, விபத்துகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அம்மையார் அவர்கள் சொன்னதுபோல, எவ்வளவு பணிகள் என்றாலும்—தமிழ்நாட்டினுடைய மொத்த வாகன எண்ணிக்கை கிட்டத்தட்ட 90 இலட்சத்தைத் தாண்டுகிறது. நாள் ஒன்றுக்குச் சராசரியாக 5,000 வண்டிகள் பதிவாகின்றன. ஒரு ஆண்டுக்கு என்று எடுத்தால், கடந்த ஆண்டு கிட்டத்தட்ட 87 இலட்சம், இப்போது 90 இலட்சத்தைத் தாண்டி வாகனங்கள் வருகின்றன. இதில் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும், முடிந்தால் அவர்களுடைய ஓட்டுநர் உரிமத்தைக்கூட தடுத்து வைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சாலை விபத்துகளைத் தடுப்பதைப் பற்றி, எந்த முறையிலே தடுக்கப்படும் என்பதை இங்கே





குறிப்பிட்டார்கள். போக்குவரத்துக் கழகங்களிலே தற்காலிகப் பணியாளர்களை நீங்கள் நியமிக்கிறீர்கள். அவர்களை நியமிக்கிறபோது விபத்துகள் ஏற்பட்டால் அவர்கள்மீது என்ன நடவடிக்கையை நீங்கள் எடுக்கப் போகிறீர்கள்? அதைப்போல, போக்குவரத்துக் கழகத்திலே விபத்துகள் ஏற்படுகிறபோது, அவற்றிலே பாதிக்கப்படுகிற குடும்பங்கள் வழக்கு மன்றத்திலே வழக்காடுகிறபோது, அதற்குள்ள தொகையைக் கொடுக்க மறுத்து, மேல் முறையீடு செய்கிறீர்கள். அதற்குக் காரணம், தனியார்கள் அனைவருமே இன்சூரன்ஸ் செய்துகொள்கிறார்கள், போக்குவரத்துக் கழகத்திலே அது இல்லாத காரணத்தினாலே, அந்தப் பெரிய தொகையை வழங்க முடியாத காரணத்தின் அடிப்படையில், மேல்முறையீடு செய்துகொண்டே இருப்பதால், பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பங்களுக்கு நிவாரணம் கிடைப்பதில்லை. அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—50)

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த இலாகாவை நீண்ட காலம் பார்த்தவர். அவர் எந்த வகையில் ஓட்டுநர், நடத்துநர்களை நியமித்தார்களோ, அதைத்தான் பின்பற்ற வேண்டியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த கால ஆட்சியிலே 2000 ஓட்டுநர்களையும், நடத்துநர்களையும் நியமித்தார்கள். அது சம்பந்தமான வழக்கு நீதிமன்றத்திற்குச் சென்று, நீதிமன்றம் எங்களுக்கு ஓர் உத்தரவு தந்திருக்கின்றது. அவர்களையும் அழைத்து, அவர்களில் தகுதியானவர்களையும் நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் அனைவருமே இப்போது அழைக்கப்பட்டு, ஓட்டுநர்களையும், நடத்துநர்களையும் எடுக்கின்ற பணி ஆரம்பிக்கப்பட்டு, அவர்கள் நிரந்தரப் பணியாளர்களாகவே இப்போது நியமிக்கப்பட்டு வருகிறார்கள். குறிப்பாக, சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்திலே இப்போது 400 ஓட்டுநர்களை எடுத்திருக்கிறார்கள். தொடர்ந்து அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

விபத்துகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். கடந்த 2 மாத காலத்திற்கு முன்பு நம்முடைய சென்னையில் இருக்கின்ற உயர் நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி என்னையும், இலாகாவில் இருக்கின்ற அதிகாரிகளையெல்லாம் அழைத்துப் பேசி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோலவே, காலத்தைக் கடத்திக்

கொண்டிருக்கின்றீர்களே, உடனடியாக ஒரு தீர்வு ஏற்பட வேண்டுமென்று அமர்ந்து பேசினார்கள். அப்போது எங்களுக்கு இதுகாலில் இருக்கின்ற சிரமங்களை எடுத்துச் சொன்னோம். குறிப்பாக, ஒரு சிறிய விபத்து என்றால்கூட, நீதிமன்றங்களில் பெரிய தொகையாக அறிவிக்கின்ற காரணத்தால் எங்களால் அதைக் கட்ட இயலவில்லை. அதனால் அதைக் கொஞ்சம் குறைத்து நியாயமான அளவிற்கு நீங்கள் செய்து தர வேண்டுமென்று நீதிபதி அவர்களிடம் கேட்டுக்கொண்டோம். நீதிபதி அவர்களும் Lok Adalat முறையிலே இப்போது அழைத்துப் பேசி, நீதிபதி மற்றும் அங்கேயிருக்கின்ற வழக்கறிஞர்கள், பாதிக்கப்பட்டோர், அரசு சார்பாக இருக்கின்ற அதிகாரிகள் எல்லாம் அனைத்து வழக்குகளையும் அமர்ந்து பேசி, வெகு விரைவாக அனைவருக்குமே அந்தத் தொகை வழங்கப்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல இந்த ஆண்டு இதுவரை கிட்டத்தட்ட 25 சதவீத வழக்குகள் முடித்து வைக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, இனி நியமிக்கப்படுகின்ற ஓட்டுநர்கள், நடத்துநர்கள், நிரந்தர ஓட்டுநர்கள், நடத்துநர்களாகவே நியமிக்கப்படுவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இங்கு விபத்துகளையெல்லாம் தடுப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிச் சொன்னார்கள். இதிலே, 2005 ஆம் ஆண்டு நடந்த விபத்துகளில் மாண்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு, 2006 ஆம் ஆண்டு இறந்து போனவர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு என்பதையும் அமைச்சர் அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, இங்கே இப்போது இருக்கக்கூடிய சாலைகள் வாகன உற்பத்திக்கேற்றவாறு—அதாவது, அதிகமான வாகனங்கள் வர, வர, அந்தச் சாலைகள் போதாமல் இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கின்றது. ஆகவே, இந்தச் சாலைகளை அகலப்படுத்த வேண்டும். சொல்லப் போனால் ஒரு நாளைக்கு 5,000—க்கு மேலே வாகனங்கள் பதிவாவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். குறிப்பாக, என்னுடைய வேலூர் போன்ற இடங்களில் பார்த்தீர்கள் என்று சொன்னால், நாங்கள் காரில் போகிறபோது, பின்னாலே வருகிற ஆட்டோக்களைப் பார்த்தால், ஏதோ ஆட்டோ ஊர்வலம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்ததுபோல, ஆட்டோக்கள் வரிசையாக வந்து





கொண்டிருக்கின்றன. அந்த அளவுக்கு ஆட்டோக்கள் பதிவு செய்யப்படுகின்றன. சாலைக்கேற்ப, அந்தந்த ஊரினுடைய அந்தப் பரப்பளவுக்கு ஏற்ப, வாகனங்களைப் பதிவு செய்வதைத் தடை செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா?

அதே நேரத்தில், கண் சிகிச்சை முகாம் ஏற்படுத்துவதாக இப்போது சொன்னீர்கள். கண் சிகிச்சை முகாம் ஏற்படுத்தி, டிரைவர்களுடைய கண்களைப் பரிசோதனை செய்வதால் மட்டுமே விபத்துகளை நாம் தவிர்க்க முடியும் என்று சொல்ல முடியாது. காரணம், இன்று லைசென்ஸ் கொடுக்கிறபோது, சில கடுமையான விதிகளை— முன்பெல்லாம் 8 போட்டால்தான் லைசென்ஸை கொடுப்பார்கள். இப்போது லைசென்ஸ் கொடுக்கக்கூடிய முறை எளிமையாக்கப் பட்டிருக்கிறதோ என்கிற அச்சம் எங்களுக்கு இருக்கிறது. சரியாக ஓட்டத் தெரியாதவர்கள் எல்லாம் லைசென்ஸை வைத்து ஓட்டிக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலேதான் பல விபத்துகள் ஏற்படுகின்றன. அதேபோல, குடித்துவிட்டு வாகனத்தை ஓட்டுகிற காரணத்தினாலே, நீங்கள் கண் சிகிச்சை மருத்துவ முகாம் என்று வைத்தாலும்கூட பிரயோசனம் இல்லை. கண் பாப்பா விரிந்து, குடிபோதையில் சில பேருக்கு எல்லாமே கொஞ்சம் மப்பாகத் தெரிகிற காரணத்தினாலே விபத்துகள் ஏராளமாக நடந்துகொண்டிருக்கின்றன. குடிபோதையிலே விபத்தை ஏற்படுத்தியவர்களில் எத்தனை பேருக்கு ஏற்கெனவே லைசென்ஸ் இரத்துச் செய்யப்பட்டிருக்கிறது என்பதை அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நாங்கள் காப்பாற்றப்பட்டவர்கள் பற்றி விளக்கம் சொன்னால், செத்தவர்கள் எத்தனை பேர் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். கேள்வி, சாலைப் பாதுகாப்பு விதியைப் பற்றியது. அவர்கள் எவ்வளவு வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். குறிப்பாக, குடித்துவிட்டு வண்டியை ஓட்டுகின்றவர்களைக் கண்டறிவதற்காக, இந்த ஆண்டு துறையினுடைய அதிகாரிகளுக்குத் தனியாக ஒரு கருவி அதற்காக வாங்கித் தரப்பட்டிருக்கிறது. அதில் கடுமையாகத்தான் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்றோம். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், வாகனங்களின் எண்ணிக்கை இன்றைக்கு 90 இலட்சத்தைத் தாண்டியிருக்கின்றது. ஆனால், 30 இலட்சம், 35 இலட்சம் என்று வாகனங்கள் இருந்தபோது அன்றைக்கு cadre strength—ஐ ஏற்படுத்தி நியமிக்கப்பட்ட அந்த அதிகாரிகள்தான் எங்கள் துறையினுடைய

[2007 ஜனவரி 22

அதிகாரிகளாக இன்றளவும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அதனால்தான் இந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டிருக்கிறோம்; எங்களுக்கு அதிகமான அளவுக்கு cadre strength-ஐ உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்களும் தருவதாக உறுதியளித்திருக்கிறார்கள். ஒரு வாகனத்தைப் பதிவு செய்ய முடியாது என்று நம்மால் சொல்ல இயலாது. ஏனென்றால், அதற்குச் சட்டத்தில் இடமில்லை. இந்த ஊரிலே 10 பேர்தான் வாகனம் வைத்துக்கொள்ளலாம், மற்றவர்கள் எல்லாம் வைத்துக்கொள்ளக்கூடாது என்று சொல்வதற்குச் சட்டத்திலே இடமில்லை.

முற்பகல் 9—55

அதைப்போல, சாலைகள், இப்போது நான்கு வழிச் சாலை, ஆறு வழிச் சாலையாக மாறுகிறது. யூனியன்—ஊன்றியச் சாலைகள் மாநிலச் சாலைகளாகவும், மாநிலச் சாலைகள் தேசிய நெடுஞ்சாலைகளாகவும் மாற்றப்பட்டுக்கொண்டு வருகின்றன. படிப்படியாக அகலப்படுத்திக் கொண்டு வருகிறார்கள். அதுதான் இப்போது நடைமுறையில் இருந்துகொண்டிருக்கிறது.

தொடர்ந்து கேட்டார், 2005 ஆம் ஆண்டு எவ்வளவு பேர் இறந்திருக்கிறார்கள் என்று. அந்தக் கணக்கு எங்களிடம் இல்லை. 1-1-2006 முதல் 31-12-2006 முடிய விபத்துக்குள்ளானவர்களில் காப்பாற்றப்பட்டவர்களுடைய எண்ணிக்கை—7,549 பேர் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள். இப்போது தமிழகம் முழுவதும் கிட்டத்தட்ட 100 இடங்களிலே அவசர விபத்து சிகிச்சை மையங்கள் அமைப்பதற்காக முயற்சி எடுக்கப்பட்டு, 89 இடங்களிலே செயல்பட்டு வருகின்றன. மேற்கொண்டு 9 இடங்களிலே அதற்கான இடங்கள் கண்டறியப்பட்டு, அந்த மையங்கள் எல்லாம் தொடங்கப்பட்டிருக்கின்றன. விபத்து நடக்காமலே இருப்பதற்காக, ஒரு இடத்திலே, எந்த இடத்திலே வேகமாகப் போகலாம், குறைவாகப் போகலாம் என்று துறையின் சார்பாக அறிவுறுத்தப்பட்டு வருகிறது. அதுதான் துறையின் சார்பாகச் செய்யப்படுகிறது. ஒவ்வொருவரும் குடித்துவிட்டு வருகிறபோது கண்டறியப்படுகிறது. ஆனால், அனைவரையுமே கண்டறியக்கூடிய அளவிற்கு எங்களுக்கு வசதி வாய்ப்புக்கள் குறைவாக இருக்கின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் சொல்லி, அதிகாரிகளை அதிகப்படுத்தித் தருவீர்களேயானால், நிச்சயமாக அந்தத் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம்.



2007 ஜனவரி 22]

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள், மரணமடைந்தவர்களுடைய எண்ணிக்கையைப் பற்றி மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டார்கள். அவர், புள்ளிவிவரம் தற்சமயம் தன்னிடம் இல்லையென்று சொன்னார்கள். மூன்று மாவட்டங்களில், மூன்று மாதங்களில், மரணமடைந்தவர்களுடைய எண்ணிக்கை, கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு—நடப்பாண்டு, கிட்டத்தட்ட 80, 90 பேர் அதிகமாக இறந்திருக்கிறார்கள் என்ற தகவல் இன்றையதினம் தினசரியில் வந்திருக்கிறது. ஆக, மூன்று மாவட்டங்களில், இந்த மூன்று மாதங்களில் மரணமடைந்தவர்களுடைய எண்ணிக்கை அதிகமானது என்கிற நிலையில், தமிழகம் முழுவதும் இதே நிலைதான் ஏற்பட்டிருக்கின்றது. எனவே, புதிதாகப் பொறுப்பேற்றிருக்கின்ற இந்த அரசு சாலையில் ஏற்படக்கூடிய மரணங்களைத் தடுப்பதற்குரிய வழிவகைகளை இன்னும் முனைப்பாகச் செயல்படுத்த வேண்டுமென்றுதான் இந்தச் செய்திமூலம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், விலை மதிக்க முடியாத மனித உயிர்களுடைய மதிப்பைக் கணக்கிலே கொண்டு, அந்த மனித உயிர்களைக் காப்பாற்றுவதற்கு இந்த அரசு துரிதமான நடவடிக்கைகளை, சாலை விபத்து ஏற்படாதவண்ணம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு வாகனங்களுடைய எண்ணிக்கை அதிகமான நிலையிலும், இந்த அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக 0.6 விழுக்காடு சாலை விபத்துகள் குறைந்திருக்கின்றன. (குறுக்கீடு) குறைந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், மூன்று மாவட்டங்களில் கூடுதலாக இருக்கிறதென்று. மற்ற 27 மாவட்டங்களில் குறைந்திருக்கலாம் அல்லவா? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி கேட்ட உறுப்பினர் இங்கே இருக்கிறார். நீங்கள் ஏன் அங்கேயிருந்து sound கொடுக்கிறீர்கள்? பேசாமல் இருங்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** ஆனால், (குறுக்கீடுகள்) கடந்த ஆண்டைவிட (குறுக்கீடு) கடந்த ஆண்டு ஏற்பட்ட விபத்துகளைவிட, இந்த ஆண்டு 0.6 விழுக்காடு குறைந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விவரங்கள் வேண்டுமானால், நான் தனியாகத் தருகிறேன்.

[2007 ஜனவரி 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், கடந்த ஆண்டுகளில் சாலை விபத்துகள் குறைந்து வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும்கூட, தினந்தோறும் நாளேடுகளைப் புரட்டிப் பார்க்கிற நேரத்திலும், தொலைக்காட்சியைப் பார்க்கிற நேரத்திலும், தினமும் அதிகாலையில் விபத்து நடைபெறுகிறது; குடும்பத்தோடு எல்லோரும் இறந்தார்கள்; ஐந்து பேர் குடும்பத்தில் இறந்து, குழந்தை மட்டும் தப்பியது என்பன போன்ற பல்வேறு செய்திகள் வந்து மனதினைப் பதைபதைக்கச் செய்யக்கூடிய நிலையை நாம் பார்க்கிறோம். விலை மதிக்க முடியாத மனித உயிர், விபத்தினாலே குடும்பத்தோடு காலியாகக்கூடிய நிலையை எல்லாம் பார்த்து வேதனைப்படுகிறோம். ஆகவே, இப்படிப்பட்ட விபத்துகளைத் தடுப்பதற்கு அரசுத் தரப்பில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறீர்கள்; நான் மறுக்கவில்லை. மேலும், மேலும் விபத்துகள் நடைபெறுகின்றன. விபத்து என்பது விடியற்காலை நேரங்களில் நடைபெறுகிறது. பெரும்பாலானவை விடியற்காலை மூன்று மணியிலிருந்து ஆறு மணிக்குள்ளாக நடைபெறுகின்றன. விடியற்காலையில் வாகனம் ஓட்டுபவர்களை, அந்த விடியற்காலையில் ஓட்டாமல் தடுத்து நிறுத்துவது—இரண்டு நாள் ஓட்டி வருவான் வட மாநிலங்களிலிருந்து; அவர்களைத் தடுத்து நிறுத்தி, மூன்று மணி நேரம் ஓய்வெடுத்துச் செல்லச் செய்வதற்கு, அப்படி ஓய்வு எடுப்பதற்கு வழித்தடங்களில் ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா? அதைக் கண்காணிப்பதோடு, கறுப்பு வண்ணம் பூசுவது; அமைச்சர் அவர்கள் கடந்த முறைகூட பதில் அளித்தார்கள். இன்னும்கூட, சகோதரி செல்வி பாலபாரதி அவர்கள் குறிப்பிட்ட மாதிரி, வாகனங்களுக்குக் கறுப்பு வண்ணம் பூசப்படாமல் இருக்கிறது. கடுமையான நடவடிக்கை எடுத்து, கறுப்பு வண்ணம் பூசப்படுமா?

(முற்பகல் 10–00)

அந்த நேரத்தில், விபத்துத் தடுப்பு மையங்களை அதிகளவில் உருவாக்கி இருக்கிறீர்கள். அவை தேசிய நெடுஞ்சாலைகளில் அதிகமாக இருக்கின்றன. மற்ற மாவட்டச் சாலைகளில் இல்லாமல் இருக்கின்றன. ஆகவே, அந்த விபத்துத் தடுப்பு மையத்தை மாவட்டச் சாலைகளிலும் அமைக்க, கூடுதலாக உருவாக்குவதற்கு அரசு முன்வருமா?

வேகத் தடை. வேகத் தடை கூடாது என்று ஒரு பக்கம் சொல்லிக் கொண்டிருக்கிற அதே வேளையில், வேகத் தடையும் இருக்கிறது. ஆகவே,



2007 ஜனவரி 22]

வேகத் தடை உண்டாக்கப்பட வேண்டுமா அல்லது தேவையில்லையா? அதற்கு வெள்ளை வண்ணம் பூசி, தடுப்பு இருப்பது குறித்து அறிய ஏற்பாடு செய்யப்படுமா? இதில் அரசின் நிலைப்பாடு என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

காப்பீடு. தனியார் வாகனங்களிலே அடிபட்டு இறந்தவர்களுக்குக் காப்பீட்டுத் தொகை உடனடியாகக் கொடுக்கப்படுகிறது. ஆனால், அரசுப் போக்குவரத்துத் துறை வாகனங்களிலே அடிபட்டு இறந்தவர்களுக்கு வழங்கப்படுவதில்லை என்ற நிலை இருக்கிறது. ஆகவே, அதற்கு அரசின் நிலைப்பாடு என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், விபத்திற்காக எத்தனையோ நடவடிக்கைகள் தமிழ்நாடு அரசு சார்பாக எடுக்கப்பட்டு வந்திருந்தாலும், அவை தீவிரப்படுத்தப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். நெடுஞ்சாலைத் துறையின் சார்பாக 300 இடங்கள் black spots என்று கண்டறியப்பட்டு, 50 இடங்கள் சரிசெய்யப்பட்டு வருகின்றன இப்போது. Accident Zone என்று போட்டிருப்பார்கள், நீங்கள் பார்த்தால் தெரியும். அந்த இடங்களிலேயெல்லாம் சாலை வளைவாக இருந்தால், நேராக நிமிர்த்துவது என்றும், பல இடங்களிலே நவீன முறையிலே தற்பொழுது lights எல்லாம் வைத்து speed breakers வைத்திருக்கிறோம். அதே மாதிரி, நெடுஞ்சாலைத் துறையின் சார்பாக அதையெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, உடனடியாக அந்த விளக்குகளிலே கறுப்பு வண்ணம் பூசுகின்ற பணி தீவிரப்படுத்தப்பட்டு, அது அமல்படுத்தப்படும் என்ற உறுதியை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன். (குறுக்கீடு)

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தவர். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.... (குறுக்கீடுகள்)

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக உட்காருங்கள், திரு. பொள்ளாச்சி ஜெயராமன், சும்மாக் கத்தாதீர்கள். (குறுக்கீடு) அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடு) நான்தான் கூப்பிட்டேன். (குறுக்கீடுகள்) நான் கூப்பிட்டால்தான் பேச முடியும். உட்காருங்கள் பேசாமல். திரு. கண்ணப்பன், நீங்கள் கேளுங்கள்.

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்துகள் நடப்பதில் புள்ளிவிவர எண்ணிக்கைகளைக் கொண்டு பார்த்தால், பெரும்பாலும் இரு சக்கர வாகனங்களிலே செல்லக்கூடியவர்கள் அதிகப்படியாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக, தலையில் அடிபட்டது, காயம் ஏற்பட்டது போன்ற எண்ணிக்கைகள் கூடுதலாக இருந்து வருகின்றன. ஆகவே, மீண்டும் தலைக்கவசம்—Helmet அணியக்கூடியதைக் கட்டாயமாக்குதல் சட்டத்தை அரசு கொண்டு வருவதற்குப் பரிசீலிக்கலாம். இரண்டாவது, இரு சக்கர வாகனங்களில் செல்பவர்களும், கார் போன்ற வாகனங்களை ஓட்டிச் செல்பவர்களும் Cell Phone–ல் பேசிக்கொண்டே போகிறார்கள். Cell Phone–ல் பேசுகின்ற காரணத்தாலே கவனம் வேறு திசையிலே திரும்பி, அதனாலே பயங்கரமான விபத்துகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, Cell Phone–ல் பேசக் கூடாது என்ற தடையையும், Helmet-ஐ அணிய வேண்டும் என்பதையும் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 1989 ஆம் ஆண்டு இதே போக்குவரத்துத் துறையிலே அமைச்சராக இருந்தார். அவர் அமைச்சராக இருந்தபோதுதான், Helmet அணியத் தேவையில்லையென்று இதே சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது என்று கருதுகிறேன். (சிரிப்பு). இப்போது அவரே Helmet வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். பல காவல் துறை அதிகாரிகளும், பல மருத்துவர்களுமே இதை அறிவுறுத்திக்கொண்டு வருகிறார்கள், இரு சக்கர வாகனங்களை ஓட்டுபவர்களுக்குப் பாதுகாப்புக்காகத் தலைக்கவசம் அணிய வேண்டுமென்று. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்து, அவருடைய அனுமதியைப் பெற்று, அதைப் பற்றி உங்களுக்கு அறிவிக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

Cell Phone–ல் பேசிக்கொண்டே ஓட்டுநர்கள் ஓட்டுகிறார்கள் என்று சொன்னார். சட்டத்திலே இருக்கிறது; Cell Phone–ல் பேசிக்கொண்டு ஓட்டக் கூடாது, குடித்துவிட்டு ஓட்டக் கூடாது; தூக்கம் வருகின்றபோது ஓட்டக் கூடாது; ஓட்டும்போது பேசாமல் ஓட்ட வேண்டும் என்றெல்லாம் சட்டம் போட்டிருக்கிறோம். ஆனால், பல



அறிவுறுத்தல்களின்பேரில், அவர்களாகவே அதைத் திருத்திக் கொண்டால்தான் அது சரியாக இருக்கும். நாங்கள் பார்த்தால் நடவடிக்கை எடுக்கலாம். காவல் துறை நடவடிக்கை எடுக்கிறது. துறையின் சார்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இருந்தாலும், பல இடங்களிலே இதுபோல அறிவுறுத்தலாம். இப்போது பார்த்தால்கூட, கல்லூரிகளில் இருக்கின்ற மாணவர்கள் நேரடியாக ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கு—அவர்களுக்கெல்லாம் எந்த இடத்திற்குச் செல்ல வேண்டும்? யாரைப் பார்க்க வேண்டும்? எப்படி உரிமம் பெறுவது என்பதுகூட தெரியாதிருந்த காலம் இருந்தது. இப்போது கல்லூரிக்கே சென்று, எங்களுடைய அதிகாரிகள் அவர்களுடைய ஆவணங்களைச் சரி பார்த்து, அவர்களுக்கு உடனடியாக L.L.R. licence கொடுக்கிற பணியைக்கூட நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம். துறையின் சார்பாகத் தொடர்ந்து இது அறிவுறுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**6—**

## கட்டட வசதி

***12192—திரு. அர. சக்கரபாணி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் குடியிருப்புக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இச்செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

[2007 ஜனவரி 22

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் அலுவலகமும், அதேபோல வட்டாட்சியர் குடியிருப்பு அலுவலகமும் வாடகைக் கட்டடங்களில் பல ஆண்டுகளாக இயங்கி வந்தன. மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் 1999—2000 ஆம் ஆண்டில் முதலமைச்சராக இருந்த காலத்திலே, ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஒரு கோடி ரூபாய் நிதி கொடுத்து, அந்தப் பணி அப்போதே நிறைவேற்றப்பட்டுவிட்டது. ஆனால், வட்டாட்சியர் குடியிருப்பு அலுவலகம் மட்டும் தொடர்ந்து வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, இந்த ஆண்டு அந்தக் கட்டடத்தைக் கட்டித் தருவதற்கு நிதி ஒதுக்கித் தர முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டாட்சியர் குடியிருப்பு கட்டுவதற்காக ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, ஒரு இடம் தேர்வு செய்யப்பட்டது. அந்த இடத்தைத் தற்சமயம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பயணியர் விடுதி கட்டுவதற்காக ஒதுக்க வேண்டுமென்ற கோரிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கேட்டிருக்கிறார். ஆகவே, இடம் தேர்வு செய்யப்பட்ட பின், அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டாட்சியர் அலுவலகத்திலே சுமார் 3 ஏக்கர் நிலம் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இடத்திலேயே வட்டாட்சியர் குடியிருப்பு அலுவலகம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்து, நிதி ஒதுக்கித் தர முன் வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே குடியிருப்பு கட்டித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அந்த இடத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒதுக்கீடு செய்தவுடன், அந்த இடத்திலே பயணியர் விடுதி கட்டித் தர வேண்டுமென்று மாற்றிக் கேட்டிருக்கிறார். உறுப்பினருக்கு, கடுகுக்கும் ஆசை; மீசைக்கும் ஆசையாக இருக்கிறது. இருந்தாலும், அது பற்றி அவர் சொல்வதை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்ரமணியன்.



2007 ஜனவரி 22]

**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, இலுப்பூரில் புதிதாகச் செயல்பட்டு வரும் வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற நிதியாண்டிலே வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டுவது சம்பந்தமாக, பகுதி-II திட்டத்திலே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம் வட்டாட்சியர் அலுவலகம் மிகுந்த மோசமான நிலையிலே, இடிந்து விழுகிற ஒரு நிலையிலே இருக்கிறது. பல ஆண்டுகளாக அதை மாற்றியமைக்க வேண்டும், அதைச் சீரமைக்க வேண்டுமென்ற கோரிக்கை இருந்திருக்கிறது. அது குறித்து ஏதாவது திட்டம் அரசினுடைய பரிசீலனையில் உள்ளதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பேரவைத் தலைவர்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதியாண்டிலே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, ஏறத்தாழ 9 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு மேல், பல பழுதுபட்ட வட்டாட்சியர் அலுவலகங்களுக்குப் புதிய அலுவலகங்கள் கட்டுவதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்து, அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. வருகின்ற நிதியாண்டிலே, அப்படிப் பழுதடைந்திருந்தால், அதிகமாக பழுதடைந்திருக்கின்ற வட்டாட்சியர் அலுவலகங்களைக் கண்டறிந்து, அவற்றிற்கு முன்னுரிமையை அரசு வழங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரணியலில் செயல்படும் உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஆகியவை மிகவும் பழைய கட்டடங்களிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாத கேள்வியாக இருக்கிறது, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூரிலே இருக்கின்ற வட்டாட்சியர் அலுவலகம், ஓராண்டு காலமாக ஓட்டுக் கொட்டகையிலே இயங்கி வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த நடப்பாண்டிலே, ஓட்டுக் கொட்டகையிலே இயங்கி வரும் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுத்து, கட்டிக் கொடுப்பாரா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

(முறபகல் 10—10

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையைப் பற்றி நான் ஏற்கெனவே விரிவாகச் சொல்லியிருக்கின்றேன். வருகின்ற நிதி ஆண்டிலே, ஏற்கெனவே பழுதுபட்டிருக்கின்ற வட்டாட்சியர் அலுவலகங்கள் எந்த அளவுக்குப் பாதிப்படைந்திருக்கின்றன என்பதை அரசுத் துறையினுடைய அலுவலர்களை அனுப்பி பார்த்து, அது பற்றி நிச்சயமாக அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**7—**

## நியாய விலைக் கடை

***398—திரு. கோ. அரி:**

*மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருத்தணி தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், நார்த்தவாடா ஊராட்சியில் நியாய விலைக் கடை துவக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், மணலூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் செயல்படும் ஜாகிர்மங்கலம் என்கிற கடையின்கீழ் நார்த்தவாடா என்கிற கிராமத்திலே பகுதி நேரக் கடை திறக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்தக் கடையைப் பொறுத்த அளவிற்கு அந்தக் கிராமத்திலே 133 கார்டுகள்தான் அந்தப் பகுதிக்கென்று இருக்கின்றன. அரசாணை, ஏற்கெனவே இரண்டு





கிலோ மீட்டர் தூரம், 200 கார்டுகள் என்று இருந்ததை மாற்றி, அரசாணை 147, நாள் 24–8–2006 அன்று புதிதாக ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதிலே 1½ கிலோ மீட்டர் தூரம் இருந்தால் போதும்; அதே நேரத்திலே 150 கார்டுகள் இருந்தால் போதும் என்கிற அடிப்படையிலே ஒரு புதிய ஆணையை இந்த அரசு பிறப்பித்தது. அந்த அளவு எடுத்துக் கொண்டால்கூட 150 கார்டுகள் இல்லை; 133 கார்டுகள்தான் இருக்கின்றன. ஆனாலும், அந்தப் பகுதியில் இருக்கிற மக்கள் நந்தியாற்றைக் கடந்து போகிறபோது 5½ கிலோ மீட்டர் தூரம் போக வேண்டியதாக இருக்கிறது. எனவே, அதைச் சிறப்பாக எடுத்துக்கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவருடைய பரிந்துரையை ஏற்று, அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, தலைவர் கலைஞருடைய அரசு 7–9–2006 அன்று ஒரு ஆணை பிறப்பித்து, 1–12–2006 முதல் அந்தப் பகுதியிலே ஒரு கடை துவங்கப்பட்டிருக்கிறது என்ற நற்செய்தியை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அரி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், நார்த்தவாடா கிராமத்திலேயிருந்து ஜாகிர்மங்கலம் ஊராட்சியில் அந்த நியாய விலைக் கடைக்குச் செல்வதற்கு சுமார் 4 கிலோ மீட்டர் சுற்றிச் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலையில், அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாய ஏழைக குடிகள் செல்ல முடியாத ஒரு நிலைமையில்தான், அந்தப் பகுதி மக்களினுடைய கோரிக்கையாக, அந்த நார்த்தவாடா கிராமத்திலே நிரந்தரமாக ஒரு நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். தற்போது மாண்புமிகு அமைச்சரவர்கள் பகுதி நேர நியாய விலைக் கடை துவங்கப்பட்டுள்ளதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், ஜாகிர்மங்கலம் ஒரு ஊராட்சியாகவும், நார்த்தவாடா ஒரு ஊராட்சியாகவும் இருக்கிறது. ஆக, ஊராட்சியைக் கணக்கில் கொண்டு, அந்த நார்த்தவாடா ஊராட்சிக்கென்று தனியாக ஒரு நியாய விலைக் கடையை இந்த அரசு அமைத்துத் தந்து, அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆரம்பத்திலேயே சொன்னதைப்போல, ஒரு தாய்க் கடையிலே 500 அட்டைகள் இருக்க வேண்டும், குறைந்தபட்சம். ஆனால்,

[2007 ஜனவரி 22

அவ்வளவுகூட இல்லை. இருந்தாலும்கூட அந்தப் பகுதியினுடைய மக்களுடைய குறைகளைத் தீர்க்க வேண்டுமென்கிற அடிப்படையிலே 133 கார்டுகளுக்கே இப்போது ஒரு ஆணை கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்தப் பகுதி நேரக் கடை தொடர்ந்து நடைபெறும். எனவே, அதற்கு மேலும் செய்ய வேண்டுமென்று சொன்னால், மாவட்ட ஆட்சித் தலைவருடைய பரிந்துரையைப் பெறவிருக்கிறோம். அதற்கு மாண்புமிகு முதலமைச்சரிடம்தான் கலந்து பேச வேண்டும். இதற்கே ஆணையை மீறித்தான் தனிச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. 150 கார்டுகளே இல்லை. 133 கார்டுகள்தான் இருக்கின்றன. எனவே, இந்தச் சலுகையை அந்தப் பகுதி மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். பிற்காலத்திலே முதலமைச்சரிடத்திலே கலந்து பேசி, நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவுத் துறை அமைச்சர் அவர்கள், சென்ற திங்களிலே ஓர் இடத்திலே பேசுகிறபோது, நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் பொருட்கள் அனைத்தும் பாக்கெட்டுகளில் வழங்கப்படும். அதாவது, tamper proof என்ற சொல்லக்கூடிய, யாரும் கை வைக்க முடியாத, நியாயமான எடையுடன்கூடிய பாக்கெட்டுகளில் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அத்தகைய அறிவிப்பை அவர்கள் செய்திருக்கிறார்கள். அது வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. அத்தகைய நடைமுறை எப்போது அமலுக்கு வரும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் புதிதாக, ஐந்தாவது முறையாக ஆட்சிக்கு வந்தபோது முதன்முதலாகக் கையெழுத்திட்டது— ஏழைகளுக்காக ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்குக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதை பாக்கெட் செய்கிறபோது அதனுடைய விலையும் கூடிவிடும். சொன்ன வார்த்தையைக் காப்பாற்ற வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இது ஒரு பக்கம்.

இன்னொன்று, இது சம்பந்தமாக சென்னையில் ஏதாவது ஒரு பகுதியிலே ஒரு முன்மாதிரியாக, pilot programme போல அதை நடத்த வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதைத்தான் நான் பத்திரிகை நண்பர்களிடத்திலே சொல்லுகிறபோது சொன்னேன். ஒரு



2007 ஜனவரி 22]

மாதிரியாக ஒரு பகுதியில் எடுத்துக்கொண்டு நடத்தலாம். அப்படி நடத்துகிறபோது, சில கம்பெனிகள், பொது நிறுவனங்கள் நாங்கள் sponsor செய்கிறோம் என்று இரண்டொரு கம்பெனிகள் சொல்லியிருக்கிறார்கள். எனவே, அதையும் நாங்கள் கணக்கில் எடுத்துக்கொண்டு இருக்கிறோம். முதன்முதலாக நகரப் பகுதியிலே, ஒரு பகுதியிலே pilot programme போன்ற, ஒரு மாதிரி programme நடத்திவிட்டு, அதில் வருகிற நன்மைகளையும், தீமைகளையும் அலசி, ஆராய்ந்து பார்த்து, பின்னால் மாநகராட்சிகள், நகராட்சிகள், கிராம ஊராட்சிகள் என்கிற அடிப்படையிலே அதைப் படிப்படியாகக் கொண்டு வருவதற்கு முதலமைச்சருடைய ஆலோசனையைப் பெற்று, கூடிய சீக்கிரத்திலே அந்த மகிழ்ச்சியான செய்தியையும் இந்தச் சட்டப் பேரவையிலே நான் தெரிவிக்க இருக்கிறேன்.

(முற்பகல் 10–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. சின்னப்பன். (சுருக்கமாக) பேசுங்கள்.

**திரு. பொ. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் தொகுதியில் மந்திதளம் ஊராட்சியில் இலக்கம்பட்டி, ஓ.லட்சுமிநாராயணபுரம், இலந்தைக்குளம் ஆகிய மூன்று கிராம மக்கள் வைப்பாறு என்னும் ஆற்றைக் கடந்து, பத்து கிலோ மீட்டர் சுற்றி நியாய விலைக் கடைக்குச் சென்று வாங்கக்கூடிய சூழ்நிலை உள்ளது. ஆகையால், இந்த மூன்று கிராமங்களுக்கு மட்டும் தனியாக ஒரு நியாய விலைக் கடை அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு மாவட்ட ஆட்சித் தலைவரிடமோ அல்லது கூட்டுறவு இணைப் பதிவாளர்/மண்டலப் பதிவாளர்களிடத்திலோ அந்த மனுக்களைக் கொடுக்கலாம். அல்லது நேரடியாக என்னிடத்திலேகூட அந்த மனுக்களைக் கொடுத்தால், பரிந்துரை செய்யப்பட்டு, அரசு விதிகளுக்குட்பட்டு இருந்தால், கட்டாயம் அந்தப் பகுதியிலே கடைகள் திறக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளுக்கு ஒன்றரை கிலோ மீட்டர் என்கிற அந்த தூரத்தைக் குறைத்து, அதே நேரத்திலே கார்டுகள் அதிகமாக இருக்கின்ற இடங்களிலே, 150 கார்டுகளுக்கு மேலே இருக்கின்ற இடங்களிலே

[2007 ஜனவரி 22

தனியாக நியாய விலைக் கடைகளை அமைக்கின்ற அந்த எண்ணம் அரசுக்கு இனி ஏற்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆரம்பத்திலேயே சொன்னதைப்போல, ஏற்கெனவே விதி, இரண்டு கிலோ மீட்டர் தூரம், 200 கார்டுகள் என்று இருந்தது. இப்போது, ஏழு மாத காலத்திற்கு முன்னால்தான் ஒரு புதிய ஆணை பிறப்பித்து, ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் இருந்தால் போதும், 150 கார்டுகள் என்கிற அடிப்படையிலே 13–5–2006–லிருந்து தமிழ்நாட்டிலே 96 பகுதி நேரக் கடைகள் இப்போது வரைக்கும் உருவாக்கப் பட்டிருக்கின்றன. இதுபோன்று சில நேரங்களிலே ஆற்றுப் பகுதிகள், மலைப் பகுதிகள் என்கிற அடிப்படையிலே தனிச் சலுகையை இந்த அரசாங்கம் கொடுத்து, ஏழு கடைகள் மட்டும் அப்படித் துவங்கப்பட்டிருக்கின்றன. மலை, காடு அல்லது கிலோ மீட்டர் குறைந்திருக்கும் அல்லது கார்டுகள் ஒன்றிரண்டு, நம்முடைய திருத்தணி தொகுதியைப்போலக் குறைந்திருக்கும். இதற்குத் தனிச் சலுகை என்கிற அடிப்படையிலே ஏழு பகுதி நேரக் கடைகளைத் துவங்கியிருக்கிறோம். நம்முடைய உறுப்பினர்கள் ஒரு கிலோ மீட்டருக்குக் குறைவாக இருக்க வேண்டும், கார்டுகளும் குறைவாக இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள்; பல கடைகள் கூட்டுறவு நிறுவனங்களின்கீழ் நடைபெறுகின்றன. இவை எல்லாம். கூட்டுறவு நிறுவனங்கள் என்கிறபோது, வரவு–செலவையெல்லாம் பார்க்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஒரு கடையை ஆரம்பிக்கிறபோது, அங்கே அவர்களுக்குச் சம்பளம் தர வேண்டும்; அந்தப் பொருட்களைக் காப்பாற்றுவதற்கு, இடத்திற்கு வாடகை தர வேண்டும்; இந்தப் பிரச்சினைகள் எல்லாம் இருக்கின்றன. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை ஏற்றுக்கொண்டு, அரசு பின் வரும் காலத்திலே அதை யோசிக்கும், பரிசீலிக்கும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**8—**

## மேம்பாலம்

***1005—திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2007 ஜனவரி 22]

அரவக்குறிச்சி–கரூர் தேசிய நெடுஞ்சாலையில் தடாகோவில் அருகில் இறங்குதுறையில் நங்காஞ்சி ஆற்றின்மீது மேம்பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2006–2007 ஆம் நிதி ஆண்டில் பகுதி–2 திட்டத்தின்கீழ் கரூர் மாவட்டம், அரவக்குறிச்சியில் தேசிய நெடுஞ்சாலை எண் 7–லிருந்து பிரிந்து செல்லும் அரவக்குறிச்சி புறவழிச் சாலையில் தடாகோவில் அருகே நங்காஞ்சி ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கலீலுர் ரஹ்மான்.

**திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவக்குறிச்சி தொகுதியிலே தடாகோவில் அருகிலே மிக, மிக முக்கியமான பகுதியாக இருக்கக்கூடிய நங்காஞ்சி ஆற்றிலே பாலம் கட்டுவதற்குரிய திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது என்று அறிந்து நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். அதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது அரவக்குறிச்சி தொகுதி, தமிழகத்திலேயே பரப்பளவில் மிகப் பெரிய தொகுதியாகும். விவசாயிகள் அதிகம் வாழ்கின்ற பகுதியாகவும், வறட்சி மிக்க பகுதியாகவும் இருக்கின்றது. ஆகவே, எனது தொகுதியின் வளர்ச்சிக்காக, மேலும் சில பாலங்களும், சாலை மேம்பாட்டு வசதிகளும் தேவை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் கோரிக்கையாக வைத்துள்ளேன். அவற்றையும் கூடிய விரைவில் நிறைவேற்றித் தரக் கனிவுடன் கேட்டுக்கொண்டு, இந்தப் பாலம் கட்டுவதற்குரிய மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதையும், அதற்குரிய கட்டுமானப் பணிகள் எப்பொழுது ஆரம்பிக்கப்படவுள்ளன என்பதையும் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10–20

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி தொகுதியில், தேசிய நெடுஞ்சாலை எண் 7–லிருந்து பிரிந்து செல்லக்கூடிய அரவக்குறிச்சி புறவழிச் சாலையில், நங்காஞ்சி ஆற்றின் குறுக்கே இந்த அரசால்

2006–2007—நடப்பு நிதியாண்டில், பகுதி–II திட்டத்தில், ரூ.1 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்காக மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது. பாலம் அமையும் இடத்தில், மண்ணின் தாங்குதிறன் பரிசோதனை செய்யப்பட்டு, மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டு ஒப்பந்தப்புள்ளி கோரி, அந்தப் பாலம் அமைக்கின்ற பணி மிக விரைவில் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, கிண்டியிலே, ராஜ் பவனுக்கு எதிரிலே தேசிய நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான ஒரு laboratory இருக்கின்றது. அதாவது, நெடுஞ்சாலைக்குத் தரம் இருக்கிறதா, இல்லையா என்பதைப் பிரித்துப் பார்க்கக்கூடிய ஒரு laboratory இருக்கிறது. இதில் முக்கிய அம்சம் என்னவென்றால், இது கர்ம வீரர் காமராஜர் அவர்களால் கட்டப்பட்டு, தொடங்கப்பட்ட ஒரு மிகப் பெரிய laboratory. அதற்கு அருகிலே நம்முடைய Anna University இருக்கிறது. இப்போது அந்த இடத்தை இடித்துவிட்டு, Anna University–க்கு ஒரு மாணவர் விடுதி வருவதுபோல, நான் செய்தித்தாள்களில் படித்திருக்கிறேன். ஏனென்றால், கர்ம வீரர் காமராஜர் அவர்கள் கொண்டு வந்த அந்த இடத்தை அரசு இடிக்காமல் இருக்குமா? மேலும், அந்த இடத்தை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லை.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** இது முக்கியமானதொரு விஷயம் என்பதனால் நான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனிக் கேள்வியாகப் போடுங்கள், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் தேசிய நெடுஞ்சாலையினுடைய ஒரு தொடர்ச்சி என்ற முறையிலே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக ஒரு செய்தியை அறிய விரும்புகிறேன். நாகப்பட்டினம் முதல் கூடலூர் வரை தேசிய நெடுஞ்சாலையாகத் தற்போது மாற்றப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே நெடுஞ்சாலைத் துறையினுடைய கட்டுப்பாட்டில் இருந்தபோது, சாலைகள் ஓரளவு பழுதடைந்தவுடன் போடப்பட்டன.



தமிழ்நாட்டின் சுற்றுலாத் தலங்களில் முக்கியமான இடம் வகிப்பது நீலகிரி மலை, ஊட்டி. அந்த ஊட்டிக்குச் செல்லக்கூடிய, தேசிய நெடுஞ்சாலையாக இருக்கக்கூடிய மேட்டுப்பாளையத்திலிருந்து ஊட்டி, கூடலூரிலிருந்து ஊட்டி வரக்கூடிய பாதைகளில், மலைச் சரிவினால் ஏற்பட்ட சேதம் சரி செய்யப்படுகிறது. ஆனால், அந்தப் பாதைகள் முற்றிலுமாகப் பழுதடைந்து, வாகனங்கள் செல்வதற்கே தகுதியற்றதாக இன்றைக்கு இருக்கின்றன. ஆகவே, நம்முடைய மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்கூட, அவருடைய தொகுதியிலேயிருந்து ஊட்டிக்கு வருவதற்கு, தேசிய நெடுஞ்சாலை வழியாக வராமல், சந்து வழியாக, மாற்றுப் பாதையிலேதான் வருகிற நிலைமை இருக்கிறது. ஆகவே, தேசிய நெடுஞ்சாலை என்று ஒதுக்காமல், மாநில அரசு முன்முயற்சி எடுத்து, தேசிய நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக, சுற்றுலாத் தலமாக இருக்கிற அந்த ஊட்டிக்குச் செல்கின்ற, மேட்டுப்பாளையம் முதல் கூடலூர் வரை இருக்கிற பாதையை உடனடியாகச் சரி செய்ய முன்வருமா என்பதை நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், இதற்கும் தொடர்பில்லை என்றாலும், மிக முக்கியமான ஒரு கேள்வியை நம்முடைய மாண்புமிகு திருப்பூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இங்கே எழுப்பியிருக்கின்றார்கள். தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலம் எடுக்கப்பட்டிருக்கின்ற சாலைகள், ஏற்கெனவே தேசிய நெடுஞ்சாலைகளாக அறிவிக்கப்பட்டு, அவை மாநில நெடுஞ்சாலைத் துறையின்மூலம் பராமரிக்கப்பட்டு வந்தன. இப்பொழுது ஆணையத்தின்மூலம் எடுக்கப்பட்ட காரணத்தினால், ஆணையத்தின் நேரடிப் பார்வையிலே, தமிழ்நாட்டின் பல பகுதிகளில் குறிப்பாக, நம்முடைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு ஏற்பட்ட பிறகு, அதிக அளவிலே நான்கு வழிச் சாலைகள், ஆறு வழிச் சாலைகள் என்று சொல்லி, பல்வேறு பகுதிகளிலே அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்த அடிப்படையில், நாகப்பட்டினம்–கூடலூர்–மைசூர் சாலையான தேசிய நெடுஞ்சாலை எண் 67, கரூரிலிருந்து கோவை வரை தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலம் இப்போது எடுக்கப்பட்டு, அதில் விரிவாக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள, கோவையிலிருந்து மேட்டுப்பாளையம், குன்னூர், உதகை, கூடலூர் வழியாகத் தமிழகம் மற்றும் கர்நாடக மாநில எல்லையான கக்கநல்லா வரையிலான தமிழக நெடுஞ்சாலைப் பகுதியும் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் (NHAI) எடுத்துக்கொள்ளப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது. கடந்த இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன் பெய்த கடும்

மழையினால் மேட்டுப்பாளையத்திலிருந்து உதகை செல்லும் பாதையில் பல இடங்களில் நிலச்சரிவு பாதிப்புகள் ஏற்பட்டதுடன், கரும்பாலம் என்றழைக்கப்பட்ட 60 மீட்டர் நீளம் கொண்ட பாலம் முழுவதும் அடித்துச் செல்லப்பட்டது. அத்தருணத்தில் மேற்படி சாலை தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் பராமரிப்பில் இருந்தபோதிலும், பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு மாநில நெடுஞ்சாலைத் துறையின் சார்பாக, தக்க அலுவலர்கள், கண்காணிபபுப் பொறியாளர் போன்றவர்களின் தலைமையிலே விரைந்து சென்று, மீட்புப் பணிகளில் ஈடுபட்டு, இப்பொழுது போக்குவரத்து சரி செய்யப்பட்டிருக்கிறது. அதிலே பழுதடைந்துள்ள பகுதியிலே பராமரிப்புச் செய்யப்படுமா என்று கேட்டிருக்கின்றார்கள். அதேபோல, இந்த அரசு ஏற்பட்டதற்குப் பிறகுகூட, மலைப் பகுதியிலே தார்ச் சாலை அமைப்பதற்காக, மத்திய சுற்றுச்சூழல் துறையினுடைய அனுமதியைப் பெற்று, நீலகிரி மாவட்டத்திலும், அதேபோல கொடைக்கானலிலும் இரண்டு தார்க் கலவை தயார் செய்யும் plant-கள அமைப்பதற்காக அனுமதி கிடைத்திருக்கிறது. அதற்குரிய பணியும் நடைபெற்று வருகின்றது.

முற்பகல் 10–25

தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலம் நாகப்பட்டினம்–கூடலூர்–மைசூர் சாலையானது, ஏறத்தாழ கோவை மாவட்ட எல்லையிலிருந்து நீலகிரி மாவட்ட எல்லை முழுவதும், சுமார் 18 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே பராமரிப்புப் பணிக்காக இப்பொழுது செயற்குறிப்பு மத்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலம் எடுக்கப்பட்டு, அதற்குரிய பணிகள் நடந்து வருகின்றன.

இன்னொரு மாற்றுச் சாலையான, கோத்தகிரி வழியாகச் செல்லக்கூடிய சாலை, மாநில நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகச் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு, கடந்த இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்பு தேசிய நெடுஞ்சாலை 67 (N.H.67)-ல் ஏற்பட்ட நிலச்சரிவால் அச்சாலையில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டபோதுகூட, இச்சாலை மாற்றுச் சாலையாகப் பயன்படுத்தப்பட்டது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார்.

**திரு. எஸ். ராஜகுமார்:** நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை, மணல்மேட்டிலிருந்து காட்டுமன்னார்குடி, முட்டம வரையில்



செல்லக்கூடிய பாலம் கட்டப்படும் என நம்முடைய அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே தெரிவித்திருந்தார்கள். அதனுடைய பணி எப்பொழுது ஆரம்பிக்கப்படும் எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனியாகக் கேள்வி எழுப்பினால், தக்க பதில் அளிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், மாண்புமிகு கால்நடை பராமரிபபுத துறை அமைச்சர் அவர்கள்.

**9—**

**கால்நடை மருத்துவமனை**

***7163—திரு. தி. வேல்முருகன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, குடியிருப்பு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை தொடங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த குடியிருப்பு கிராமத்தில் புதியதாகக் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசுத் தரப்பில் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி தொகுதி, குடியிருபபு கிராமத்தைச் சுற்றிலும் 50–க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருககின்றன. கடலூர் மாவட்டத்தில் மிகப் பின்தங்கிய தொகுதி பண்ருட்டி பணருட்டியில் பெரும்பாலும்

விவசாயம் சார்ந்த மக்கள் கால்நடைகளை நம்பி, தங்களுடைய வாழ்க்கையை வாழ்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில், என்னுடைய சொந்தக் கிராமம், குடியிருப்பு, இன்னும் பல்வேறு பகுதிகளில் மருத்துவமனைகளும், மருந்தகங்களும் இயங்கி வந்தன. அவற்றில் குறிப்பாக, குடியிருப்புக்கு அருகில் இருந்து வந்த மருந்தகமும், மருத்துவமனையும் மூடப்பட்டிருக்கின்றன. என்னுடைய கிராமத்திலும் மூடப்பட்டிருக்கிறது. அதனால் தொடர்ந்து, அங்கு கால்நடைகளுக்கு ஏதாவது பாதிப்பு என்று சொன்னால், பக்கத்திலே இருக்கிற விழுப்புரம் அல்லது பண்ருட்டி போன்ற 20 கிலோ மீட்டர், 30 கிலோ மீட்டர் தூரத்திற்குக் கால்நடைகளை வண்டி, வாகனங்களில் ஏற்றி வந்து, சிகிச்சை அளிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருப்பதால், அப்பகுதியினுடைய கால்நடைகளின் உயிர்களைப் பாதுகாப்பதனுடைய அவசியம் குறித்தும், விவசாயிகளுடைய நலனைப் பாதுகாப்பதன் அவசியம் குறித்தும், தேவை ஏற்படுகின்ற இடங்களில் கால்நடை மருந்தகங்கள், மருத்துவமனைகளைத் தொடங்குவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா? நடப்பு ஆண்டில் குடியிருப்பில் மருத்துவமனை தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி ஒன்றியத்தில் 3 கால்நடை மருந்தகங்களும், 8 கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், குடியிருப்பு கிராமத்திலேயே ஒரு கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. தற்சமயம் கால்நடை ஆய்வாளர்கள் ஒவ்வொரு ஞாயிறுதோறும் அந்தப் பகுதிக்குச் சென்று சிகிச்சை அளித்து வருகிறார்கள். ஒரு பகுதியிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 10,000-க்கு மேல் இருந்தால்தான் அந்தப் பகுதிக்குக் கால்நடை மருந்தகம் இந்தத் துறையினால் அமைத்துத் தாப்படுகிறது. குடியிருப்பு கிராமத்திலுள்ள கால்நடைகளுடைய எண்ணிக்கை, பசு, எருமை, வெள்ளாடு, செம்மறி ஆடு உட்பட, கிட்டத்தட்ட 984 மட்டுமே உள்ளது. ஆகவே, குடியிருப்பு கிராமத்தில் மருத்துவமனை ஏற்படுத்தத் தற்பொழுது வாய்ப்பு இல்லை. கூடிய விரைவில், ஏழு நாட்களும் கால்நடை ஆய்வாளர்கள் பணிபுரியும் அளவிற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துத் தரும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.



**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவர்கள், வாரம் ஒரு முறை வருவதாக அமைச்சர் அவர்கள் அறிவிக்கின்றார்கள். அவர்கள் வருவதற்கான உத்தரவு இடப்படுகிறது. ஆனால், சரியாகக் கிராமப்புறங்களுக்கு வந்து, அந்தப் பணியை அவர்கள் மேற்கொள்வது இல்லை. உதாரணத்திற்கு, கடந்த முறை சட்டமன்றத்தில் நான் பேசியபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். என்னுடைய சொந்தக் கிராமத்தில் மருத்துவமனை, மருந்தகம் இரண்டும் இயங்கி வந்தன...

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. தி. வேல்முருகன்:** இரண்டையும் இப்போது மூடிவிட்டார்கள். அமைச்சர் அவர்களுக்கு நான் வேண்டுகோள் வைத்த பிறகு, வாரம் ஒரு மருத்துவர் வந்தார். அவரும் இப்போது நின்றுவிட்டார். ஆக, துறையின் அமைச்சர்கள் அவையில் அளிக்கின்ற பதிலுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற வகையில், துறையினுடைய அதிகாரிகள் உடனடியாக அமைச்சர் அவர்களுடைய அந்த உறுதிமொழியினை நிறைவேற்றுகின்ற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தப் பகுதி நேர மருத்துவமனைகளைத் தொடர்ந்து முழு நேர மருத்துவமனைகளாக உயர்த்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்படி, தொடர்ந்து ஆய்வாளர்கள் மற்றும் மருத்துவர்கள் அவர்களுடைய பகுதிக்கு வந்து சிகிச்சை அளிக்கும் வகையில் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை ஒன்றியம், தம்பிக்கோட்டை, மேலக்காடு கிராமத்திலே கால்நடை மருத்துவமனையிலே மருத்துவர் இல்லையென்ற காரணத்தினாலே, அங்கு விரைவில் மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்களா என்று ஏற்கெனவே ஒரு கேள்வியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டிருந்தேன். புதிய மருத்துவர்கள் நியமிக்க

இருக்கின்றோம். அப்படி நியமித்தவுடன், உடனடியாக அந்த இடம் பூர்த்தி செய்யப்படும் என்று சொன்னார்கள். தற்போது அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றதா? புதிய மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா? தம்பிக்கோட்டை, மேலக்காடு கிராமத்திற்கு புதிய மருத்துவர் நியமிக்கப்படுவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 250 கால்நடை மருத்துவர்களைப் பணியமர்த்துவதற்காக, அரசுத் தேர்வாணையம் மூலம் தேர்வு எழுதியிருந்தார்கள். அது குறித்து நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்த காரணத்தால், இதுவரைக்கும் அவர்கள் நியமனம் செய்யப்படவில்லை. தற்சமயம், அதாவது, இரண்டு, மூன்று வாரங்களுக்கு முன்பு அந்த வழக்கு முடிவு பெற்றுள்ளது. விரைவிலே அரசுத் தேர்வாணையம் 250 கால்நடை மருத்துவர்களை இந்தத் துறைக்குத் தேர்ந்தெடுத்து, அனுப்பவுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதன் பின்பு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பகுதிக்கு அவர்கள் பணியமர்த்தப்படுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**10—**

## மீன் விற்பனை நிலையம்

***3120 —திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பரம்பிக்குளம் அணைக்கு அருகில் மீன் விற்பனை நிலையம் ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



(அ) மற்றும் (ஆ) பரம்பிக்குளம் அணைப் பகுதியில் மீன் விற்பனை அங்காடி நிறுவும் முயற்சிகள் ஏற்கெனவே தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு கைவிடப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களின் நீண்ட நாளைய கோரிக்கையை ஏற்று, மீனவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கின்ற வகையில் மீனவர்களுக்கு நல வாரியம் அமைத்துத் தந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய தலைமையில், பரம்பிக்குளம் அருகில் மீன் விற்பனை நிலையம் இருப்பதால், 12 கிலோமீட்டர் தூரத்தில் தூணக்கடவு அல்லது சுங்கம் பகுதிக்குச் சென்றுதான் மீன்கள் வாங்க வேண்டிய நிலை இருக்கிறது. அங்கே மீன் சாப்பிட விரும்புகிறவர்கள், பொள்ளாச்சி அல்லது ஆனைமலைப் பகுதிக்கு கிலோமீட்டர் தூரத்திற்குச் சென்றுதான் மீன்கள் வாங்க வேண்டிய நிலை இருக்கிறது. மேலும், பரம்பிக்குளம் அணையில் ஜிலேபி, கயலி, கட்லா போன்ற மீன் வகைகள் மட்டும்தான் இருக்கின்றன. மற்ற மீன் வகைகள் எல்லாம் அங்கே இல்லை. பரம்பிக்குளம் அணைக்கு அருகில் மீன் விற்பனை நிலையங்களை ஏற்படுத்தினால், அங்கே வேலைவாய்ப்பும் ஏற்படுத்தலாம்; அரசுக்கு வருவாயும் கிடைக்கும். ஆகவே, அரசு அதனைப் பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம் அணைப் பகுதியில் மீன் விற்பனை அங்காடி நிறுவுகின்ற முயற்சிகள் ஏற்கெனவே தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டன. பரம்பிக்குளம் அணை, அடர்ந்த வனப் பகுதிக்குள் அமைந்துள்ள நீர்த்தேக்கமாகும். இங்கு பொது மக்கள் யாரும் வசிக்கவில்லை. மக்கள் நடமாட்டம்கூட இப்பகுதியில் இல்லை. இந்த அணையின் பணிகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் பொதுப் பணித் துறை மற்றும் வனத் துறைப் பணியாளர்கள் மட்டுமே மிகவும் சொற்ப அளவில் குடியிருந்து வருகின்றனர். ஆகவே, மக்கள் நடமாட்டம் இல்லாத இப்பகுதியில் மீன் விற்பனை அங்காடி நிறுவினால், மீன் விற்பனை நடக்காது என்பதாலும், அங்காடியில் இருப்பு செய்யப்படும் மீன்கள் கெட்டு, அரசுக்கு இழப்பு ஏற்படும் என்பதாலும், இத்திட்டம் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் கைவிடப்பட்டுள்ளது.

[2007 ஜனவரி 22

முற்பகல் 10–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வால்பாறை தொகுதியில டாப் ஸ்லிப், பரம்பிக்குளம் அணையைப் பார்க்க, தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் ஏராளமானவர்கள் சுற்றுலாப் பயணிகளாக அங்கே வருகிறார்கள், பார்வையிட விரும்புகிறார்கள். அங்கே வருகின்றவர்கள் மீன் சாப்பிடுவதற்கு விரும்புகின்றார்கள். மேலும், அந்தப் பரம்பிக்குளம் அணைப் பகுதியிலே சுமார் 500 பேர்கள் இருக்கின்றார்கள். அவர்களும் மீன் சாப்பிடுவதற்கு விரும்புகின்றார்கள். ஆகவே அரசு, பரம்பிக்குளம் அணைப் பகுதியில் மீன் விற்பனை நிலையம் ஏற்படுத்துவதற்கு முன்வர வேண்டும். முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக மீண்டும் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, பரம்பிக்குளம் அணைப் பகுதியில் ஏற்கெனவே மீன் அங்காடி அமைத்து, சரியான முறையிலே அங்கே அதை நடைமுறைப்படுத்தாத காரணத்தால்தான் அந்தத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. த. தியோடர் ரெஜினால்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதியில், தக்கலை, பேட்டை சந்தையில் ஒரு நவீன மீன் விற்பனை நிலையம் கட்டப்பட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளாக மூடிக் கிடக்கிறது. நான் துறை அதிகாரிகளை அணுகிக் கேட்டபோது, மீன்வளத் துறை அதிகாரிகளிடமிருந்து எந்தவிதமான பதிலும் அதற்கு வரப்பெறவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த நவீன மீன் விற்பனை நிலையத்தைத் திறப்பதற்கு ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அமைதியாக உட்காருங்கள்.



2007 ஜனவரி 22]

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கை விரைவில் நிறைவேற்றப்படும்.

**திரு. த. தியோடர் ரெஜினால்டு:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 வருடத்திற்கு முன்பு F.F.D.A. என்று, மீன் வளர்ப்பாளர்களுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன அது?

**திரு. க. இராஜேந்திரன்:** மீன் வளர்ப்பவர்களுக்கு உதவியாக F.F.D.A. அலுவலகம் இருந்தது. இப்பொழுது அது செயல்படவில்லை. அதேபோல், மீன் துறைக்கும், மின் துறைக்கும் சம்பந்தப்பட்ட கேள்வி. மீன் வளர்ப்பாளர்களுக்கு—உள்நாட்டு மீன் வளர்ப்பாளர்கள், கட்லா, ரோகு, மிருகால் வளர்ப்பாளர்களுக்கு, ஆந்திராவில் 3 H.P.–க்கு மாத வாடகை அனுமதிக்கின்றார்கள். அதேபோல, தமிழ்நாட்டிலும் 3 H.P.–யிலிருந்து 10 H.P.–க்குள் நீங்கள் அந்த horse power–ஐக் கணக்கு எடுத்து, மின் கட்டணம் வசூலிக்கப்படுமா என்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்வி, மீன் விற்பனை நிலையம் அமைப்பது சம்பந்தமானது.

**திரு. க. இராஜேந்திரன்:** இது மீன் துறைக்குச் சம்பந்தப்பட்ட கேள்வி, பேரவைத் தலைவர் அவர்களே. அதனால், இலவச மின்சாரம் வழங்கப்படுமா என்று உங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாமல் இருப்பதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடும்படிக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[2007 ஜனவரி 22

## 3. அறிவிப்பு

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)—ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் நான்காவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கின்றேன்:

திரு. ப. ரங்கநாதன்

திரு. துரை சந்திரசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. தி. வேல்முருகன்

செல்வி கே. பாலபாரதி

திரு. வை. சிவபுண்ணியம்

## 4. தகவல் கோரல்

### (அ) சென்னை மாநகராட்சித் தேர்தல் தொடர்பான வழக்கு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையிலிருக்கிறது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** **

(முற்பகல் 10—10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் வழக்கு பெண்டிங்கில் இருக்கிறது, (குறுக்கீடுகள்) வழக்கு இன்னும் பெண்டிங்கில் இருக்கிறது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அந்தத் தீர்ப்பில்...(குறுக்கீடுகள்) அந்தத் தீர்ப்பில் (குறுக்கீடுகள்) நான் சொல்வதைச் சொல்லிவிடுகிறேன்; பிறகு பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2007 ஜனவரி 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பன்னீர்செல்வம், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நான் சொல்கிறேன், கேளுங்கள். வழக்கு இன்னும் நிலுவையில் இருக்கிறது. (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், வழக்கு நிலுவையில் இருப்பதனாலே, நீங்கள் சொல்கிற எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) விதி 92. (குறுக்கீடுகள்) சொல்கிறேன், கேளுங்கள். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 92—லே, (குறுக்கீடுகள்) சொல்கிறேன், கேளுங்கள். முதலிலே அதைக் கேட்டுக்கொள்ளுங்கள். "நீதி விசாரணையில் இருக்கும் எப்பொருளின்மீதும் தம் கருத்தைச் சொல்லவோ, அப்பொருள் பற்றிக் குறிப்பிடவோ கூடாது."—விதி 92(i). (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன். (குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order. Speaker Sir, I am on a Point of order.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். அவைக் குறிப்பில் ஏறாது. ஏனென்றால், வழக்கு நிலுவையில் இருக்கிறது. (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** When the case is pending before the Court, nobody can raise it in the House.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) நான் ruling கொடுத்தாகிவிட்டது, உட்காருங்கள் அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) என் தீர்ப்பைச் சொல்லியாகிவிட்டது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்னுடைய தீர்ப்பைச் சொல்லியாகிவிட்டது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** Point of order; Speaker Sir. Point of order. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதாவது, உங்கள் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசிக்கொண்டிருக்கிறார். நீங்கள் ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்) முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் எல்லோரையும் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், ஜெயக்குமார். முதலில் உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பொது விவாதத்திலே உங்கள் உறுப்பினர் பேசப் போகிறார். (குறுக்கீடுகள்) பொது விவாதத்திலே உங்கள் உறுப்பினர் பேசப் போகிறார். (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்குக்குள்ளே நான் செல்லவில்லை. தீர்ப்பில் சொல்லப்பட்டிருக்கின்ற கருத்துகளை மட்டும் இந்தச் சபையினுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கின்றேன். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்ற முறையில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்று சொல்கிறேன், கேளுங்கள். (குறுக்கீடுகள்) அந்த கோர்ட் தீர்ப்பு, 3–வது Judge–னுடைய முடிவுக்கு விடப்பட்டிருக்கிறது. So, that means, the case is pending. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் பேசட்டும். (குறுக்கீடுகள்) அமைச்சர் சொல்லட்டும். அமைச்சர் எழுந்து பேசுகிறார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு விதிகள் எல்லாம் தெரியும், அமைச்சர் எழுந்து நிற்கும்போது உட்கார வேண்டுமென்று. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** Speaker Sir, இது குறித்து தீர்ப்பே இன்னும் வரவில்லை. (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து முழுமையான தீர்ப்பு இன்னும் வரவில்லை. வந்திருக்கிற தீர்ப்பே விவாதத்திற்கு உரியதாக இருக்கிறது. ஏற்கெனவே இதே சட்டமன்றத்தில், கூட்டுறவுத் தேர்தல் நடத்தப்படுமா என்று கேட்டால்கூட, வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது என்பார்கள். முழுமையான தீர்ப்பு வரவில்லை, வந்த தீர்ப்பும் விவாதத்திற்கு உரியது. எனவே, இதைப் பேசுவது sub-judice ஆகும். இதை allow பண்ணக் கூடாது. அவ்வளவுதான். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Matter Lis pendens. (குறுக்கீடுகள்) சொல்கிறேன். கேளுங்கள். Matter Lis pendens. (குறுக்கீடுகள்)





Sub-judice–ஆக இருக்கும்போது, that cannot be raised in the House. முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No. செங்கோட்டையன். (குறுக்கீடுகள்) உங்கள் தரப்பிலும் வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் கேளுங்கள். When the matter Lis pendens என்றால், that cannot be raised in the House. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

முற்பகல் 10–45

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நீங்கள் சொல்வதற்குத்தான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், அமைச்சர் சொல்லிவிடட்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நீங்கள் சொல்வதற்குத்தான் நான் சொல்கிறேன். (குறுக்கீடு) இல்லை, நானும் அதைத்தான் சொல்லப் போகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் தீர்ப்பைப் பற்றிச் சொல்லப் போகிறீர்கள். அதைப் பற்றி you cannot comment. It is still pending.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே ஒரு பிரச்சினையை எழுப்புகிறார். (குறுக்கீடு) நான் சொல்கிறேன், கொஞ்சம் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் இங்கே ஒரு பிரச்சினையை எழுப்புகிறார். ஏற்கெனவே சென்னை மாநகராட்சித் தேர்தல் பற்றி ஒரு நீதிபதி தீர்ப்புக் கொடுத்திருக்கிறார். அந்தத் தீர்ப்பை வைத்து, இந்த அரசு, முதலமைச்சர் பதவி விலக வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். நான் சொல்கிறேன். நான் இந்த அவைக்குத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அது ஒரு தீர்ப்பே அல்ல. (குறுக்கீடுகள்) இருங்கள், நான் சொல்லவில்லை. (குறுக்கீடு) இல்லை. (குறுக்கீடுகள்) அப்படியே (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** It is not a final order. The matter has been referred to the third Judge.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் என்ன சொல்கிறேன் என்றால், (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நான் என்ன சொல்கிறேன் என்றால், நீங்கள் சொல்வதை, அப்படியே ஒரு தீர்ப்பாக எடுத்துக்கொண்டாலும்கூட, 3–வது நீதிபதி ஒரு தீர்ப்புச் சொன்னால்தான் முழுமையடையும். இருந்தாலும், இந்தியாவிலேயே முதன்முறையாக, 3–வது நீதிபதியினுடைய தீர்ப்பை எதிர்பார்க்காமல், 99 வார்டுகளையும் கலைத்துவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) மறு தேர்தல் நடத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்தியாவிலேயே எந்த முதலமைச்சரும் துணிந்து, இப்படிப்பட்ட ஒரு நடவடிக்கையை இதுவரையிலே எடுத்ததில்லை. எனவே, இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், மறுபடியும் அதைப் பற்றி இங்கே எழுப்புவது சரியல்ல.

அது மட்டுமல்ல, நீங்கள் 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலைப் பற்றிச் சொன்னால், 2001 ஆம் ஆண்டு எப்படித் தேர்தல் நடந்தது என்பதைப் பற்றி 'இந்து' பத்திரிகையிலே என்னென்ன எழுதியிருக்கிறார்கள் என்பதையெல்லாம் நாங்களும் எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்)

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று கொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் மற்றவர்களை உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மற்றவர்களை உட்காரச் சொல்லுங்கள். அதாவது, உங்கள் side–லும் வழக்கறிஞர்கள் எல்லாம் இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். அமைதியாக இருந்தால்தான் பேச முடியும். (குறுக்கீடுகள்) அமைதியாக இருந்தால்தான் பேச முடியும். உங்கள் side–லும் வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். ஒரு subject சம்பந்தமாக கோர்ட்டிலே வழக்கு நிலுவையிலே இருக்கும்போது, அவை மரபு, அதைப் பற்றிப் பேசக் கூடாது என்பதுதான். (குறுக்கீடு) சொல்கிறேன், கேளுங்கள். (குறுக்கீடு) செங்கோட்டையன், உட்காருங்கள். முதலில் நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) சொல்கிறேன், கேளுங்கள். அதாவது, matter is sub-judice. இரண்டு Judges தீர்ப்புச் சொல்லியிருக்கிறார்கள். That has been referred to the third Judge. (குறுக்கீடு) சொல்கிறேன், கேளுங்கள். That has been referred to the third Judge. அந்த third Judge–னுடைய order தான் final. அதனாலே it is not a conclusive order. So long as the judgement from the third Judge is pending, it will not be a judgement at all. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.



***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) நீதிமன்றத்திலே (குறுக்கீடு) தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை முன்னவர் பேசிக்கொண்டிருக்கிறார், உட்காருங்கள்.

*(முற்பகல் 10–50)*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தில் ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டால், அது, சம்பந்தப்பட்ட அனைவரையும் கட்டுப்படுத்தும். ஒரு தீர்ப்பு என்று சொன்னால், அது அனைவரையும் கட்டுப்படுத்துவதற்குப் பெயர் தீர்ப்பு. இப்போது நீதிமன்றத்திலே சொல்லப்பட்ட கருத்துகள் யாரையும் கட்டுப்படுத்தாது. (குறுக்கீடுகள்) யாரையும் கட்டுப்படுத்தாததற்குக் காரணம், ஒரு நீதிபதி சொன்ன கருத்தும், இன்னொரு நீதிபதி சொன்ன கருத்தும் ஒன்றுக்கொன்று நேர்முரணானவை. நீதிமன்றத்திற்கே (குறுக்கீடுகள்) நீதிமன்றத்திற்கே இந்த வழக்கை எடுத்து நடத்துவதற்கு உரிமை இல்லை என்ற ஒரு கருத்தும் சொல்லப்பட்டு இருக்கிறது. இன்னொரு கருத்தும் சொல்லப்பட்டு இருக்கிறது. இது யாரையும் கட்டுப்படுத்தாது. இப்போது தமிழக முதலமைச்சர் எடுத்த முடிவும்கூட, அவராக எடுத்த முடிவே தவிர, அவரைக் கட்டுப்படுத்துகிற ஆணை பிறந்து, அதன் காரணமாக எடுத்த முடிவு அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி). நீதிமன்றத் தீர்ப்பு வந்ததற்குப் பின்னர், இந்த அவையில் பேசலாம். நீதிமன்றத் தீர்ப்பு, முடிவான தீர்ப்பு, நம்மைக் கட்டுப்படுத்துகிற தீர்ப்பு வராத நிலையில், இந்த அவையில் அந்தப் பிரச்சினையைப் பேசுவது sub-judice என்ற முறையில் தடை செய்யப்பட்டுள்ளது. அதை ஏற்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஏற்கெனவே (குறுக்கீடு) சொல்கிறேன், கேளுங்கள். இது சம்பந்தமாக ஒரு ruling கொடுத்துவிட்டேன். That cannot be discussed again. So, the matter is over. உட்காருங்கள். (குறுக்கீடு) No, I won't agree with you. Sit down. (Interruption) No. (குறுக்கீடு) முடியவே முடியாது. No business of further discussion. (Interruption) Sit down. No, No, I won't allow. (குறுக்கீடு) நான் சொல்வதை நீங்கள் கேளுங்கள். உட்காருங்கள் முதலில். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு)

[2007 ஜனவரி 22

## (ஆ) திருப்பூர் பின்னலாடைத் தொழில் பாதிப்பு

**திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இன்று இந்தியாவிலேயே அதிக அளவு அந்நியச் செலாவணியை, வருவாயை ஈட்டித் தரக்கூடிய திருப்பூர் பின்னலாடைத் தொழிலுக்கு மிகப் பெரிய பாதிப்பு, சோதனை ஏற்பட்டிருக்கிறது. எல்லா அரசியல் கட்சிகளின் சார்பிலும் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறோம். முக்கியமான பிரச்சினை, அதை எடுத்து விவாதித்தால் பொருத்தமாக இருக்குமென்று நினைக்கிறோம். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. மணி. (குறுக்கீடு)*

**திரு. ஜி.கே. மணி:** *திருப்பூர் பின்னலாடைத் தொழில் பிரச்சினை, மிகப் பெரிய சோதனை. எல்லா அரசியல் கட்சிகளின் சார்பிலும் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறோம். (குறுக்கீடுகள்). முக்கியமான பிரச்சினை. (குறுக்கீடு) இது 5 இலட்சம் பேர் வாழ்க்கைப் பிரச்சினை. (குறுக்கீடு) இந்தப் பின்னலாடைத் தொழில் 5 இலட்சம் பேருடைய வாழ்க்கைப் பிரச்சினை இந்தியாவுக்கு அதிகமாக வருவாயை ஈட்டித் தரக்கூடிய தொழிலுக்குப் பிரச்சினை. இந்தப் பிரச்சினையைக் குறித்து எல்லா அரசியல் கட்சிகளும் அறிவிப்புகள் கொடுத்திருக்கிறோம். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் கொடுத்திருப்பது சட்டத்தமான அறிக்கை கேட்டிருக்கிறோம். பதில் வரவில்லை. பதில் வந்தவுடன எடுத்துக்கொள்வோம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)* No, we are entering into other business. *உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). (குறுக்கீடுகள்) 2007 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2007 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*



2007 ஜனவரி 22]

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

| | |
|---|---|
| *ஏற்போர் 'ஆம்' என்க.* | *(ஆம்)* |
| *மறுப்போர் 'இல்லை' என்க.* | *(இல்லை)* |

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (குறுக்கீடுகள்)*

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மற்றும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்)*

### (ஆ) தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 10–55

## 6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிதல். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்.

***திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 20 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு@ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களானோர்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழிமொழிதல், மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

***திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. கருப்பசாமி பாண்டியன் அவர்கள் முன்மொழிந்த, மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் தொடங்குதல். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்.

---

@119 முதல் 117 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.





**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரம் கிடைத்த பிறகு 13–வது சட்டப் பேரவையின் நான்காவது கூட்டத்தொடரில் நமது மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் விவாதத்தில் கலந்துகொண்டு விவாதத்தைத் தொடங்கி வைக்கின்ற அரிய வாய்ப்பினை எனக்குத் தாயுள்ளத்தோடு அளித்த எங்கள் குடும்பத் தலைவர், தமிழினத்தினுடைய தலைவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பேரவைக்கும் என்னுடைய இதயபூர்வமான நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 2006 ஆம் ஆண்டு நமது மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில் பெரும் பகுதியினை நிறைவேற்றிவிட்ட பெருமையோடு, அந்த உரைக்குச் செயல் வடிவம் தந்தவர் நம்முடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் என்ற மன நிறைவோடு, இரண்டாவது ஆளுநர் உரை அமைந்திருக்கிறது என்பதை நான் பெருமகிழ்வோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் தமிழக மக்களுடைய பேராதரவோடு தமிழகத்தை ஐந்தாவது முறையாக ஆளுகிற வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். கடந்த நான்கு முறை முதல்வராக அவர் பொறுப்பேற்றிருந்த காலத்திலேயே, தமிழக அளவிலே மட்டுமல்ல, இந்தியாவிற்கே வழிகாட்டுகிற பல திட்டங்களை, சரித்திரச் சாதனைகளை நிகழ்த்தியவர் நம்முடைய முதல்வர் கலைஞர் என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இலவச மின்சாரத்தை வழங்கி, விவசாயப் பெருங்குடி மக்கள் ஒரு பைசாகூட கட்ட வேண்டாம் என்று உத்தரவிட்டு, ஆண்டுக்கு 1,500 கோடி ரூபாய் இழப்பை அரசு ஏற்றுக்கொண்டு 15 இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாய இணைப்புகளுக்கு இலவச மின்சாரத் திட்டத்தை இந்தியாவிற்கே அறிமுகப்படுத்தித் தந்தவர் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவிலே 30–க்கும் மேற்பட்ட மாநிலங்கள் இருக்கின்றன. எல்லா மாநிலங்களிலேயும் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கிற மக்கள் 10 விழுக்காட்டிற்கு மேலே இருக்கிறார்கள் என்று அரசாங்கப் புள்ளிவிவரம் கூறுகிறது. இருந்தாலும், நம்முடைய தலைவர் கலைஞர் ஏழைப் பங்காளர். மிகவும் பிற்படுத்தப்பட்ட ஒரு ஏழைக் குடும்பத்திலே பிறந்து, சோதனைகளை, தடைகளைத் தாண்டி ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவர் என்கிற காரணத்தினாலே, அந்த ஏழையெளிய மக்கள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் பூச்சி, புழுக்களைப்போல

வாழ்ந்த நிலையை எல்லாம் மாற்றுகின்ற வகையில், இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், குடிசை மாற்று வாரியத்தை அமைக்கிற அந்தத் திட்டத்தை வகுத்து இந்தியாவிற்கே வழிகாட்டியவர் நம்முடைய முதல்வர் கலைஞர் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்னும் சொல்லப் போனால், இந்தியாவில் இருக்கிற முதலமைச்சர்களுக்கெல்லாம் ஒரு பெரிய பெருமையைப் பெற்றுக் கொடுக்கின்ற வகையில், நம்முடைய அன்னை இந்திரா காந்தி அவர்கள் பிரதமராக இருந்த காலத்திலே, அவரிடத்திலே போய் வாதாடி, சுதந்திர தினத்தன்று கோட்டையிலே கொடியேற்றுகிற உரிமையை முதலமைச்சர்களாக வருகிறவர்களுக்குப் பெற்றுக் கொடுத்தவர் நம்முடைய தலைவர் கலைஞர் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, நம்முடைய காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்த என்னுடைய அன்புச் சகோதரர்கள் மறுக்கமாட்டார்கள், காங்கிரஸ் முதலமைச்சர்கள் இருக்கிற மாநிலங்களைவிட தேசிய ஒருமைப்பாட்டிலே அக்கறை கொண்டு, அதை உறுதிப்படுத்துகிற முதலமைச்சராகவும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் இருந்தார் என்பதற்குச் சான்று, அவர் முதலமைச்சராக இருந்த காலத்திலேதான் பக்கத்திலே இந்தியாவின் எல்லையில் பாகிஸ்தானோடு யுத்தம். பிறகு, பாரதிய ஜனதா ஆட்சியிலே கார்கில் யுத்தம். அந்த இரண்டு யுத்தங்களுக்கும் அதிகமான நிதியை இந்தியாவிலே திரட்டிக் கொடுத்த முதல் மாநிலம் என்கிற பெருமையைத் தமிழகத்திற்குப் பெற்றுக் கொடுத்தவர் நம்முடைய முதல்வர் கலைஞர் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

(முற்பகல் 11-00)

இப்போது ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்து, இந்த வயதிலும் ஒரு நாளைக்கு 20 மணி நேரம், இந்த இனம் உயர்வதற்காக அவர் உறங்காமல் ஆற்றியிருக்கிற பணிகள், சரித்திரத்திலே யாராலும் மாற்ற முடியாத, திசை திருப்ப முடியாத சாதனைகளை நிகழ்த்தியிருக்கின்றன என்பதை நான் பெருமையோடு, பூரிப்போடு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.



இந்த 7, 8 மாதங்களில் பல திட்டங்களை, பல சாதனைகளைத் தலைவர் கலைஞருடைய அரசு நிறைவேற்றியிருக்கிறது. அதிலே மகத்தான சாதனையாக, தைத் திங்கள் முதல் நாள், நீண்ட நெடிய காலத்திற்குப் பிறகு, அரசு ஆணை வெளியிட்டல்ல, ஓர் அறிக்கை வெளியிட்டு, தமிழர்களுடைய திருநாளான தைப் பொங்கலை சமத்துவப் பொங்கலாகக் கொண்டாடுங்கள் என்று ஒரு வேண்டுகோள்தான் விடுத்தார். (மேசையைத் தட்டும் ஒலி) பல ஆட்சிக் காலங்களிலே, சுதந்திர தினத்திலே சம்பிரதாயத்திற்காக, ஆட்சியாளர்கள், அமைச்சர்கள் கலந்துகொள்கிற நிகழ்ச்சிகளிலே சமபந்தி போஜனம் என்ற சம்பிரதாய நிகழ்ச்சிகள் நடந்தன. ஆனால், இந்த ஆண்டுதான் தலைவர் கலைஞருடைய வேண்டுகோளைத் தமிழ் மக்கள் அனைவரும் உள்ளப் பூரிப்போடு ஏற்று, மத, இன வேறுபாடின்றி, சொல்லப் போனால் கட்சி வேறுபாடின்றி, குக்கிராமத்திலேயிருந்து, பேரூர், நகரம், பெருநகரங்களில், எல்லா அரசு அலுவலகங்களிலும், எல்லாக் கல்லூரிகளிலும், ஏன் குக்கிராமங்களிலேகூட, எல்லாத் தரப்பு மக்களும் ஒன்று கூடி, சமத்துவப் பொங்கலைக் கொண்டாடுகின்ற ஒரு பண்பாட்டினை உருவாக்கி, தமிழர்களுடைய கலாச்சாரப் பண்பாட்டினை மீட்டுத் தந்த பெருமை நம்முடைய முதல்வர் கலைஞருக்கு உண்டு என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் மெத்தப் பெருமிதத்தோடு இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன்.

அதைப்போல, நம்முடைய தாய் மொழியான தமிழுக்கு, ஆயிரம் ஆண்டு காலம் நாம் கண்ட கனவை நனவாக்குகிற வகையிலே, செம்மொழி அந்தஸ்தை, அன்னை சோனியா காந்தியினுடைய ஆசியோடு, மத்திய சர்க்காரிலே அதற்கான ஆணையைப் பெற்றுக் கொடுத்து, அதற்கும் உச்சமாக, உயர் நீதிமன்றத்திலே அனைத்து நடவடிக்கைகளிலும் தமிழை வழக்கு மொழியாக ஆக்குகிற தீர்மானத்தைக் கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலே நிறைவேற்றி, தமிழுக்கு யாரும் செய்யாத பெருமையை, தமிழாக வாழ்கிற நம்முடைய தலைவர் கலைஞர் செய்திருக்கிறார் என்பதை நான் இங்கே பெருமையோடு பதிவு செய்ய விரும்புகின்றேன்.

அதைப்போல, ஒரு காலத்திலே, கோயில இருக்கிற தெருவிற்குள்ளே பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் நடமாடவே அனுமதியில்லாத காலம் தமிழ்நாட்டிலேயும் இருந்தது, அகில இந்திய அளவிலேயும் இருந்தது. இன்றைக்கும் பல இடங்களிலே இருக்கிறது. ஆனால், நம்முடைய கலைஞர் அவர்கள் ஐயரிலேயிருந்து அருந்ததியர் வரை, கடவுள் இருக்கிற அந்தக் கருவறைக்குள்ளே நுழைந்து அர்ச்சனை செய்யலாம் என்பதைச்

சட்ட வடிவமாக்கி, நிறைவேற்றி அகில இந்தியாவிற்கே வழிகாட்டியிருக்கிறார்கள் என்பதை மெத்தப் பூரிப்போடு நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சுதந்திரம் கிடைத்து இவ்வளவு காலத்திற்குப் பிறகும், பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் உள்ளாட்சி மன்றங்களில், ரிசர்வேஷன் அடிப்படையிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அவற்றை ஒதுக்கி, அவர்கள் பதவியேற்று, அந்தப் பணியைத் தொடர முடியாத ஒரு கறுப்பு அத்தியாயம் கடந்த கால ஆட்சியிலே இருந்தது. இந்த முறை, தமிழகத்தின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரம், எங்கள் வழிகாட்டி, எங்கள் அன்புத் தளபதி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற காலத்தில், தலைவர் கலைஞருடைய வழிகாட்டுதலிலே அந்த நான்கு ஊராட்சிகளையும் இட ஒதுக்கீட்டு சுழற்சி முறைக்கு உட்படுத்தாமல், விலக்கு அளித்து, அவற்றைத் தனித் தொகுதிகளாகவே தொடரச் செய்து அனைத்துத் தரப்பு மக்களும் அதை ஏற்றுக்கொள்கிற ஒரு சகோதரத்துவ நிலையை உருவாக்கி, அந்த நான்கு ஊராட்சி மன்றங்களிலே தாழ்த்தப்பட்ட சகோதரர்கள் இன்றைக்குத் தலைமைப் பொறுப்பை ஏற்று, அதிகாரம் செலுத்துகிற நிலையை உண்டு பண்ணி, அவர்களையும் அழைத்துக்கொண்டு வந்து, அரசு சார்பில் சென்னையிலே, பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியிலே அந்த சகோதரத்துவ விழாவை, சமூக நெறி விழாவை நடத்தி, ஒரு சமூக நீதிப் புரட்சிக்கு வித்திட்டிருப்பவர் நம்முடைய முதல்வர் கலைஞர் என்பது (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அகில இந்தியாவே பாராட்டுகிற ஓர் அம்சமாக இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இப்படிப்பட்ட பணிகளெல்லாம் தமிழகத்திலே, தலைவர் கலைஞருடைய இந்த ஐந்தாவது முறை ஆட்சிப் பொறுப்பிலே நிகழ்ந்துகொண்டிருக்கின்றன என்பதை அறிந்தால், இங்கே பட்டமாக இருக்கிற தலைவர்கள் எல்லாம் எந்த அளவிற்கு இன்றைக்குத் தலைவர் கலைஞரை, இந்த அரசை அவர்கள் உண்மையிலே ஆசீர்வதித்துக்கொண்டிருப்பார்கள் என்பதை விளக்கிச் சொல்வதற்கு எனக்கு வார்த்தை தெரியவில்லை.

*முற்பகல் 11–05*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அன்புத் தலைவர் கலைஞருடைய தாயுள்ளத்தால், கருணையால் 3–வது முறையாக இந்தச் சட்டமன்றப் பேரவையிலே மக்களுக்குத் தொண்டு செய்கிற வாய்ப்பைப் பெற்று இருப்பவன் நான். பொது வாழ்க்கையிலே கிட்டத்தட்ட 30 ஆண்டு காலத்திற்கு மேல் உள்ள





அனுபவத்தில், தேர்தல் வந்தால் எல்லாக் கட்சிகளும் தேர்தல் அறிக்கை வெளியிடுவதும், ஆட்சிக்கு வருகிற கட்சி, அந்த அறிக்கைகளிலே ஒரு சில பகுதிகளை ஆளுநர் உரையிலே சொல்வது அல்லது நிதிநிலை அறிக்கையிலே சொல்வது, பிறகு அறிவித்த திட்டங்கள்கூட நிறைவேற்றப்படாமல் இருந்ததும்தான் கடந்த காலத்திலே, பல ஆட்சியாளர்கள் காலத்திலே வரலாறு. பல புகழ் வாய்ந்த முதலமைச்சர்கள் ஆண்ட மாநிலம் நம்முடைய தமிழ்நாடு. ஒவ்வொரு தலைவரும் ஒவ்வொரு காலத்திலே ஒவ்வொரு நன்மையைச் செய்து இருக்கிறார்கள், ஓர், இருவரைத் தவிர. ஆனால், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், தேர்தல் அறிக்கையிலே என்ன திட்டங்களையெல்லாம் சொன்னார்களோ, அவற்றையெல்லாம் சென்ற ஆளுநர் உரையிலே அணிவகுக்கச் செய்து, அதைத் தொடர்ந்து நடைபெற்ற நிதிநிலை அறிக்கையிலே அவற்றை இடம் பெறச் செய்து, இந்த 7, 8 மாதங்களிலே அவ்வளவு திட்டங்களுக்கும் செயல் வடிவம் கொடுத்திருக்கிறார் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

ஏழையெளிய மக்களுக்கு கிலோ அரிசி இரண்டு ரூபாய். ஒரு நாள் சம்பளத்திலேயே ஒருவன் ஒரு மாத வயிற்றுப் பசியைப் போக்கிக்கொள்ளக்கூடிய ஓர் அற்புதமான நிலை இன்றைக்குத் தமிழகத்திலே உருவாக்கப்பட்டு இருக்கிறது. ஏழையெளிய விவசாயிகள் வாங்கியிருக்கிற கடன் 6,866 கோடி ரூபாய் ஒட்டுமொத்தத் தள்ளுபடி. இலவசத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாதவர்களுக்கு அதனை வழங்க முடியுமா, சாத்தியமா என்று வயிற்றெரிச்சலோடு கிளப்பியவர்கள் பல பேர். இவர்களுக்கு மின்சார இணைப்புக் கொடுப்பீர்களா, கேபிள் இணைப்புக் கொடுப்பீர்களா என ஏளனம் பேசியவர்கள் பல பேர். ஆனால், இன்றைக்கு அதை நடைமுறைப்படுத்தி, சென்ற ஆண்டு அதற்குத் தொடக்க விழா நடத்தினோம். பிப்ரவரி 15–க்குப் பிறகு 25 இலட்சம் கலர் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட இருக்கின்றன என்ற தேனான செய்தி இன்றைக்கு ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டு இருக்கிறது. அதுவும், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் 10,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், வருகிற 15 ஆம் தேதிக்கு மேல் வழங்கப்பட இருக்கிறது.

அதேபோல், இன்றைக்கு சமையல் அறையிலே போய்க் கண்ணீருக்குள்ளே தத்தளித்துக்கொண்டிருக்கிற தாய்மார்களைக் கருத்திலே கொண்டு, பல்லாயிரக்கணக்கான பேர்களுக்கு முதல் தவணையாக gas அடுப்பு. இன்னும் இலட்சக்கணக்கான குடும்பங்களுக்கு அது தொடர் நிகழ்ச்சியாக வழங்கப்பட இருக்கிறது என்கிற செய்தியினை ஆளுநர் உரை சொல்லியிருக்கிறது.

9,000 சேலைகளை ஒரே வீட்டிலே அடுக்கி வைத்தவர்கள் ஆட்சி செய்து இருக்கிறார்கள் இந்த மாநிலத்திலே. ஆண்டுக்கு ஒரு வேட்டி, சேலை கொடுத்த திட்டத்திற்கு, கலைஞரும், எம்.ஜி.ஆரும் நிறைவேற்றிய திட்டத்திற்கு, மூன்று ஆண்டு காலம் மூடு விழா நடத்தியவர்கள் அவர்கள். ஆனால், தலைவர் கலைஞர் பொறுப்புக்கு வந்த பிறகு, அந்தத் திட்டம் துவங்கப்பட்டது மட்டுமல்ல. துவங்கப்பட்ட காலத்திலே இருந்து. எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத அளவுக்கு 3¼ கோடிப் பேருக்கு இலவச வேட்டி, சேலைகளைத் தாராளமாக வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) வழங்கப்பட்ட வேட்டி, சேலைகள்கூட மிகத் தரமான வேட்டி, மிகத் தரமான சேலை என்று, வாங்கிச் செல்கிற தாய்மார்கள் எல்லாம் வட்டாட்சியர் அலுவலகத்திலே ஆனந்தக் கண்ணீரோடு சென்ற காட்சியைச் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாத் தொகுதிகளிலேயும் நாம் கண்கூடாகப் பார்த்தோம்.

அதைப்போல, பெருந்தலைவர் காமராஜருடைய பிறந்த நாளைக் 'கல்வி வளர்ச்சி நாளாக' அறிவித்து, அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு, அதற்குச் சட்ட வடிவம் தந்தார் நம் கலைஞர். காமராஜர் கொண்டு வந்த மதிய உணவுத் திட்டம். அமரர் எம்.ஜி.ஆர் காலத்திலே அது சத்துணவுத் திட்டமாக மாற்றப்பட்டு, அதற்குப் பிறகு 13 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த நம்முடைய தலைவர் கலைஞர், என்னை அரசியலிலே எதிர்த்தவர் கொண்டு வந்த திட்டம்; அதனாலே மூடிவிடுகிறேன் என்று முந்தைய ஆட்சியாளரைப்போல வஞ்சக அரசியல் ஆட்சியைச் செய்யாமல், என் 40 ஆண்டு கால நண்பர் கொண்டு வந்த நல்ல திட்டங்களிலே இது ஒன்று; அவருடைய காலத்திலே சத்துணவு போட்டார்; நான் ஆட்சி அதிகாரத்திற்கு நிதி வசதியைப் பெருக்கியிருக்கிறேன், வாரத்திற்கு ஒரு முட்டை போடுகிறேன் என்று அந்தத் திட்டத்திற்கு ஒரு கூடுதல் சிறப்பைச் சேர்த்தவர் நம்முடைய தலைவர் கலைஞர் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சென்ற ஆட்சியிலே நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு 3 ஆண்டு காலம், ஒரு முட்டையையே நிறுத்தி விட்டார்கள். இப்பொழுது ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருக்கிற தலைவர் கலைஞர், ஒரு முட்டை மட்டுமல்ல; கூடுதலாக ஒரு முட்டை போடுகிறேன் என்று, இரண்டு முட்டைகளாக பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளிலே அது விரிவாக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-10)

தரிசு நிலம் அளிக்கிறோம் என்றார். அதற்கு ஆத்திரத்தைக் கொட்டினார்கள். இது ஏமாற்றுத் திட்டம் என்று கூக்குரலிட்டார்கள்.





இன்றைக்கு, அப்படிக் கூச்சல் போட்டவர்களே மனுப் போடுகிறார்கள், எங்களுக்குத் தரிசு நிலம் வேண்டுமென்று. ஆனால், பாரபட்சம் இல்லாமல், நிலம் இல்லாத ஏழைகளுக்கெல்லாம் இந்த 8 மாதத்திலே கிட்டத்தட்ட ஒரு இலட்சம் பேர்களுக்குப் பல கோடி ரூபாய் மதிப்புள்ள தரிசு நிலங்கள், மாவட்டந்தோறும் அமைச்சர் பெருமக்களை, சர்வ கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம் அழைத்து, ஒரு பெரு விழாவாகத் தமிழகம் எங்கும் நடத்தி, இரு முறை இலட்சக்கணக்கான பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதைப்போல, சிறுபான்மையினரை அச்சுறுத்திய கட்டாய மதமாற்றச் தடைச் சட்டம் வாபஸ் பெறப்பட்டது. அரசு ஊழியர்கள்மீது, அவர்களை அச்சுறுத்துவதற்காகப் போடப்பட்ட ESMA, எதிர்க்கட்சித் தலைவர்களைப் பழி தீர்ப்பதற்குப் போடப்பட்ட TESMA போன்ற கறுப்புச் சட்டங்கள் எல்லாம் இந்த 8 மாதத்திலே வாபஸ் பெறப்பட்டன. தொழிலாளர்களுக்கு, போனஸ் கேட்டதற்காக தீபாவளிக்கு அவர்களுக்கு சிறைச்சாலை பரிசாக அளிக்கப்பட்டது. ஆட்சிப் பொறுப்புக்கு வந்த நம்முடைய தலைவர் கலைஞர் அந்தத் தண்டனைகளை எல்லாம் இரத்துச் செய்து, அந்த உழைக்கின்ற வர்க்கத்தினர் மனம் குளிர்கிற போனஸை 5 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு இந்தத் தடவை அள்ளிக் கொடுத்திருக்கிறார் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதைப்போல, இந்தியாவிலேயே எல்லா மாநிலங்களுக்கும் வழிகாட்டுகிற வகையிலே, அரசு ஊழியர்களுக்கு மத்திய சர்க்கார் மாலையிலே அகவிலைப் படியை உயர்த்துகிறது என்றால், மறுநாள் காலைப் பத்திரிகைகளிலே மாநில அரசு அகவிலைப் படியை உயர்த்தி, உத்தரவு பிறப்பிக்கிற செய்தி தரும் ஓர் உன்னதமான அரசாகக் கலைஞர் அரசு விளங்கியிருக்கிறது. அரசு ஊழியர்கள் இன்றைக்கு நம்பிக்கையோடு, நல்லெண்ணத்தோடு மாநிலமெங்கும் பணியிலே தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். நான்கூட 10, 15 தினங்களுக்கு முன்பு கண்கூடாகப் பார்த்தேன். என் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சில பேர், அரசு ஊழியர்களாக இருப்பவர்கள்கூட சொன்னார்கள். 5 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த ஆண்டுதான் பொங்கலை மகிழ்ச்சியோடு கொண்டாடுகிறோம்; காரணம், உங்கள் தலைவர் புண்ணியவான்; இந்தப் பொங்கல் செலவுக்கு முழுமையாக, அரசு ஊழியர்கள் சம்பளத்திலே கை வைக்காமல், எங்களுக்கு போனஸாகவே தந்து

எங்களைப் பொங்கல் கொண்டாட வைத்திருக்கிறார் என்கிற தேனான செய்தியை 12½ இலட்சத்திற்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் குடும்பங்கள் இன்றைக்கு நன்றிப் பெருக்கோடு சொல்லியிருக்கிறார்கள்.

காவல் துறையினருடைய நலன் கருதி, அவர்களுக்கு மூன்றாவது போலீஸ் கமிஷன் இன்றைக்கு அமைக்கப்பட்டிருக்கிறது. நெசவாளர் பெருமக்களுக்கு கடந்த ஆட்சிக் காலத்திலே, மானத்தைக் காக்கிற துணிமணிகளை மக்களுக்குத் தருகிற அந்தப் பிரிவினருக்கு, கஞ்சித் தொட்டி வைத்துக் கஞ்சி காய்ச்சுகிற அவல நிலை இருந்தது. இப்பொழுது அந்த நிலையெல்லாம் மாறி, இலவச வேட்டி, சேலை 3¼ கோடிப் பேர்களுக்கு வழங்கியதன் மூலம், அவர்களுக்கும் தொழில் பெருகி, அவர்கள் செய்கிற தொழிலுக்கு இலவச மின்சாரத்தை வழங்கி, நெசவாளர்களின் நெஞ்சத்திலே பால் வார்த்தவர் நம்முடைய முதலவர் கலைஞர் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த பெண்கள் திருமணத்திற்கு— திருமணத்தைப் பற்றித் தெரிந்தவர்களுக்குத்தான், அதனுடைய அருமை தெரிந்தவர்களுக்குத்தான் தெரியும்; அதனாலேதான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் முன்னர் ஆட்சிக்கு வந்த 1989-லே ரூ.5 ஆயிரம், பிறகு 1996-லே அது ரூ.10 ஆயிரம்; இப்பொழுது ஏற்பட்டிருக்கிற விலைவாசியைக் கருத்திலே கொண்டு, 15 ஆயிரம் ரூபாயை வழங்குவேன் என்று சொன்னார்கள். இந்த 8 மாதத்திலே சமூக நலத் துறை மூலமாகத் தமிழகமெங்கும் இலட்சத்திற்கும் மேற்பட்ட ஏழைக் குடும்பத்துச் சகோதரிகளுக்கு வாழ்க்கையிலே ஒளியேற்றி வைக்கப்பட்டிருக்கிறது. அதே சகோதரிகள் கர்ப்பிணியானால் 6,000 ரூபாய். புள்ளிவிவரம் ஒன்றைப் பார்த்தோம் என்றால், இதுவரை கிட்டத்தட்ட 65,000, 70,000 கர்ப்பிணிப் பெண்களுக்கு 6,000 ரூபாய் உதவி வழங்குகிற திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

*பிற்பகல் 11-15*

முதியோர்கள், ஊனமுற்றோர்களுக்கு வழங்கப்பட்ட தொகை 100 ரூபாயாக இருந்தது, 200 ஆக ஆனது. இன்றைக்குத் தாயுள்ளம் கொண்ட நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே அது 100 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

வேலையில்லாத இளைஞர்கள் 3 இலட்சம் பேர்களுக்கு இந்த 8 மாதத்திலே, வேலை கொடுக்கிற அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டு, எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் என்று சொல்கிற வேலை தேடித் தரும்





அலுவலகம் இப்போதுதான். இந்த 8 மாதங்களாகத்தான் இயங்கிக்கொண்டிருக்கிறது. கடந்த 5 ஆண்டுகளிலே அங்கே உள்ளவர்கள் சம்பளம் வாங்கிக்கொண்டு தூங்கிக்கொண்டிருந்தார்கள். இது சரித்திர உண்மை. 5 ஆண்டுகள் வேலையேயில்லை என்ற ஒரு போர்டைப் போட்டுக்கொண்டுதான் ஒரு ஆட்சி தமிழகத்திலே நடந்தது. ஆனால், இப்போது 3 இலட்சம் பேர்களுக்கு வேலை என்பது மட்டுமல்ல, புதிதாக வேலைக்குச் சேர்கிறவர்களுக்கு, கடந்த 5 ஆண்டு கால ஆட்சியிலே வேலையில்லை என்று அரசாங்கம் போட்ட உத்தரவின் அவல நிலையைக் கருத்திலே கொண்டு, பணியிலே சேர்கிற அந்த வயது வரம்பை 5 ஆண்டுகள் உயர்த்திக் கொடுத்த ஓர் உத்தமமான அரசு கலைஞருடைய அரசு என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வளவுக்கும் மேல், வேலையில்லாத இளைஞர்கள் அன்றாடச் செலவுகளுக்காகத் தாய், தந்தையரைத் துன்புறுத்தக் கூடாது என்கிற தொலைநோக்குப் பார்வையோடு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், யாரும் கேட்காமல், இன்னும் சொல்லப் போனால், இது தேர்தல் வாக்குறுதிகூட அல்ல, வேலையில்லாத இளைஞர்களுக்கு, 1½ இலட்சம், 2 இலட்சம் இளைஞர்களுக்கு 150 ரூபாயிலிருந்து 500 ரூபாய் என்கிற அளவுக்கு உதவித் தொகையை அளித்து, அது சிறிய தொகையாக இருந்தாலும், பெற்றோர்களிடத்திலே pocket money கேட்காத அளவிற்கு அந்தக் காரியங்கள் நடந்துகொண்டிருக்கின்றன.

கிராமப்புற மாணவர்களுடைய நலனைக் கருத்திலே கொண்டு, சமூக நீதியைத் தன் உள்ளத்திலே, இதயத் துடிப்பிலே கொண்டிருக்கிற நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், இந்தியாவுக்கே வழிகாட்டுகிற வகையிலே, நுழைவுத் தேர்வு இரத்துச் செய்யப்படும் என்கிற சட்டத்தை இதே மாமன்றத்திலே நிறைவேற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) கோடிக்கணக்கான தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட கிராமப்புற மாணவர்கள் குடும்பங்களிலே ஒளியேற்றி வைக்கிற வாய்ப்பைத் தந்திருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

1996-லேயிருந்து 2001 வரை தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே, கட்சிப் பாகுபாடில்லாமல், மிக ஏழை எளிய கிராமப்புறத்து இளைஞர்களுக்கு சாலைப் பணியாளர்கள் வேலை கொடுக்கப்பட்டது, 4,000 ரூபாய் சம்பள அடிப்படையிலே. ஆனால், அதற்குப் பின்பு வந்த அரசு, இது தி.மு.க. ஆட்சி போட்ட திட்டம் என்கிற காரணத்தினால், மனிதாபிமானம் இல்லாமல், எந்த முன்னறிவிப்பும் இல்லாமல், ஓரே

[திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்] [2007 ஜனவரி 22

உத்தரவில், இராணுவ உத்தரவுபோல, 10,000 சாலைப் பணியாளர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்கள், 10,000 மக்கள் நலப் பணியாளர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்கள், 21,000 அங்கன்வாடிப் பணியாளர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்கள், கூட்டுறவுத் துறையிலே தற்காலிகப் பணியிலே நியமிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான பேர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி, வீதிக்கு வந்தார்கள். இன்று அத்தனை பேர்களுக்கும் அந்தப் பணி அளிக்கப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு ஏதோ நீதிமன்றத்திலே ஒரு தீர்ப்பு வந்ததாலேயே, என்னவோ நீதி தேவதைக்கு அப்படியே கட்டுப்படுகிற உத்தம புத்திரர்கள்போல, எதுவுமே கிடைக்காதவர்கள் ஏதோ அவல் கிடைத்ததைப்போல, 2 நாட்களாக ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். நீதியை நீங்கள் மதித்த இலட்சணம் இந்தியாவிற்கே தெரியும். உங்களுக்கெதிராக கோர்ட்டிலே தண்டனை அளித்தபோதுகூட சொன்னீர்கள்; இது ஒன்றும் நிரந்தரமான தீர்ப்பு அல்ல, இது ஓர் அடிப்படைத் தீர்ப்பு; இந்தத் தீர்ப்புக்குப் பிறகு எத்தனையோ அப்பீல் பண்ணலாம்; உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பே இறுதியானது என்று சட்டமன்றத்திலேயே சொன்னவர்கள்தான் அவர்கள்.

அது மட்டுமல்ல, இதே சட்டமன்றத்திலே முதலமைச்சராக இருக்கிறபோது அந்த அம்மையார் சொன்னார்கள், எதற்கெடுத்தாலும் C.B.I. விசாரணை கேட்கிறீர்களே, C.B.I.-யிலே இருப்பவர்கள் மட்டும் என்ன வானத்திலேயிருந்து குதித்து வந்தவர்களா என்று அவர்கள் கேட்டார்கள். ஆனால், இடம் அதிகம் என்கிற காரணத்தினாலே, எதையும் பேசுவதற்கு முடியாதவர்கள் இந்த நலத் திட்டங்களெல்லாம் நடந்து, இவற்றாலெல்லாம் மக்கள் இன்றைக்கு மகிழ்ச்சியிலே திளைத்துப் போய் இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்திருப்பவர்கள், இந்தச் சட்டமன்ற விவாதத்திலேகூட பங்கேற்க மனசாட்சி உறுத்துகின்ற காரணத்தினால், தினந்தோறும் எதையாவது செய்துகொண்டு வெளியேறுகிற நிலையை நாடு பார்த்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதே நேரத்தில், தலைவர் கலைஞர் அவர்கள், அந்த ஆட்சியிலே போடப்பட்டு நியமனம் செய்யப்பட்டவர்கள் என்பதற்காக, அவர்கள் வழியைப் பின்பற்றவில்லை. தலைவர் கலைஞருக்குக் குடும்பம் உண்டு. ஏன், தமிழர்கள் எங்கிருந்தாலும், அவர்களையெல்லாம் தன் குடும்பமாகக் கருதுபவர்தான் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அதனாலேதான், கடல் கடந்து வாழ்கின்ற தமிழனுக்குக் காலிலே அடிபட்டால், கண்ணிலே வலிக்கின்ற உணர்வைப்



2007 ஜனவரி 22] [திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்]

பெற்றிருக்கின்ற காரணத்தினால், இன்றைக்குத் தமிழர்களுக்கு எங்கு பாதிப்பு என்றாலும், அவருடைய கரம் நீள்கிறது. அந்த அடிப்படையிலேதான், சென்ற ஆட்சியாளர்கள் 4,000 ரூபாய் சம்பளத்திலே தினக்கூலி என்று வைத்திருந்த 18,000 ஆசிரியர்கள் பணி இன்றைக்கு நிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11-20

அவர்கள் கொண்டு வந்த திட்டம் என்கிற காரணத்தினாலே, கலைஞருடைய உழவர் சந்தை, சமத்துவபுரம், நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் இவற்றிற்கெல்லாம் மூடுவிழா நடத்திக் கும்பகர்ணத் தூக்கம் போட்டதைப்போலக் கலைஞர் அரசு இருக்கவில்லை. அவர்கள் கொண்டு வந்த திட்டம் என்றாலும், அது நம்முடைய சமுதாயத்தைச் சார்ந்த ஏழை எளிய பிள்ளைகளுக்குத்தானே போகிறது என்ற அந்த எதிர்பார்ப்போடு, இந்த ஆண்டு மட்டும் 103 கோடி ரூபாய் செலவிலே 4½ இலட்சம் மாணவ, மாணவிகளுக்கு இலவச சைக்கிள் திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்றுகிற (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு மனிதாபிமானம் மிக்க அரசாகத் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு இயங்கிக்கொண்டிருக்கிறது. மீண்டும் உழவர் சந்தைகள், தொகுப்பு வீடுகள் நாடெங்கும் இன்றைக்குப் பளிச்சிடுகின்றன.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நிதி என்று கொடுத்து, அவர்களுக்குத் தொகுதியிலே ஒரு மரியாதையைத் தந்தவரே இந்தியாவிற்கு வழிகாட்டுகிற நம்முடைய தலைவர் கலைஞர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் 77 இலட்சம் ரூபாய் தந்தார். இடையிலே வந்த ஆட்சி அதை 5 இலட்சம் உயர்த்தியது. இன்றைக்கு 5 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு வந்த தலைவர் கலைஞர் அவர்கள் 82 இலட்சத்துடன் 40 இலட்சத்தை உயர்த்தி, 1 கோடியே 20 இலட்சம் ரூபாயைத் தந்து (மேசையைத் தட்டும் ஒலி) பல இடங்களிலே, கிராமங்களிலே ஆங்காங்குள்ள மக்களுடைய தேவைகளை நிறைவேற்றுகிற மக்கள் பிரதிநிதிகளான சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தொகுதியிலே ஒரு மரியாதையைத் தருகிற ஒரு நிலையை உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதேபோல, இராமநாதபுரம் மாவட்டம், இந்தியாவிலே வறட்சியை எதிர்நோக்குகிற மாவட்டம். அதேபோல, மிகவும் பின்தங்கிய மாவட்டம் தருமபுரி. இராமநாதபுரம் மாவட்டத்திற்குக் காவிரி ஆற்றிலிருந்து 700 கோடி ரூபாய் மதிப்பீட்டில், வருகிற 30 ஆம் தேதி, இந்த மாத இறுதியிலே, அவருடைய தங்கத் திருக்கரத்தால் நீர் வழங்கும் திட்டத்தைத் துவக்கி வைக்க இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தருமபுரி

மாவட்டத்தின் பெரும் பகுதிகளுக்கு ஒகேனக்கல் குடிநீர்த் திட்ட வேலைகள் துவக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

அதே நேரத்தில், தலைவர் கலைஞர் அவர்கள், 'நான் கோயில்கள் கூடாது என்பவன் அல்ல; கோயில்கள் கொடியவர்களுடைய கூடாரமாக ஆகிவிடக் கூடாது' என்று 50 ஆண்டுகளுக்கு முன்னால், தமிழ்த் திரை உலகம் இருக்கிற காலம் வரை நினைவிலே இருக்கிற வகையில் 'பராசக்தி' படத்திலே குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதை உரிமைப்படுத்துகிற வகையிலே இன்றைக்கு அந்தக் கோயில் பூசாரிகளுக்கும் ஒரு நல வாரியம அமைத்து, அந்த ஏழைப் பூசாரிகளுக்கும் ஊதிய உயர்வுக்குச் சட்டம் வகுத்துத் தந்தவர்தான் நம்முடைய தலைவர் கலைஞர் என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பெரிய கோயில்களுக்கெல்லாம் அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டனர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சட்டமன்ற உறுப்பினர் என்று மட்டுமல்லாமல், எங்கள் குடும்பத் தலைவர் கலைஞருடைய தாய் உள்ளத்தால், ஒரு மாவட்டத்திற்கு ஆளுங்கட்சியின் பொறுப்பாளராகவும் இருப்பவன். எங்களையெல்லாம் அழைத்து, திருக்கோயில்களுக்கு அறங்காவலர்களை நியமிக்கும்போது சொன்னார். 'இந்தத் திருக்கோயில்களுக்கெல்லாம் அறங்காவலர்களாக வருபவர்கள், சொந்தப் பணத்திலேயிருந்து அந்த ஆலயத்திற்கு ஏதாவது செய்பவர்களாக இருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களுடைய பட்டியலைத் தாருங்கள்' என்று சொல்லி, தமிழ்நாடு முழுவதிலும் இருக்கிற திருக்கோயில்களிலே, அரசியலைப் புகுத்தாமல் சொந்தப் பணத்திலே அறப் பணிக்கு, ஆலயப் பணிக்கு அள்ளிக் கொடுக்கிற பெரும் உள்ளத்தைச் சார்ந்த பெரும் தொழிலதிபர்களாகப் பார்த்து இன்றைக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த அரசு, சட்டம்-ஒழுங்கிலே பாரபட்சம் இல்லாமல் செயல்படுகிற அரசு என்பதற்கு ஒரே உதாரணம் சொன்னால் போதும். கொஞ்ச நாளைக்கு முன்பு, யார் தூண்டியோ, தூண்டாமலோ பெரியார் சிலையைச் சில சமூக விரோதிகள் உடைத்தார்கள். அதனுடைய அடிப்படையிலே மறுநாள் வழிபாட்டுத் தலங்கள் சில சேதப்படுத்தப்பட்டன. ஆனால், இந்த ஆட்சி பாரபட்சம் காட்டவில்லை. எங்களுடைய தாய்க் கழகம்தான்—எங்கள் தலைவர் கலைஞரை இந்த நாட்டிற்கு அறிமுகப்படுத்தியவர்தான் தந்தை பெரியார். அவர்கள் எங்களோடு கூட்டணியிலே இருக்கிறார்கள். எங்களுக்குத் தாய் வீடு திராவிடர் கழகம்தான். ஆனால், அந்த வழிபாட்டுத் தலங்களை





உடைத்தவர்கள்மீதும், தந்தை பெரியார் சிலையை அவமதித்தவர்கள்மீதும். தேசியப் பாதுகாப்புச் சட்டத்திலே இரு தரப்பினரையும் கைது செய்து, 24 மணி நேரத்திலே சட்டம்-ஒழுங்கைப் பாதுகாத்த ஆட்சி, தலைவர் கலைஞருடைய ஆட்சி என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு ** இங்கே நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் விளக்கம் சொன்னதைப்போல, தூங்குகிறவர்களை எழுப்பலாம்; தூங்குவதுபோலப் பாசாங்கு செய்பவர்களை எழுப்ப முடியாது என்பார்கள். இரண்டு நீதிபதிகள் கொண்ட தீர்ப்பிலே ஒரு நீதிபதி மாண்புமிகு உபாத்தியாயா, இந்த வழக்கையே தள்ளுபடி செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். இன்னொரு நீதிபதி, நீதியரசர் மாண்புமிகு கலிஃபுல்லா அவர்கள், 99 வார்டுகளுக்குத் தேர்தல் நடத்த வேண்டும் என்றார்கள். இது சட்டம் படிக்காத பாமரர்களுக்கே தெரிந்த விஷயம், தெரிந்தவர்கள் நியாயப்படி பார்த்தால், 3-வது தீர்ப்புக்குக் காத்திருக்கலாம், உச்ச நீதிமன்றத்திற்கு அப்பீல் போகலாம். ஆனால், தார்மீக அடிப்படையில், மக்கள்மீது இருக்கிற நம்பிக்கையில்.. (மணியடிக்கப்பெற்றது)

முற்பகல் 11-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதைப் பற்றிப் பேச வேண்டாம்.

**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** ஆனால், இன்றைக்குக் குறை சாட்டுகிறவர்கள், ஐந்து ஆண்டு காலத்திற்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மேயரையே, அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர் என்கிற காரணத்திற்காக, தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு ஒரு கறுப்புச் சட்டத்தைக் கொண்டு வந்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரைச் சட்டத்தின்மூலம் வெளியேற்றியவர்கள் அவர்கள். பிறகு ஒரு துணை மேயரை வைத்துக்கொண்டு, மேயரே இல்லாமல் தமிழ்நாட்டின் தலைநகரத்தில் ஐந்தாண்டு காலம் நிர்வாகம் நடத்தியவர்களும் அவர்கள்தான். பிறகு அந்தத் துணை மேயர்கூட ஆறு மாத காலம் தலைமறைவு வாழ்க்கை நடத்தி, பெற்ற தாய்க்குக்கூட கொள்ளி போட முடியாமல் அவர்கள் கட்சியைச் சேர்ந்த துணை மேயரே திரைமறைவு வாழ்க்கை நடத்திய அந்த அலங்கோலமும் இந்தத் தமிழ்நாட்டிலேதான் அரங்கேறியது என்பதை நாடு மறந்துவிடவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இன்றைக்கு இருக்கிற நம்முடைய தலைவர் கலைஞருடைய அரசு, மத்திய அரசோடு மிகுந்த நல்லுறவை மேற்கொண்டு வருவது நாடறிந்த ஒன்றாகும். அண்டை மாநிலங்களோடு ஒரு பரஸ்பர நல்லெண்ணம். நேற்றுகூட நான்கு, ஐந்து மாநில முதல்வர்களோடு, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் பகவான் சத்ய சாய் பாபா அவர்களிடத்திலே, கூவத்தையும் சுத்தப்படுத்த வேண்டும், ஆயிரம் கோடி ரூபாய் தாருங்கள் என்று, அந்தச் சந்தர்ப்பத்தையும் இந்த நாட்டு மக்களுக்காகப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் அறிந்த வரை, பகவான் சத்ய சாய் பாபா அவர்களை, பிரதமராக, ஜனாதிபதியாக இருப்பவர்கள் போய்க் காத்திருந்து பார்ப்பது என்பதைப் பார்த்திருக்கிறோம். ஆனால், நமது தலைவர் கலைஞர் அவர்கள், இந்த நாட்டிலே இருக்கிற கோடானு கோடி ஏழையெளிய மக்கள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக 70 ஆண்டுகளாக ஆற்றுகிற பணியை உற்று நோக்கிய காரணத்தினால், அவர் வசிக்கிற கோபாலபுரத்திற்கு வந்து அவரைப் பாராட்டிச் சென்றிருக்கிறார் என்றால், (மேசையைத் தட்டும் ஒலி) இதைவிட வேறு ஒரு பாராட்டு நம்முடைய தலைவர் கலைஞருக்குத் தேவையில்லை என்று நாங்கள் உளமாரக் கருதுகின்றோம்.

இன்றைக்குச் சட்டம்-ஒழுங்கு சிறப்பாக இருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டு, இந்தியாவின் உள் துறை அமைச்சர் மாண்புமிகு சிவராஜ் பாட்டீல் அவர்கள் நேற்றைய முன்தினம் சொல்லும்போது, தமிழ்நாட்டிலே சட்டம்-ஒழுங்கு மிகச் சிறப்பாக இருக்கிறது என்று நற்சான்றிதழ் வழங்கியிருக்கிறார்கள். சொல்ல வேண்டியவர்கள், சொல்ல வேண்டிய இடத்திலே இருப்பவர்கள் அந்த நற்சான்றிதழ் வழங்கிய பிறகு, வேறு இடத்திலே எதிர்பார்க்க வேண்டிய தேவை இந்த அரசுக்கு இல்லை. அதனாலேதான் இன்றைக்குப் பல தொழில் நிறுவனங்கள், 5 ஆண்டு காலம் நம் மாநிலத்தை விட்டுப் பக்கத்து மாநிலத்திற்கு எல்லாம் ஓடியவர்கள், முதல்வரை அலுவலகம் தேடி வந்து மிகப் பெரிய கம்பெனிகள் எல்லாம் தொழில் துவங்குவதற்குத் தமிழ்நாட்டிலே ஒப்பந்தம் போடுகிற காரணத்தினால், சென்னையிலே இருந்து விழுப்புரம் வரை உள்ள இடங்களின் மதிப்பு எல்லாம் இன்றைக்கு 5 மடங்கு, 6 மடங்கு உயர்கிற அளவிற்குத் தமிழ்நாட்டினுடைய மண்ணின் பெருமையை உயர்த்திக் காட்டியிருப்பவர் எங்கள் தலைவர் கலைஞர் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே சில பேர்கள் சொல்கிறார்கள், இந்த அறிக்கையைக் குப்பைக் கூடையிலே போட வேண்டும் என்று. ஆத்திரக்காரர்களாக இருப்பவர்கள்,



எந்தப் பொருள் கிடைத்தாலும் குப்பைக் கூடையிலேதான் போடுவார்கள். ஆனால், ஜனநாயகத்திலே இறுதி எஜமானர்கள் மக்கள்தான். அந்த மக்கள் நல்ல தீர்ப்பின்மூலம், கோட்டைக்கு, கோபுரத்திற்கு யாரை அனுப்ப வேண்டுமோ, அங்கே அவரை அனுப்பிவிட்டு, குப்பைக் கூடைக்கு யாரை அனுப்ப வேண்டுமோ, அவரை அனுப்பியிருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். எனவே, இப்படிப்பட்ட நல்ல பணிகளைச் செய்துகொண்டிருக்கிற இந்த அரசை அழித்துவிடலாம், ஒழித்துவிடலாம் என்று யார் கருதினாலும், அவர்கள்தான் தமிழ்நாட்டு மக்களால் மறக்கடிக்கப்படுவார்கள்.

*முற்பகல் 11-30*

நான் மெத்தப் பணிவோடு, அடக்கத்தோடு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆட்சியிலே இருந்தாலும், இல்லாவிட்டாலும் தலைவர் கலைஞர்தான், தன்மானமுள்ள தமிழர்களுக்கு, சுயமரியாதையுள்ள தமிழர்களுக்கு, உலகம் எங்கும் உள்ள தமிழர்களுக்கு, மானம், மரியாதைதான் வாழ்க்கையிலே தேவை என்று நினைப்பவர்களுக்கு, ஆட்சி, அதிகாரம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் அவர்தான் நெஞ்சத்திலே முதலமைச்சர் என்பதை நான் மெத்தப் பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இன்றைக்கு நாட்டு மக்கள் தலைவர் கலைஞர் பக்கம் இருக்கிறார்கள். இந்த 7, 8 மாத காலம் செய்த பணியை—இந்தியாவில் நான் யாரையும் குறைத்துச் சொல்வதாகத் தயவுசெய்து யாரும் கருதிவிடக் கூடாது. ஒரு குறுகிய காலத்திற்குள் இவ்வளவு திட்டங்களை அமல்படுத்தி நிறைவேற்றிய ஒரு முதலமைச்சரை, ஒரு ஆட்சியை வேறு எந்த மாநிலத்திலாவது, யாராவது ஆதாரத்தோடு சுட்டிக்காட்டினால் தலைவணங்கி ஏற்றுக்கொள்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

ஆக, அப்படிப்பட்ட அரும்பணிகளையெல்லாம் செய்திருக்கிற தலைவர் கலைஞரை இன்றைக்குத் தமிழ்நாட்டு மக்கள் தங்கள் நெஞ்சத்திலே வைத்துப் போற்றிப் பாதுகாத்துக்கொண்டிருக்கின்றார்கள். எனவே, இந்த வாய்ப்பை எனக்குத் தந்த தலைவர் கலைஞருடைய பொற்பாதங்களைத் தொட்டு வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்; தென் மாவட்டங்களிலே வீரத்தால், தியாகத்தால் நிறைந்து போன எங்கள் நெல்லைச் சீமையில், பல நேரங்களிலே இயற்கை பொய்த்துப் போகிறபோது வறட்சி ஏற்பட்டு, அதனால் வன்முறை தலைதூக்குவது வாடிக்கை. கடந்த காலத்திலே இருந்தவர்களுடைய ஆட்சியிலே அப்படி வன்முறை நடந்து, 6 மாதம் தென்பாண்டி மண்டலமே, பேருந்துகள் ஓட முடியாமல், 6-00 மணிக்கு மேல் ஊரடங்கு நிலையிருந்த நிலை மாறி, 1996-க்குப் பிறகு ஆட்சிக்கு வந்த நீங்கள், சமத்துவபுரங்களை உருவாக்கி,

சமத்துவத்திற்கு வித்திட்டீர்கள். அது இன்றைக்கு மரமாக வளர்ந்து, எல்லோரும் அண்ணன், தம்பிகளாகக் கைகோர்க்கிற நிலை வந்திருக்கிறது. அந்த நிலை வந்தபோது, நீங்கள் ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி, நீதியரசர் இரத்தினவேல் பாண்டியன் தலைமையிலே ஒரு குழு அமைத்தீர்கள். அந்தக் குழு தந்த அறிக்கையினுடைய அடிப்படையில், சென்ற முறை நீங்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறபோது, தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும் என்பதற்கேற்ப, உங்களுடைய மனசாட்சி, அறிவுலக மேதை, அமரர் முரசொலி மாறனுடைய கனவுத் திட்டம், 9,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில், நாங்குநேரி தொழில்நுட்பப் பூங்கா, அதற்காக 4,000 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. நீங்கள் அதற்கு 2001 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11 ஆம் தேதி அடிக்கல்லும் நாட்டியிருக்கிறீர்கள். கடந்த 5 ஆண்டு கால ஆட்சியிலே கும்பகர்ணத் தூக்கம். அந்தத் திட்டத்தினை நிறைவேற்றினால் உங்களுக்குப் பெயர் வந்துவிடும் என்று, ஒரு செங்கல்கூட எடுத்து வைக்கவில்லை. இப்போது அது 11 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்ந்து அமெரிக்கக் கம்பெனிகளுடைய துணையோடு அந்தத் தொழில்நுட்பப் பூங்கா வேலை தொடங்க இருக்கிறது என்கிற ஒரு குறிப்பான செய்தியை நாங்கள் பத்திரிகைகளிலே பார்க்கிறோம். அந்தப் பணிகளைத் தொடங்கி வைப்பதற்கு நீங்கள் எங்களுக்குத் தேதி தர வேண்டுமென்று இந்த நேரத்திலே இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆறு மாநகராட்சிகள் இருக்கிற தமிழ்நாட்டின் தலைநகரங்கள் ஆறுக்கும் மென்பொருள் பூங்கா அறிவித்திருக்கிறீர்கள். சென்னையை அடுத்து கோவையிலே என்று சொல்லியிருக்கின்றீர்கள். மூன்றாவது மென்பொருள் பூங்கா, பல்கலைக்கழகமாம் பாளையங்கோட்டையிலே அமைவதற்கு, அதற்காக 250 ஏக்கர் இடம், கல்வித் துறைக்கென்று வாங்கிப் போட்ட இடம் இருக்கின்றது; அந்த மென்பொருள் பூங்காவை அங்கே தொடங்கினால் அந்தத் தென் பகுதி மக்கள் உங்களைத் தெய்வமாக வணங்குவார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே, என்னுடைய தொகுதி தென்காசியிலே 32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இரயில்வே மேம்பாலத்திற்கு அனுமதி தந்திருக்கிறீர்கள். நெல்லை மாவட்டத்திலே போக்குவரத்து நெருக்கடியாக உள்ள இரண்டு தேசிய நெடுஞ்சாலைகளில் இன்னும் இரண்டு மேம்பாலங்கள் தேவை. ஒன்று குலவணிகர்புரம், பாளையங்கோட்டை; மாநகராட்சிக்குள்ளே இருக்கிற பகுதி. இன்னொன்று, ஆலங்குளத்திற்கும், தென்காசி தொகுதிக்கும் மத்தியிலே இருக்கிற தேசிய நெடுஞ்சாலையில் இருக்கிற பாவூர்சத்திரம். இந்த





இரயில்வே மேம்பாலங்களுக்கான அறிவிப்புகளை வருகிற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே சேர்த்துத் தர வேண்டும். உங்கள் காலத்திலே இந்தப் பணிகள் நடைபெறவில்லையென்றால், வேறு எந்தக் காலத்திலேயும் நடக்காது என்கிற எண்ணம் இன்றைக்கு மக்கள் மத்தியிலே உயர்ந்திருக்கிறது.

அதைப்போல, என் தொகுதி உள்ள நெல்லை மாவட்டத்திலே கல்வியாளர்கள் அதிகம் என்றாலும், அரசாங்கக் கலைக் கல்லூரியே கிடையாது. திருநெல்வேலி மாவட்டத்தில், சகோதரர் பீட்டர் அவர்களுக்குக்கூட தெரியும். ஒரேயொரு கலைக் கல்லூரி பெண்களுக்கு அமைத்துத் தந்தீர்கள். அதை அமைத்துக் கொடுத்தவரும் நீங்கள்தான். நம்முடைய அண்ணாவினுடைய துணைவியார் இராணி அண்ணா பெயரிலே அந்த மகளிர் கல்லூரியை, நெல்லைத் தொகுதி, பேட்டையிலே அமைத்து, இன்றைக்கு 2,000 மகளிர் அதிலே கல்வி பயில்கிறார்கள். நாடார் சமுதாயத்துப் பெருமக்கள் பல கோடி ரூபாய் மதிப்புள்ள 26 ஏக்கர் நிலத்தை அரசாங்கத்திற்கு நன்கொடையாகத் தர முன்வந்திருக்கிறார்கள். எனவே, வருகிற கல்வியாண்டில் என் தொகுதிக்கும், பீட்டர் தொகுதியான கடையநல்லூர் தொகுதிக்கும் பாலமாக இருக்கிற சுரண்டையில் அந்தக் கலைக் கல்லூரியை அமைக்க, ஒரு கோடி ரூபாயைக் கட்டாயமேலேயே நீங்கள் வால்பாறைக்குக் கொடுத்ததைப்போல, வறட்சியால் வாடுகிற சுரண்டை வட்டாரத்திற்கு இந்த ஆண்டு நமது அரசு அனுமதியைத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

தாமிரபரணி ஆற்றிலே இந்தத் தடவை வெள்ளத்திலே கடலுக்கு வீணாகப் போன தண்ணீர் பல கோடிக்கணக்கான cusecs இருக்கும். நாங்குநேரி—இராமநாதபுரம் பகுதிகளுக்கு அந்தத் தண்ணீரை ஒரு போகத்திற்கு, கார் பருவத்திலே கடலுக்குப் போகிற வெள்ளத் தண்ணீரை அந்த இரண்டு பகுதிகளுக்குக் கொண்டு செல்கிற ஒரு திட்டம் 167 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே, பொதுப் பணித் துறையிலே ஆய்விலே இருக்கிறது. தலைவர் கோடு போட்டால் ரோடு போடுபவர் நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர். எனவே, நீங்கள் அந்த அனுமதியைத் தர கண் ஜாடை காட்டினால், நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் செய்துவிடுவார். ஏற்கெனவே நெல்லை மாவட்டத்திலே உள்ள 12 அணைகளிலே 11 அணைகளைக் கட்டித் தந்தவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். ஆகவே, இந்தத் திட்டத்தையும் நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டும். உங்கள் காலத்திலேதான் நெல்லை மாவட்டத்திலே 80 சதவீதம் பகுதிக்கு, ஜீவநதியான தாமிரபரணியிலேயிருந்து தண்ணீர் கொடுத்து, மக்களின் தாகம் தீர்த்த தலைவர் நீங்கள்.

*முற்பகல் 11—35*

அதைப்போல, தென்னிந்தியாவில் ஏழைகளுடைய சொர்க்கமாக என் தொகுதியிலே இருக்கிற குற்றாலம் கருதப்படுகிறது. ஏற்கெனவே அதிக நிதி கிடைக்காத காரணத்தால்—இலட்சக்கணக்கான மக்கள் வருகிறார்கள்—அதற்கான அதிக வசதிகள் அமையப்பெறவில்லை. எனவே, இதில் தனிக் கவனம் செலுத்தி, நமது சுற்றுலாத் துறையின மூலம், வருகிற ஆண்டு—அங்கு வருகிற பயணிகளின் எண்ணிக்கை உயர்ந்துகொண்டிருக்கிறது—குற்றாலத்தினுடைய தேவைகளை உயர்த்துவதற்கு சுற்றுலாத் துறையின் மூலமாக இல்லாமல், உங்களுடைய தாயுள்ளத்தின் அடிப்படையிலே தனித் திட்டமாக அதற்கும் பல கோடி ரூபாய் ஒதுக்கித் தந்து உதவி செய்ய வேண்டுமென்று உங்கள் பாதம் பணிந்து கேட்டுக்கொண்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** இன்றைக்கு மக்களுக்குச் செய்திருக்கிற நல்ல அரும்பணிகளின் காரணமாக இந்த ஆட்சி தொடரும் என்பது மட்டுமல்ல, நூறாண்டுகளைக் கடந்து, நம்முடைய தலைவர் கலைஞர் வாழ்வார், வாழ வேண்டும். நீங்கள் வாழ்கிற காலம் வரைதான் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்களுடைய பொற்காலம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களையும் வைத்து நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இயற்கைமீது எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. இன்றைக்கு அவருடைய தயவால் இந்தச் சட்டமன்றத்திற்கு வந்திருக்கிற நம் அனைவருடைய வாழ்நாளில் ஒவ்வொரு பகுதியை எடுத்துக்கொண்டு, தலைவர் கலைஞர் இந்த இனம் வாழ, தமிழ் மொழி செழிக்க, சிறப்புற நீங்கள் நூறாண்டுகளைக் கடந்து வாழ வேண்டுமென்று உங்களை வாழ்த்தி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி, என் உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, இருக்கையில் இல்லை. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையின்மீதான விவாதத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கலந்துகொண்டு கருத்துகளை வழங்குவதற்கான அனுமதியினைத் தந்திருக்கின்ற உங்களுக்கு என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



*2006* ஆம் ஆண்டு மே திங்கள் *24* ஆம் நாள் நடந்த ஆளுநர் உரை. *2007* ஆம் ஆண்டு ஜனவரி மாதம் *20* ஆம் நாள் இந்த உரை. இடையிலே எட்டு மாத இடைவெளி. இந்த, புதிய அரசினுடைய தேன் நிலவு முடிந்து, நிர்வாகத்தின் யதார்த்தத்திற்குத் திரும்பியிருக்கின்ற காலம். புதிய மனைவி, புதிய கார், புதிய வீடு என்று புதியவற்றுக்கே இருக்கின்ற கவர்ச்சிகளின் காலம் போய், யதார்த்தத்திற்கு இந்த அரசு திரும்பியிருக்கின்ற காலம். எட்டு மாதங்களுக்கு முன்னால் இந்த ஆளுநர் உரை நடக்கிறபோது, மணக் கோலம் கலையாத, ஒப்பனை கலையாத ஒரு மணமகனாக உங்களைப் பார்த்தோம். இன்று ஒப்பனைகள் எல்லாம் கலைந்து, யதார்த்தத்திற்கு வந்திருக்கிற மணமகனாகப் பார்க்கிறோம்; ஒப்பனை கலைந்த பிறகும் நீங்கள் அழகாகத்தான் இருக்கின்றீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஓர் ஆட்சி என்பது—ஒரு தேர்தலுக்குப் பிறகு ஏற்பட்டிருக்கின்ற ஓர் ஆட்சி, மக்கள் விரோத ஆட்சியா, மக்கள் நல ஆட்சியா என்பதை அறிய அது நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்க வேண்டும். ஒரு மக்கள் நல அரசு என்பது ஒரு மகாநதி மேற்கொண்ட பயணம் போன்றது. அந்த மகாநதி, தான் வந்த பயணத்தைத் தானே திரும்பிப் பார்க்கின்றபோது, அதனுடைய கரைகள் எல்லாம் வளமை, அதனுடைய கரைகள் எல்லாம் செழுமை; அது வந்த இடமெல்லாம் பசுமை; அது பார்த்த இடமெல்லாம் புனிதம்; அதில் குளித்த மனிதர்கள் சுத்தமானவர்கள்; தாகம் கொண்ட மனிதர்கள் நீர் குடித்துத் தாகத்தைத் தீர்த்துக்கொண்டார்கள். இதுதான் ஒரு மகாநதியினுடைய பயணம். அதற்குப் பக்கத்திலேயே ஒரு கழிவு நீர் ஓடையும் ஓடுகிறது. அதுவும், தான் வந்த பாதையைத் திரும்பிப் பார்க்கிறது. அது வந்த பாதையெல்லாம் அசுத்தம்; அது வந்த பாதையெல்லாம் துர்நாற்றம்; அது வந்த பாதையெல்லாம் தொற்று நோய்; (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு மக்கள் நல அரசுக்கும், ஒரு மக்கள் விரோத அரசுக்கும், நடந்து வந்த பாதையை வைத்துத்தான் அந்த அரசினுடைய முகவரியை நாம் நிர்ணயிக்க முடியும். அந்த வகையிலே நான் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன். நீங்கள் நடந்து வந்த பாதை, கடந்த எட்டு மாதங்களாக ஒரு மகாநதியின் பயணம் போன்று, (மேசையைத் தட்டும் ஒலி) அற்புதமான திட்டங்களையெல்லாம் நிறைவேற்றி, சமூகத்தினுடைய கடைத் தட்டிலே இருக்கின்ற மக்கள், வாழ்வின் விளிம்பில் இருக்கின்ற மக்கள், ஒடுக்கப்பட்டவர்கள், புறக்கணிக்கப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், ஏழைகள், எளியவர்கள் என்று எல்லோரும் வாழ்த்திப் போற்றுகின்ற அளவிற்கு நல்ல பல திட்டங்களைச் செய்து முடித்த எட்டு மாதங்களின் நிறைவோடு

இந்த அவையிலே நாம் நிற்கிறோம் என்பது உண்மை. எனவே, அதனுடைய பாராட்டை நான் பதிவு செய்யக் காத்திருக்கிறேன்.

முற்பகல் 11—10

ஆளுநர் உரையைப் பொறுத்தவரை, இதை ஒரு Performance Report என்றுதான் அழைக்க வேண்டுமென்று நான் எண்ணுகிறேன். கடந்த எட்டு மாதங்களாக இந்த அரசு என்ன செய்தது—ஏனென்று சொன்னால், ஆளுநர் உரை என்பது, ஒரு அரசினுடைய மனசாட்சியின் குரல், அந்த அரசுக்கு மனசாட்சி இருந்தால். 'எனவே, மனசாட்சி இருக்கின்ற அரசு, தன்னைத் தானே உற்றுப் பார்த்துக்கொள்கிறது இந்த ஆளுநர் உரையின் மூலமாக. தான் நடந்து வந்த பாதையிலே தவறுகள் இருந்தால், அவற்றையும் கணித்து தன்னைத் திடப்படுத்திக்கொள்கிறது. எதிரே வரக்கூடிய காலங்களிலே, கால் சறுக்காமல் நடக்க வேண்டுமென்ற உறுதியை மக்களுக்குத் தருகிறது. அதையெல்லாம் விளக்குவதாகத்தான் இந்த ஆளுநர் உரை அமைய வேண்டும், அமைவதாக நான் கருதுகிறேன்.

இந்த ஆளுநர் உரையின்மீதாக, ஒரு பெரிய தேசிய விவாதத்தை நீங்கள் திறந்துவிட்டிருக்கின்றீர்கள். தமிழகத்திலே இருந்து புறப்பட்டிருக்கின்ற இந்த அரசியல் சிந்தனை, இந்தியாவின் விளிம்புகளில் எல்லாம் விவாதிக்கப்படும். அரசியல் சாசனச சட்டத்தை முழுவதுமாக மாற்றி எழுத வேண்டுமென்று நீங்கள் கேட்டிருக்கின்றீர்கள். இது ஒரு வரவேற்கத்தக்க விவாதம். இதிலே காங்கிரஸ் கட்சியினுடைய கருத்து என்ன என்பதையும் நான் பதிவு செய்ய ஆசைப்படுகிறேன்.

இந்த விவாதம் முழு நேர விவாதமாக, பயனுள்ள விவாதமாக நடந்து, பல்வேறு கருத்துகள், பல்வேறு தேவைகள், பல்வேறு சூழ்நிலைகளைப் பற்றி, நம்முடைய அரசியல் சாசனச் சட்டம் நிறைவேற்றித் தந்தவற்றைப் பற்றி நாடு முழுவதும் நடக்கின்ற நல்ல விவாதங்கள், இந்த நாட்டினுடைய எதிர்காலத்தை நிச்சயமாக, நாம் இருந்தாலும், நாம் இல்லாவிட்டாலும் வரக்கூடிய தலைமுறைக்கு நல்ல பாதையை அமைத்துத் தரும் என்பதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. இந்த அரசியல் சாசனச் சட்டத்தை இயற்றிய பிதாமகன்கள், மிகப் பெரிய ஞானவான்கள், சுதந்திரப் போராட்டத்தின் வேள்வித் தீயில் குளித்தவர்கள், பொது நல சேவைக்காகவே பிறந்து புனிதமான வாழ்வைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டவர்கள்கூட, நாளை இந்த அரசியல் சாசனச் சட்டம் திருத்தப்பட வேண்டியதிருக்கும் என்று எதிர்பார்த்துத்தான் அதை எழுதினார்கள். எனவேதான், அதை எப்படித் திருத்துவது என்பதற்குள்ள அந்த சூட்சுமத்தைக்கூட அந்தச் சட்டத்திற்குள்ளே வைத்தார்கள்.





இந்த அரசியல் சாசனச சட்டம் இயற்றப்பட்ட மறு வருடமே அதை மாற்ற வேண்டுமென்கிற கோரிக்கை முதலில் எங்கேயிருந்து வந்தது என்று சொன்னால், நீங்கள் அமர்ந்திருக்கின்ற அதே நாற்காலியிலே இருந்துதான் வந்தது. அன்று பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், முதலில் அரசியல் சாசனச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும ஒலி) அதுதான் 1951 ஆம் ஆண்டு. அன்றையதினம் நம்முடைய பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேரு அவர்கள் முதல் சட்டத் திருத்தம் கொண்டு வந்தார்கள். அதற்குப் பிறகு அதிகமாக சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டது யாருடைய ஆட்சியில் எனறு சொன்னால், இன்று இந்தியாவிலே இருக்கின்ற ஏழைகள்—நினைககின்ற நேரத்திலேயெல்லாம் கண்களில் கண்ணீர் வரக்கூடிய அளவிற்கு, ஏழைகளுக்காக வாழ்ந்து தியாக விளக்காக மறைந்த அன்னை இந்திரா காந்தி அவர்களுடைய ஆட்சியிலேதான் அந்த அரசியல் சாசனச் சட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) நாம் அத்தனை முறை மாற்றினோம். 96 முறை மாற்றியிருக்கிறோம். இன்னும் 100 முறை மாற்றலாம். ஏன் என்று சொன்னால், ஒரு அரசியல் ஜனநாயகத்தோடு இந்த அரசியல் சாசனச் சட்டத்தினுடைய கடமை முடிந்துவிடாது. அரசியல் ஜனநாயகம் என்று முழுமை பெறுகிறது, என்று பொருள் பெறுகிறது என்று சொன்னால், அது என்று சமூக ஜனநாயகமாக மாறுகிறதோ, அன்றுதான் அந்த அரசியல் ஜனநாயகத்தினுடைய பொருள் முழுமை பெறுகிறது. அதைத்தான் ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கின்றீர்கள்.

ஒடுக்கப்பட்டவர்கள், விளிம்பு நிலை மக்கள், வாய்ப்புகள் மறுக்கப்பட்டவர்களுக்கு சமூக நீதி தருவதற்காக ஒரு அரசியல் சாசனச் சட்டம குறுக்கே நிற்கும் என்று சொன்னால், அந்த அரசியல் சாசனச் சட்டத்தை மாற்றக் கூடாது, அதைத் திருத்தக் கூடாது என்பது காங்கிரஸ் கட்சியினுடைய எண்ணம் அல்ல. காங்கிரஸ் கட்சியினுடைய எண்ணம், சட்டத்திற்காகத்தான் மக்கள் என்பதல்ல, மக்களுக்காகத்தான் சட்டம் என்கின்ற முடிவிலே. அந்த விவாதத்தை நாங்கள் முழுமையாக வரவேற்கிறோம். அந்த விவாதம் இன்னும் பல ஆண்டு காலம், பல மாதங்கள், பல நாட்கள நடந்து, இந்த தேசத்தினுடைய ஏழை பாழைகளுக்கு நல்ல விடிவு காலம் பிறக்கும, சமூக நீதி கிடைக்கும் என்று சொன்னால், காங்கிரஸ் கட்சி அந்த விவாதத்தை வரவேறகிறது என்று இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல, இன்னும் அற்புதமான ஒரு கருத்தை நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். சேவை வரியை விதிக்கக்கூடிய அந்த அதிகாரம் மாநில அரசுக்கு வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். அதை நாங்கள்

வரவேற்கிறோம். அதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. இன்று மிக அதிகமாக சேவை வரி வசூலிக்கப்படுகின்ற மாநிலங்களிலே தமிழகமும் ஒன்று. அந்த வரி, தமிழகத்தினுடைய மக்களுக்கும், தமிழகத்தினுடைய வளத்திற்கும், தமிழகத்தினுடைய வளர்ச்சிககும் பயன்பட வேண்டும் என்பதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. இதைத்தான் நம்முடைய ஐக்கிய முன்னணி அரசினுடைய வழிகாட்டுதலாக இருக்கின்ற அன்னை சோனியா காந்தி அவர்கள், இன்று பிரதமராக இருக்கின்ற டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுடைய ஆடசியிலே, கடந்த இரண்டு ஆண்டுகள் எடுத்துப் பார்த்தால்கூட மாநிலங்களுக்கு மத்திய அரசு தருகின்ற வரியினுடைய பங்கு ஒவ்வொரு ஆண்டும் 20 விழுக்காடு அதிகரித்து இருக்கிறது. 2004—ல் ஏறக்குறைய ரூ.75,000 கோடியாக இருந்த மத்திய அரசு மாநில அரசுக்கு வழங்கிய வரியினுடைய பங்கு, மன்மோகன் சிங்கினுடைய ஆட்சி வந்தவுடனே அது 20 விழுக்காடு அதிகமாகி ரூ.91,000 கோடியாக மத்திய அரசினுடைய வரித் தொகுப்பு மாநில அரசுகளுக்குக் கொடுக்கப்படுகிறது. அதற்கு அடுத்த ஆண்டு, அதிலிருந்து 20 விழுக்காடு அதிகமாகி, இந்த நடப்பு நிதியாண்டிலே ஏறக்குறைய ஒரு இலட்சத்து நாலாயிரம் கோடி ரூபாய் மத்திய வரித் தொகுப்பிலிருந்து மாநில அரசுகளுக்கு வழங்கப்படுகிறது. எனவே, இந்த சேவை வரியினுடைய பயனையும் மாநிலங்கள் பெற்றுத்தான் ஆக வேண்டும் என்பதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. அதை நாங்கள் முழுமையாக உங்கள் மத்தியிலேயிருந்து வரவேற்கிறோம்.

முற்பகல் 11—45

அதற்கடுத்து, நம்முடைய மத்திய, மாநில அரசுகளுடைய உறவுகள்; மத்திய, மாநில அரசுகளுடைய உறவுகள் எவ்வாறு சீர்திருத்தப்பட வேண்டும்? ஒரு உண்மையான கூட்டாட்சித் தத்துவம் எப்படி நிறைவேற்றப்பட வேண்டும்? இதைப் பற்றியெல்லாம், அரசியல் சாசனச் சட்டத்தினுடைய மறு பதிப்பை அல்லது புதிய பதிப்பைக் கொண்டு வருகின்றபோது, இதைப் பற்றியெல்லாம் சிந்திக்க வேண்டும் என்கிற கோரிக்கையை வைத்திருக்கிறீர்கள். அதற்கான நியாயமான தேவைகள் இருப்பதை நாங்கள் மறுக்கவில்லை. இன்றைக்குக்கூட நாம் அதற்காகத்தான், உங்களுடைய வழிகாட்டுதலில், அன்னை சோனியா காந்தியினுடைய வழிகாட்டுதலில் அமைந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பதவியேற்ற உடனே, Centre-State Commission என்கிற அந்தப் புதிய ஆணையத்தை நியமித்திருக்கிறது. அப்படி நியமனம் செய்த ஆணையத்தினுடைய அறிக்கையின்பேரிலே, மத்திய, மாநில அரசுகளுடைய உறவுகளை எப்படிப் பலப்படுத்துவது, கூட்டாட்சித்





தத்துவத்தை மேலும் எப்படி வலுப்படுத்துவது என்கிற அந்த விவரமான அறிக்கைக்குப் பிறகு, அவையெல்லாம் வரக்கூடிய காலங்களிலே மேற்கொள்ளப்படும் என்றும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இன்றையதினம் பத்திரிகைகளிலே ஆளுநர் உரை பற்றி சில அரசியல் கட்சிகள் சார்பாக விமர்சனங்கள் வந்தபோது, புதிய திட்டங்கள் ஏதும் இந்த ஆளுநரின் உரையிலே அறிவிக்கப்படவில்லை என்று சொல்லப்பட்டது. எனக்கு முன்னாலே பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர், என் அன்பிற்குரிய சகோதரர் திரு. கருப்பசாமி பாண்டியன் அவர்கள் பேசுகின்றபோதுகூட அதைக் குறிப்பிட்டார். ஆனால், உள்ளபடியே நான் பயந்துகொண்டேயிருந்தேன. எங்கே ஏதேனும் புதிய திட்டங்களை நீங்கள் அறிவித்துவிடுவீர்களோ என்ற பயம் எனக்கு இருந்தது. ஏனென்று சொன்னால், கடந்த எட்டு மாதங்களில், இன்னும் எட்டு தலைமுறைகளுக்கு வேண்டிய திட்டங்களை நீங்கள் அறிவித்திருக்கின்றீர்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

கடந்த ஆளுநர் உரையின்மீது கருத்துச் சொல்கின்றபோது, நாங்கள் சொன்னோம்; 'கருவறையிலிருந்து கல்லறை வரை; அகதிகளிலிருந்து அரவாணிகள் வரை', சமூகத்தின் எந்தத் தரப்பினரையும் விட்டு வைக்காமல், எந்தக் குழுமத்தையும், எந்தச் சமூகத் தட்டையும ஒதுக்கிவிடாமல், எல்லோருக்கும் திட்டம் தந்திருக்கின்ற ஒரு நிறைவான ஆளுநர் உரை என்று அன்றைக்குச் சொன்னோம். இன்றைக்கு அந்தத திட்டத்தினுடைய தொடர்ச்சி.

அன்றையதினம் நீங்கள் சமையல் எரிவாயு இணைப்பைத் தொடங்குகின்ற விழாவிற்கு மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சரோடு உங்களை வந்து பார்க்கின்ற வாய்ப்பினை நானும், எங்களுடைய சட்டமன்றக் காங்கிரஸ் கட்சித் தலைவர் அண்ணன் திரு. சுதர்சனம் அவர்களும் பெற்றிருந்தோம. அண்ணன் ஆற்காட்டார் அவர்களும இருந்தார்கள். அந்த நேரத்திலே நீங்கள கேட்டீர்கள்; வருகின்ற மார்ச் மாதத்திற்குள்ளே 3 இலட்சம் இணைப்புகள் வேண்டுமென்று கேட்டீர்கள். வருகின்ற மார்ச் 31—க்குள் தமிழகத்திலே இருக்கின்ற, சமையல் எரிவாயு அடுப்பு இல்லாத ஏழையெளிய குடும்பங்கள், 3 இலட்சம் குடும்பங்களுக்கு இந்தச் சமையல் எரிவாயு அடுப்புகள் வழங்கப்பட வேண்டும். வரக்கூடிய ஆண்டில், 10 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கவிருக்கிறோம். (குறுக்கீடு) எத்தனை? 25 இலட்சம் குடும்பங்களுககு அந்தத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கவிருக்கிறோம மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள்,

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2007 ஜனவரி 22

அரசு அதிகார அலுவலகங்கள் எங்கெல்லாம் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் இந்தத் திட்டங்களைப் பற்றிய விவாதங்களும், செயல்பாடுகளும் நடந்தவண்ணமாக இருக்கின்றன. இதற்குமேல் திட்டங்களைத் தாங்குவதற்கு இந்த நிர்வாகத்திற்குச் சக்தி இல்லை. இந்தத் திட்டங்களை முறையாகச் செயல்படுத்தி, அவை முடிந்தாலே, தமிழகத்தினுடைய முகவரியே மாறிவிடும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவேதான், இந்த ஆண்டு காங்கிரஸ் கட்சி உங்களை என்ன கேட்டுக்கொள்கிறது என்று சொன்னால், இந்தத் திட்டத்தின் பயன், சரியான பயனீட்டாளர்களுக்குப் போய்ச் சேருகிறதா என்று, அந்த வாய்க்கால் சரியாக இருக்கிறதா என்று நீங்கள் தயவுசெய்து பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) Take care of the delivery system; வாய்க்காலைப் பயனிட்டு, செப்பனிடக்கூடிய அந்த ஓராண்டாக இந்த ஓராண்டை எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால், நிச்சயமாக டாக்டர் கலைஞர் அவர்களே, நான் சொல்வேன்; உங்களுடைய எண்ணத்தை, உங்களுடைய கனவை, இந்த ஆண்டும், அடுத்த ஆண்டுமே நடைமுறைப்படுத்துகின்ற ஓர் அற்புதமான ஆட்சி தமிழகத்திலே நடைபெறுகிறது என்பதிலே யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை.

*முற்பகல் 11—50*

நீங்கள் திருவாரூரிலே பேசுகின்றபோது அற்புதமாகப் பேசினீர்கள்; மத்திய அரசும், மாநில அரசும் இணக்கமாக இருந்து, ஒரு இரயில்வே தண்டவாளத்திலே போகின்ற இரயில்போலத் தமிழகம் போய்க்கொண்டிருக்கிறது என்று சொன்னீர்கள். அதனுடைய விளைவுகளை நாங்கள் பார்க்கிறோம். ஒரு மூன்று நாட்களுக்கு முன்னால் நம்முடைய மத்திய திட்ட அமலாக்கத் துறை அமைச்சர், எங்கள் மக்கள் தளபதி வாசன் அவர்களிடம் பேசிக்கொண்டிருந்தேன். அவர்கள் சொன்னார்கள், நடப்பு நிதியாண்டிலே, இன்று தமிழகத்திலே மத்திய திட்டங்கள் 57 திட்டங்கள், 37 ஆயிரம் கோடி ரூபாயிலே நடந்துகொண்டிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது என்றும் தமிழகத்திற்குக் கிடைக்காத ஒரு பொற்காலம்.

நம்முடைய அன்புக்குரிய, மரியாதைக்குரிய உள்ளாட்சித் துறை அமைச்சர், மாண்புமிகு தளபதி அவர்கள் தலைமையிலே நம்முடைய அரசும், மத்திய அரசும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலே சென்னை மாநகராட்சிக்கு மட்டும், வரக்கூடிய 5 ஆண்டுகளிலே ரூ.45 ஆயிரம் கோடி ரூபாயை அன்னை சோனியா காந்தி அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரில் டாக்டர் மன்மோகன் சிங் தலைமையிலே இருக்கின்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தருகிறது. நான் சென்னை மக்களைக் கேட்கிறேன். என்று இந்தக் காலம் வரப் போகிறது? 45 ஆயிரம் கோடி ரூபாயைக் கேட்கக்கூடிய ஓர் அரசு, தகுதியுள்ள ஓர் அரசு, 'தா' என்று கேட்கின்ற ஓர் அரசு; அவர்கள் கேட்காதவர்கள் கேட்டுவிட்டார்களே, கேட்கத் தகுதி உள்ளவர்கள் கேட்டுவிட்டார்களே என்று ஓடி வருகின்ற மத்திய அரசு; இந்தப் பலனைப் பெறுவதற்கான நாட்கள், வரக்கூடிய நாட்கள். அணை முழுவதும் தண்ணீர், வயல்வெளிகள் விளைச்சலுக்குத் தயாராக இருக்கின்றன. நடுவிலே ஓடி வருகின்ற வாய்க்காலை இந்த ஆண்டு முழுவதும் இந்த அரசும், சட்டமன்ற உறுப்பினர்களும், சமூக ஆர்வலர்களும், பொதுப் பணி ஆர்வலர்களும் ஒன்றாகச் சேர்ந்து நாம் பயணித்தால் இந்தத் தமிழகத்திலே எல்லா வீடுகளிலும் விளக்கும், மகிழ்ச்சியும் நிச்சயமாக எரியும் என்பதிலே மாற்றுக் கருத்து இல்லை.



2007 ஜனவரி 22] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

ஏதோ கேட்கிறார்கள், எல்லாம் இலவசமாகவா கொடுக்கப் போகிறார்கள் என்று ஒரு விமர்சனம்கூட வந்தது, அரசு திவாலாகப் போகிறது என்று நான் கேட்கிறேன். இந்த நாட்டிலே ஒரு இல்லாத ஏழை வீட்டுக்கு ஒரு சமையல் எரிவாயு அடுப்புக் கொடுத்து, ஓர் அரசு திவாலானால், அந்த அரசு ஆகட்டுமே! 50 ஆயிரம் ஏக்கர், 60 ஆயிரம் ஏக்கர் இந்த இந்தியாவிலே இருக்கக்கூடிய முதல் தர முதலாளிகளை எல்லாம் பார்த்து, அவர்களை எல்லாம் தேடித் தேடி அந்த நிலத்தை வழங்குகின்றபோது திவால் ஆகாத ஓர் அரசு, எங்கேயோ எங்கள் சொக்கம்பட்டியிலே, ஆய்க்குடியிலே ஒரு ஏழை விவசாயி வீட்டிலே ஒரு தொலைக்காட்சிப் பெட்டி வைத்தால், ஒரு சிறிய எரிவாயு அடுப்பு எரிந்தால், அதனால் கலைஞருடைய அரசு திவாலாகும் என்று சொன்னால், கலைஞர் அவர்களே, அதைவிடப் பெருமை உங்களுக்கு வாழ்க்கையில் இருக்கவே முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

சில நேரத்திலே தோல்விகள் அழகானவை. ஆராதிக்கக்கூடிய தோல்விகள். இன்று மாநகராட்சியில் இருக்கின்ற 99 உறுப்பினர்களை இராஜிநாமாச் செய்யச் சொன்னீர்களே, அதைத் தோல்வி என்று சொன்னார்களே, அந்தத் தோல்வி உங்களுடைய கண்களிலும், கால்களிலும் விளைந்த இரத்தினங்கள் அல்லவா? ஜனநாயகத்தை வாழ வைத்த தோல்வி. ஜனநாயகத்துக்கு உயிர் தந்த தோல்வி. அப்படிப்பட்ட தோல்விகளால்தான் இந்த நாடு வாழ்கிறது; அரசு வாழ்கிறது; ஜனநாயகம் வாழ்கிறது. அதனால்தான் அப்படிப்பட்ட திட்டங்கள் நடைபெற வேண்டுமென்று சொல்கிறோம். அந்த வாய்க்கால்கள் சீராக இருக்க வேண்டுமென்று சொல்கிறோம். அந்த வாய்க்கால்கள் சீராக இருக்க வேண்டுமென்று எதற்காகச் சொல்கிறோம் என்று சொன்னால், செயல்படுகிற அந்த இடத்தில் நாங்கள் அதைப்

பார்க்கிறோம்; அதற்கு என்ன சிரமங்கள் இருக்கின்றன என்று பார்க்கிறோம்.

கடந்த முறை நான் ஆளுநர் உரை விவாதத்திலே பேசுகின்றபோது, B.P.L.—below poverty line—வறுமைக் கோட்டின் எல்லைக்குக்கீழே உள்ள அந்தப் பட்டியலைப் புதுப்பித்துத் தர வேண்டுமென்று கேட்டேன். நீங்கள் உடனடியாக உத்தரவிட்டீர்கள். ஊராட்சி ஒன்றியங்களில் மட்டுமே அந்தப் பட்டியல் புதுப்பிக்கும் பணி நடந்து முடிந்தது. நகர்மன்றங்களிலும், பேரூராட்சிப் பகுதிகளிலும் அந்தப் பட்டியல் புதுப்பிக்கப்படவில்லை. இப்போது என்ன நடக்கிறது என்று சொன்னால், பல்வேறு திட்டங்கள் வருகின்றன. ஏழைக் குடிசைகளை மாற்றி, அவர்களுக்கு ஓடு போட்டுத் தருகின்ற திட்டங்கள்; இன்னும் மக்கள் நல்வாழ்வுக்கான அனைத்துத் திட்டங்கள், கர்ப்பிணித் தாய்மார்களுக்கான திட்டங்கள், இலவசத் திருமண உதவித் திட்டங்கள்; இவை எல்லாமே யாருக்கு வழங்கப்படுகின்றன என்று சொன்னால், அந்த வறுமைக் கோட்டின் எல்லைக்குக் கீழே உள்ளவர்களுக்கு மட்டும்தான் வழங்கப்படுகின்றன. அந்தப் பட்டியல் இன்னும் முறையான பட்டியலாக வரவில்லை. உதாரணத்திற்கு ஒன்று சொல்வேன்; இந்த நாடு முழுவதும் இருக்கின்ற சராசரி வறுமைக் கோட்டின் எல்லைக்குக்கீழே உள்ளவர்கள் 27 விழுக்காடு. ஆனால், தேனி மாவட்டத்தில் மட்டும் அது 80 விழுக்காடு. அது எப்படி? தேனி மாவட்டம் முன்னாள் முதலமைச்சரைத் தேர்ந்தெடுத்த மாவட்டம் என்பதற்காகவா? இங்கே இருக்கின்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இருக்கின்ற மாவட்டம் என்பதற்காகவா? அந்த ஒரு மாவட்டத்தில் மட்டும் 80 விழுக்காடு மக்கள் வறுமைக் கோட்டிற்குக்கீழே இருக்கிறார்கள். எங்களுக்குத் தெரிந்த வரை—நான் தேனி மாவட்ட மக்களைக் குறை சொல்லவில்லை. தேனி மாவட்டம் மிகச் செழிப்பான, இயற்கை வளங்கள் நிறைந்த மாவட்டம். இராமநாதபுரம், சிவகங்கை, திருநெல்வேலி, இங்கே இருக்கின்ற பெரம்பலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் போன்ற மாவட்டங்களிலே குடிக்கக்கூட தண்ணீர் இல்லாது உள்ள எங்கள் மாநிலத்திலேயே 24 விழுக்காடு, 22 விழுக்காடுதான் வறுமைக் கோட்டின் எல்லைக்குக்கீழே உள்ளவர்கள். ஆனால், தேனி மாவட்டத்திலே மட்டும் 80 விழுக்காடு மக்கள் வறுமைக் கோட்டின் எல்லைக்குக்கீழே உள்ளவர்கள் என்று சொன்னால், அந்தப் பட்டியலில் எங்கேயோ தவறு இருக்கிறது என்று அர்த்தம்.

*முற்பகல் 11—55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.



***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்ன கருத்து நூற்றுக்கு நூறு உண்மை. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையினுடைய ஆய்வுக் கூட்டத்தைக் கடந்த மாதம் தேனி மாவட்டத்திலே நடத்திக்கொண்டிருந்தபோது இந்தப் பிரச்சினையைப் பற்றி அங்கே கலந்துகொண்ட சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அது சம்பந்தமாக, உடனே இது குறித்து விசாரித்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே, குறிப்பாக, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே எடுத்துச் சொல்லி, அந்த வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 70 சதவீதம் என்பது, திட்டமிட்டு, போலித்தனமாகச் சேர்க்கப்பட்டது என்பது உண்மை என்பதைக் கண்டறிந்து, மறு கணக்கெடுப்பின்படி இப்போது அவை எல்லாம் முறையாகப் பரிசீலிக்கப்பட்டு, 70 சதவீதத்திலிருந்த அந்த எண்ணிக்கை இப்போது ஏறக்குறைய 35 சதவீதம்தான் என்ற உண்மையான புள்ளிவிவரம் கண்டறியப்பட்டு, உரிய நடவடிக்கை அதற்காக எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த அவையிலே பதிவு செய்ய நான் விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கலந்தாய்வுக் கூட்டம் தருகின்ற அற்புதமான தகவல்கள்தான் இவை. ஒவ்வொரு மாவட்டத்திலும் அவர்கள் எட்டு மணி நேரம், ஒன்பது மணி நேரம் உட்கார்ந்து விவாதிப்பதை நான் கண்கூடாகப் பார்த்தேன். அரசு அதிகாரிகளையும், ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளையும், நகர்மன்ற அதிகாரிகளையும், மக்கள் பிரதிநிதிகளையும் ஒன்றாக உட்கார வைத்து, எட்டு மணி நேரம், ஒன்பது மணி நேரம், இப்படி ஆய்வு நடத்துகின்றபோதுதான் இதைப்போன்ற மோசமான சம்பவங்கள் எல்லாம் வெளிச்சத்திற்கு வருகின்றன.

நான் வாய்க்கால் சரி இல்லை என்று சொன்னேன். அதைப்போல இந்தத் தடவை குறுவை கொள்முதலிலே 15 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்தேன் என்று நீங்கள் அறிவித்திருக்கின்றீர்கள். இது டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு ஒரு மிகப் பெரிய வரப்பிரசாதம். ஆனால், நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்கூட அங்கே கொள்முதல் செய்கின்ற இடத்திற்கே போய் இருக்கிறார்கள். கடந்த ஐந்தாண்டுகளாக அந்தக் கொள்முதல் நடந்த இடத்திலே என்ன நடந்திருக்கிறது என்று சொன்னால், ஒரு மூட்டைக்குப் பத்து ரூபாய் கொடுத்தால்தான் விவசாயிகளிடமிருந்து அந்த மூட்டையை வாங்குவார்கள். ஒரு மூட்டைக்குப் பத்து ரூபாய் என்று சொல்லுகிறபோது,

அது சாதாரணத் தொகையாக இருக்கிறது. ஆனால், இந்த 15 இலட்சம் டன் நெல் இப்போது கொள்முதல் பண்ணியிருக்கின்ற உத்தரவு நடைமுறைப்படுத்தப்படும் என்று சொன்னால், அந்தப் பத்து ரூபாய் என்பது, 40 கோடி ரூபாய் வசூல் ஆகும் என்று சொல்கிறார்கள்.

Indian Express பத்திரிகை ஒரு பெரிய கட்டுரை எழுதியிருக்கிறது. ஜனவரி 19 ஆம் தேதி Indian Express பத்திரிகையிலே அந்தக் கணக்கைப் போட்டு, இதிலே அரசியல்வாதிகளுக்கும், அதிகாரிகளுக்கும் இடையிலே ஒரு பாவக் கூட்டணி, அங்கே இருக்கின்ற ஊராட்சி மன்றத் தலைவருக்குக்கூட ஒரு மூட்டைக்கு ஒரு ரூபாய் கொடுக்கப்படுமாம். அப்படிக் கொடுத்தாலே அவருக்கு 30 இலட்சம் ரூபாய் வருகிறது என்று சொல்கிறார்கள். இந்த வாய்க்கால் சரியில்லை என்பதை, நான் இதற்காகத்தான் சொல்கிறேன். நீங்கள் கருணையோடு, எந்த ஆண்டும் இல்லாமல்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தச் செய்தியை அன்றைக்கு Indian Express-லே, நான் 19 ஆம் தேதி திருவாரூர் மாவட்டத்திலே இருக்கிறபோதுதான் படித்தேன். அன்று காலை அந்த நேரடிக் கொள்முதல் நிலையங்களிலே இருக்கிற பட்டியல் எழுத்தர்கள் அனைவரையும்—ஒவ்வொரு மாவட்டத்திலும்—அழைத்து நேரடியாக அவர்களுக்கு ஒரு விழிப்புணர்வை உருவாக்குகின்ற அளவுக்கு ஒரு கூட்டத்தை நடத்தினோம், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலே. நடத்தி, இதுபோன்ற கையூட்டுகளை இதற்கு முன்னால் வாங்கியிருந்தாலும்கூட, அதையெல்லாம் விட்டுவிட வேண்டும், வாங்கக் கூடாது என்று அரசின் சார்பாக அவர்களுக்கு வலியுறுத்தப்பட்டிருக்கிறது முதலிலே. அடுத்து, அதற்கு முன்னால் எல்லாம் நெல்லை வாங்குகிறபோது, அதைத் தூற்றி வாங்க வேண்டுமென்று சொல்லி, winnow machine ஒன்று வைக்கப்பட்டது. அந்த machine—ஐ வைத்துக்கொண்டு, ஒரு மூட்டைக்குப் பத்து ரூபாய் கொடுங்கள் என்று ஏற்கெனவே சென்ற முறை ஆட்சியிலே இருந்தவர்கள் வாங்கிக்கொண்டிருந்தார்கள். அதுதான் உண்மை. இப்போது நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக அந்த machine—ஐயே நாங்கள் வாங்கிக் கொடுத்து, இப்போது அதன்மூலமாகத் தூற்றப்படுகிறது. பணமே வாங்கக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது ஒன்று. அந்த machine—லேயே, தூற்றுவதற்குப் பணம் இலவசம், வாங்கக் கூடாது என்று அதிலே நாங்கள் எழுதியிருக்கிறோம். நான் அன்றைக்குக்



கிட்டத்தட்ட பத்து கொள்முதல் நிலையங்களுக்கு நேரடியாகச் சென்று ஆய்வு செய்து, பல விவசாயிகளை நேரடியாகக் கூப்பிட்டுக் கேட்டேன். இப்போது நீங்கள் பணம் கொடுக்கிறீர்களா என்று கேட்கிறபோது, இந்த சம்பாவிலிருந்து நாங்கள் எல்லாம் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். அப்படிக் கொடுத்தால், உடனே எங்களுடைய அலுவலகத்திற்குச் சொல்ல ஒரு Fax நம்பரை வைத்திருக்கிறோம்—Fax நம்பரையும் கொடுத்திருக்கிறோம்; பத்திரிகையாளர்களை அழைத்து, அந்த மாவட்டத்திலே இந்த Fax நம்பருக்கு, யாராவது பணம் உங்களிடத்திலே கேட்டால் உடனே Fax செய்யுங்கள், அவர்கள்மீது உடனே நடவடிக்கை எடுக்க முடியும் என்று அறிவுறுத்தியிருக்கிறோம். நேரடியாக விவசாயப் பிரதிநிதிகளையும் கூப்பிட்டுப் பேசினோம். அவர்கள் சொன்னார்கள், அதெல்லாம் அப்போது; இப்போதெல்லாம் வாங்குவதில்லை என்று விவசாயிகள் நேரடியாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஏதாவது தகவல் இருக்குமென்று சொன்னால், சட்டமன்ற உறுப்பினர்கள் உடனே எங்களுடைய துறைக்குத் தெரிவித்தால், உடனே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*நண்பகல் 12–00*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறுநாள் நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள், சம்பந்தப்பட்ட இடத்திற்கே சென்று, அங்கே விசாரணை மேற்கொண்டு, அங்கே கொள்முதல் செய்யப்படுகின்ற இடங்களிலே வேலை பார்க்கின்ற அத்தனை பேரையும் உடனடியாக, ஒட்டுமொத்தமாக மாற்றுவதாகப் பத்திரிகைகளிலே அவர்கள் செய்தி தெரிவித்திருந்தார்கள். அவர்களுடைய நடவடிக்கையும் பாராட்டுதலுக்குரிய நடவடிக்கை.

ஏழைகளுக்கு இலவசமாக இரண்டு ஏக்கர் நிலம் வழங்குவதாக நீங்கள் உறுதியளித்தீர்கள். அதைப்போல, அற்புதமாக நம்முடைய ஆளுநருடைய உரையிலே தெரிவித்திருக்கின்றீர்கள். பாரதியாருடைய அந்தக் கவிதை வரிகளைச் சுட்டிக்காட்டி, காணி நிலம் இருந்தால்கூட, அதை ஒரு கடையனுக்கு ஒதுக்குவேன், ஒரு ஏழைக்கு ஒதுக்குவேன் என்கிற உள்ளக் கிடக்கையைச் சொல்லியிருக்கிறீர்கள். அந்தத் திட்டம் தமிழ்நாடு முழுவதும் இந்த ஐந்தாண்டுகளில் நடக்கின்ற திட்டம். அது ஒரு நாளில், ஒரு மாதத்தில் முடிந்துவிடக்கூடிய திட்டமல்ல. நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த இங்கிருக்கின்ற நண்பர்கள் ஒத்துக்கொள்வார்கள். அந்தத் திட்டத்தை மேற்கு வங்க மாநிலத்திலே

சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து இன்று வரை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அது என்றும் நடந்துகொண்டிருக்கின்ற ஒரு திட்டம். ஒரே நாளிலே யாரும் நடத்திவிட முடியாது. ஆனால், அந்தத் திட்டத்தினுடைய கண்காணிப்பு எவ்வளவு அவசியம் என்பதற்கு நானும் ஓர் உதாரணம் சொல்கிறேன். 1999–லே நீங்கள் முதலமைச்சராக இருந்தபோது, என் தொகுதியினுடைய மேற்கரை என்கிற கிராமத்திலே இருக்கின்ற 156 விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் வழங்கினீர்கள். நீங்கள் வழங்கி, அந்த ஆட்சி முடிந்து, இன்று நீங்கள் மீண்டும் வந்திருக்கின்றீர்கள். நீங்கள் வழங்கிய பட்டா என்பதற்காக, நீங்கள் வழங்கிய நிலம் என்பதற்காக, இதுவரை அவர்களுக்கு அந்த நிலம் வழங்கப்படவில்லை. அந்தப் பட்டாக்களை நான் கொண்டு வந்திருக்கிறேன். நம்முடைய திட்டங்களை, நீங்கள் தொடங்கி வைத்த திட்டங்களை, எப்படி நாம் நிலைப்படுத்த வேண்டுமென்பதை ஆராய வேண்டும். ஏனென்று சொன்னால், நல்ல உழவர் சந்தையைத் தொடங்கினீர்கள். உழவர் சந்தையைத் தொடங்கி, உழவர் சந்தை வளர்ந்தது. இப்பொழுது எத்தனை வாரியங்களை நீங்கள் அறிவித்துள்ளீர்கள்? எனக்கு என்ன பயம் இருக்கிறது என்று சொன்னால், இந்தத் திட்டங்களுடைய பயன்பாடுகள் வருகின்ற நேரத்திலே, இவை தொடர்ந்து நடப்பதற்கான ஏற்பாடுகளையும் நாம் இப்பொழுதே செய்ய வேண்டும். அதை உங்களால் மட்டும்தான் செய்ய முடியும் என்பதற்காக, உங்களை நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்குப் பிறந்த நாள் வருகின்றபொழுது, நீங்கள் சொன்னீர்கள் அல்லவா, என்னிடமும், அண்ணன் சுதர்சனம் அவர்களிடமும்? நான் இருக்கிறேனோ, இல்லையோ—அந்த வார்த்தைகளைச் சொல்கின்றபொழுது, என் கண்கள் பனித்துவிட்டன—பெருந்தலைவர் காமராஜருக்கு விழா நடக்காமல் இருக்கக் கூடாது என்பதற்காக, அதை நான் ஒரு சட்டமாகவே இயற்றப் போகிறேன் என்று சொன்னீர்களே, அதைப்போல, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டங்களையும், யார் வந்தாலும், எந்த அரசு வந்தாலும், எந்த முதலமைச்சர் வந்தாலும், இந்தத் திட்டங்களுடைய அடிப்படையை மாற்ற முடியாத அளவிற்கு இந்தத் திட்டங்களை எப்படிப் போடுவது என்பதைப் பற்றியும் சிந்திக்க வேண்டிய நாட்கள், இந்த ஓராண்டு.

நீங்கள் Agricultural Engineering Co-operative Service Society என்ற சேவைக் கூட்டுறவு நிறுவனத்தை ஆரம்பித்தீர்கள். கிராமங்களிலே வாழ்கின்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வர வேண்டுமென்பதற்காக நீங்கள் ஆரம்பித்த பயனுள்ள ஒரு திட்டம். இந்த உழவர் சந்தைகளையெல்லாம் அவர்கள்தான் நிறுவினார்கள். அதற்குப் பிறகு வந்தவர்கள் எனன செய்தார்கள் தெரியுமா? 650 பேர் வேலைவாய்ப்பு



அலுவலகம்மூலம் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள், அந்தச் சங்கங்களிலே பணியாற்றியவர்கள், இன்று 7 வருடங்கள் சம்பளம் இல்லாமல் இருக்கின்றார்கள். அவர்களுடைய வாழ்க்கையினுடைய சேமிப்பு முழுவதையும்கூட அந்த அரசாங்கம் எடுத்துக்கொண்டது. நான் எதற்குச் சொல்கிறேன் என்று சொன்னால், நல்ல எண்ணத்தோடு ஆரம்பிக்கப்பட்ட இதைப்போன்ற நிறுவனங்கள், உங்களுடைய ஆட்சியினுடைய காலத்திலே. நீங்கள் பார்த்துப் பார்த்து, தேடித் தேடி, சிந்தித்துச் சிந்தித்து, உங்களுடைய கற்பனை வளங்களும், ஏழை பாழைகளின்மீது உங்களுக்கு இருக்கின்ற நாட்டமும், பொது நல நோக்கும், சதா சர்வ காலமும் கடினமாக உழைக்க வேண்டுமென்கிற ஆர்வமும், திட்டங்களாக, நல்ல பணிகளாக மலர்கின்றபோது, அந்தப் பணியின் மூலமாகப் பயன்பெற்றவர்கள் தொடர்ந்து இன்னும் 100 ஆண்டுகள், 200 ஆண்டுகள் பயன்பெற வேண்டுமென்பதற்காக நாம் செய்ய வேண்டும் என்பதற்காக நான் ஒன்றிரண்டு உதாரணங்களைச் சொன்னேன். அந்தச் சங்கங்களிலே வேலை பார்த்த 650 இளைஞர்கள், வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாகப் பதவிக்கு அமர்த்தப்பட்டவர்கள். ஆனால், இன்று சங்கங்கள் முடங்கிவிட்டன. அவர்களுக்கு வேறு வேலைவாய்ப்பு இல்லை. 35, 40 வயதிலே அந்த 650 பேர் இன்று நடுத்தெருவிலே நிற்கிறார்கள். இந்தச் சேவை நிறுவனங்களைப்போல நாம் தீட்டுகின்ற திட்டங்களுடைய பயன்பாட்டை, வரக்கூடிய காலங்களிலே பயன் தரக்கூடிய அளவிற்கு நாம் எப்படிச் செய்வது என்பதை இந்த ஓராண்டிலே திட்டமிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு முக்கியமான கோரிக்கையை காங்கிரஸ் கட்சியினுடைய சார்பாக நான் வைக்க ஆசைப்படுகிறேன். தமிழ் வளர்ச்சிக்கும், தமிழர்தம் முன்னேற்றத்திற்கும் உதவிட, உந்து சக்தியாக இருந்திட சில சாதனங்கள் தேவைப்படுகின்றன. தமிழின் சில இன்றியமையாத தேவைகளை உடனடியாக நிறைவேற்றிட வேண்டும். இந்தத் தேவைகள் ஏன் இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன என்பதனைப் புரிந்துகொள்ளவும் முடியவில்லை.

பிற்பகல் 12–05

உதாரணமாக, தமிழுக்கு ஒரு விரிவான பேரகராதித் தொகுப்பும், அது முறையாகப் புதுப்பிக்கப்படுவதும் ஒரு வளரும் மொழிக்கு இன்றியமையாத தேவை. சென்னைப் பல்கலைக்கழகம் 1913–ல் தொடங்கி, 1932–ல் முடித்த பேரகராதி வரிசை இன்று வரை புதுப்பிக்கப்படவில்லை. இதற்கு இணையான வேறு அகராதித் திட்டம் எதுவும்

நிறைவேற்றப்படவும் இல்லை. 75 ஆண்டு காலமாக வளர்ந்து, வாழ்ந்து வரும் செம்மொழி ஒன்றுக்குப் பேரகராதி வரிசை புதுப்பிக்கப்படாமலேயே இருக்கிறது. அது வேதனைக்குரியது. எனவே, இந்தப் பேரகராதியைப் புதுப்பித்துத் தர வேண்டும். அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியறிவுத் துறைகளில் தமிழ் மேம்பாடு அடைய கலைச் சொற்கள் எல்லாத் துறைகளிலும் உருவாக்கப்படல் வேண்டும். தமிழகத்தில் இன்று வரை, ஒரு நூல் நிலையத்தில் வாங்கி வைத்துப் பயன்படுத்தக்கூடிய முறையிலே கலைச் சொல் அகராதி வரிசை உருவாக்கப்படவில்லை. இந்தி மொழியில் 1961—லேயே அறிவியல் தொழில்நுட்பக் கலைச் சொல் குழுமம்—Commission for Scientific and Technical Terminology ஒன்றை உருவாக்கி, கலைச் சொல் வரிசையில் Technical glossaries 35 தொகுதிகளும், கலைச் சொல் விளக்க வரிசையில் Definitional Technical glossaries 52 தொகுதிகளும் புதுப்பித்துள்ளனர். நாமும் அந்த முயற்சியை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1947-ல் காங்கிரஸ் அமைச்சராக இருந்த, கல்வி அமைச்சராக இருந்த மறைந்த பெருந்தகை அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள், தமிழில் பொது கலைக் களஞ்சியம் உருவாக்கும் பணியை இந்திய மொழியிலே முதலாவதாகத் தொடங்கினார்கள், தமிழ் மொழியிலே. 1947—ல் தொடங்கி 1967 வரை 10 தொகுதிகள் வந்தன. அவை இன்று வரை புதுப்பிக்கப்படவில்லை. 1980—ல் தஞ்சைப் பல்கலைக்கழகம் தொடங்கிய அந்தப் பணியும் இன்னும் நிறைவுபெறவில்லை. இதை உடனடியாகச் செய்து தரும் பணியை நீங்கள் மேற்கொள்ள வேண்டும்.

இன்று உலகம் முழுவதும் பரவிய குடும்பமாகத் தமிழ்க் குடும்பம் இருக்கிறது. இன்று அது ஒரு குவலயக் குடும்பம். It is a global family. 90 நாடுகளிலே தமிழர்கள் இருக்கிறார்கள். உங்களுக்கு இருக்கின்ற பெருமை என்று சொன்னால், நீங்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சர் மட்டுமல்ல, இந்தக் குவலயக் குடும்பத்தினுடைய தலைவராகவும் நீங்கள் இருக்கிறீர்கள். You are the father of this global family. (மேசையைத் தட்டும் ஒலி) உங்களை நான் என்ன கேட்டுக்கொள்கிறேன் என்று சொன்னால், இந்தக் குவலயத்திலே இருக்கின்ற 90 நாடுகளில் இருக்கின்ற தமிழர்கள், உலகம் முழுவதும் பரவிக் கிடக்கின்ற கலாச்சாரங்களில், நாகரிகத்தில், தமிழர்களுடைய அடையாளச் சின்னத்தை, பண்பாட்டை, நாகரிகத்தைத் தொலைத்துவிடாமல், தமிழ் மண்ணுக்கும், தமிழகத்திற்கும் இருக்கின்ற சங்கிலிகள் அறுந்துவிடாமல், நம்முடைய பண்பாட்டில் அவர்களை மீண்டும், மீண்டும் இணைத்து, உலகம் முழுவதும் சென்றிருக்கின்ற





அவர்கள் ஈட்டியிருக்கின்ற பொருள், ஈட்டியிருக்கின்ற ஞானம், ஈட்டியிருக்கின்ற அனுபவம், கல்வி, இவையெல்லாம் தமிழகத்திற்குப் பயன்படுகின்ற வகையிலே, அவர்களுக்கும், நமக்கும் உள்ள அந்த உறவுச் சங்கிலிகளை வளர்க்க வேண்டும்.

நான் உங்களைக் கேட்டுக்கொள்வேன், இந்தக் குவலயத் தமிழ்க் குடும்பத்தினுடைய குடும்ப விழாவை, வரக்கூடிய ஆண்டிலே நீங்கள் தமிழகத்திலே நடத்த வேண்டும். உங்கள் தலைமையிலே குவலயம் முழுவதும் இருக்கின்ற தமிழர்களெல்லாம் ஒன்றுகூட வேண்டும். அவர்கள் மீண்டும் தமிழகத்திற்கு வந்து—அவர்கள் கடல் தாண்டிச் சென்றவர்கள், திரவியம் தேடச் சென்றவர்கள், அறிவு தேடச் சென்றவர்கள், ஞானம் தேடச் சென்றவர்கள், தாங்கள் வாழ்ந்த மண்ணைச் செழுமைப்படுத்துகின்ற அந்தச் சங்கிலிக் கணைகளை உங்கள் தலைமையிலேயே நீங்கள் பின்னி, அந்தத் தமிழ் நாகரிகமும், தமிழ்க் கலாச்சாரமும் அழிந்துவிடாமல் பார்க்கின்ற அரிய பணியை, நீங்கள் இந்தக் குவலயக் குடும்பத்தைக் கூட்டுகின்ற முயற்சியை இந்த ஆண்டு செய்ய வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள், காங்கிரஸ் கட்சியினுடைய வேண்டுகோள்.

இந்த ஆளுநர் உரையிலே இன்று பல்வேறு விஷயங்களைப் பேசினோம். இங்கே நான்கூட—உயர் நீதிமன்றத் தீர்ப்பின்மீது நான் பேசவில்லை. ஆனால், நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 99 மாநகராட்சி மன்ற உறுப்பினர்களைப் பதவி விலகச் சொன்னார்களே, அவர்கள் பதவி விலகச் சொன்னதைக் கேட்டு, தோழமைக் கட்சிகளில் உள்ளவர்களும் பதவி விலகினார்களே, அதற்கு ஒரு பாராட்டை இந்த அவையிலே பதிவு செய்ய வேண்டியது அவசியம் அல்லவா? அதை நான் சொன்னால்கூட, அது வேறு மாதிரி வரும். ஆனால், 19-1-07 ஆம் நாளிட்ட Hindu பத்திரிகையில் அற்புதமாக எழுதப்பட்டிருக்கிறது. அதை நான் இந்த அவையிலே பதிவு செய்ய ஆசைப்படுகிறேன். "A statesmanlike intervention can bring to a quick end the most unseemly of political controversies. In one political master stroke, Tamil Nadu Chief Minister M. Karunanidhi has undone all that went wrong in the elections to the Chennai Corporation Council in October 2006. By asking the Councillors elected from 99 violence-marred wards specifically identified by the Madras High Court to resign and face re-election, Mr. Karunanidhi not only blunted the mounting offensive of the Opposition parties on the issue; he also served a warning to his own partymen against manipulating the official machinery for partisan purposes."

*பிற்பகல் 12—10*

ஆங்கிலத்திலேதான் அதற்கு இரண்டு அற்புதமான வார்த்தைகள் உண்டு. அரசியல்வாதிகளை அவர் இரண்டாகப் பிரிக்கிறார். ஒன்று Politician. மற்றொன்று Statesman. ஒரு அரசியல்வாதி, ஒரு Politician எப்போது Statesman ஆகிறார் என்று சொன்னால், இப்போதுதான் ஆகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், இதுதான் ஜனநாயகத்தினுடைய பெருமை. இதுதான் ஜனநாயகத்தினுடைய வெற்றி. ஒரு நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு செயல்படுத்த முடியாத தீர்ப்பு. அதற்குப் பதவி விலக வேண்டுமென்கின்ற அவசியமேயில்லை. அந்தப் பதவி விலக வேண்டாம் என்ற சூழ்நிலை வந்தாலும்கூட, சீசரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவளாக இருக்க வேண்டும். மயிர் நீத்தால்கூட கவரிமான உயிர் வாழாது என்று சொல்வதைப்போல, அந்த ஒரு சொல்லுக்குத் தன்னுடைய 99 களப் பணியாளர்களை, தன்னுடைய வீரர்களை, செயல் வீரர்களை, தோழமைக் கட்சித் தலைவர்களை, ஏற்றுக்கொண்ட பதவிகளை இராஜிநாமாச் செய்யுங்கள் என்று சொன்னார்களே, அதைத் தானே—சோனியா காந்தி அம்மையாரை ஏன் இன்று உலகமே ஏற்று தியாகத் திருவிளக்கு என்று நீங்கள் வாய் வழியாகச் சொல்கிறீர்கள்? இந்தத் தேசத்தினுடைய பிரதமர் பதவி தங்கத் தாம்பாளத்தில் வைத்து வந்தபோதுகூட, அந்தப் பதவி வேண்டாம். சேவைதான் முக்கியம் என்று ஏற்றுக்கொண்டார் அல்லவா? Office of Profit என்கின்ற அந்தப் பிரச்சினை வந்தபோது, தன்னுடைய நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை, எந்த நீதிமன்ற உத்தரவும் இல்லாமல், வேண்டாம் என்று சொல்லிவிட்டு, மீண்டும் தேர்தலைச் சந்திக்கக்கூடிய அந்தத் தைரியம் வந்ததே, அந்தத் தைரியம் நமக்கு இருக்கிறது. அந்தத் தைரியம் உங்கள் இருவருக்கும், மக்கள் செல்வாக்குப் பெற்ற தலைவர்களுக்கு இருக்கின்ற காரணத்தினால்தான் இன்னும் ஜனநாயகம் வாழ்கிறது.

அந்த நல்ல முயற்சியில் இன்று காங்கிரஸ் கட்சிகூட 25 மாமன்ற உறுப்பினர்களை இழந்திருக்கிறது. எங்களுக்கு அது பெரிய விஷயம். இருந்தாலும்கூட, இழந்தோம் என்றாலும்கூட, அதாவது, நானா, எனது இயக்கமா என்று சொன்னால், எனது இயக்கம். எனது இயக்கமா, நாடா என்று சொன்னால், நாடு என்கின்ற அந்தக் கோணத்தில்தான் நீங்கள் அந்த முடிவை எடுத்திருக்கின்றீர்கள். நானா, திராவிட முன்னேற்றக் கழகமா என்றால், திராவிட முன்னேற்றக் கழகம். திராவிட முன்னேற்றக் கழகமா, தமிழகமா என்று சொன்னால், தமிழகமதான என்கின்ற அந்த முடிவை எடுத்துச் செயல்படுத்தியிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)





இன்று பரவலாக தினசரி பத்திரிகைகளைப் பார்க்கின்றபோதெல்லாம், சிறுநீரகத் திருட்டைப் பற்றித்தான் பார்க்கிறோம். நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்கூட இன்று பத்திரிகையிலே கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்கூட, நம்முடைய மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள்கூட ஒரு பத்திரிகையிலே அறிக்கை கொடுத்து, இந்தச் சிறுநீரக—Kidney-யினுடைய அந்தத் திருட்டு நடந்ததற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்களை இராஜிநாமாச் செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். எங்கள் கிராமத்திலே ஒரு பழமொழியைச் சொல்வார்கள். அதாவது நுங்கு திருடப் போவார்கள். நுங்கு திருடப் போகின்றவர்கள், யாராவது ஆள் வருகிறான் என்று தெரிந்தவுடனே, பக்கத்திலே இருக்கின்ற அப்பாவியிடம் அந்தக் கூந்தலைக் கொடுத்துவிடுவார்கள். கூந்தலை வைத்திருப்பவன் மாட்டிக்கொள்வான் நுங்கு திருடியவன் ஓடிவிடுவான் Kidney—சிறுநீரகங்கள் திருடப்பட்டதெல்லாம் கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியிலே இன்று அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அவருக்கு என்ன தண்டனை? கூந்தலைக் கையிலே வைத்திருப்பவர்களுக்குப் பதவி போக வேண்டுமென்று சொன்னால், நுங்கைத் தின்றவர்கள் அரசியலைவிட்டே போக வேண்டுமலலவா? அப்படிப்பட்ட ஒரு கேள்வியை நாம் கேட்க முடியும். ஆனால், நாம் கேடக ஆசைப்படவில்லை. ஏனென்று சொன்னால், அது ஏழைகளுடைய பிரச்சினை. அதிலே ஒரு கோணத்தை நான் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். சிறுநீரகம திருடப்படுபவர்கள் எல்லோரும் பெண்களாக இருக்கிறார்கள். அதிலே யாரும் ஆண்கள் இருபபதாக எனககுத் தெரியவில்லை. அப்படியானால், இந்தச் சமூகத்தினுடைய எல்லாத் தாககுதலும், எல்லா அசமபாவிதங்களும் அந்த பலவீனமான பெண்களுக்கு மட்டும் ஏன் நிகழ்கிறது; அந்தப் பெண்களுடைய நிலைமையை எப்படி உயர்த்துவது என்பது பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும்.

சிறுநீரகத்தினுடைய தானத்தை எப்படி முறைப்படுத்துவது? Indian Express பத்திரிகையிலே ஒரு அருமையான கட்டுரை வந்தது. Cadaver donation; அதாவது, Brain dead people—மூளை மட்டும் இறந்து மருத்துவமனையிலே இருக்கின்றவர்களிடமிருந்து Kidney-களை எடுப்பதற்கான வழிமுறைகளை சாத்தியமாகப பாவித்து, அதைப் பரவல்படுத்தினோம் என்று சொன்னால், இதைபபோன்ற திருட்டுக்கள் நடக்காது என்கின்ற ஆலோசனைகளை அவர்கள் தந்திருக்கிறார்கள். அந்த மேலான ஆலோசனையையும் நான் நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுககு சமர்ப்பிக்க ஆசைப்படுகிறேன்.

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2007 ஜனவரி 22

டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுடைய ஓராண்டு முடிந்தவுடனே, அவர்களை வாழ்த்திப் பாராட்டிப் பேசிய இந்தியத் தொழில் கூட்டமைப்பாளர்களுடைய சங்கம், ஒரே வார்த்தை சொல்லி முடித்தது. 'Good show Dr. Singh, yet miles to go'—அற்புதமான சாதனையைப் படைத்திருக்கிறீர்கள்; இன்னும் போக வேண்டிய தூரம் நிறைய இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த வார்த்தையைத்தான் நான் உங்களுக்குச் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேன். 'Good show Dr. Kalaignar, yet miles to go.' *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர் பேசும்போது குறுக்கிட வேண்டாம் என்று நினைத்திருந்தேன். சென்ற ஆட்சிக் காலத்தில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையின்மீதான விவாதத்திலே கலந்துகொண்டு பேசுவதற்கான வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியை முதலில் தெரிவித்து, 32 பக்கங்களில், 52 தலைப்புகளில் தமிழகத்தினுடைய ஆட்சிக் கட்டிலிலே இருக்கின்ற முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசினுடைய திட்டங்களும், செயல்படுத்துகின்ற திட்டங்களும், நடைபெற இருக்கின்ற திட்டங்களும் இங்கு வகுத்தளிக்கப்பட்டமைக்காக, ஒன்றை விட்டு ஒன்றை நான் சொல்லியாக முடியாது. அந்த வகையில், மிகச் சிறப்பான நல்ல பல திட்டங்களும், அரசு நடத்தி வருகின்ற திட்டங்களும் தொடர்ந்து நடைபெறும் என்கின்ற அறிவிப்பும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்ற அறிவிப்பும்; தேசிய நதிகளை இணைப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்பதும்; தமிழர்களுடைய வாழ்வாதாரப் பிரச்சினையான இலங்கை இன மக்களுடைய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பதும்; 11-வது திட்டத்தில் ரூபாய் 80 ஆயிரம் கோடிக்கான பணிகள் நடப்பதற்கான முயற்சி; அனைத்துத் துறைகளிலும் சமூக நீதியும், தனியார் துறையில் இட ஒதுக்கீடும்; அனைத்து மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கணினி ஆய்வகம், எல்லாவற்றிற்கும் மேலாக, பழைய காலத்தில் இயற்றப்பட்ட சட்டங்களை வைத்துக்கொண்டு, புதிய, நடைமுறைக்கு ஒவ்வாத சட்டங்களைத் திருத்துவதற்கும் அரசியல் சாசனச் சட்டத்தை உருவாக்குகின்ற முயற்சி; அதேபோல் நம்முடைய சேவை வரிகளை



2007 ஜனவரி 22] [திரு. தி. வேல்முருகன்]

நம்முடைய அரசே, அது சுயாட்சியின் அடிப்படைத் தத்துவத்தில் வந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி அந்த எண்ணத்திற்கு ஏற்றவாறு, அதற்கு உயிர் கொடுக்கின்ற வகையில் மத்திய அரசிடத்தில் வற்புறுத்துவதற்கான முயற்சி என்ற அத்தனையையும் உள்ளடக்கி, இந்த நாட்டு மக்களுடைய, அடித்தளத்திலே இருக்கின்ற மக்களை, அவர்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான ஒரு நல்ல ஆளுநர் உரையை இந்த அரசின் சார்பாக அளித்திருப்பதற்காக நம்முடைய தமிழக அரசுக்கும், நம்முடைய ஆளுநர் அவர்களுக்கும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஆண்டுகொண்டிருக்கின்ற நம்முடைய அரசு, தமிழ்நாட்டிலே இருக்கின்ற பல்வேறு பிரச்சினைகளில் அதிகக் கவனம் செலுத்தி, மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்கின்ற அதே நேரத்தில், கல்லூரிகள், பள்ளிகள், கோயில்கள், அதேபோல், மருத்துவக் கல்லூரிகள் போன்ற பல்வேறு இடங்களில் சில நாட்களாகச் சில செய்திகள் அடிபட்டு வந்துகொண்டிருக்கின்றன குறிப்பாக, கடந்த வாரம் கோயம்புத்தூர், சென்னை, பண்ருட்டி போன்ற பகுதிகளில் கடந்த ஆட்சிக் காலத்திலாக இருக்கலாம்; அல்லது தற்போதும் அது தொடர்ந்துகூட நடந்துகொண்டிருக்கலாம்; கஞ்சா விற்கப்படுகிறது, அபின் விற்கப்படுகிறது, அதை வாங்கி பள்ளி, கல்லூரி மாணவர்கள் பயன்படுத்துவதால் அவர்களுடைய வாழ்க்கையே சின்னாபின்னம் ஆகிக்கொண்டிருக்கிறது என்பதெல்லாம், பத்திரிகைகளில் செய்தியாக வந்துகொண்டிருக்கின்றது. நம்முடைய முத்தமிழறிஞர் முதல்வர் அவர்களுடைய ஆட்சி அதிகாரத்தின் கையிலே இருக்கின்ற காவல் துறைக்குப் பல்வேறு முறைகளில் எம் தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்கள் வலியுறுத்தியும், நடவடிக்கை எடுக்கக் கோரியும் நடவடிக்கை எடுக்காமல் இருந்த காரணத்தினால்தான், நேற்றையதினம் எங்கள் அய்யா அவர்களுடைய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்கள் விடுத்த அறிக்கையை நாங்களும் பார்த்தோம். உடனடியாகக் காவல் துறையோடு தொடர்புகொண்டு அது குறித்த விவரங்களைக் கேட்டபோது, பள்ளி, கல்லூரி பகுதிகளில் கஞ்சா, போதைப் பொருள் விற்றதாக இன்று வரையிலே அரசுக்கு எந்தத்

தகவலும் இல்லை. அப்படி எங்கேயாவது விற்கப்படுகிறது என்ற விவரங்கள் தரப்பட்டால், யாராக இருந்தாலும், அவர்கள்மீது கடுமையான நடவடிக்கையை இந்த அரசு நிச்சயமாக எடுக்கும்.

*பிற்பகல் 12–20*

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோல் ஏதாவது தவறான செய்திகள் வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான், எங்கள் தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்கள், எங்கள் கட்சியினுடைய தலைவர் தியாகச் செம்மல் கோ.க. மணி அவர்களை அழைத்துச் சொல்லி, ஒரு கல்லூரி மாணவனை அழைத்து, 'நீ போய் கொஞ்சம் வாங்கி வா' என்று அனுப்பினார். அந்த மாணவனும் ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே, கஞ்சாவையும், அபின் பொட்டலத்தையும் வாங்கிக்கொண்டு வந்து எங்கள் தலைவரிடத்திலே கொடுத்தார். எங்கள் அய்யா அதைப் பத்திரிகையாளரிடத்திலே காட்டுவதைவிட, அதை அரசினுடைய கவனத்திற்கு எடுத்துக்கொண்டு போய்—திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில் கல்லூரிகளில், பள்ளிகளில் கஞ்சா விற்பதாக அர்த்தம் அல்ல. கடந்த ஆட்சிக் காலத்திலிருந்து அது நடந்துகொண்டிருக்கிறது காவல் துறை அது தொடர்ந்திருப்பதைக் கண்டுபிடித்து, சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும்; உரியவர்களுடைய கவனத்திற்கு இதை எடுத்துச் செல்ல வேண்டுமென்ற அந்த அடிப்படையில்தான் அந்தக் கருத்தைப் பதிவு செய்தார்கள் என்பதை நான் நம்முடைய பேரவைத் தலைவர் மூலமாக நம்முடைய அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல, இன்றைய தினகரன் பத்திரிகையில், பேரவைத் தலைவர் அனுமதியோடு காட்டுகிறேன். 'பள்ளிச் சிறுவர்களை கஞ்சா விற்கச் செய்த கணவன், மனைவி போலீஸில் சிக்கினார்கள்' என்ற தலைப்புச் செய்தியும் இடம் பெற்றிருக்கிறது. இப்படிப் பல்வேறு நிலைகளில், கடந்த வாரம் கோயமுத்தூரிலே தொழில்நுட்பக் கல்வி படிக்கின்ற 3 மாணவர்கள் அதைப் பயன்படுத்தி, அதற்குள் சிக்குண்டு, காவல் துறை கைது செய்து, அவர்கள் இன்றைக்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

அதுபோல, இங்கே எனக்கு முன்னால் பேசிய அருமை நண்பர், நம்முடைய காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய கொறடா அவர்கள் குறிப்பிட்டதுபோல, அந்த Kidney-யை எடுத்துக்கொள்கின்ற நிலை; அதற்கு சில தனியார் மருத்துவமனைகள் அதற்கான இடைத் தரகர்களை வைத்துக்கொண்டு, அது கடந்த கால ஆட்சிக் காலத்தில் தொடர்ந்து அப்படிச் செய்யப்பட்டிருக்கிறது. அப்படி எடுக்கின்ற அந்தத் தனியார்





மருத்துவமனைகள்மீதும் இந்த அரசு ஒரு சரியான, கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல், எங்களுடைய தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்கள் தொடர்ந்து நம்முடைய அரசுக்கு வேண்டுகோள் வைத்துக்கொண்டிருக்கிறார். கடந்த கால அரசில் நாங்கள் பல்வேறு கட்டங்களாகப் போராடிப் போராடி, அந்த அரசிடத்திலே வைத்த கோரிக்கை, லாட்டரியைத் தடை செய்ய வேண்டுமென்பது. ஆட்சியில் இருந்தவர்கள் லாட்டரியைத் தடை செய்கிறோம் என்று அறிவித்தார்களே தவிர, தொடர்ந்து தமிழ்நாட்டில், அன்றிலிருந்து இன்று வரையிலும் அந்த லாட்டரிச் சீட்டு மிக அமோகமாக விற்பனை ஆகிக்கொண்டிருக்கிறது. அதை, ஒரு முறை அல்ல, மூன்று முறைக்கு மேலாக எங்கள் அய்யா பத்திரிகையில் வலியுறுத்தியும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பெருமக்களுக்குத் தெரிவித்தும்கூட, அதைக் கண்டும், காணாமல் இருப்பது, இந்த நாட்டிலே இருக்கிற ஏழையெளிய, பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்த, உழைக்கின்றவனுடைய அந்த ஊதியத்தையே இன்றைக்கு நாசமாக்குகின்ற ஒரு செயலாக இருக்கிறது; அவனுடைய வயிற்றைச் சுரண்டுகிற ஒரு செயலாக இருக்கிறது; அவனுடைய வாழ்க்கையைச் சுரண்டுகிற ஒரு செயலாக இருக்கிறது; அந்தக் குடும்பத்தை இன்றைக்கு நிர்கதியாக ஆக்குகின்ற ஒரு செயல்; அரசாங்கத்தில் தடை செய்யப்பட்ட ஒன்று இன்றைக்குப் பரவலாக விற்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அது காவல் துறையினுடைய உயர் பொறுப்பிலே இருக்கின்ற சில நண்பர்களுக்கும் தெரிந்து நடைபெறுகிறது என்ற காரணத்தாலே, அதற்கும் இந்த அரசு ஒரு சரியான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

அடுத்து, கடந்த முறை ஒரு சிறுவன் இங்கு படுகொலை செய்யப்பட்டான், சக மாணவர்களால். அந்தச் சிறுவர்கள் கைது செய்யப்பட்ட அந்த வழக்கில் குற்றவாளிகளாக இருந்த அந்த மாணவர்களைக் காவல் துறை அழைத்து விசாரணை செய்தபோது, அவர்கள் சொல்கிறார்கள், 'நாங்கள் செல்ஃபோன் வாங்குவதற்காக இந்தக் கொலையைச் செய்தோம் அல்லது அவர்கள் வேறுவிதமான தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இந்தப் பாதகச் செயல்களிலே நாங்கள் ஈடுபட்டோம்' என்று அந்தக் கைது செய்யப்பட்ட மாணவர்கள் வாக்குமூலம் தருகிறார்கள் என்று சொன்னால், அந்தப் பாதகச் செயலைச் செய்யத் தூண்டுகின்ற, அந்த இளம் தளிர்களை, அந்த இளைஞர்களை, எதிர்கால இந்திய நாட்டினுடைய சிற்பிகள் என்று போற்றப்படுகிற மாணவர் சமுதாயத்திற்கு ஒரு தவறான வழிகாட்டுதலைத் தருவது,

[திரு. தி. வேல்முருகன்] [2007 ஜனவரி 22

இன்றைக்கு இந்தச் சமூகத்திற்குத் தந்துகொண்டிருப்பது எது என்று நாம் ஆய்வு செய்தால், பெரும்பாலும் சின்னத் திரையும், வண்ணத் திரையும்தான் இந்த நாட்டினுடைய பண்பாட்டையும், கலாச்சாரத்தையும், நாகரிகத்தையும், உறவு முறைகளையும் இன்றைக்குச் சீரழித்துக்கொண்டிருக்கிறது.

இன்றைக்கு தினத்தந்தியிலே இரண்டாவது பக்கத்தில் பெரிய தலைப்புச் செய்தியாக வந்திருக்கிறது; என்னுடைய மாவட்டத்தில் தங்கை முறையை அண்ணன் திருமணம் செய்துகொள்வதற்கு அனுமதிக்கவில்லை; ஆதலால் இந்த உறவு முறை மாறி திருமணத்திறகு இவர்கள் ஏற்பாடு செய்கிறார்கள் என்று மனம் வெந்து, அந்தத் தங்கை, அவருடைய அம்மா, அவருடைய தகப்பன், இன்னொரு தங்கை, அந்தக் குடும்பமே விஷம் அருந்தி, கடலூரிலே தற்கொலை செய்துகொண்டிருக்கிறது. இந்தச் செய்திகள் என்ன சொல்கின்றன நமக்கு என்று சொன்னால், இன்றைக்குத் தொலைக்காட்சிகளின்மூலமாக, சின்னத் திரை, பெரிய திரைமூலமாக இந்தப் பண்பாடு, நாகரிகம் என்ற பெயரிலே தவறான வழிகாட்டுதல்கள் நம்முடைய இளைய தலைமுறைக்கு காட்டப்படுகிற காரணத்தாலே, அந்தக் கவர்ச்சியின் மோகத்தாலே, நமக்கு ஒரு செல்ஃபோன் வேண்டும், நாம் மற்றவர்கள்போல வாழ வேண்டும், நாம் சினிமாவிற்குச் செல்ல வேண்டும் அல்லது Beach–க்குச் செல்ல வேண்டும், நாம் சுகபோகமாக வாழ வேண்டும் என்று ஆசைப்படுகிற இளைஞர்கள், படித்துப் பட்டம் பெற்றிருந்தாலும்கூட, இந்தத் தவறான பாதைகளுக்கு அவர்களை அழைத்துச் செல்கிற ஒரு சூழல் நிலவிக்கொண்டிருக்கிறது. இதைத் தடுத்து நிறுத்தக்கூடிய பொறுப்பு—கடந்த 5 ஆண்டு காலமாக இதே அவையில் நான் கத்திக் கத்திப் பார்த்தேன், எந்தப் பலனும் இல்லை. 'நீங்கள் சென்சார் போர்டுக்குப் போங்கள், மத்திய அரசு உங்கள் கையில்தானே இருக்கிறது, நீங்கள் அங்கே சென்று முறையிடுங்கள், இங்கே ஏன் பேசுகிறீர்கள்' என்றுதான் முதலமைச்சர் பதில் அளித்தார்களே தவிர, அதற்கு ஒரு பொறுப்பான பதில் வரவில்லை.

இன்றைக்கு முத்தமிழறிஞர், இந்தத் தமிழகத்தினுடைய முதலமைச்சர், ஏழையெளிய மக்களிலிருந்து, அடித்தளத்து மக்களிலிருந்து, படித்தவர்களிலிருந்து, ஏன் கடவுளாக மற்றவர்களால் மதிக்கபபட்டு, இந்த நாட்டினுடைய தலைமை அமைச்சரும் அல்லது ஜனாதிபதிகளும், நீதிபதிகளும் வந்து காலிலே விழுந்த புட்டபர்த்தி சாய் பாபா, கோபாலபுரத்திற்கு வந்து, உங்களோடு கை குலுக்குகின்றார். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களே! இந்தத் தமிழ்ச் சமூகத்தின்மீது, இந்த இளைய தளிர்கள்மீது, இந்த வருங்கால இளைய



2007 ஜனவரி 22] [திரு. தி. வேல்முருகன்]

தலைமுறையினர்மீது நம்பிக்கை வைத்திருக்கின்ற நீங்கள், அந்தத் தளிர்களுக்குச் சரியான ஒரு வழிகாட்டுதலையும், வாழ்க்கையையும் ஏற்படுத்தித் தருகின்ற நீங்கள், இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். இன்றைக்கு இந்தச் சின்னத் திரையினுடைய தமிழருடைய உறவு முறைகள், பண்பாட்டுச் சீரழிவுகள், இன்று தமிழனுடைய தொன்மையை, தமிழனுடைய வாழ்க்கையை, தமிழனுடைய வாட்டத்தை, தமிழனுடைய ஈகையை, தமிழனுடைய கொடைத் தன்மையை, அனைத்தையும் மறந்து போன காலக்கட்டத்தில், 'ஓ தமிழர்களே! நம்முடைய பாரம்பரியமும், பண்பாடும் காக்கப்பட வேண்டுமென்பதற்காக, தமிழர் திருநாளாம் பொங்கலை இந்த அரசே சமத்துவ விழாவாகக் கொண்டாடும்' என்று அறிவித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களே! உங்களிடத்திலே நாங்கள் இதை எதிர்பார்க்கிறோம். அவர்கள் இன்றைக்குச் சொன்னார்களே, அதே பதிலை இந்த நாட்டினுடைய அரசாங்கத்தில் இருந்த அமைச்சர்களும் அன்றைக்குச் சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு ஆளும் கட்சியிலே இருக்கின்ற நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், இந்தப் பண்பாட்டுச் சீரழிவுக்கு, இநதக் கலாச்சாரச் சீரழிவுக்கு, மேலை நாட்டு மோகத்திற்கு அடிமையாகி, இந்த நாட்டினுடைய உறவு முறைகளும், தாய், தங்கைகளும், அண்ணன், தம்பிகளும், பண்பாட்டுச் சீரழிவுகளில் சிக்கி நம்முடைய குடும்பச் சூழலும், கிராமச் சூழலும் இன்றைக்கு நகரத்தினுடைய, வெளிநாட்டு மோகத்தின் காரணமாக அழிந்து கொண்டிருப்பதைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–25*

அதேபோல கடந்த முறைகூட நான் வலியுறுத்தினேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரே ஒரு நாள் தனியார் தொலைக்காட்சிகளுடைய அதிபர்களையெல்லாம் அழைத்து, இதுபோன்ற காட்சிகளையும், இந்த அசிங்கங்களையும் நீங்கள் கட்டுப்படுத்த வேண்டுமென்று வேண்டுகோள் வைத்தால், செய்வதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள். S.M.S என்ற போர்வையிலும், அதேபோல இன்று F.M.—இன்றைக்கு ரேடியோ F.M., அந்த F.M., இந்த F.M., என்று ஏதேதோ வந்துவிட்டன. நேரடியாக, வாய் கூசுகின்ற, மோசமான வார்த்தைகள், விருப்பப்படாத ஒரு பெண்ணைப் பற்றிய வரிகள், வசைவு மொழிகள், அதோடு, காதல் என்ற பெயரிலே, மாற்றான் மனைவியிடத்தில் தவறான வார்த்தைகளைப் பயன்படுத்துவது. இதையெல்லாம் இந்தச் சமூகம் அங்கீகரித்துக்கொண்டிருக்கிறது என்று சொன்னால், இந்த நாட்டினுடைய போற்றிப் பாதுகாக்கப்பட்ட மரபு

வழிகளெல்லாம் அழிந்து போவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. இதையெல்லாம் தடுத்து நிறுத்த வேண்டியது நம் பொறுப்பு. குறிப்பாகப் பெண்மையை இழிவுபடுத்துகின்ற செயல்களும், கேவலப்படுத்துகின்ற செயல்களும், அநாகரிகமாகப் பெண்களைக் காட்டுவதற்காகவே சிலர் படம் தயாரிப்பதும், கேவலமான பாடல் வரிகளையும், தமிழனுடைய அத்தனை நாகரிகத்தையும் தொலைத்து, சின்னாபின்னமாக்கிச் சீரழித்துக் கொண்டிருக்கிற ஒரு கலாச்சாரச் சீரழிவை நோக்கி, தமிழ்நாட்டினுடைய திரையுலகமும், சின்னத் திரையும் சென்றுகொண்டிருப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை நான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று கடந்த காலங்களில் என்னுடைய தொகுதிக்காகப் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கின்றேன். நீங்கள் கடந்த கூட்டத் தொடரிலே நல்ல பல செய்திகளையெல்லாம் அறிவித்தீர்கள். என்னுடைய தொகுதிக்கு முந்திரித் தொழிற்சாலை கேட்டேன். நீங்கள் நிச்சயமாக அறிவிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறீர்கள். நேற்றையதினம் அதிகாரிகள்கூட அதனைத் தொடங்குவதற்காக ஆய்வு செய்திருக்கிறார்கள். அதேபோன்று இரயில்வே மேம்பாலம வேண்டுமென்று கேட்டேன். அதையும் நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர், ஆய்வில் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கின்றார். அதையும் நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக மூன்று கோரிக்கைகள். நீண்ட நாட்களாக எங்களுக்கு இருக்கின்ற பிரச்சினை. என் தொகுதியில் இருக்கின்ற பிரச்சினை. உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும், எல்லாவற்றுக்கும் சொல்கின்ற பதிலைச் சொல்லி, அதை மழுங்கடித்துவிடாமல், மிகப் பிற்படுத்தப்பட்ட பகுதியாக இருக்கின்ற, ஒடுக்கப்பட்ட பகுதியாக இருக்கின்ற, கிட்டத்தட்ட 10 உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலே, 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கின்ற என்னுடைய தொகுதிக்கு இதுவரையிலும் ஒரு கலைக் கல்லூரி இல்லாமல் இருக்கின்றது. முத்தமிழறிஞர் தலைவர் அவர்களே, நீங்கள் நிச்சயமாக எனக்குச் செய்வீர்கள் என்று என் சக சட்டமன்ற உறுப்பினர்கள் என்னைப் பார்த்துச் சொல்கின்றார்கள். கடந்த முறை கேட்டேன். இந்த முறையும் கேட்கின்றேன், இந்த ஐந்தாண்டுகளும் உங்களைக் கேட்பேன். நம்முடைய ஆற்காட்டார் அவர்கள் நெல்லிக்குப்பத்திலே ஓர் அரசு விழாவுக்கு வந்தபோதுகூட நான் கேட்டேன். பக்கத்து மாவட்டங்களிலே அற்புதமான நீதிமன்ற வளாகங்கள் இருக்கின்றன. பக்கத்து மாவட்டங்களிலே அற்புதமான மாவட்ட ஆட்சித் தலைவர் மாளிகைகள்



கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், கடலூர் மாவட்டத்தில் அரசாங்கத்தினுடைய நலத் திட்ட உதவிகள் கடந்த ஐந்தாண்டுகளில் எங்களுக்கு எதுவுமே தரப்படவில்லை. அந்தப் பிற்படுத்தப்பட்ட பகுதிக்கு, என்னுடைய பண்ருட்டி தொகுதிக்கு ஓர் அரசு கலைக் கல்லூரி வேண்டும். இரண்டே கால் கோடி ரூபாய் மதிப்பீட்டில் உயர் நீதிமன்றத்திலிருந்து பரிந்துரை செய்யப்பட்டு, சட்ட அமைச்சகத்திற்கு வந்திருக்கின்றது. ரூ.2 கோடியே 30 இலட்சத்தில் ஒரு ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகமும், அதேபோன்று பண்ருட்டிக்கு ஒரு மேம்பாலமும், ஒரு புறவழிச் சாலையும் என நீண்ட நாள் கோரிக்கைகளாக இருக்கின்ற இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் நீங்கள் தீர்வு காண வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன்.

அதேபோன்று, N.L.C. இருக்கின்றது. கடந்த முறைகூட மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றபோது, N.L.C.-யின் அதிகாரிகளை அழைத்துப் பேசி, அதற்கு நல்ல ஒரு தீர்வை ஏற்படுத்துகிறேன் என்று சொன்னார்கள். எங்கள் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் சின்ன அய்யா அவர்களோடு, நிலக்கரித் துறை அமைச்சர் அவர்களோடு கடந்த வாரம் நான் டெல்லிக்குச் சென்று அவர்களை அழைத்து, அங்கே இருக்கின்ற துறையினர்களையும் அழைத்துப் பேசினோம். ஆனால், நாங்கள் பேசி, அதற்கு ஒரு முடிவு எடுப்பதற்கு மூல காரணமாக முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், அந்த N.L.C நிர்வாக அதிகாரிகளை அழைத்து, அங்கேயிருக்கின்ற ஒப்பந்தத் தொழிலாளர்களுடைய பிரச்சினை, அங்கே இருக்கின்ற apprentice-களினுடைய பிரச்சினை, அங்கே இருக்கின்ற ஆசிரியர் பெருமக்களுடைய பிரச்சினை, வீடு, மனை, நிலம் அனைத்தையும் கொடுத்துவிட்டு, இன்னும் வேலையில்லாமல் இருக்கின்ற அந்த மக்களுடைய பிரச்சினை, அங்கே வெளியேற்றுகின்ற நீரை, அந்தக் கிராம மக்களுடைய குடிநீருக்கும், விவசாயத்திற்கும் பயன்படுத்துவது தொடர்பான பிரச்சினை என்று அதிகமான பிரச்சினைகள் அந்த மக்களுக்கு இருப்பதால் அவற்றையெல்லாம் உங்கள் காலத்தில் நீங்கள் தீர்த்து வைக்க வேண்டும்.

18 ஆயிரம் ஒப்பந்தத் தொழிலாளர்கள் வெறும் ஆயிரம் ரூபாய் சம்பளத்திற்கு அடிமைபோல வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அதேபோல, 3,000-க்கும் மேற்பட்டவர்கள் N.L.C.-க்கு நிலம் தந்துவிட்டு, அதன் அடிப்படையிலே பணிக்கு வந்த அந்த apprentice, I.T.I. முடித்தவர்களுக்கு வேலைவாய்ப்பில்லாமல், அவர்கள் இன்றைக்கு அங்கே மனுக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

[திரு. தி. வேல்முருகன்] [2007 ஜனவரி 22

அதேபோல, ஜவகர் பள்ளியிலே, நம்முடைய கல்வித் துறையிலே இருக்கின்ற எந்த உரிமைகளும் இல்லாமல் உள்ளது. இப்போதுகூட பொங்கல் விழாவுக்கு அரசு மூன்று நாள் விடுமுறை விட்டது; ஆனால், நெய்வேலி நிர்வாகம், அந்தப் பள்ளிக்கு விடுமுறை இல்லாமல் ஒரு அடிமையாக அவர்களை வைத்து வேலை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப் பல்வேறு பிரச்சினைகள் அவர்களுக்கு இருக்கின்றன. இந்தப் பிரச்சினைகளையெல்லாம் நம்முடைய தலைவர் அவர்கள் அழைத்துப் பேசி, அவர்களுக்கான நல்ல ஒரு மாற்று வழியைக் காண்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல், சமீப காலங்களாக தொலைக்காட்சிகள் எல்லாம் வாஸ்து சாஸ்திரம், பெயரியல், அது, இது என்று சொல்லி மக்களை முட்டாளாக்குகின்ற, மடையர்களாக்குகின்ற வேலையை மிக வேகமாகச் செய்துகொண்டிருக்கிறார்கள். அதற்கெல்லாம் நீங்கள் ஒரு தீர்வு ஏற்படுத்த வேண்டும்.

*பிற்பகல் 12—30*

நம்முடைய அரசாங்கமே இன்றைக்கு சமத்துவப் பொங்கல் கொண்டாடிக்கொண்டிருக்கிறது. இந்த வேளையிலே திடீரென்று ஒருவன் புருடா கிளப்பிவிடுகிறான். பொல்லாத காலம் ஆண்களுக்கு, வீட்டிலே விளக்கு வையுங்கள் என்று. அதே மாதிரி ஒரு காலத்திலே அண்ணன் தன் தங்கைக்கு, பிறந்த வீட்டுப் பெண்களுக்குப் பச்சைப் புடவை கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். பச்சைப் புடவை தயாரித்த துணிக்கார அதிபர், பச்சைப் புடவை நிறைய stock ஆகிவிட்டது என்று, அதை விற்பதற்கு என்ன ஐடியா என்று பார்த்தான். பேப்பரில் வருமாறு செய்துவிட்டான், இந்த வருடம் பச்சைப் புடவை கொடுத்துவிட்டால் எல்லோரும் சுகபோகமாக இருப்பார்கள் என்று.

தந்தை பெரியார் அவர்கள் வழியில் நடத்தப்படுகின்ற நம்முடைய அரசில், இன்றைக்கு மூட நம்பிக்கைகளும், அவ நம்பிக்கைகளும் தடுக்கப்பட வேண்டும். இந்த நாட்டின் மக்களுடைய மூளையைச் சலவை செய்கின்ற விதமாக, ஒரு காலத்தில் அனுபவ் குரூப்ஸ் போன்ற பல்வேறு நிதி நிறுவனங்கள் எல்லாம் தொலைக்காட்சிகளிலே விளம்பரம் செய்தனர். விளம்பரத்திற்குப் பணத்தைத் தருகிறார்கள் என்பதனாலே, இந்தச் சமூகத்தின்மீது அக்கறை இல்லாமல், என்ன விளம்பரம் வேண்டுமானாலும் செய்யலாம் என்ற உரிமை இருந்த காரணத்தினாலே இது நடந்தது. அந்த விளம்பர மயக்கத்தின் காரணமாக நம்முடைய உழைக்கின்ற மக்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர் பெருமக்கள், பல்வேறு துறைகளில் பணிபுரிகின்றவர்கள் கொஞ்சம்,



2007 ஜனவரி 22] [திரு. தி. வேல்முருகன்]

கொஞ்சமாகச் சம்பாதித்து சேகரித்த பணத்தையெல்லாம் கொண்டு போய் முதலீடு செய்தார்கள். அப்படியே கொள்ளையடித்துக்கொண்டு போய் மறைந்துவிட்டார்கள். அந்த வகையில், தொலைக்காட்சிகள் எல்லாம் மக்களைப் பல்வேறு நிலைகளிலே இன்றைக்கு மூளைச் சலவை செய்துகொண்டிருக்கின்றன. இதற்கெல்லாம் நீங்கள் ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களிலே பணிபுரிகின்ற Overseers, பதினைந்து ஆண்டு காலம் 25 ஆண்டு காலமாகப் பணிபுரிகின்றார்கள். அவர்களுக்கு எந்தவிதப் பதவி உயர்வும் கொடுக்கப்படாமல் நிலுவையில் இருக்கின்றது. அவர்களெல்லாம் படித்தவர்கள். நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது பெரும்பான்மையானவர்கள் அபிமானிகளாக இருக்கின்ற காரணத்தினாலே இதுவரையிலும் இந்த அரசு அல்லது இதற்கு முந்தைய அரசு, எந்த அரசாக இருந்தபோதும், போராட்டத்தின் மூலமாகத் தங்களுடைய உரிமைகளுக்காக அவர்கள் குரல் கொடுக்காமல், அவர்கள் வெறும் கோரிக்கை மனுவின் மூலமாகக் குரல் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிரந்தரத் தீர்வு எட்டப்படவில்லை என்ற ஒரு செய்தி இருக்கிறது. அதையும் நம்முடைய அரசு கருணையோடு பரிசீலிக்க வேண்டும்.

அதேபோல், உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள்—A.E.O. என்று சொல்லக்கூடியவர்கள் தமிழ்நாட்டிலே 900 பேர் இருக்கின்றார்கள். அவர்களுக்கு இதுவரையிலும் எந்தப் பதவி உயர்வும் இல்லாமலேயே. அவர்கள் ஓய்வு பெற்று வீடு திரும்புகின்றார்கள்.

அதேபோல், இன்றைக்குப் பேரூராட்சிகளிலே 567 பேர் பணிபுரிகின்றனர். அவர்களுக்கும் எந்தவிதப் பதவி உயர்வும் இல்லாமல் பல்வேறு நிலைகளிலே அப்படியே இருந்து, அவர்களை இன்றைக்குப் பணி மாறுதல் செய்கின்றார்கள்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு நம்முடைய புத்தாண்டு வருவதையொட்டி, கடலூர் மாவட்டத்தில் மிகப் பெரிய கலவரம் வருவதற்கான ஒரு வாய்ப்பு வந்தது. நம்முடைய தலைவர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசின் காவல் துறையினுடைய சாதுர்யமான நடவடிக்கையின் காரணமாக அந்தக் கலவரம் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கான மிகப் பெரும் பங்காற்றியது எம் தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்களும்,

விடுதலைச் சிறுத்தைகளுடைய பொதுச் செயலாளர் தோழர் திரு தொல். திருமாவளவன் அவர்களும் ஆகும். புத்தாண்டு கொண்டாடுகின்ற வேளையில், யாரோ கொண்டாடிய புத்தாண்டை நம்முடைய தமிழர்களும் கொண்டாட வேண்டும் என்ற அடிப்படையிலே, சாலையில் வருகின்ற போக்குவரத்து வாகனங்களையெல்லாம் தடுத்து நிறுத்தி, இனிப்பு வழங்குகின்றபோது ஒரு முரண்பட்ட கருத்து ஏற்பட்டு, ஒருவருக்கொருவர் அங்கே மோதிக்கொண்டதிலே ஒரு உயிர் இறந்தது. அந்த இறந்த குடும்பத்திற்குக்கூட 5 இலட்சம் ரூபாய் வழங்க வேண்டுமென்று நாங்கள் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டோம். முதல்வர் அன்றையதினமே இரண்டு இலட்சம் ரூபாயை அந்தக் குடும்பத்திற்கு வழங்கினீர்கள், நாங்கள் நன்றி சொல்கின்றோம். அதே வேளையில், பாதிப்புக்கு உள்ளான அந்த மக்கள், ஆத்திரத்தின் விளைவாக, சில சமூக விரோதிகள் இடையில் புகுந்த காரணத்தினாலே ஒரு கலவரம் ஏற்பட்டு, 12 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டு, அடித்து நொறுக்கப்பட்டு, அங்கிருந்த பொருட்கள் எல்லாம் சூறையாடப்பட்டன. அப்போது ஆட்சியர் அவர்களும், காவல் துறையினுடைய தலைவர் அவர்களும் அங்கே வந்து, பாதிக்கப்பட்டவர்களுக்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடத்திலே நாங்கள் சொல்லியிருக்கிறோம்; நிவாரணம் கிடைக்குமென்று சொன்னார்கள். அந்த 2 இலட்சம் ரூபாய் இறந்தவர் குடும்பத்திற்குக் கிடைத்தது. அந்தப் பிரச்சினையையொட்டி எழுந்த கலவரத்தில் பாதிக்கப்பட்ட அந்த அப்பாவிக் குடும்பங்களுக்கு இதுவரையில் ஒரு பைசாகூட கிடைக்கவில்லை.

எங்கள் அய்யா என்னிடத்திலே தொலைபேசியிலே தொடர்புகொண்டு, முதல்வர் அலுவலகத்திலிருந்து உத்தரவு வந்திருக்கிறது; அங்கே நம்முடைய மேதகு இந்திய நாட்டினுடைய ஜனாதிபதி வருகை தந்திருக்கிறார். நம்முடைய பாரதப் பிரதமர் மறுநாள் வருகை தர இருக்கிறார்; ஆதலால் எந்தவிதக் கலவரமும் வந்துவிடக் கூடாது; இது நம்முடைய அரசு; நம் கூட்டணியில் இருக்கின்ற அரசு. இந்த அரசுக்கு, இந்த அரசு ஆள்கின்ற காலத்தில் எந்தவித ஜாதிக் கலவரமும் உன்னுடைய மாவட்டத்தில் வந்ததாகச் செய்தி வந்துவிடக் கூடாது; இதைப் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு உனக்கு இருக்கிறது என்று சொன்னார். நானும், அதேபோல் நம்முடைய விடுதலைச் சிறுத்தை இயக்கத் தோழர் தொல. திருமாவளவன் அவர்களும, நம்முடைய செல்வப் பெருந்தகை அவர்களும், ரவிக்குமார் அவர்களும் ஈடுபட்டு, இரு மக்களிடத்திலும் பேசி, அங்கு எந்தவித சிறு பிரச்சினைக்கும் இடமில்லாமல் அங்கு அமைதியை நாங்கள் நிலைநாட்டினோம். ஆனால், அந்த அமைதிக்கு ஒத்து வந்த அந்த



மக்கள் திரும்பவும் போய் மாவட்ட ஆட்சியரிடத்தில் மனுக் கொடுத்தபோது, அந்த மாவட்ட ஆட்சித் தலைவரும், R.D.O. அவர்களும், நீங்கள் இருப்பது பட்டா இடம் இல்லை, ஆதலால் அரசு தொகுப்பு வீடுகள் உங்களுக்குக் கட்டிக் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை, அரசினுடைய திட்டங்கள் உங்களுக்கு வந்து சேர்வதற்கு வாய்ப்பு இல்லை என்று சொல்லியிருப்பதாக எங்களிடத்திலே செய்தியைச் சொனனார்கள

பிற்பகல் 12—35

மாண்புமிகு முத்தமிழறிஞர் முதல்வர் அவர்களே, நீங்கள் இன்றைக்குக்கூட ஆளுநர் உரையிலே அறிவித்திருக்கிறீர்கள். 10 ஆண்டு காலமாக நிரந்தரமாக வாழ்ந்த மக்களுக்குப் பட்டா வழங்கப்படும் என்று அறிவித்தீர்கள். அந்த மக்களுக்கு, அந்தக் கலவரத்தில் பாதிப்படைந்த அந்தக் குடும்பங்களுக்கு அற்புதமான வீடுகளை அமைத்துத் தருவதற்கும், அவர்களுக்குப் போதிய நிவாரணங்கள் வழங்குவதற்கும் உத்தரவிட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல், இன்றைக்கு (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம்.

அதேபோல், நம்முடைய ஆளுநர் உரையில், இதுவரையில் வரலாற்றில் இல்லாத அளவிற்கு, மத்திய அரசினுடைய பிரதிநிதியாக இருக்கிற ஆளுநர் அவர்கள், இந்த நாட்டு மக்களுடைய, இன மக்களுடைய சிக்கலுக்குத் தீர்வு காண்பதற்காக, இலங்கை இனப் பிரச்சினையையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். வைகறைப் பிரச்சினையில், இலங்கை இராணுவப் பேரினவாத அரசு இப்போது முப்படைகளையும் கொண்டு, அங்கே தமிழர்கள் குழந்தைகளை பள்ளிகளிலும், கோயில்களிலும், மசூதிகளிலும் கொன்று குவித்து வருகிறது. 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட எம் தொப்புள்கொடி உறவு, இன்றைக்கு வாழ்ந்து வந்த இடத்தை, தங்களுடைய பூர்வீகக் குடிகளை, தங்கள் வீடு, மனைகள், கோயில்கள், குளங்கள் அத்தனையையும் இழந்துவிட்டு, தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக மூட்டை, முடிச்சுகளோடு வந்து வேறு இடத்திலே தங்கிக்கொண்டிருக்கிற அவலம் நடந்துகொண்டிருககிறது. இந்தச் சூழலில், எந்த மூலையிலிருந்து குரல் வரும் என்று காத்துக கிடந்த அந்த புலம் பெயர்ந்த எம் தமிழர்களுடைய நெஞ்சங்களில் பாலை வார்த்ததுபோல், இந்த மாநிலத்தின் ஆளுநர் அவர்களுடைய இநத உரையில் அந்த இலங்கை ஈழத் தமிழர்களுடைய இனச் சிக்கலுக்கு ஓர் அரசியல் தீர்வு எட்டப்படும் என்று அறிவித்திருக்கிற எம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களே, உலகத்திலே வாழ்கிற தமிழர்களின் சார்பாக உங்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியையும்,

பாராட்டுதல்களையும் நாங்கள் தெரிவிக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது அந்தப் பிரச்சினைக்கு, உங்கள் காலத்தில், உங்களுடைய ஆட்சிக் காலத்தில், நீங்கள் வாழ்கின்ற காலத்தில், அந்த மக்களுக்கு ஒரு தீர்வை ஏற்படுத்தி, அவர்களுக்கு நல்ல வாழ்க்கைச் சூழலுக்கு ஒரு பாதுகாப்பை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நான் சொன்ன கருத்துகள் என்பவை, இந்த மாநிலத்தினுடைய அரசாங்கம் ஆண்டு கொண்டிருக்கின்றபோது நான் குறிப்பிட்ட அந்த நிகழ்வுகள் நடந்தவை அல்ல. கல்லூரிச் சம்பவங்களாக இருக்கலாம்; கஞ்சா பிரச்சினையாக இருக்கலாம்; லாட்டரிச் சீட்டுப் பிரச்சினையாக இருக்கலாம்; கடந்த ஆட்சிக் காலத்தில், அவர்கள் சட்டம்-ஒழுங்கைப் பாதுகாக்காமல்—பொய் என்று சொல்லக் கூடாது இந்தச் சட்டமன்றப் பேரவையிலே—உண்மைக்கு மாறான வழக்குகளை முத்தமிழறிஞரே, உங்கள்மேல போடுவதிலும், தளபதிமேல் போடுவதிலும், முன்னாள் அமைச்சர் பெருமக்கள்மேல் போடுவதிலும், என்மீது போடுவதிலும், எங்கள் கட்சியினுடைய முன்னோடிகள்மேல் போடுவதிலும் குறியாக இருந்தார்களே தவிர கஞ்சா விற்பதையோ அல்லது பல்வேறு தவறான நடைமுறைகள் இருப்பதையோ தடுத்து நிறுத்த அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால், இன்றைக்கு நீங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு, உங்கள் கையில் இருக்கிற காவல் துறையை முடுக்கிவிட்டு, நீங்கள் அதைத் தடுத்து நிறுத்துகிற நடவடிக்கை எடுக்கிறபோது, அது செய்தித்தாளிலே செய்தியாக வருகிறது. அந்த அளவில்தான் என்னுடைய கருத்தை நான் பதிவு செய்கிறேன். அப்படி வருகின்ற இடங்களிலேகூட, நம்முடைய அரசு சரியான நடவடிக்கை எடுத்து, சிறப்பாகப் பணியாற்றுகின்ற அந்தக் காவல் துறை நண்பர்களுக்கு இரட்டிப்புச் சம்பளங்களை வழங்கி, இதுபோன்ற நிகழ்வுகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு ஓர் உற்சாகத்தைத் தந்து, அவர்களுக்கு ஒரு பதவி உயர்வு தந்து அவர்கள் போற்றப்பட வேண்டும். சில இடங்களிலே காவலர்களே இன்றைக்கு மாற்று உடை அணிந்து கொள்ளையடிப்பதாகவும், திருடுவதற்கு வழிகாட்டுவதாகவும் செய்தி வருகின்றபோது, அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, அவர்களைத் தண்டிப்பதற்கான நடவடிக்கையையும் நீங்கள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப் பல்வேறு நல்ல பல திட்டங்களையும், அரிய, பெரிய கருத்துகளையும், இந்த நாட்டு மக்களுக்குத் தேவையான நல்ல பல செய்திகளையும் உங்களுடைய ஆளுநர் உரையின் மூலமாக இந்த



மக்களுக்கு நீங்கள் பறைசாற்றி இருப்பதைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக முழு மனதாக வரவேற்று, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களே, தமிழனுடைய துறந்த, தமிழனுடைய மறந்த அந்த வாழ்க்கையை, அந்தப் பண்பாட்டை, கலாச்சாரத்தை, நாகரிகத்தைப் பேணிக் காப்பதை, தமிழர்கள் ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து வாழ்வதை, தங்கள் வீடுகளிலே பொங்கல் வைத்து, சர்க்கரைப் பொங்கலிட்டு, பக்கத்து வீடுகளுக்கும், உற்றார், உறவினர்களுக்கும் கொடுத்து மகிழ்கின்ற அந்தப் பாரம்பரியத்தை, ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுக்கிற மனப்பான்மையை, கூடி வாழ்கின்ற அந்த வாழ்க்கை முறையை, உழவுக்கு முக்கியத்துவம் தருகின்ற அந்தப் பொங்கல் விழாவை, உங்கள் காலத்தில், இந்த நூற்றாண்டில் அரசு விழாவாகக் கொண்டாடச் செய்து, அனைத்து உள்ளங்களிலும் ஒளிபெறச் செய்த உங்களுக்கு எங்களுடைய மனமார்ந்த நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரை என்பது, எங்கள் கட்சியினுடைய தலைவர் அவர்கள் தியாகச் செம்மல் அண்ணன் கோ.க. மணி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இந்த ஆட்சி இந்தக் காலக்கட்டங்களில் இதைச் செய்யும் என்பதை இந்த நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்கின்ற ஒரு காலத்தின் கண்ணாடிபோல் விளங்குகிறது என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி, உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக்கக்கூடிய, பல ஆண்டு காலம் குடியிருந்தால் 10 ஆண்டுகளுக்கு மேல் போராடியும் கிடைக்கப்பெறாத, குடிமனைப் பட்டாவை ஏழைகளுடைய குடிசைகளுக்கு வழங்குவோம் என்ற அந்த அறிவிப்பை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக மனதார நாங்கள் நன்றி சொல்லி, வரவேற்கின்றோம்.

பிற்பகல் 12–10

விவசாயத் தொழிலாளர்களுக்கான நல வாரியமும், அந்த நல வாரியத்தில் மாற்றுக் கருத்துகளைக்கூட சொல்வதற்கான, ஜனநாயக உரிமையை வலியுறுத்துவதற்கான குழுவும் அமைக்கப்பட்டிருப்பதையும், தமிழகத்தினுடைய மீனவர்கள், வனமுற்றவர்கள், வீட்டுப் பணியாளர்களுக்கான நல வாரியத்தை உருவாக்கி இருக்கக்கூடிய அந்தத் திட்டத்தையும் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வரவேற்கின்றோம்.

மனிதக் கழிவை மனிதனே எடுத்துச் சுமக்கும் கொடுமையை அறவே அகற்றுவதற்கான நடவடிக்கையை எடுப்போம் என்ற தமிழக அரசினுடைய அந்தத் திட்டத்தையும், ஆளுநர் அறிக்கையையும் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கின்றோம். இந்த இடத்திலே, இந்தச் சமூகத்தினுடைய கடைக்கோடியில் இருக்கக்கூடிய தீண்டாமைக் கொடுமைக்குள்ளாக்கப்பட்ட, மனிதக் கழிவை மனிதனே எடுத்துச் சுமக்கக்கூடிய ஒரு அடித்தட்டு மனிதனை நினைவுகூர்ந்து, அத்தகைய சமூக அவலத்தை அகற்றுவோம் என்று கூறியிருக்கக்கூடிய இந்த நல்ல அம்சத்தை நாங்கள் வரவேற்கக்கூடிய சூழ்நிலையில், சிலர் இத்தகைய சிந்தனையை, இத்தகைய அறிக்கையைக் குப்பைத் தொட்டியிலே போடுவோம் என்று சொன்னதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அந்த வகையிலே தமிழகத்தினுடைய ஆளுநர் அறிக்கையில் எட்டு மாத காலத்தில் ஓர் அரசு இயல்பாக என்ன செய்ய முடியுமோ, அத்தகைய நடவடிக்கைகளைச் சுட்டிக் காட்டியிருக்கிறீர்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதேபோன்று, இந்திய அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட்டுப் புதியதாக இயற்றப்பட வேண்டுமென்ற சிந்தனை வரவேற்புக்குரியது. இத்தகைய விவாதம் என்பது தமிழகத்திலே தொடங்கப்பட்டு, அது ஆரோக்கியமாக நடத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்துகின்றோம். ஆளுநர் அறிக்கையில் குறிப்பிட்டபடி, 'இந்திய ஒற்றுமை, ஒருமைப்பாடு, இறையாண்மை ஆகியவற்றைப் பாதுகாக்கும் வகையில் இந்திய அரசமைப்புச் சட்டம், காலத்தின் தேவைக்கேற்பப் புதியதாக இயற்றப்பட வேண்டும்' என்ற மாநில அரசினுடைய வேண்டுகோள் நியாயமானது. ஆனால், கடந்த காலத்தில், B.J.P. போன்ற மதவெறியை ஊட்டக்கூடிய அரசியல் அமைப்புகள், ஜனநாயகத்தை முடக்குவதற்கும், மாநில அரசுகளுடைய அதிகாரத்தைச் சுருக்குவதற்கும், இந்த நாட்டையே ஒருவருடைய ஆட்சிப் பிடிக்குள் கொண்டு வருவதற்குமாகத் திருத்தம் செய்ய வேண்டுமென்ற சிந்தனையோடு கடந்த காலத்திலே செயல்பட்டதும் நம் நினைவுக்கு வருகிறது. அத்தகைய பாதையில் அல்லாமல், மதச்சார்பின்மை, இந்திய ஒற்றுமை, ஒருமைப்பாடு, இறையாண்மை ஆகியவற்றைப் பாதுகாக்கும் வகையிலேயே மாநில அரசுகளுக்குரிய உரிமைகளை விரிவுபடுத்துவது, வலியுறுத்துவது என்ற அரசினுடைய அத்தகைய வேண்டுகோள், அத்தகைய சிந்தனையின்மீது, நாம் தமிழகம் முழுவதும் முதல் விவாதத்தைத் தொடங்கியிருக்கின்றோம். இது தொடர வேண்டும். இதிலே எங்களுக்கு உடன்பாடு இருக்கிறது என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.





அதேபோன்று, அரசமைப்புச் சட்டத்தில் குழந்தைகளுக்கான உரிமை, பெண்களுக்கான உரிமை மட்டுமல்லாமல், இளைஞர்களுக்கு வேலை என்பதே உரிமையாக்கப்பட வேண்டும் என்ற புதிய பார்வையோடு இத்தகைய அரசமைப்புச் சட்டங்கள் எதிர்காலத்தில் திருத்தப்படுவது என்பது அவசியமானது.

நற்பணி வரி விதிக்கும் அதிகாரத்தை மாநில அரசுகளுக்கே அளிக்க வேண்டுமென்று தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். அதற்கு எங்களுடைய ஆதரவைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அதே சமயத்தில், பன்னாட்டு நிதி மூலதனமும், இந்திய நாட்டு மூலதனமும் இன்றைக்கு ஒரு புதிய அரசியல் பொருளாதாரச் சிக்கலை உருவாக்கி வருகிறது. அதன்மீதும் தமிழக அரசினுடைய பார்வை இருக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றோம். சுமார் 5 இலட்சம் கோடி நிதி மூலதனம் உள்ள இந்திய காப்பீட்டுத் துறையில், அந்நிய மூலதனத்தை 26 சதவீதத்திலிருந்து 49 சதவீதமாக உயர்த்துகிறோம் என்று சொல்லக்கூடிய மத்திய அரசினுடைய நடவடிக்கை கண்டனத்திற்குரியது. இத்தகைய நடவடிக்கை தொடர்ந்தால், தமிழகம் மட்டுமல்ல, இந்திய நாடு முழுவதும் இருக்கக்கூடிய ஊழியர்கள், பொது மக்கள், இந்திய நாட்டினுடைய பொதுச் சொத்தைப் பன்னாட்டு கம்பெனிகளுக்கு விற்பனை செய்யவிட மாட்டோம், வழங்க மாட்டோம் என்ற போராட்டம் ஆதரவிற்குரியது. ஆகவே, அந்த வகையிலேயும் தமிழக அரசு, மத்திய அரசினுடைய இத்தகைய நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தும் பார்வையோடு, இன்றைக்குச் செயல்படுவதற்கான பார்வை இருக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

*பிற்பகல் 12–45*

அதேபோன்று, புதிய பென்ஷன் திட்டத்தை மத்திய அரசு அறிவித்துக்கொண்டிருக்கிறது. ஊழியர்கள், முதியோர்கள் மட்டுமல்ல; இந்த நாட்டினுடைய அனைத்துத் தரப்பு மக்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள் உள்ளிட்டு, அத்தகைய திட்டத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. புதிய பென்ஷன் திட்டத்தைக் கொண்டு வருவதன் மூலமாக இந்திய நாட்டினுடைய உழைப்பாளி வர்க்கத்தை, அவர்களுடைய உழைப்பை, அவர்களுடைய வியர்வையைத் தனியாருக்குக் கொடுத்து அநாதரவாக நிறுத்தக்கூடிய மோசடியான ஒரு சட்டமாகும். ஆகவேதான், அத்தகைய சட்டத்தைக் கொண்டு வருவதிலும் எங்களுடைய எதிர்ப்பை நாங்கள் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்தியிருக்கக்கூடிய தமிழக அரசு, மத்திய அரசு Wal-Mart நிறுவனத்தின் மூலமாக சில்லறை வர்த்தகத்தையே ஆறையாடக்கூடிய நடவடிக்கையிலே ஈடுபட்டுக்கொண்டு இருப்பதையும் நாம் இந்த நேரத்திலே கவனத்தோடு, எச்சரிக்கையோடு பார்க்க வேண்டும். இத்தகைய மத்திய அரசினுடைய நடவடிக்கைகள் யாவும் தடுத்து நிறுத்தப்பட வேண்டியவையாகும். அவற்றைத் தமிழக அரசு எதிர்த்து ஓர் இடத்திலே நிற்க வேண்டும் என்பதனை இந்த நேரத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்) தலைமை]

அதேபோன்று, தமிழகத்தின் நிலைமைகள் குறித்து, பல்வேறு திட்டங்களை வரையறுக்கக்கூடிய சூழ்நிலையில், தமிழகத்திலே, தோஹாவிலே வெற்றி பெற்று வந்த சாந்தி என்ற பெண்ணுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 15 இலட்சம் ரூபாயைப் பண முடிப்பாக வழங்கினார்கள். பல சர்ச்சைகளுக்குள்ளான அந்தப் பெண்ணினுடைய திறமையின்மீது மதிப்பளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் இந்த நேரத்திலே பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய வெற்றி பெற்ற பெண்மணியைச் சுட்டிக்காட்டிய மீடியாக்களும், பத்திரிகைகளும், அந்தக் கிராமத்தினுடைய தன்மையை விளக்கி இருக்கிறார்கள். அந்த சாந்தியினுடைய வறுமையைப் படம் பிடித்திருக்கிறார்கள். சாந்தி என்ற அந்த இளம் பெண்ணினுடைய உடல் திறன், பயிற்சியால் இளைக்கவில்லை, பட்டினியால் இளைத்த உடம்பு என்று அந்தப் பெண்ணினுடைய தந்தை குறிப்பிட்டார். செங்கல் சூளையிலே வேலை செய்யக்கூடிய அந்தக் குடும்பம்; ஓலைக் குடிசை வீடு, மண்ணால் கட்டப்பட்டிருந்தது. பாய் முடைபவனுக்குப் படுப்பதற்குப் பாய் இல்லை. செங்கல்லை உருவாக்குபவனுடைய வீடு, செங்கல்லால் கட்டப்படவில்லை. இதுதான் தோகாவிலே ஓடி வெற்றி பெற்று வந்த அந்த சாந்தி வீட்டினுடைய வறுமை, அந்தக் கிராமத்தினுடைய வறுமை என்று பத்திரிகைகளும், மீடியாக்களும் படம் பிடித்திருக்கின்றன.

21–வது நூற்றாண்டில் கலாச்சாரம் எங்கேயோ போய்க் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், மீனவப் பெண்கள் தங்களது சிறுநீரகத்தை விற்கக்கூடிய வறுமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், இதுதான் தமிழ்ச் சமூகத்தின் முன்னால் இருக்கக்கூடிய மிகப் பெரும் பிரச்சினையாக இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, வறுமையை ஒரே நாளில் ஒழித்துவிட முடியாது. ஆனாலும், இந்த வறுமை இன்றைக்கு வளர்ந்துகொண்டிருக்கிறது என்ற யதார்த்த உணர்வோடு,



உண்மையோடு தமிழக அரசு பல திட்டங்களை உருவாக்கி, அவற்றைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளிலே ஈடுபட வேண்டும் என்பதைத்தான் எங்களுடைய வேண்டுகோளாக உங்கள் முன்னால் வைக்கின்றோம்.

அரிசி கிலோ இரண்டு ரூபாய்க்குத் தரக்கூடிய இந்தச் சூழ்நிலையிலே, இன்றைக்குக் கிராமப்புறங்களிலே வெள்ளை கார்டுகளோடு இந்த இரண்டு ரூபாய் அரிசியைப் பெற முடியாமல் பல்லாயிரக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள் என்று சென்ற கூட்டத்தொடரிலேயே நாங்கள் குறிப்பிட்டோம். அந்த வெள்ளை கார்டுகளை மாற்றுவதற்குத் தமிழக அரசும், பொது விநியோகத் துறையும் ஒரு உடனடியான மாற்றைச் செய்ய வேண்டும்.

அதேபோன்று, தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாக இன்றைக்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு குழுவை அமைத்து, அந்தத் திட்டத்தை நல்ல முறையிலே துரிதமாக்கிக்கொண்டிருக்கிறார்கள். கிராமப்புறத்திலே இருக்கக்கூடியவர்களுக்கான வேலை, ஒரு நாள் உழைத்தால் 80 ரூபாய் கூலி என்பது சட்டத்திலே இயற்றப்பட்டிருக்கிறது. ஆனாலும், நடைமுறையிலே கீழ் அதிகாரிகள் [illegible] ரூபாய்தான் கொடுப்போம், நீங்கள் வேலையே செய்யவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அரசியல் சட்டம் என்ன சொல்கிறது, கீழ் இருக்கக்கூடிய அதிகாரிகள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதனை மாவட்ட ஆட்சி நிர்வாகங்கள் கவனித்து, சட்டப்படியான அந்த 80 ரூபாய் கூலியைத் தர வேண்டும். நாகப்பட்டினத்திலே அந்தக் கூலிக்கான அரிசியை வழங்குகிறார்கள். இன்றைக்கு ரேஷன் கடையில் 2 ரூபாய்க்கு அரிசியை வழங்கிக்கொண்டிருக்கிற சூழ்நிலையில், நாகப்பட்டினத்தில் இருக்கக்கூடிய மாவட்ட ஆட்சி நிர்வாகம் அரிசியை 5 ரூபாய் 60 பைசாவிற்கு அவர்களுக்கு வழங்குகிறது. ஆகவே, இந்த அரிசி எங்களுக்கு வேண்டாமென்று விவசாய, கிராமப்புறக் கூலித் தொழிலாளிகள், அந்தத் திட்டத்திலே வேலை செய்பவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகவே, அரிசிக்குப் பதிலாக அவர்களுக்குக் கூலி வழங்க வேண்டும் அல்லது 2 ரூபாய் ரேஷன் அரிசியை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–50

அதேபோன்று, விஞ்ஞானத்தில், கீழிருந்து மேலே எறியப்படும் ஒரு பொருள் எப்படியும் கீழே வரும். ஆனால், விலைவாசி மட்டும் இந்தியாவிலே மேல் நோக்கி எறிந்தால், கீழ் நோக்கி வருவதே இல்லை. வீட்டிலே இருக்கக்கூடிய ஒவ்வொரு அத்தியாவசியப் பொருளினுடைய

விலையும் கடுமையாக உயர்ந்துகொண்டிருக்கிறது. துவரம் பருப்பிலிருந்து, உளுந்தம் பருப்பிலிருந்து, மிளகாய் வற்றலிலிருந்து, சகலவிதமான பொருட்களினுடைய விலையும் விண்ணை நோக்கி உயர்ந்துகொண்டிருக்கின்றன. இவற்றை எப்படிக் கட்டுப்படுத்தப் போகிறோம் என்பதைப் பற்றித் தமிழக அரசு யோசிக்க வேண்டும். பொது விநியோக முறையில் இயங்கக்கூடிய ரேஷன் கடைகளிலே அத்தியாவசியமான சில பொருட்களையாவது வழங்குவதற்குத் தமிழக அரசு முன்வர வேண்டும். இல்லையென்றால், இந்தக் கடுமையான விலை உயர்வு, உயர்ந்துகொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், நீங்கள் எத்தனை இலவசத் திட்டங்கள் கொடுத்தாலும், அவை இந்த விலைவாசி உயர்வின் வெள்ளத்திலே அடித்துக்கொண்டு செல்லப்பட்டு விடும். ஆகவேதான், விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு மாற்று என்ன செய்ய வேண்டுமென்பது குறித்தும் தமிழகத்தில் இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழக அரசு உறுதியான நடவடிக்கைகளிலே ஈடுபட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, கல்வித் துறையைப் பொறுத்தவரை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் வாக்குறுதியில், கல்லூரியிலே பணி செய்யக்கூடிய கௌரவ விரிவுரையாளர்களை நாங்கள் பணி நிரந்தரம் செய்வோம் என்று வாக்குறுதி கொடுத்தீர்கள். நீலகிரியில் இருக்கக்கூடிய ஒரு கல்லூரியில் கிட்டத்தட்ட 12 ஆண்டுகளுக்கு மேலாக வேலை செய்திருக்கக்கூடிய கௌரவ விரிவுரையாளர்களை வெளியேற்றிவிட்டுப் புதிதாகக் கல்லூரியில் பணி நியமனம் செய்யப்படுவதை எதிர்த்துப் போராடியதன் காரணமாக, அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டார்கள்; சிறைச்சாலையிலே வைக்கப்பட்டார்கள். அத்தகைய நிலையை உடனடியாக அரசு கைவிட வேண்டும். இன்றைக்கு 1,173 பேர் கௌரவ விரிவுரையாளர்களாக இருக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் வீட்டுக்கு அனுப்பிவிட்டு, புதிதாக நாங்கள் ஆட்களை எடுப்போம் என்று சொன்னால், அவர்கள் மட்டுமல்ல, தமிழக மக்களும் அதை ஏற்க மாட்டார்கள். ஆகவே, 1,173 கௌரவ விரிவுரையாளர்களை நிரந்தரப்படுத்திவிட்டு மீண்டும் நீங்கள் புதியவர்களைப் பணிக்கு அமர்த்துவதிலே மாற்றுக் கருத்து எதுவும் இருக்க முடியாது.

அதேபோன்று, அறநிலையத் துறையின்கீழே இயங்கக்கூடிய கல்வி நிலையங்கள், கல்லூரிகள், ஆண்டிப்பட்டி கல்லூரி உட்பட, இவற்றிலே வேலை செய்யக்கூடிய கல்லூரி விரிவுரையாளர்கள் பகுதி நேரமாகவே நீக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளையும் பரிசீலிக்க வேண்டும். தேர்தல் காலத்திலே கொடுத்த பல வாக்குறுதிகளை





நிறைவேற்றிக்கொண்டிருக்கக்கூடிய நமது அரசு கல்வித் துறையிலேயும் இந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, பட்டாவை ஆறு மாத காலத்திற்குள் கொடுப்போம் என்று சொல்லியிருக்கக்கூடிய நமது அரசு, அந்தந்த மாவட்டங்களிலே ஒரு ஆய்வுக் குழுவினை அமைப்பதற்கு உத்தரவிட வேண்டும். இந்த 6 மாத காலத்தை விரிவுபடுத்தி, கீழே இருக்கக்கூடிய ஊழியர்கள், அதிகாரிகளினுடைய சிரமம் கருதி இதற்குக் கால நீட்டிப்பு என்பது வழங்கப்பட வேண்டும். அதே நேரத்தில், மலைப் பகுதிகளிலே இருக்கக்கூடிய நிலங்களிலே பயிர் செய்யக்கூடிய விவசாயிகளை இந்தக் காலங்களிலே வனத் துறை வெளியேற்றுவதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறது. நோட்டீசைக் கொடுப்பதும், வீடியோவிலே பதிவு செய்வதும், மிரட்டுவதுமான நடவடிக்கைகளிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது தமிழக அரசினுடைய கொள்கைக்கு விரோதமாக இருக்கிறது. மத்தியில் இருக்கக்கூடிய அரசு, மலைகளிலே பயிர் செய்து மலைவாழ் மக்கள், அதேபோன்று விவசாயிகள் யாரையும் வெளியேற்றக் கூடாது என்று ஒரு சட்டத்தை நிறைவேற்றி, ஜனாதிபதி அவர்களுடைய ஒப்புதலுக்கு அனுப்பியிருக்கக்கூடிய சூழ்நிலையிலே, வனத் துறை இவ்வாறு செயல்படுவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று.

திண்டுக்கல்லிலே இருக்கக்கூடிய சிறுமலைப் பகுதியில் 1973 ஆம் ஆண்டு 3 ஏக்கர் திட்டத்திலே டாக்டர் கலைஞர் அவர்கள் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களை விவசாயிகளுக்கு வழங்கியிருக்கிறார்கள். இப்பொழுதும் 100 ஆண்டு காலமாக இருக்கக்கூடிய அந்த விவசாயிகளை, மலையை விட்டு வெளியேற வேண்டுமென்று வனத் துறையினுடைய அதிகாரிகள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், வனத் துறை அமைச்சர் அவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் வருகை தந்து, நிலங்களைவிட்டு வெளியேற்ற மாட்டோம் என்று ஏற்கெனவே சொல்லிச் சென்ற பிறகும், அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வராமல், கீழேயிருக்கக்கூடிய அதிகாரிகள் இவ்வாறு செயல்படுவதை விவசாயிகள் தமிழக அரசின்மீது வேறுவிதமான பார்வையோடு பார்ப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துவிடும். ஆகவே, இது[illegible]களில் இருக்கக்கூடியவர்களுக்கு XVI-notification—[illegible] வழங்குவதற்குரிய நடவடிக்கைகளைத் தமிழக அரசு [illegible] வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.



227442
சென்னை-600 00

*பிற்பகல் 12–55*

கோயில் நிலங்களில் பயிர் செய்யக்கூடிய விவசாயிகளுக்கு அந்த நிலங்களைச் சொந்தமாக்குவதற்கு அரசு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

20 ஆண்டு காலமாக வீட்டு வசதி வாரியத்திலிருந்து வீடுகள் என்பதே பெற முடியவில்லை. அத்தகைய சூழ்நிலையில், நம்முடைய வீட்டு வசதி வாரியம் என்பது வீடுகளைப் பெற்றவர்களுக்கு இருக்கக்கூடிய கடன்களில் வட்டி முழுவதையும் தள்ளுபடி செய்து, அவர்களுக்குப் பத்திரம் வழங்க முன்வர வேண்டும். 8 மாதங்களாகியும், திண்டுக்கல் இராணி மங்கம்மாள் காலனி போன்ற பகுதிகளிலே குடியிருக்கக்கூடியவர்களுக்கு இதுவரை பத்திரம் என்பதே வழங்கப்படவில்லை. அவர்கள் சட்டமன்ற உறுப்பினராகிய என்னிடம் தொடர்ந்து உங்களது...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் கோரிக்கை 30 ஆண்டு காலமாக உள்ளது. 89,000 பேர் பட்டா பெறாமல் இருக்கிறார்கள். இந்த 8 மாத காலத்தில் 19,000 பேர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது என்கின்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அடுத்து, இராணி மங்கம்மாள் காலனியை பற்றிக் குறிப்பிட்டார்கள். அங்கே, அந்த நகரத்திலேயுள்ள ஒரு தொழிலதிபர் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார். அவரையும் அழைத்துப் பேசியிருக்கிறோம். அவர்கள் அதற்குக் கூடுதலான தொகையை எதிர்பார்க்கிறார்கள். அந்தத் தொகையைக் கொடுக்க முடியாது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் எங்களுடைய அலுவலர்களிடத்திலே தெரிவித்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். தொடர்ந்து அவர்களோடு பேசி, one time settlement என்ற முறையில் முடிவு செய்து, இராணி மங்கம்மாள் காலனிக்கும் பட்டா வழங்குவதற்கு ஏற்பாடு செய்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத்



தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பத்திரம் வழங்கக்கூடிய பிரச்சினையில் அடிப்படையாக இருப்பது கூட்டு வட்டி. அந்தக் கூட்டு வட்டி முறையை இரத்துச் செய்து, வட்டிகளைத் தள்ளுபடி செய்தால்தான், இந்தப் பத்திரப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு வரும் என்ற என் கருத்தையும் சேர்த்துச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, மதிப்புக் கூட்டு வரியில் Hotel Industry–யோடு Bakery Industry–யையும் இணைக்க வேண்டுமென்று அந்த Bakery–யினுடைய தொழிற்சங்க அமைப்புகள் கேட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, அந்த வகையிலே மதிப்புக் கூட்டு வரியின்கீழ் Hotel Industry–யோடு Bakery Industry–யையும் இணைத்து உத்தரவிடுவதற்கு அரசு முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, சிறு பம்புசெட் மோட்டார்களை உற்பத்தி செய்யக்கூடிய தயாரிப்பாளர்கள், இந்த மதிப்புக் கூட்டு வரிக்குக்கீழ் தாங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக ஒரு கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களுடைய கோரிக்கையையும் நிறைவேற்ற வேண்டுமென்று வலியுறுத்துகின்றேன்.

இந்த அறிக்கையிலே குறிப்பிட்டுள்ளபடி மீனவர்களுக்கான நல வாரியம் என்பது வரவேற்புக்குரியது. ஆனால், மீனவப் பெண்களைத் தொழிலாளர்களாக இன்றைக்கும் அங்கீகரிக்கவில்லை. மீனவர்கள் கூட்டுறவு அமைப்புகளிலே உறுப்பினர்களாக முடிகிறது. ஏனென்றால், அவர்களுக்குத் தொழிலாளர் என்ற அங்கீகாரம் இருக்கிறது. மீனவப் பெண்கள் அந்தக் கூட்டுறவு அமைப்பிலே உறுப்பினர்களாக முடியவில்லை. காரணம், அவர்களைத் தொழிலாளியாக அங்கீகரிப்பதில்லை. ஆகவே, கடலிலே மீன் பிடித்து வருவோரிடமிருந்து மீனைப் பெற்று விற்பனை செய்யக்கூடிய அந்தப் பெண்களும் மீன் சார்ந்த தொழில் செய்யக்கூடியவர்கள் என்பதால், அவர்களையும் தொழிலாளர்களாக அங்கீகரித்து–

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மீனவப் பெண்களுக்குத் தனியாக மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கம் என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டு, நம்முடைய கன்னியாகுமரி

மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், தூத்துக்குடி மாவட்டம் போன்ற மாவட்டங்களில் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற நிவாரணத் தொகை கடந்த ஆட்சிக் காலத்தில் நிறுத்தி வைக்கப்பட்டது. நம்முடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இந்த ஆண்டிலிருந்து அந்த மீனவ மகளிர் நிவாரணத் தொகையை வழங்குகின்ற திட்டத்தினைத் தலைவர் கலைஞர் அவர்களின் அரசு அறிவித்திருக்கிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி, 20 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். உரையை நிறைவு செய்யுங்கள். இன்னும் 3 உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மீனவப் பெண்களையும் நல வாரியத்திலே இணைத்துக்கொள்வதற்கான நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப்பட வேண்டுமென்று உள்ளார்ந்த அரசியல் உணர்வோடு ஆளுநர் அறிக்கையிலே வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அதை நாங்களும் வலியுறுத்துவதோடு, தமிழக அரசு பெண்கள் ஆணையத்தை இன்றைக்கு நீங்கள் அமைத்து, அதற்கான தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமித்திருக்கிறீர்கள். இந்தப் பெண்கள் ஆணையத்திற்கான அதிகாரம் என்ன? இந்தப் பெண்கள் ஆணையம் எதை நோக்கமாகக் கொண்டு செயல்பட வேண்டும்? இதனுடைய வரைமுறைகள் என்ன என்பதை இந்தச் சட்டமன்றம் தீர்மானிக்கக்கூடிய வகையிலே அதற்கு ஒரு சட்ட அந்தஸ்து கொடுக்க வேண்டும். அதற்கு ஒரு சட்டமுன்வடிவைத் தமிழக அரசு உருவாக்கித் தர வேண்டும் என்பதைக் கடந்த காலத்திலும் வலியுறுத்தியிருக்கிறோம், இப்போதும் வலியுறுத்துகிறோம். ஆகவே, பெண்கள் ஆணையத்திற்கான சட்டத்தை உருவாக்கி, இந்தப் பெண்கள் ஆணையத்திற்கான அதிகாரத்தை நீங்கள் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, நம்முடைய உறுப்பினர் வேல்முருகன் அவர்கள் இங்கே கலாச்சாரத்தைப் பற்றி மிகக் கவலையோடு குறிப்பிட்டிருக்கிறார்கள்.



இத்தகைய கலாச்சாரம் மோசமான சூழ்நிலையிலே, புதிய கலாச்சாரத்தை உருவாக்குபவர்களாக நாம் இருக்க வேண்டியிருக்கிறது. குறிப்பாக, நம்முடைய செய்தித் துறை, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரசு விழாக்களிலே பொன்னாடைகளுக்குப் பதிலாக நூல்களை வழங்குகிறார்கள். இதை ஒரு நல்ல கலாச்சார நடவடிக்கையாக நான் பார்க்கின்றேன். தமிழர் திருநாளான பொங்கல் நாளை சமத்துவப் பொங்கலாக அரசாங்கம் அறிவித்திருப்பதை ஒரு நல்ல புதிய கலாச்சாரமாக நான் பார்க்கின்றேன். உள்ளாட்சித் தேர்தலிலே வன்முறை என்பது நடந்தது. அதை எதிர்த்து, அதற்கு நியாயம் வேண்டுமென்று எங்களுடைய மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நீதிமன்றத்திற்கு நாங்கள் சென்றோம். ஒரு நீதிபதி தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். அந்த நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு முழுமையும் வருவதற்கு முன்பாகவே ஏற்றுக்கொண்டு, 98 உறுப்பினர்களையும் இராஜிநாமாச் செய்ய வைத்திருக்கக்கூடிய அத்தகைய அரசியல் நேர்மைமிக்க தமிழக முதல்வர் அவர்களுடைய நடவடிக்கை என்பதும் அரசியலிலே ஒரு நல்ல பண்பாட்டை, நல்ல கலாச்சாரத்தை உருவாக்குகிறது என்ற முறையிலே அதற்கு மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய திண்டுக்கல் சட்டப் பேரவை உறுப்பினர் பேசுகின்றபோது, 40 ஆண்டு காலமாகத் தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கிய பட்டாவை வைத்து விவசாயம் செய்து வருகின்ற சிறுமலையிலே இருக்கின்ற விவசாயிகளைக் காலி செய்வதற்காக வனத் துறை கொடுத்திருக்கின்ற notice பற்றியும், அந்த notice-ன் அடிப்படையிலே அவர்கள் வெளியேற்றப்படக் கூடாது என்பதையும் இங்கே வலியுறுத்திச் சொன்னார்கள். ஏற்கெனவே பட்டா பெற்று அனுபோகத்தில் உள்ள நிலங்களை அவர்கள் தவறாகச் சுட்டிக்காட்டியிருக்கின்ற காரணத்தால், நம்முடைய வனத் துறைக்கு நாம் பதில் கொடுத்தவுடனே, நிச்சயம் அவர்கள் அந்த நிலத்தைக் கையகப்படுத்த முடியாது. பட்டா பெற்ற அனைத்து விவசாயிகளும் நிச்சயமாகத் தொடர்ந்து அந்த விவசாயத்தைச் செய்வார்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன். (குறுக்கீடு) முடித்துவிடுவோம். உட்காருங்கள் கொஞ்ச நேரம்.

[2007 ஜனவரி 22

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** திரு. சௌந்திரபாண்டியன், ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இங்கே கூறுகிறபோது, சிறுமலையிலே இருக்கக்கூடிய அந்தக் காட்டுப் பகுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கிற பட்டா கொடுத்தவர்களைக் காலி செய்யவிருப்பதாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி குறிப்பிட்ட நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே 1996—லேகூட, அதற்கு முன்னாலே அந்த சிறுமலைப் பகுதியிலே இருக்கக்கூடியவர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டு, ஏற்கெனவே அவர்கள் சுவாதீனத்தில் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை காலி செய்யச் சொல்லி வனத் துறை பல ஆண்டு காலமாக notice கொடுத்தபோது, இதே மன்றத்தில், அப்போதிருந்த வருவாய்த் துறை அமைச்சர் அதற்காக உறுதிமொழி கொடுத்து, உறுதிமொழிக் குழுவிற்குக்கூட பரிந்துரை செய்திருக்கிறோம். அப்படி இருந்தும்கூட, அங்கு இருக்கக்கூடிய அந்த மலைவாழ் மக்களுக்கு இன்னும் ஒரு நிலையான வாழ்வு கிட்டாமல் இருந்துகொண்டிருக்கின்றது. வனத் துறைக்கு இதிலே எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. ஏற்கெனவே பட்டா கொடுத்தாகிவிட்டது. தவறான ஒரு கணக்கைக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, வருவாய்த் துறை அமைச்சரே இதற்கொரு முடிவு கொடுத்து, நிச்சயமாகத் தொடர்ந்து அந்த மலைவாழ் மக்கள் அந்தப் பட்டா நிலங்களை அனுபவிப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

பிற்பகல்: 1–05

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நம்முடைய வனத் துறை, ஏற்கெனவே பட்டா கொடுத்த நிலங்களில் அவர்கள் தேவை என்று சொல்லி, சில சர்வே நம்பர்களைச் சொல்லியிருக்கிறார்கள். பட்டா கொடுத்த நம்பரையும் சேர்த்துக் கொடுத்திருக்கிறார்கள். அப்படிக் கொடுத்தவுடனே, ஏற்கெனவே விவசாயம் செய்து வருகின்ற விவசாயிகள், அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற அந்த சர்வே எண்,



2007 ஜனவரி 22] [திரு. இ. பெரியசாமி]

புல எண் எல்லாம் தவறானது. ஆகவே, இதிலிருந்து நீக்கம் செய்ய வேண்டும் என்று நாம் அந்த நேரத்திலேயே பதில் சொல்வதற்கு ஒரு விதி எண் இருக்கிறது 17 என்று நினைக்கிறேன். அந்த விதியின்படி நாம் மனுச் செய்தோம் என்றால், நிச்சயமாக கண்டிப்பாக வனத் துறை ஏற்றுக்கொள்ள வேண்டும். நீதிமன்றத்தைச் சுட்டிக்காட்டுகிறார்கள். ஏனென்றால், உங்களுக்குத் தெரியும்; வனத் துறை—Reserve forest—ல் ஏற்கெனவே நீதிமன்றம் சொன்ன தீர்ப்பின்படி, சில புல எண்கள் எல்லாம் தவறாகச் சேர்க்கப்பட்டு இருக்கிறது. வனத் துறையால் அந்த Reserve forest—னுடைய notification-ல் தவறாகச் சேர்க்கப்பட்டிருக்கின்ற புல எண்கள் அத்தனையுமே கண்டிப்பாகத் தலைவர் கலைஞர் ஆட்சியிலே விடுவிக்கப்படும். அதில் எந்தச் சந்தேகமும் வேண்டியதில்லை, விடுவித்துக் கொடுத்துவிடுகிறோம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன்.

***திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, ஐயா பெரியார் திடல் இருக்கும் திசை நோக்கி என் உரையைத் தொடங்குகிறேன். என்னையும் இம்மாமன்றத்திற்கு அழைத்து வரக் காரணமான என்மனச் செயலாளர் முரசொலி நாளிதழுக்கும், அதன் நிறுவனத் தலைவர், வாழும் வள்ளுவராய், பெரியாராய், அம்பேத்கராய், அண்ணாவாய், காமராஜராய், வாழும் தலைமுறைக்கும், வாழ இருக்கின்ற நாளைய சந்ததியினருக்கும் நல வழி காட்டும் வரலாற்றுத் தலைவரை, நம் முதல்வரை வணங்குகிறேன். வீறு பாய்ச்சும் விரிவுரையாளர்களை வித்திட்ட இனமானப் பேராசிரியரை வணங்குகிறேன். என் வெற்றிக்காகக் கடந்த ஏப்ரல் திங்கள் 25 ஆம் நாள் காலை முதல் மாலை வரை உணவின்றி ஓயாது உழைத்து, உழைப்பிற்கே புதியதோர் இலக்கணம் வகுத்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதியார் அவர்களை வணங்குகிறேன். என் அரசியல் களப் பணிக்கு உதவிய இரு மாவட்டச் செயலாளர்கள், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அண்ணன் கா. ராமச்சந்திரன் அவர்களுக்கும், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அண்ணன் பொங்கலூர் நா. பழனிசாமி அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். என் வெற்றிக்கு அயராது பாடுபட்ட கழக உடன்பிறப்புக்களுக்கும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில் இடம் பெற்ற அனைத்துக் கட்சி நிர்வாகிகளுக்கும் என் நன்றியைச் சமர்ப்பிக்கிறேன். ஜனநாயகத்தின் எஜமானர்களான என் குன்னூர் தொகுதிவாழ் வாக்காளப் பொது மக்கள் அனைவருக்கும் என் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

[திரு. அ. சௌந்திரபாண்டியன்] [2007 ஜனவரி 22

வரலாற்றில் கூற்று ஒன்று கூறுவார்கள், ஐயா பெரியார் பற்றி. 200 ஆண்டுகளில் செய்தற்கரிய சாதனைகளை 20 ஆண்டுகளில் சாதித்ததாகக் கூறுவார்கள். கடந்த 20 ஆம் தேதிய மேதகு ஆளுநரின் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நன்றி கூறும் அதே வேளையில், ஐயா வழி வந்த இவ்வரசு 5—வது முறையாகப் பதவியேற்று இன்றோடு 254 நாட்கள் ஆகின்றன, நான்காவது கூட்டத் தொடர். ஆனால், அரசு ஆற்றிய மக்கள் நலத் திட்டப் பணிகளோ 200 ஆண்டுகளுக்குத் தேவையான பணிகள் என்றால், அது மிகையாகாது.

'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்ற தாரக மந்திரம் மட்டுமல்லாது, நாளைய தலைமுறைக்கு நல்ல வலிவும், நம்பிக்கையும், உண்மையும் உலகுக்கு வார்க்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில், ஐந்தாம் தலைமுறைக்கு வழிகாட்டியாகவும், எதிர் வரும் தலைமுறைக்கும் நல்லெண்ணத்தை ஊட்டும் வகையிலும் உருவாக்கிய அந்த இரு சொற்களையும், நாட்டு மக்களிடத்தில் வளர்த்துக்கொண்டு, நம்பிக்கையைப் பெறுகின்ற ஒரு நல்ல அரசியல் தேர்தல் அறிக்கை மட்டுமல்லாது, அவற்றையெல்லாம் இன்றைக்கு நடைமுறைப்படுத்தி, நாட்டு மக்களை வலுவூட்டிக் கொண்டிருக்கின்ற கழக அரசின் சாதனைகளை இன்று நாடும், ஏடும் பாராட்டுகின்ற அதே வேளையில், இதே கழகத்தின் தோற்றத்தால் அடித்தட்டு மக்களுக்கும், சாமானியர்களுக்கும் ஜனநாயகம் கிடைக்க வேண்டும் என்ற சரித்திர சிந்தனைகளை உள்ளடக்கிய தோற்றத்தால் கழகம் உருவானது என்ற வரலாற்றை மீண்டும், மீண்டும் நினைவூட்டி, அரியணை ஏறும்போதெல்லாம் அடித்தட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளை வலியுறுத்தி, சட்டத்தின் வாயிலாக மக்களுக்குப் பல்வேறு நலன்களை உருவாக்குகின்ற தலைவரின் கழக அரசின் சாதனைகளை நாடும், ஏடும் பாராட்டுகின்ற அதே வேளையில், மத்திய, மாநில அரசுகளானாலும் சரி, பேரறிஞர் வழியில் சொல்ல வேண்டும் என்று சொன்னால், தோளோடு தோள் சேர்ந்து பணியாற்ற முடியாது, கை கோர்த்துப் பணியாற்றலாம் என்ற இலக்கணத்திற்கு இலக்கணமாக இன்றைக்குக் கூட்டாட்சித் தத்துவத்திற்கு ஏற்றாற்போல், தமிழ்நாட்டு மக்களின் நலன் கருதி, மத்திய அரசிடமிருந்து பெற வேண்டிய நிதியைப் பெற்று, மக்கள் நலனில் அக்கறை கொண்டு, பல்வேறு நலத் திட்டங்களை வழங்கி வருகின்றது இந்த அரசு.

பிற்பகல் 1—10

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், நாட்டில் கல்லாமையை, இல்லாமையை அகற்றுவதற்கு, அடிப்படைத் தேவைகளை



2007 ஜனவரி 22] [திரு. அ. சௌந்திரபாண்டியன்]

நிறைவேற்றுவதற்கு சமூகப் பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படுத்துவதற்காகவே உருவாக்கப்பட்ட இயக்கம், உருவாக்கப்பட்ட தலைவர் என்பதை மீண்டும், மீண்டும் தலைமுறைகளுக்கு எடுத்து வைத்துக்கொண்டு, தான் கொண்டிருக்கின்ற கொள்கையிலும், இலட்சியத்திலும் இயன்ற வரையிலும் போராடி, இந்த நாட்டிற்கு இன்று வரையில் நல்ல பல காரியங்களைச் செய்துகொண்டிருக்கின்றதை நாடும், ஏடும் பாராட்டுகின்றன.

அதே வேளையில், என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், தமிழகத்தில், 40, 50 ஆண்டுகளுக்கு முன்பாகப் பஞ்சம் பிழைக்கப் போன தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகம் வாழ்கின்ற பகுதி குன்னூர் தொகுதி. பல்வேறு மாவட்டங்களிலிருந்து நீலகிரி மாவட்டத்திற்கு வந்து, குடி வந்தவர்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் அங்கே எப்படியிருக்கிறது என்று சொன்னால், இன்னும் குடியிருக்கும் வீடுகள் கேள்விக்குறியாகவும், தேயிலைத் தோட்டத் தொழிலாளிகளின் ஊதியம் கேள்விக்குறியாகவே இருந்துகொண்டிருக்கின்றது என்பதையும் தலைவர் அவர்களிடத்தில் பல்வேறு முறை அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். மேலும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக அவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றபோதிலும், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு, நிரந்தரத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் என்கின்ற காரணத்தினால் மறுக்கப்படுகிறது. இதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மேலும், அப்பகுதியைப் பொறுத்தவரையில், சமீபத்தில் ஏற்பட்ட இயற்கைச் சீற்றத்தால் ஏற்பட்ட சாலைப் பாதிப்பானது சரி செய்யப்பட்டு, மீண்டும் வாகனப் போக்குவரத்து நடைபெற்றுக்கொண்டிருந்தாலும், அது தற்காலிகமான ஒன்றாகத்தான் காட்சியளிக்கிறது. காரணம், சில பகுதிகளில் அடுத்து மழை பெய்தால் மட்டுமே அதை ஊர்ஜிதம் செய்யும் அளவிற்கு இருக்கிற காரணத்தால், உரிய அதிகாரிகளை வைத்து, ஆய்வு செய்து, குன்னூருக்கு மாற்று வழிப் பாதை ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதையும் எடுத்துக் கூறக் கடமைப்பட்டுள்ளேன். மேட்டுப்பாளையத்திலிருந்து கோத்தகிரி செல்லும் சாலையில், மலைப் பிரதேசம் என்கின்ற காரணத்தினால், இடையில் வாகனங்களை நிறுத்தி, பொது மக்கள் தங்கள் இயற்கை உபாதைகளுக்கு வழி காண்கிறார்கள். அவர்கள் சிற்றுண்டி அருந்துவதற்கு வசதியும், கழிப்பிட வசதியும் செய்து தர அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இரண்டே தொழில்கள். ஒன்று தேயிலைத் தோட்டத் தொழில், மற்றொன்று சுற்றுலா

என்றுதான் கூற வேண்டும். Industry என்று எடுத்துக்கொண்டாலே, சுற்றுலா என்றுதான் கூற வேண்டும். ஆகவே, சுற்றுலாவிற்கு எந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோமோ, அதைப் பொறுத்துத்தான் அந்த மலை மாவட்டத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வழிவகுக்க முடியும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். குறிஞ்சி மலர் தபால் தலை வெளியிட்டு விழாவிற்கு வருகை தந்த மாண்புமிகு மத்திய அமைச்சர், சுற்றுலாத் தலத்தினை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்கி வந்தார். அந்த ஆலோசனைகள் படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இருப்பினும், இன்னும் விரைவுபடுத்த வேண்டும்; முனைப்புடன் செயல்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் ஊதியம். தேயிலைத் தொழிற்சாலை. கீழ்கோத்தகிரி பகுதியில் INDCO Tea Factory ஏழையாக கிட்டத்தட்ட 100 தொழிலாளர்கள் பயன்பெற்று வந்தார்கள். அந்தத் தொழிற்சாலை தற்போது இயங்காத நிலையில் இருக்கின்றது என்பதையும் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். என் தொகுதி மக்களுக்கு இருக்கின்ற ஒரே தொழில் தேயிலைத் தொழிற்சாலை என்பதையும் கூறிக்கொள்கின்றேன்.

அதேபோன்று, சுற்றுலாத் தலங்களில் பக்காசுரன் மலை என்று உள்ளது. நாகரிகம், கலாச்சாரம், பண்பாடுகளைப் பாதுகாக்கின்ற நமது அரசு, பக்காசுரன் பெயரில் உள்ள மலைக்கு, சுற்றுலாத் தலத்திற்குச் செல்வதற்கு சாலை வசதியையும் சீர் செய்ய வேண்டுமென்பதையும் எடுத்துக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும், பல்வேறு அடிப்படைத் தேவைகளையே பார்க்காத தமிழகத்தின் உயர்ந்த இடத்தில் இருக்கின்ற குன்னூர் தொகுதியில், இன்னும் தாழ்த்தப்பட்ட மக்கள் தாழ்ந்த நிலையில்தான் இருக்கிறார்கள் என்பதையும் எடுத்துக் கூறிக்கொள்கிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அந்தப் பகுதி மக்களுக்கு இலவச வீடு கட்டுவதற்கு, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் என்கிற ஒரே காரணத்தால், அவர்களுக்கு மறுக்கப்படுகிறது. அதற்கு விதிவிலக்கு வழங்கி, அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்கள்.



**திரு. தி. இராமசாமி:** பேரவைத் தலைவர் பொறுப்பில் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் வேல்முருகன் அவர்களே...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** மாற்றுத் தலைவர் என்று பதிவு செய்யுங்கள்.

**திரு. தி. இராமசாமி:** மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் ஆளுநர் உரையின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கருத்துகளை எடுத்து வைப்பதற்கு அனுமதி வழங்கியதற்கு முதலில் நன்றி கூறிக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–15

பொங்கல் என்றாலே இனிப்பு. அதை நமது முதல்வர் கலைஞர் அவர்கள் சமத்துவ, சகோதரப் பொங்கலாக அறிவித்து, தித்திக்கும் பொங்கலாக, தமிழர் திருநாளையும், உழவர் திருநாளையும் தமிழ் மக்கள் பரவசத்துடன் கொண்டாடுகின்ற முறையில், இன்றைக்குத் தமிழர்கள் அனைவரும் சமம் என்ற உணர்வையும், கிராமங்களில் ஒற்றுமை மேலும் வலுப் பெறவும், இந்தப் பொங்கல் அரசு விழாவாக அறிவிக்கப்பட்டு, சிறப்பாக நடந்திருக்கிறது. அதற்கு முதல்வர் அவர்களுக்கு முதலில் நன்றி சொல்ல வேண்டும்.

கலைஞர் ஆட்சிக்கு வந்தால் கண்மாய்கள் பெருகாது, பூமி விளையாது என்று உண்மைக்குப் புறம்பாகப் பிரச்சாரம் செய்து வருகின்ற கூட்டம் தமிழகத்தில் ஒரு பகுதியில் இருந்தாலும், நாடு செழித்து, நிரம்பாத கண்மாய்கள் எல்லாம் நிரம்பி, விளையாத நிலங்களில் எல்லாம் விவசாயம் நடந்து, எங்கும் பசுமையும், மகசூலும் நிரம்பி, இன்றைக்குத் தமிழக மக்கள் மனதில் எல்லாம் இனிமை பொங்கிக்கொண்டிருக்கிறது.

இந்த கவர்னர் உரையை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் வரவேற்பதோடு, இந்திய பிரதமருடைய P.U.R.A. திட்டத்தை இந்த கவர்னர் உரையில் நாங்கள் காண முடிகிறது. கிராமப்புறச் சாலைகள் இணைப்பு, தகவல் தொழில்நுட்பம் இணைப்பு, கிராமப்புற விவசாயத்தை ஒட்டிய விளைபொருட்களைக் கொண்டு கிராமப்புறத் தொழில் தொடங்குதல், அதன்மூலம் கிராமப்புற வளர்ச்சி என்ற இந்தியப் பிரதமருடைய அந்த P.U.R.A. திட்டம் இந்த கவர்னர் உரையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கிராமங்களுக்கு எல்லாம் இணைப்புச் சாலைகள், கிராமப் பள்ளிகளுக்கு எல்லாம் கணினி, அதன்மூலம் தகவல் தொழில்நுட்பம்; அதேபோல, விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு தொழில்கள

தொடங்குவது, அப்படிப்பட்ட தொழில்களைத் தொடங்குவதன் மூலம் இன்றைக்குக் கிராமப்புறத்தினுடைய வளர்ச்சியை நகர்ப்புறங்களோடு இணைப்பது, நகர்ப்புறங்களுக்கு இணையாக ஒரு கிராமப்புற வளர்ச்சியைக் கொண்டு வருவது என்ற உயர்ந்த இலட்சிய நோக்காக ஒரு திட்டம் இந்த கவர்னர் உரையில் அரசினுடைய கொள்கையாகக் காணப்படுகிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக 1950 ஜனவரி 26—ல் இந்திய நாட்டினுடைய அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது. பல பெரியோர்கள், அறிவார்ந்த பெருமக்கள் இருந்து உருவான அரசியல் சட்டம்; அந்தச் சட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட முறையில் திருத்தங்கள் வந்திருக்கின்றன. ஆனால், எத்தனை திருத்தங்கள் வந்தாலும், அந்தச் சட்டம் இன்றைக்குப் புதிதாக எழுதப்பட வேண்டுமென்ற கோரிக்கை நமது தமிழகச் சட்டமன்றத்தின்மூலம் மத்திய அரசுக்குச் செல்வது என்பது, சரியான நேரத்தில், காலப் பொருத்தமாக எடுக்கப்பட்ட ஒரு திட்டமாகும்.

சட்டம் இயற்றுகின்ற அதிகாரம் படைத்தவை சட்டமன்றம், பாராளுமன்றம்; இந்தச் சட்டமன்றமும், பாராளுமன்றமும், இந்த நாட்டினுடைய அரசியல் சட்டமும் நிறைவேற்றிய சட்டங்கள் சரியான முறையில் அமல் நடத்தப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க வேண்டிய பொறுப்பானது நீதிமன்றம். ஆனால், நீதிமன்றங்கள் தங்கள் விருப்பத்தைத் தீர்ப்பாகச் சொல்லி, அதனால் இந்திய நாட்டினுடைய ஒற்றுமைக்கும், இறையாண்மைக்கும் பாதிப்பு ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலை படிப்படியாக உருவாகிக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில், சில நேரங்களில் அரசியல் சட்டத்திற்கு அப்பாற்பட்ட முறையில் தீர்ப்புகளை வழங்கி, அரசியல் சட்டத்திற்கும் தாங்கள் அப்பாற்பட்டவர்கள்போல தங்களைக் காட்டிக்கொள்ள முயலும் நீதிமன்றம்.

உதாரணத்திற்கு, இந்திய நாடு ஒரு சமஷ்டிக் குடியாக, மாநிலங்களுடைய உரிமைகள் மதிக்கப்பட்டு, அதன் மூலம் வேற்றுமையில் ஒற்றுமை காண்கின்ற இந்திய நாட்டில், இன்றைக்கு ஒவ்வொரு மாநிலத்தினுடைய தேவைகளையொட்டிப் பல்வேறு திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக, தமிழகத்தில் தொடக்க காலந்தொட்டுப் பேசப்பட்டு வந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கை, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திலிருந்து தொடங்கி, இன்றைக்கு இட ஒதுக்கீட்டுக் கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, இந்திய நாட்டில் எந்த மாநிலத்திலும் இல்லாத





அளவிற்கு 69 சதவீத இட ஒதுக்கீடு என்பது தமிழகத்தில் அமல் நடத்தப்பட்டு, அந்த 69 சதவீத இட ஒதுக்கீட்டுக்குக் குந்தகம் வந்துவிடக் கூடாது என்பதற்காக அரசியல் சட்டத்தினுடைய ஒன்பதாவது அட்டவணையில் போராடிச் சேர்த்து இன்றைக்கு அது அமலில் இருந்துகொண்டிருக்கிறது. அந்த அரசியல் சட்டத்தினுடைய ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்கப்பட்ட இட ஒதுக்கீடு போன்ற கொள்கைகளைக்கூட, நீதிமன்றம் விவாதத்துக்கு உட்பட்டவை என்று இன்றைக்குச் சொல்கின்ற ஒரு நிலை வந்திருக்கிறது என்று சொன்னால், இந்திய நாட்டினுடைய இறையாண்மை, கூட்டாட்சித் தத்துவத்தையே சிதைக்கின்ற ஒரு நிலைமை நீதிமன்றங்கள் மூலமாக இன்றைக்கு வந்துகொண்டிருக்கின்றன.

*பிற்பகல் 1—20*

தமிழ்நாடு போன்ற மாநிலங்கள், இந்தி பேசாத மாநிலங்களில் நேருவினுடைய உறுதிமொழி பாதுகாக்கப்பட வேண்டும்; அந்த நேருவினுடைய உறுதிமொழியும் அரசியல் சட்டத்தில் ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வந்த இந்தக் காலத்தில், ஒன்பதாவது அட்டவணையே கேள்விக்குறியாகின்ற ஒரு நிலையில், நேருவின் உறுதிமொழியும் ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை இன்றைக்கு நீர்த்துப் போய்க்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில், இந்திய நாட்டினுடைய அரசியல் சட்டம் புதிதாக எழுதப்பட வேண்டும். இந்தியாவினுடைய கூட்டாட்சித் தத்துவம் முறையாகப் பாதுகாக்கப்பட வேண்டும். வேற்றுமையில் ஒற்றுமை கண்டுகொண்டு வந்திருக்கிற இந்திய நாட்டில் தொடர்ச்சியாக ஒற்றுமை நிலைநாட்டப்பட வேண்டும். அதையேதான் இன்றைக்கு நதி நீர் இணைப்பு சம்பந்தமாகவும்—நதி நீர் இணைப்பு என்பது குறித்து பாரதி அவர்கள்

**“வங்கத்தி லோடிவரும் நீரின் மிகையால்**
**மையத்து நாடுகளிற் பயிர்செய் குவோம்”**

என்று பாடினார்கள். அந்த நதி நீரை இணைப்பதற்கு இன்றைக்கு ஐக்கிய ஜனநாயக முற்போக்குக் கூட்டணி ஆட்சியினுடைய செயல் திட்டத்தில் நதிகள் இணைக்கப்படும் என, இணைப்பதற்கான செயல் திட்டம் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த ஒப்புக்கொள்ளப்பட்ட அந்தச் செயல் திட்டத்தை விரைவாக, தாராளமாக நிதி ஒதுக்கீடு செய்து அமல் நடத்த வேண்டுமென்ற கோரிக்கை கவர்னர் உரையிலே வந்திருக்கிறது.

அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இரயில்கள் எல்லாம் மாநிலம் விட்டு மாநிலம் சென்றுகொண்டிருக்கின்றன; அதேபோல, நதிகள் எல்லாம் இன்றைக்கு மாநிலம் விட்டு மாநிலம் சென்றுகொண்டிருக்கின்றன; அப்படிப்பட்ட நிலையில், இரயில்கள் மத்திய அரசின் பொறுப்பில் இருக்கின்றன; நதிகள் மத்திய அரசின் பொறுப்பிற்கு வரக் கூடாது என்று வாதிட்டிருக்கிறார்கள். எனவே, நதிகள் இணைப்புதான் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தற்போது தீர்வாக அமைந்துகொண்டிருக்கின்றது. குறிப்பாக, தமிழகத்தைப் பொறுத்தவரை, இன்றைக்கு மற்ற மாநிலங்களிலிருந்து நதி நீரைப் பெறுகின்ற நிலையில்தான் தமிழகம் இருந்துகொண்டிருக்கிறது. இன்றைக்குக்கூட நமது தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் விழாவிலே பேசியிருக்கிறார்கள். 'தீபகற்பத்தில் இருக்கின்ற மான் போன்று இன்றைக்குத் தமிழகம் தண்ணீர்ப் பிரச்சினையில் இருந்துகொண்டிருக்கிறது' என்று சொன்னார். எனவே, பக்கத்து மாநிலங்களிலிருந்து நாம் நதி நீரைப் பெற வேண்டியிருக்கிறது. இன்றைக்குக் கொடுக்கின்ற அனைத்து மாநிலங்களிலும் பிரச்சினைகள் தொடர்ந்துகொண்டிருக்கின்றன. அது கிருஷ்ணா நதி நீராக இருந்தாலும் சரி, முல்லைப் பெரியாறு அணை நீராக இருந்தாலும் சரி அல்லது நமக்குக் கிடைக்க வேண்டிய உரிமை, காவிரி நீராக இருந்தாலும் சரி, அந்த அனைத்துப் பிரச்சினைகளுமே தற்பொழுது ஒரு சிக்கலான நிலையை வகுத்துக்கொண்டிருக்கின்றன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

நதிகள் இணைப்பு என்பது இன்றைக்குக் காலத்தினுடைய அவசியம். அதை ஏற்கெனவே ஐக்கிய முன்னணியினுடைய செயல் திட்டத்தில் மத்திய அரசு ஏற்றுக்கொண்டு, அதை அமல் நடத்துவதில் காலதாமதம் செய்து வந்த நேரத்தில், அதை விரைவுபடுத்த வேண்டும்; அதற்கான நிதியை உடனடியாக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று மாநிலங்களின் சார்பில், இந்தச் சட்டமன்றத்தின் சார்பில், அரசினுடைய கொள்கையாக மத்திய அரசுக்குத் தெரிவிப்பது என்பதை ஒரு சாலப் பொருத்தமான நிகழ்ச்சியாக இன்றைக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

அதேபோலத்தான், பொங்கலுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கப்பட்டன. இலவச வேட்டி, சேலை என்பது நெசவாளிக்கு வேலைவாய்ப்பு; கிராமப்புறத்தில் இருக்கின்ற ஏழைகளுக்கு ஒரு உதவி என்ற அடிப்படையில், இலவச வேட்டி, சேலை வழங்கப்பட்டு வந்தன. கடந்த காலத்தில் அது நிறுத்தப்பட்டது. இந்தப் பொங்கலுக்கு, புத்தாண்டு தினமே தொடங்கி பொங்கல் வரை, எந்தவிதமான ஒரு பாகுபாடு



இல்லாமல் இந்த இலவச வேட்டி, சேலை என்பது கிடைத்திருப்பது ஒரு மகிழ்ச்சிக்குரிய விஷயம். இந்த வேட்டி, சேலையை நெய்து கொடுத்த அந்த நெசவாளர்களுடைய வேலைவாய்ப்பு இன்றைக்கு உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், அதே சமயத்தில், அந்த நெசவாளர்களுக்குக் கடந்த 5 ஆண்டு காலமாகக் கூலி உயர்வு என்பது வழங்கப்படவில்லை. அரசு நிர்ணயித்திருக்கின்ற ஒரு குறைந்தபட்சக் கூலியினுடைய பாதி அளவுக் கூலிகூட இந்த நெசவாளர் மக்களுக்குக் கிடைக்கவில்லை. எனவே, நெசவாளர்களுக்குக் கூலி உயர்வு அளிக்கப்பட வேண்டும்.

பிற்பகல் 1—25

அதேபோல, நெசவாளர்களுக்காகத் தொடங்கப்பட்ட கூட்டுறவு நூற்பாலைகளைச் சரிவர இயக்க வேண்டும். குறிப்பாக, ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நெசவாளர்களுக்காகத் தொடங்கப்பட்ட நூற்பாலையை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முதியோர்களுக்கு வழங்கப்படுகின்ற பென்ஷன் ரூ.400—ஐப்போல, நெசவாளர்களுக்கும் அந்தத் தொகையான ரூ.400 வழங்கப்பட வேண்டும்.

அதேபோல, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் அளிக்கப்பட்டிருப்பதுபோன்று, நெசவாளர்களுக்கும் இலவச மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அது வரவேற்கக்கூடிய ஒன்று. ஆனால், இப்பொழுது நெசவாளர்கள் குடியிருக்கின்ற வீடுகளில், அவர்கள் எந்த வீடுகளில், எந்த இடத்திலிருந்து தொழில் செய்கின்றார்களோ, அங்கு அவர்களுக்கு அந்த இலவச மின்சாரம் வழங்கப்படுமா? பெயர் மாற்றம், இன்னும் பல்வேறு காரணங்களைச் சொல்லி, அந்த மின்சாரம் வழங்குவது தற்பொழுது தடைப்பட்டுக்கொண்டிருக்கிறது. எனவே, அரசினுடைய அந்தத் திட்டங்கள், சலுகைகள், அப்படிப் பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு, எளிய முறையில் முறையாகச் சென்றடைவதற்கு நாம் வழிவகுக்க வேண்டும்.

அதேபோல, எங்கள் விருதுநகர் மாவட்டத்தைப் பொறுத்தவரை, ஏற்கெனவே பின்தங்கிய மாவட்டம். இன்றைக்கு அந்த மாவட்டத்தில், அரசின் சார்பில் தொழிற்சாலைகள் என்பவை பெருமளவில் இல்லை. தமிழ்நாடு கடந்த கால கலைஞர் ஆட்சியில் சிறப்பாகத் தொடங்கப்பட்ட தமிழ்நாடு சிமெண்ட் ஆலை ஆலங்குளத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்த ஆலை நவீனப்படுத்தப்பட வேண்டிய ஆலையாக இருந்து கொண்டிருக்கிறது. அதை நவீனப்படுத்தி, அந்த ஆலையை மேம்படுத்தி இலாபகரமாக இயக்க முடியும். அந்தப் பகுதியில் உள்ள சுமார்

[திரு. தி. இராமசாமி] [2007 ஜனவரி 22

20 கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பையும், சுமார் 2 ஆயிரம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பையும் கொடுத்துக்கொண்டிருக்கின்ற ஆலங்குளம் சிமென்ட் ஆலை நவீனப்படுத்தப்பட வேண்டும்.

அதேபோல, எங்கள் தொகுதியான ஸ்ரீவில்லிபுத்தூரில், அழகர் அணைத் திட்டம் என்பது கடந்த 50 ஆண்டு காலமாக, இந்தச் சட்டமன்றத்தில் யார், யாரெல்லாம் அந்தத் தொகுதியின் சார்பாக உறுப்பினராக வருகிறார்களோ, அவர்களெல்லாம் எழுப்பியிருக்கின்ற கோரிக்கை; அந்தத் தொகுதி மக்களுடைய கோரிக்கை. அந்த அழகர் மலை அடிவாரத்தில், பேயனாற்றுப் படுகையில், அந்த அழகர் அணைத் திட்டத்தை நிறைவேற்றுவதன்மூலம், ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதி செழிப்படைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, அழகர் அணைத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும்.

அதேபோல, எங்களுடைய விருதுநகர் மாவட்டத்தைப் பொறுத்தவரை, விருதுநகர் மாவட்டத்தில் இருக்கின்ற அத்தனை நகரங்களுக்கும், நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின்மூலமாக, அவர்களின் பெருமுயற்சியில், சாத்தூர், அருப்புக்கோட்டை, விருதுநகர், சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் ஆகிய அனைத்து நகரங்களுக்கும் தாமிரபரணியின்மூலமாகக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் அமல் நடத்தப்படுகின்றன. ஒரே பகுதி, தண்ணீர்த் தேவைக்காக, குடிதண்ணீருக்காகக் காத்திருக்கின்ற ஒரே ஒன்றியம், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதிக்குட்பட்ட வத்திராயிருப்பு ஒன்றியம். அந்த வத்திராயிருப்பு ஒன்றியத்தில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வேண்டும். Bore போடுகின்ற இடங்களில் எல்லாம் முழுவதும் உப்புத் தண்ணீராக வெளிவந்து கொண்டிருக்கின்றது. நல்ல தண்ணீர் அந்தப் பகுதி மக்களுடைய தேவையாக இருக்கிறது. அங்கே ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அமல் நடத்துவதற்கான முயற்சி உடனடித் தேவையாக இருக்கிறது.

அதேபோல, எங்கள் விருதுநகர் மாவட்டத்தையும், தேனி மாவட்டத்தையும் இணைக்கின்ற முறையில், ராஜபாளையத்திலிருந்து தேனிக்கு, வருஷநாடு மலைப் பாதை வழியாகச் சாலை வசதி வேண்டும். அவ்வாறு ராஜபாளையம், தேனி, வத்திராயிருப்பு, வருஷநாடு வழியாக அந்த மலைப் பாதை ஏற்பட்டால், கிட்டத்தட்ட 40 கிலோ மீட்டர் தூரம் குறைகிறது. அந்தப் பகுதி விவசாய ரீதியாகவும், தொழில் ரீதியாகவும் முன்னேறுவதற்கு வாய்ப்பிருக்கிறது. அந்த ஐந்து கிலோ மீட்டர் மலை...



2007 ஜனவரி 22] பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. இராமசாமி, உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. தி. இராமசாமி:** அந்த ஐந்து கிலோ மீட்டர் மலைப் பாதையில் பெரிய மரங்களோ அல்லது பெரிய பாறைகளோ அல்லது வனத்திற்குப் பாதிப்பு ஏற்படக்கூடிய நிகழ்ச்சிகளோ எவையுமே இல்லை. எனவே, அந்தப் பாதையை அமைப்பதற்கான முயற்சியை உடனடியாகச் செய்ய வேண்டும்.

அதேபோல, வட்டக் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் வீடுகள் கட்டுவதற்கு ஏழைகளுக்குக் கடன் வழங்கப்பட்டது. அந்தக் கடன்களை எல்லாம் அந்த ஏழை மக்களால் கட்ட முடியவில்லை. எனவே, வீடு கட்டக் கடன் வழங்கும் வட்டக் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் இப்பொழுது செயல்படாமல் நலிவுற்றுக் கிடக்கின்றன. எனவே, வட்டக் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் ஏழைகள் வீடுகள் கட்டுவதற்காக வாங்கிய அந்தக் கடனை இரத்துச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, இந்த ஆளுநர் உரை என்பது அரசினுடைய கொள்கையாக, தெளிவாக வந்திருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்று உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (23–1–2007) செவ்வாய்க்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 10 ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கி, பெரம்பலூர் மாவட்ட ஊராட்சியினை அமைத்துள்ளது குறித்து 28-8-2006 ஆம் நாளிட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி1) துறையின் 101 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

[2007 ஜனவரி 22

2. 1993–1994 ஆம் ஆண்டில் பொள்ளாச்சி, திருவாளர்கள் சக்திவேலு பாலிபேக் நிறுவனம் விற்பனை செய்த HDPE ஓவன் ஃபேப்ரிக்ஸ்மீது செலுத்தத்தக்க வரியினைத் தள்ளுபடி செய்தது குறித்து 13-9-2006 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (டி2) துறையின் 110 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

3. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின் விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

4. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முன்னாள் படை வீரர்கள் கழகத்தின் இருபத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரையாற்றும்போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

2. 2007 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 20 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)



## இணைப்பு

*(16 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

**Hon'ble Members of the Legislative Assembly,**

Vanakkam. I convey my hearty New Year greetings to all of you at the commencement of the fourth session of the Thirteenth Legislative Assembly and begin this address with the hope that during 2007, the standard of living of our people will improve as the State's economy marches ahead thanks to this Government's exemplary schemes.

2. You are all aware that the promise of this Government, "We will do what we say, we will say what we do," has been fulfilled within eight months after assumption of office, by ensuring that the DMK's election manifesto, which had incorporated all the expectations of the people of Tamil Nadu has been translated into this Government's first Budget.

3. After a long gap, this Government held the first elections to the Local Bodies during 1996 and also provided 33% reservation for women in these Bodies. This Government's record of restoring the rights, denied to Adi Dravidars in Pappapatti, Keeripatti, Nattarmangalam and Kottakatchiyendal Village Panchayats during that election as well as the subsequent election in 2001, during the recent elections in 2006, thus paving the way for all communities to march forward harmoniously in the path of development, deserves to be engraved in gold in the annals of democracy. This is not only a victory for democracy but also a victory for the voice given by all political parties in the struggle for social justice.

4. This Government, holding Arignar Anna's principle of State autonomy close to its heart, while voicing its demand for rights and at the same time extending a hand of friendship, shall endeavour to secure the due rights and benefits for our State from the Union Government.

5. Even 40 years back, Arignar Anna, in his maiden speech in Rajya Sabha had observed, "Stalwarts of this country sat and devised our Constitution. But the time has come for rethinking, reappraisal and revaluation". Leaders of several political parties and eminent jurists have since been emphasizing the need for rewriting the Constitution of India. It is true that our Constitution was framed by great men of letters who created history like Dr. Ambedkar, in the context of our country having secured independence from foreign yoke as a result of

freedom struggle. However, about 100 amendments have since been made so far, to take care of the emerging unavoidable needs. In the evolution of mankind, change is inevitable. In several countries, the Constitutions have been rewritten many a time. In the last 50 years, our nation's political, social and economic facets and the needs of the working class have radically changed. Today, people belonging to the Backward, Most Backward, Scheduled Castes and Scheduled Tribes have been forced to do tight rope walking to defend their hard won rights and to ensure due social justice, including minorities and gender rights. The need for transfer of more powers to States by reviewing the division of powers between the States and the Union, to ensure that true and wholesome federalism prevails and the wheels of social justice revolve without any hindrance, is increasing day by day. Hence, this Government urges the Union Government that the Constitution of India should be rewritten afresh, having regard to the changing needs, while preserving the unity, integrity and sovereignty of the nation.

6. In our Constitutional framework, although the responsibility of delivering basic services to the people rests with the States, the powers of taxation are mostly with the Union. We are all aware of the increasing contribution of the service sector in the nation's economy and the rapid growth in revenue from Service Tax being presently levied by the Union Government. During the recent National Development Council Meeting, the Hon'ble Chief Minister Kalaignar M. Karunanidhi had given a call that the power to levy Service Tax should be with the States, given the fact that the huge responsibility of providing the services to the people lies with the State Governments which are closer to the people. This Government urges the Union Government to bring forward necessary Constitutional amendment in this regard.

7. This Government had entered into a dialogue with the Government of Kerala on the Mullai Periyar issue, in line with our policy to maintain cordial relationship with the neighbouring States and as per the advice of Hon'ble Supreme Court. However, there has been no headway in the talks. Therefore, this Government has been forced into a situation, where there is no option but to approach the Hon'ble Supreme Court. This Government has taken all necessary steps to protect the interests of the farmers of the Southern districts, in this critical issue vital for their livelihood.

8. The farmers of Tamil Nadu have been waiting for the last 16 years expecting the final award of the Cauvery Water Disputes Tribunal, which was





constituted during the Prime Ministership of Thiru V.P.Singh, the champion of social justice, accepting the request of Tamil Nadu. This final award is expected to be delivered on the coming 5th February. We hope that this award would render justice and provide livelihood to the farmers of this State.

9. The 11th Five Year Plan is to commence from April 2007. During the discussions held on 9-12-2006 in the National Development Council, on the approach towards the 11th Five Year Plan, it has been decided to implement this plan with the objective of inclusive growth enhancing the quality of life of all sections of the society.

10. The Ninth Five Year plan outlay of Rs.25,000 crores was increased by 60%, to fix the outlay of the Tenth Five Year Plan at Rs.40,000 crores. Increasing the outlay of Tenth Plan by 100%, this Government will strive to implement the Eleventh Five Year Plan with an outlay of Rs.80,000 crores. The objective of this Government would be to achieve an average annual growth rate of 9% in the State's economy during this plan period.

11. After this Government assumed office, crimes and law and order problems have significantly come down, as per comparative data. With a view to strengthening the Police Department, we have constituted the Third State Police Commission on the same lines as the previous two Police Commissions constituted by us. While any force trying to disrupt the law and order in the State will be firmly dealt with, necessary steps will be taken so that the police will function in a professional and people friendly manner.

12. After lending a helping hand to the farmers affected by a series of natural calamities by waiving the Co-operative loans to the tune of Rs.7,000 crores availed by them, we are taking all measures to remove the stagnation that has set in the agricultural sector. It is a matter of great satisfaction that as a result of our efforts, only during the year 2006, for the first time in the recent years, Kuruvai and a record Samba crops have been raised.

13. Having regard to the fact that 56% of the population is dependant on the agricultural sector, we will aim to achieve a minimum of 4% growth in agriculture. We will take appropriate steps to ensure that the youth from families dependant on agriculture are also enabled to reap the benefits of the present boom witnessed in the industrial and service sectors.

14. With a view to ensuring sustainable growth in agriculture and providing regular employment opportunities to the rural poor, it is necessary that the

water resources, indispensable for agriculture, are augmented. In our country, we witness an anomalous situation where one region faces severe drought and another region suffers immense damage due to floods. At the same time, enormous quantity of water flows into the sea every year benefiting none, with only a small quantity being used for agriculture. It is in this context that, in the recent meeting of the National Development Council on 9-12-2006, the Hon'ble Chief Minister had called for the speedy implementation of the project for inter-linking of rivers, which is the need of the hour for water deficit states like Tamil Nadu. This Government will continue to urge the Union Government to implement this scheme expeditiously and make necessary allocation in the 11th Five Year Plan.

15. The negotiations for financial assistance of the World Bank for the Modernisation of Irrigated Agriculture and Management of Water resources have concluded in December, 2006. The approval for this project by the World Bank is expected shortly. This project, which will be executed from 2007-2008, will benefit six lakh hectares of agricultural land through improvements in irrigation facilities. This multi-purpose project will be implemented with the objective of increasing the income of farmers through the coordinated action of the Public Works, Agriculture, Animal Husbandry and Fisheries Departments.

16. Only an increase in the income of farmers can bring about an improvement in the quality of their lives. Towards this objective, the Government will implement schemes to increase the income of farmers by encouraging cultivation of more remunerative horticultural crops and allied activities like animal husbandry and pisci-culture. Thrust will be given to micro-irrigation techniques to promote the judicious use of water.

17. During the first two stages of the scheme of wasteland reclamation and free distribution to the landless agricultural families, 50,000 acres of land have been reclaimed and distributed to the poor agricultural families. This scheme, a harbinger of a silent revolution in the socio-economic life of landless poor farmers, will continue to be implemented.

18. The previous DMK Government had announced and implemented a revolutionary scheme in the year 2000 for grant of house site pattas to poor people who were residing for more than ten years in houses constructed in Government poramboke lands. About two lakh house site pattas were given under this scheme up to 31-3-2001. After considering the requests to revive this scheme which has not been effectively implemented thereafter and issue pattas



to the eligible people, this Government has decided to issue house site pattas within a period of six months from January 2007, to those who are residing in houses constructed in poramboke lands for more than ten years.

19. In the year 2000, this Government had formed the Tamil Nadu Agricultural Labour Welfare Board and launched the Tamil Nadu Agricultural Labourers Social Security and Welfare Scheme, which was subsequently discontinued. Now, this Government has re-introduced this scheme improving it further and has also brought in a separate legislation for the same. Under this scheme, 66 lakh eligible agricultural families have been identified as beneficiaries. They are being issued identity cards and will be provided with various welfare benefits.

20. This Government has alleviated the hunger of the poor by providing rice, the most essential among essential commodities, under the Public Distribution System, at a price of only Rs.2/- per Kg., the lowest amongst all States in the Country.

21. Apart from ensuring universalisation of primary education in Tamil Nadu, the quality of education has also been improved by filling the vacant posts of teachers in time scale of pay as well as improving the school infrastructure. In the coming years, we will plan and implement necessary schemes for achieving the ambitious goal of universal secondary education.

22. In consonance with this Government's policy that all good schemes must continue, the scheme of distribution of free bicycles to school students continues to be implemented by this Government. Under this scheme, 4,84,000 students are being given free bicycles during this academic year at an estimated cost of Rs.103 crores.

23. It was only during the earlier tenure of Kalaignar as Chief Minister, computer education was introduced in all Government Higher Secondary Schools in the academic year 1999-2000. In order to further improve the quality of computer education, this Government will establish computer laboratories in all Government Higher Secondary Schools during the year 2007-2008. Besides this, skill development programmes will be implemented to enable high school drop-outs and those who are not able to pursue higher studies to acquire skill sets necessary for employment.

24. By reviving the 'Varumun Kappom' scheme, this Government has paved the way for the creation of awareness about diseases among people and has

facilitated early detection and cure. We are taking sustained action to reduce infant and maternal mortality rates. The Dr. Muthulakshmi Reddy Maternity Assistance Scheme has become a pioneer for the entire country and is playing a significant role in ensuring the welfare of mothers and children. Under this scheme, which provides Rs.6,000 each to pregnant mothers, during this year 1,75,532 pregnant mothers have benefited so far.

25. We shall strive to achieve a pre-eminent position for Tamil Nadu in industrial development. In addition, we shall promote industries with potential to create jobs. Priority will be accorded to small scale and agro based industries, which generate large employment opportunities. Further, necessary facilities will be made available for the major export oriented industries in the state.

26. As a result of this Government's easy accessibility to the investors and transparent functioning, Tamil Nadu has become the most favoured destination for all investors. Memoranda of Understanding have been signed for six major industrial projects involving an investment of about Rs.2,700 crores, generating direct and indirect employment for 50,000 persons. The decision of major companies like Dell Computers and Samsung to establish their manufacturing units in Tamil Nadu is a major accomplishment of the industrial policy of this Government. This policy will continue to promote employment opportunities for the local youth in the areas where industries are established.

27. As a result of the efforts of Hon'ble Chief Minister and the Hon'ble Union Ministers from Tamil Nadu, the Union Government approved the establishment of the National Automotive Testing and Research and Development Infrastructure Project (NATRIP) at Oragadam near Chennai. The inauguration of this Project on 4th November 2006 by the Hon'ble Prime Minister in the presence of Tmt. Sonia Gandhi, the Chairperson of the United Progressive Alliance, following the prompt action of this Government to allot 303 acres of land, has brought cheer to all of us.

28. The Government of Tamil Nadu has introduced Value Added Tax with effect from 1-1-2007 after consultations with traders and manufacturers. As a result of this, prices of goods and commodities have started coming down. The introduction of this Tax in Tamil Nadu has enabled the products from the State to become competitive not only in the national but also in the international markets.



29. The second phase of the scheme for distribution of free colour television sets, which has been implemented as promised in the election manifesto, will commence from 15th February and 25 lakh colour television sets will be distributed. This scheme will be continued in the coming financial years and colour television sets will be distributed to all families who do not have colour television sets. The transparent procurement of 25 lakh colour television sets at a cost of Rs.685 crores, through international competitive bidding, with the approval of a committee comprising of representatives of political parties in the legislature, has won all round appreciation.

30. This Government has announced distribution of free gas stoves with gas connections for the benefit of women belonging to poor families who do not have gas connection and this scheme has commenced from 14th January on the eve of Pongal. Under this scheme, at a cost of Rs.60 crores during this financial year, three lakh families will be given free gas stoves with free gas connections, with the deposit for the connection being paid by the Government. This scheme will be continued in the coming years also.

31. This Government is taking action to establish many new power generation projects, to meet the growing demand for power arising from the continuous improvement in the standard of living of people. Further, the system of payment of electricity charges will be computerized throughout the state.

32. With a view to addressing the infrastructural needs of Chennai metropolis, this Government is formulating and implementing schemes with a long-term perspective. This Government has taken up two desalination projects to provide a lasting solution to the drinking water problem of Chennai City. Taking into account the future transportation needs, a detailed project report is being prepared for the Metro Rail scheme. Further, road works and construction of fly-overs required for Chennai city are being taken up under the World Bank assisted Tamil Nadu Urban Development Project-III and Jawaharlal Nehru National Urban Renewal Mission.

33. As a result of the efforts taken by this Government, the National Rural Employment Guarantee Programme is being successfully implemented in six districts in Tamil Nadu. We have urged the Union Government to extend this programme to all districts in the State.

34. The scheme of providing assistance up to Rs.300/- per month, to alleviate the sufferings of the unemployed educated youth awaiting jobs after registration

in employment exchanges, has been launched on 11-11-2006 by the Hon'ble Chief Minister. I am happy to inform that 2.50 lakh unemployed youth have so far benefited under this scheme, which would continue to be implemented.

35. After this Government assumed office, steps have been initiated to expeditiously fill up the vacancies in various departments of the Government through the Tamil Nadu Public Service Commission, Teachers Recruitment Board, Uniformed Services Recruitment Board and Employment Exchanges, along with the relaxation of the qualifying age to join Government service by five years, so as to redress the grievances of the unemployed youth who had been denied employment opportunities in Government service during the last five years.

36. Under the scheme of distribution of free sarees and dhoties to poor women and men, 1.64 crore sarees and 1.64 crore dhoties are being distributed on the eve of Pongal at an estimated cost of Rs.256 crores. This scheme would provide employment opportunities to around 50,000 weavers and annually benefit 3.28 crore poor people.

37. Various welfare boards which were established during the last tenure of the D.M.K. Government to ensure the social security of the labourers in un-organised sector were abolished subsequently. The re-establishment of these boards, thus ensuring social security to these labourers is a sterling achievement of this Government. In addition, I am happy to announce that this Government which had recently constituted a separate welfare board for the village temple priests, has also decided to establish a separate welfare board for domestic workers, who at present do not have even a modicum of social security. 11 welfare boards have started functioning so far and various benefits amounting to Rs.19.77 crores have been provided to 84,116 un-organised labourers during this year.

38. In addition to doubling the monthly financial assistance to the disabled from Rs.200/- to Rs.400/-, we have also doubled the financial assistance provided for the marriage of the disabled from Rs.10,000 to Rs.20,000. We are making all efforts to provide adequate educational and employment opportunities to the disabled, so that they can lead a life of self-reliance. A separate welfare board for the disabled would be established to provide social security for them.

39. This Government which cares for the welfare of fishermen, who eke out their livelihood by battling the nature everyday, will establish a separate welfare board for the fishermen, on the same lines as the Welfare Board for Agricultural





Labourers with a view to providing the required social security and will extend all assistance to them.

40. This Government is proud that the Women Self Help Group movement started by this Government in 1989 at Dharmapuri has emerged as a powerful force at the State level. This Government will extend its full support and encouragement for the continued successful functioning of the Women Self Help Groups. This Government will do the needful to further strengthen the Women Self Help Group movement, to make it capable of effecting major changes, not only in their families but also in the entire society through income generating economic activities, rather than being mere thrift entities.

41. This Government has announced that 10,000 Youth Self Help Groups will be formed to create suitable employment opportunities and better the lives of the unemployed youth. 3,500 Youth Self Help Groups have been formed so far under this initiative. Industrial training is being imparted to these youth in collaboration with industries so as to create suitable employment opportunities for them.

42. This Government will strive for the development of the most disadvantaged sections of the society like the poor, downtrodden and differently abled through the 'Vaazhndhu Kattuvom' project. This project at an estimated cost of Rs.717 crores, is being implemented in 15 blocks in 15 Districts in the first phase and will be implemented in 70 blocks in the next 12 months.

43. The Tamil diaspora all over the world whole-heartedly appreciate the unflinching efforts of Hon'ble Chief Minister Kalaignar and his Government to make Mother Tamil ascend the throne in all walks of life by getting Tamil declared as a Classical Language, thus realizing the century-old dream of the Tamils world over and eminent Tamil scholars like Parithimal Kalaignar (Surya Narayana Sastri); ensuring the fulfilment of the demand that the Central Government should establish a Centre at Chennai for the Classical Tamil; enacting a law for making Tamil a compulsory language subject in schools; establishing Scientific Tamil Mandram and making Tamil as a language of the High Court in its proceedings.

44. This Government is deeply concerned about the untold miseries suffered by the Sri Lankan Tamils in recent times without any security for their lives and property. While the letters written by our Hon'ble Chief Minister in this regard to Tmt. Sonia Gandhi, the guiding spirit of the Union Government and the

Hon'ble Prime Minister and their replies are a source of solace and hope to the Sri Lankan Tamils, this Government urges that a peaceful political solution through dialogue, as desired by the Union Government, for this long standing problem of Sri Lankan Tamils should be found.

45. You are aware that it was only this Government, which had enacted the legislation for equal rights to property for women in the year 1989 and provided for reservation of 33% of the seats to them in local bodies for the first time in 1996, thereby protecting gender rights. The legislation for 33% reservation for women in the Parliament and State Legislatures, the next milestone in this progressive march, still remains unrealised. As observed by the Hon'ble Chief Minister in the National Development Council meeting that it would be in the fitness of things if this law is passed at a time when Tmt. Sonia Gandhi is the Chairperson of the United Progressive Alliance, this Government urges the Government of India to expeditiously get this legislation enacted, thereby paving the way to ensure gender equity.

46. This Government, having a long tradition of upholding social justice, shall continue to endeavour for implementation of this policy in all sectors. This Government enacted the law providing for reservation of seats to Scheduled Castes, Scheduled Tribes, Backward Classes, Most Backward Classes and Denotified Communities in unaided non-minority private educational institutions. Thanks to the ceaseless efforts of this Government, a law providing for reservation in higher educational institutions of the Union Government has been enacted, marking one more significant victory in the struggle for social justice. This Government urges the Government of India to take necessary steps for implementation of reservation in private sector establishments.

47. This Government issued a landmark order upholding social justice, by which qualified Hindus belonging to all communities can become the Archakas in Hindu temples, thus removing the thorn in the heart of Periyar and realising his dream. The High Level Committee headed by Justice A.K. Rajan constituted by the Government to make recommendations for implementation of this order has submitted its recommendations to the Government. The Government has examined the report of the High Level Committee and accepted all the recommendations of the Committee and issued orders.

48. The nation and the media have commended the steps taken by this Government, within just eight months of assuming office, to enact several landmark legislations to promote equity and social justice, like the Act for repealing of the ban on conversions, thereby safeguarding the welfare of minorities and promoting communal harmony; repeal of the TESMA, which had become a tool for the dismissal of the Government employees without prior notice; a separate Act for the State to celebrate and honour the birthday of the great leader Kamaraj forever, as the 'Education Development Day' and a Bill to protect the interests of students from rural areas by abolishing the Common Entrance Test for professional courses.





49. This Government is determined to ensure abolition of the abhorrent practice of manual scavenging and rehabilitation of all persons engaged in this vocation. A scheme of providing income earning alternative employments for these persons has been formulated with an outlay of Rs.58.45 crores.

50. This Government with its secular credentials, envisions a society marked by religious harmony and is determined to ensure the same. This Government, deeply committed to the welfare of minorities, will take all necessary measures for their socio-economic betterment, having regard to the 15 Point Programme of the Prime Minister and the recommendations of the Justice Rajindar Sachar Committee relating to representation for minorities, much needed for their development.

51. In addition to announcing a number of concessions for the film industry, this Government has reduced the rates of admission to cinema halls with a view to benefiting the cine goers. This has brought public back to cinema halls to watch movies, thereby leading to the revival of film industry.

52. This Government / is marching ahead, / so majestic with multiple-merits/ and it has poured on people / a rain of benefits /

by waiving debt of many crores / of farmers who toil with their sweat that falls on the soil. /

by reducing at once clear / the price of rice that relieves hunger. /

by offering two eggs a week regular / to school children weaker /

by performing many an achievement /that are unexpected by any inhabitant,/

by giving free colour TVs / to huts of our poor people / to make them know of world affairs in series, /

by giving poor farmers only / the wasteland improved even if it be of palm-size

to make true Bharathi's dream / of kaani land concise, /

by reducing fees that students pay / to make them happy straightaway/

like dancing peacocks / or singing cuckoos in play, /

by giving life to gem-like 'Moovalur Ammaiyar' wedding scheme

with an increase of Rupees 5,000/ bettering its gleam / and Rupees 15,000 as grace gift / to marriages of girls of poverty extreme,

by granting allowance / to jobless educated youth, / every month in continuance / till they get a job /

by granting Rupees 6,000 prompt /to all the women pregnant;

And transfers instant / to teachers by counselling ardent;

And an increase significant / in Old Age Pension amount;/

And jobs up to three lakh youth / in the first phase to count /

Free gas-stove to kitchen airs, / with free gas-connection wares /

for the cooking mothers in tears / to feel joy with cheers;/

And revival at once of Farmers' Shandy/ which in the past was nullified/

to make farmers and consumers feel gratified /

And Incentive to workers busy / with restoration of wages increased /

And other benefits follow like a serial

with Schemes that are highly beneficial...

And I assure —/

that this Government, /

without thinking that it is enough just to reign -/

will undoubtedly continue / doing its Service plain, /

not only in the reign of our Land, /but everywhere—in cities, /

towns, / villages, / nooks and crannies, /

even by crossing hills and forests many, /

on principle / that Service to people is Service to Almighty –/

With my assurance this Government will steadfastly march,





I complete my speech, thanking the Hon'ble Members of this August House for their support, co-operation and critical views for the effective implementation of the various special schemes of this Government, thus lending a helping hand and adding strength to this Government headed by the Hon'ble Chief Minister, Kalaignar M. Karunanidhi and the people belonging to all sections of the society in our beloved State of Tamil Nadu. Vanakkam, Jai Hind.

மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களே,

வணக்கம். 13–வது சட்டப் பேரவையின் நான்காவது கூட்டத் தொடரில் உங்கள் அனைவருக்கும் எனது அன்பான புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்து, இந்த 2007 ஆம் ஆண்டிலும் தமிழக அரசின் சிறப்பு மிக்க திட்டங்களால் மாநிலத்தின் பொருளாதாரம் மேம்பட்டு, மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும் என்ற நம்பிக்கையோடு இவ்வுரையைத் தொடங்குகின்றேன்.

2. தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை உள்ளடக்கிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையே இந்த அரசின் முதல் நிதிநிலை அறிக்கையாக அமையப் பெற்று, பதவியேற்ற எட்டு மாதங்களுக்குள்ளாகவே, "சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்" என்ற இந்த அரசின் உறுதிமொழி மெய்ப்பிக்கப்பட்டுள்ளதை அனைவரும் அறிவீர்.

3. நீண்ட இடைவெளிக்குப் பிறகு, 1996 ஆம் ஆண்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கு முதல் முறையாகத் தேர்தல் நடத்தி, இந்த அமைப்புகளில் மகளிருக்கு 33 சதவிகித இட ஒதுக்கீட்டையும் இந்த அரசு அளித்தது. அந்த உள்ளாட்சித் தேர்தலிலும், அடுத்து 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலிலும், பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டக்காச்சியேந்தல் ஆகிய ஊராட்சிகளில் தாழ்த்தப்பட்டோருக்குப் பல ஆண்டுகளாக மறுக்கப்பட்ட உரிமைகளை இப்போது 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் பெற்றுத் தந்து, அனைத்து சமூகத்தினரும் ஒருங்கிணைந்து முன்னேற்றப் பாதையில் பீடுநடை போட வழிவகுத்த இந்த அரசின் சாதனை, ஜனநாயக வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும். இது ஜனநாயகத்துக்கு மட்டுமன்றி, சமூக நீதிக்கான போராட்டத்திற்கு அனைத்துக் கட்சிகள் கொடுத்த ஆதரவுக்கும் கிடைத்த வெற்றியாகும்.

4. அறிஞர் அண்ணா வகுத்தளித்த மாநில சுயாட்சிக் கொள்கையை முழு முதற்கொள்கையாக மனத்தில் பதித்துச் செயல்பட்டு வரும் இந்த அரசு, உறவுக்குக் கை கொடுத்து, உரிமைக்குக் குரல் கொடுத்து நமது மாநிலத்திற்கு மத்திய அரசிடமிருந்து பெறப்பட வேண்டிய நலன்களையும், உரிமைகளையும் பெறுவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.



5. "இந்திய அரசியல் சட்டம் உயர்ந்தோரால் உருவாக்கப்பட்டது ஆனால், இந்திய அரசியல் சட்டம் பற்றிய மறு சிந்தனை–மறு ஆய்வு–மறு மதிப்பீடு செய்வதற்கான நேரம் வந்துவிட்டது (Stalwarts of this country sat and devised our Constitution. But the time has come for rethinking, reappraisal and revaluation)" என்று 40 ஆண்டுகளுக்கு முன்பே மாநிலங்களவையில் அறிஞர் அண்ணா தமது முதல் உரையிலேயே தெளிவுபடுத்தினார். இந்திய அரசியல் சட்டம் திருத்தப்பட்டு, புதியதாக எழுதப்பட வேண்டும் என்று பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களும், சட்ட விற்பன்னர்களும் கருத்துத் தெரிவித்து வருகிறார்கள். விடுதலை வேட்கை பெருகி, அந்நியர் ஆதிக்கத்தினின்றும் விடுபட்டு, சுதந்திரம் பெற்ற சூழலில் அரசியல் மாமேதை அம்பேத்கர் போன்ற சரித்திரம் படைத்த சான்றோர்களால் நமது இந்திய அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டதெனினும், அதில், அவ்வப்போது அடிப்படைத் தவிர்க்க முடியாத தேவைகளையொட்டி, இதுவரை ஏறத்தாழ 100 முறை திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. மேலும் இப்பரிணாம வளர்ச்சியில் மாற்றமென்பது மாற்ற இயலாதது. பல்வேறு நாடுகளில் பல முறை அரசியல் சட்டங்கள் புதியதாக எழுதப்பட்டுள்ளன. கடந்த 50 ஆண்டுகளில், இந்தியத் திருநாட்டின் அரசியல், சமூக, பொருளாதாரப் பரிமாணங்களும், உழைக்கும் வர்க்கத்தின் தேவைகளும் முற்றிலுமாக மாறிவிட்டன. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின மக்கள் தாம் போராடிப் பெற்றிடும் சமூக நீதியைப் பேணிக் காப்பதற்கும், மேலும் சிறுபான்மையினர் உரிமை மற்றும் பெண்ணுரிமை உள்ளிட்ட சமூக நீதியை உறுதி செய்வதற்கும், கம்பிமீது நடப்பதைப் போன்ற நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். உண்மையான கூட்டாட்சித் தத்துவம் நிலைபெறுவதற்கேற்பவும், தட்டுத்தடங்கலின்றி சமூக நீதிச் சக்கரம் சுழலவும், மாநிலங்களுக்கு அதிகாரப் பரவல், மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கான அதிகாரப் பகுப்புகளில் மறு பரிசீலனை ஆகியவற்றிற்கான அவசியம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எனவே, இவை போன்ற பல்வேறு காரணங்களின் அடிப்படையில் இந்திய ஒற்றுமை, ஒருமைப்பாடு, இறையாண்மை ஆகியவற்றைப் பாதுகாக்கும் வகையில் இந்திய அரசியல் சட்டம் காலத்தின் தேவைக்கேற்பப் புதியதாக இயற்றப்பட வேண்டும் என்று மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

[2007 ஜனவரி 22

6. நமது அரசியலமைப்பில் மக்களுக்குத் தேவையான நற்பணிகளை (Services) ஆற்றும் பொறுப்பு மாநில அரசுகளுக்கே இருந்தாலும், வரி விதிப்பு அதிகாரம் பெருமளவு மத்திய அரசிற்கே உள்ளது. இந்த வகையில், நாட்டின் பொருளாதாரத்தில் நற்பணிகளின் பங்கு தொடர்ந்து அதிகரித்து வருவதையும், தற்போது மைய அரசால் விதிக்கப்படும் நற்பணி வரி (Service Tax) மூலம் கிடைக்கப் பெறும் வருவாய் மிக விரைவாகப் பெருகி வருவதையும் நாம் அனைவரும் அறிவோம். மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் பெரும் பொறுப்பு, மக்களுக்கு நெருக்கமாக உள்ள மாநில அரசுகளுக்கே உள்ளது என்பதைக் கருத்தில் கொண்டு, நற்பணி வரி (Service Tax) விதிக்கும் அதிகாரத்தை மாநில அரசுகளுக்கே அளிக்க வேண்டும் என்று தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதற்குத் தேவையான அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தை மைய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று இவ்வரசு வலியுறுத்துகிறது.

7. அண்டை மாநிலங்களிடையே சுமுகமான உறவு நிலவுவதற்கான இந்த அரசின் அணுகுமுறையின்படியும், உச்ச நீதிமன்றம் தெரிவித்த கருத்தின் அடிப்படையிலும், முல்லைப் பெரியாறு பிரச்சினை குறித்து கேரள அரசுடன் தமிழ்நாடு அரசு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டும் எந்தவித முன்னேற்றமும் ஏற்படாத காரணத்தினால், உச்ச நீதிமன்றத்தை அணுகுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்கு இந்த அரசு தள்ளப்பட்டுள்ளது. தென் மாவட்ட விவசாயிகளின் முக்கிய வாழ்வாதாரம் பற்றியதான இந்தப் பிரச்சினையில், அவர்களின் உரிமைகளை முழுமையாகக் காத்திடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்துள்ளது.

8. தமிழகத்தின் கோரிக்கையை ஏற்று சமூக நீதிக் காவலர் திரு. வி.பி. சிங் அவர்கள் பாரதப் பிரதமராக இருந்தபோது அமைக்கப்பட்ட காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை எதிர்பார்த்து கடந்த 16 ஆண்டுகளாக தமிழ்நாட்டின் விவசாயப் பெருமக்கள் காத்திருக்கும் நிலையில், அந்த இறுதித் தீர்ப்பு, வரும் பிப்ரவரி 5 ஆம் நாள் வழங்கப்படவுள்ளது. இத்தீர்ப்பு, தமிழக விவசாயிகளுக்கு வாழ்வளிக்கும் நல்ல தீர்ப்பாக அமையும் என்று எதிர்பார்க்கிறோம்.

9. பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம் வரும் 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் தொடங்கவுள்ளது. 9–12–2006 அன்று நடந்த தேசிய வளர்ச்சிக் குழுவின் பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் திட்ட அணுகுமுறை விவாதத்தில் அனைத்துப் பிரிவினரின்



2007 ஜனவரி 22]

வாழ்க்கைத் தரமும் உயரும் வகையிலான வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு இத்திட்டத்தைச் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

10. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூபாய் 25,000 கோடியாக இருந்த திட்ட ஒதுக்கீடு, பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூபாய் 40,000 கோடியாக, 60 சதவிகித அளவிற்கு உயர்த்தப்பட்டது. இந்தப் பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டை 100 சதவிகிதம் உயர்த்தி, பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், ரூபாய் 80,000 கோடி அளவிற்கு அறுதியிட்டு, திட்டப் பணிகளைச் செயல்படுத்த இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மாநிலப் பொருளாதாரத்தைச் சராசரியாக ஆண்டொன்றுக்கு 9 சதவிகித அளவிற்கு வளர்ச்சி அடையச் செய்வதே இந்த அரசின் குறிக்கோளாகும்.

11. ஓர் ஒப்பீட்டுப் புள்ளிவிவரத்தின்படி; இந்த அரசு பதவியேற்ற காலந்தொட்டு, குற்றங்கள், சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் ஆகியன வெகுவாகக் குறைந்துள்ளன. காவல் துறையை வலுப்படுத்த ஏற்கெனவே இரண்டு முறை போலீஸ் கமிஷன்கள் அமைத்ததுபோல், தற்போது மூன்றாவது போலீஸ் கமிஷனையும் அமைத்துள்ளோம். சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்க முனையும் தீய சக்திகள் எதுவாயினும் அவற்றை அடக்கி ஒடுக்கவும், அதே நேரத்தில், மக்களின் தோழனாகத் திகழவும் உரிய பணித்திறன் மிக்கதாகக் காவல் துறை விளங்கிட ஆவன செய்யப்படும்.

12. தொடர்ந்து இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளின் சுமார் 7,000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன்களை இரத்துச் செய்து உழவர்களின் வாழ்வில் ஒளியேற்றி, வேளாண் துறையில் ஏற்பட்டுள்ள தேக்கத்தை முழுமையாக அகற்றிடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம். இதன் விளைவாக, கடந்த சில ஆண்டுகளில் 2006 ஆம் ஆண்டில்தான், முதல் முறையாகக் குறுவைப் பயிரும், பெரும் சாதனையாகச் சம்பாப் பயிரும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது என்பது மிகுந்த மகிழ்ச்சியை அளிப்பதாகும்.

13. 56 சதவிகித மக்கள் வேளாண் துறையைச் சார்ந்துள்ள சூழ்நிலையில், வரும் ஆண்டுகளில் வேளாண்மைத் துறை குறைந்தபட்சம் 4 சதவிகித வளர்ச்சியை எட்டுவதை இலக்காகக் கொண்டு செயல்படுவோம். விவசாயத்தை நம்பியுள்ள குடும்பங்களில் உள்ள இளைஞர்கள், தொழில் துறை மற்றும் நற்பணித் துறை (Service Sector) ஆகியவற்றில் இன்று காணப்படும் உயர் வளர்ச்சியின பயன்களை அடைய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

14. நிலையான வேளாண் வளர்ச்சியை உறுதி செய்து, கிராமப்புற ஏழை எளியவர்க்கு தொடர்ந்து வேலைவாய்ப்புகளை உருவாக்க, வேளாண் தொழிலுக்கு இன்றியமையாத் தேவையான நீர் ஆதாரங்கள் மேம்படுத்தப்பட வேண்டும். நமது நாட்டில், ஒரு பக்கம் வாட்டும் வறட்சியும், மறு பக்கம் வெள்ளப் பெருக்கினால் கடும் சேதமும் ஏற்பட்டு வருவதையும், அதே நேரத்தில், ஆண்டுதோறும் பெருமளவு நீர் யாருக்கும் பயன்படாமல் கடலில் கலந்து, சிறிதளவே கழனிக்குப் பயன்படும் நிலையையும் நாம் காண்கிறோம். இச்சூழலில், தமிழ்நாடு போன்ற நீர்ப் பற்றாக்குறை உள்ள மாநிலங்களின் வேளாண் வளர்ச்சிக்குத் தலையாய தேவையான தேசிய நதி நீர் இணைப்புத் திட்டத்தை விரைந்து செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 9-12-2006 அன்று நடந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார். இத்திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்தவும், 11—வது ஐந்தாண்டுத் திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு செய்யவும் மத்திய அரசை இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

15. பாசன வேளாண்மையை நவீனப்படுத்தவும் மற்றும் நீர்வள ஆதாரங்கள் மேலாண்மையைச் செயல்படுத்தவும் உலக வங்கியின் நிதியுதவி குறித்த பேச்சுவார்த்தைகள் 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிவுற்றுள்ளன. இந்தத் திட்டத்திற்கான உலக வங்கியின் ஒப்புதல் விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது. 2007-2008 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின்கீழ், நீர்ப்பாசன வசதிகள் மேம்படுத்தப்பட்டு, 6 இலட்சம் எக்டேர் விவசாய நிலங்கள் பயனடையும். பொதுப்பணித் துறை, வேளாண்மைத் துறை, கால்நடைத் துறை, மீன்வளத் துறை போன்றவை ஒருங்கிணைந்து செயலாற்றி, விவசாயிகளின் வருவாயைப் பெருக்கும் வகையில் இந்தப் பல்நோக்குத் திட்டம் செயல்படுத்தப்படும்.

16. விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்றால், அவர்களின் வருவாய் உயர வேண்டும். இந்த நோக்கத்தோடு, தோட்டப் பயிர்கள் போன்ற அதிக வருவாய் ஈட்டக்கூடிய பயிர்களை விளைவித்தல் மற்றும் வேளாண்மை சார்ந்த கால்நடை மற்றும் மீன் வளர்த்தல் ஆகியவற்றின் மூலம், வேளாண் பெருமக்களின் வருமானம் பெருகும் வகையில் அரசின் திட்டங்கள் செயல்படுத்தப்படும். நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் நோக்குடன் நுண்ணிய நீர்ப்பாசன முறைகளுக்கு (Micro Irrigation) ஊக்கம் அளிக்கப்படும்.

17. நிலமற்ற விவசாயக் குடும்பங்களுக்கு தரிசு நிலத்தைப் பண்படுத்தி இலவசமாக வழங்கும் திட்டத்தின் முதல் இரண்டு கட்டங்களில்,





ஐம்பதாயிரம் ஏக்கர் நிலங்கள் பண்படுத்தப்பட்டு, ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. நிலமற்ற ஏழை விவசாயிகளின் சமூகப் பொருளாதார வாழ்வில் ஒரு மௌனப் புரட்சியை ஏற்படுத்தக்கூடிய இத்திட்டம், தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

18. கடந்த திமுகழக ஆட்சிக் காலத்தில், பத்து ஆண்டுகளுக்கு மேலாக அரசுப் புறம்போக்கு நிலங்களில் வீடுகளைக் கட்டிக் குடியிருக்கும் ஏழை எளியவர்களுக்குப் பட்டா வழங்க 2000 ஆம் ஆண்டில் ஒரு புரட்சிகரமான திட்டம் அறிவிக்கப்பட்டு, 31-3-2001 வரை சுமார் இரண்டு இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. அதன் பின்னர் முனைப்புடன் செயல்படுத்தப்படாமல் இருந்த இத்திட்டத்தை மீண்டும் செயல்படுத்தி, தகுதியுள்ளவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரும் கோரிக்கைகளைப் பரிசீலித்து, அவ்வாறு வீடுகள் கட்டிக் குடியிருப்பவர்களுக்கு, 2007 சனவரித் திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க இந்த அரசு ஆணையிட்டுள்ளது.

19. 2000 ஆம் ஆண்டில், இந்த அரசால் தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நல வாரியம் ஏற்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்ட தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம் இடையில் நிறுத்தப்பட்டு, தற்போது இந்த அரசால் மேம்படுத்தி அறிமுகப்படுத்தப்பட்டு, இத்திட்டத்திற்கான தனிச் சட்டமும் இயற்றப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ், தகுதியுள்ள 66 இலட்சம் விவசாயக் குடும்பங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. பல்வேறு நலத் திட்ட உதவிகள் தொடர்ந்து அவர்களுக்கு அளிக்கப்படும்.

20. அத்தியாவசியப் பொருள்களில் முதன்மைப் பொருளான அரிசியை, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத குறைந்த விலையில், பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக, கிலோ ஒன்றுக்கு ரூபாய் 2/— என்ற விலையில் வழங்கி, இந்த அரசு ஏழை எளியோரின் பசிப்பிணி போக்கியுள்ளது.

21. தமிழ்நாட்டில் அனைத்துக் குழந்தைகளுக்கும் தொடக்கக் கல்வி கிடைக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளபோதிலும், ஆசிரியர் காலிப் பணியிடங்கள் காலமுறை அடிப்படையில் நிரப்பப்பட்டு, பள்ளிக் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு, கல்வியின் தரமும் உயர்த்தப்பட்டுள்ளது. இனி வரும் ஆண்டுகளில், அனைவருக்கும் உயர்நிலைக் கல்வி கிடைக்கச் செய்யும் உன்னத இலக்கை அடையத் தேவையான திட்டங்களை வகுத்துச் செயல்படுத்துவோம்.

[2007 ஜனவரி 22

22. நல்ல திட்டங்கள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என்ற இந்த அரசின் கொள்கையின்படி, பள்ளி மாணவ, மாணவியருக்கு இலவச மிதிவண்டி வழங்கும் திட்டத்தை இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் இந்தக் கல்வியாண்டில், ரூபாய் 103 கோடி மதிப்பீட்டில், சுமார் 1,81,000 மாணவ, மாணவியருக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

23. முதலமைச்சர் கலைஞர் கடந்த முறை ஆட்சியில் இருந்தபோதுதான், 1999–2000 ஆம் கல்வியாண்டில் அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினிக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. கணினிக் கல்வியின் தரத்தை மேலும் உயர்த்தும் வகையில், 2007-2008 ஆம் கல்வியாண்டில் அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினி ஆய்வகம் அமையப் பெற ஆவன செய்யப்படும். இது மட்டுமன்றி, உயர்நிலைக் கல்வியில் இடையில் நின்று போனவர்கள் (drop-outs) மற்றும் உயர் கல்வி தொடர இயலாதோர் வேலைவாய்ப்புகளுக்குத் தேவையான தகுதிகளைப் பெறும் வகையில் அவர்களுக்குத் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் (skill development programmes) செயல்படுத்தப்படும்.

24. 'வருமுன் காப்போம்' திட்டத்தை மீண்டும் செயல்படுத்தி, மக்களிடையே நோய்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், ஆரம்ப நிலையிலேயே நோய்களைக் கண்டறிந்து குணப்படுத்தவும் இந்த அரசு வழிவகை செய்துள்ளது. குழந்தைகள் மற்றும் பேறுகாலத் தாய்மார்கள் இறப்பு விகிதங்களைக் குறைக்கத் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறோம். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம் இந்நாட்டிற்கே முன்னோடித் திட்டமாகத் திகழ்ந்து தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் நலனைப் பாதுகாப்பதில் ஒரு பெரும்பங்கு வகிக்கிறது. ரூபாய் 6,000 வீதம் நிதியுதவி வழங்கப்படும் இந்தத் திட்டத்தின்கீழ், இந்த ஆண்டில் இதுவரை 1,75,512 கர்ப்பிணித் தாய்மார்கள் பயனடைந்துள்ளனர்.

25. தொழில் வளர்ச்சியில் தமிழகத்தை முன்னணி மாநிலமாக முன்நிறுத்துவதோடு, வேலைவாய்ப்புகளை உருவாக்கக்கூடிய தொழில்களுக்கு மேலும் ஊக்கம் அளிக்கப்படும். அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கும் சிறு தொழில் மற்றும் வேளாண் சார்ந்த தொழில்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மேலும், மாநிலத்தின் முக்கிய ஏற்றுமதித் தொழில்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்து தரப்படும்.



2007 ஜனவரி 22]

26. தொழில் முனைவோர் எளிதில் அணுகக்கூடிய மற்றும் வெளிப்படையான இந்த அரசின் செயல்பாட்டின் விளைவாக, தொழில் முனைவோர் அனைவரையும் ஈர்க்கும் முதன்மை மாநிலமாகத் தமிழகம் மாறியுள்ளது. சுமார் 50,000 பேர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பை அளிக்கக்கூடிய, ரூபாய் 2,700 கோடி மதிப்பீட்டிலான ஆறு பெரும் தொழில் திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. டெல் கம்ப்யூட்டர் மற்றும் சாம்சங் போன்ற இத்தகைய பெரும் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தங்களின் தொழிற்சாலைகளை நிறுவ முன்வந்துள்ளதானது, இந்த அரசின் தொழில் கொள்கைக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். தொழிற்சாலைகள் நிறுவப்படும் பகுதிகளில் வசிக்கும் இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகள் கிடைக்கும் வகையில் இந்த அரசின் தொழில் கொள்கை தொடரும்.

27. மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாண்புமிகு மத்திய அமைச்சர்களின் முயற்சிகளின் பயனாக தேசிய வாகனப் பரிசோதனை, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக் கட்டமைப்புத் திட்டத்தை (NATRIP) சென்னையை அடுத்துள்ள ஒரகடத்தில் அமைக்க மத்திய அரசு இசைவளித்தது. இது தொடர்பாக விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டு, 303 ஏக்கர் நிலம் மாநில அரசால் ஒதுக்கப்பட்டு, ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவரான திருமதி சோனியா காந்தி அவர்கள் கலந்துகொண்டு, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் இத்திட்டம் கடந்த நவம்பர் திங்கள் 4 ஆம் நாள் தொடங்கி வைக்கப்பட்டது என்பது நம் அனைவருக்கும் மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாகும்.

28. வணிகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுடன் கலந்து பேசி, தமிழக அரசு மதிப்புக் கூட்டு வரியை 1-1-2007 முதல் நடைமுறைப்படுத்தியுள்ளது. இதன் விளைவாக, பொருட்களின் விலை குறைந்து வருகிறது. தமிழ்நாட்டில் இந்த வரி அறிமுகப்படுத்தப்பட்டதால், மாநிலத்தின் உற்பத்தியாளர்களுடைய உற்பத்திப் பொருள்கள் தேசிய அளவில் மட்டுமன்றி, சர்வதேசச் சந்தையிலும் போட்டியிடக்கூடிய திறன் பெறும்.

29. தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு தொடங்கப்பட்டுள்ள இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், இரண்டாவது கட்டமாக 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பிப்ரவரி 15 முதல் வழங்கப்படும். வரும்

நிதியாண்டுகளிலும் இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாத அனைத்துக் குடும்பங்களுக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும். சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழுவின் ஒப்புதல் பெற்று, ரூபாய் 685 கோடி மதிப்புள்ள 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை ஒளிவுமறைவற்ற முறையில் (Transparent) சர்வதேச ஒப்பந்தப்புள்ளி மூலம் கொள்முதல் செய்துள்ளது அனைவரின் பாராட்டையும் பெற்றுள்ளது.

30. ஏழை எளிய, நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் பயன் பெற, சமையல் எரிவாயு இணைப்பு இல்லாத குடும்பங்களுக்கு இலவசமாக எரிவாயு அடுப்பும், சமையல் எரிவாயு இணைப்பும் வழங்கப்படும் என இந்த அரசு அறிவித்தது. பொங்கல் திருநாளையொட்டி, சனவரித் திங்கள் 11 ஆம் நாள் முதல் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் இந்த நிதியாண்டில், ரூபாய் 60 கோடி செலவில், 3 இலட்சம் குடும்பங்களுக்கு இலவச எரிவாயு அடுப்பும், இலவச எரிவாயு இணைப்பும் வழங்கி, அதற்கான வைப்புத் தொகையையும் அரசே செலுத்தும். வரும் ஆண்டுகளிலும் இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

31. மக்களின் தொடர்ந்து உயர்ந்து வரும் வாழ்க்கைத் தரத்திற்கு ஏற்ப அதிகரித்து வரும் மின் சக்தித் தேவையைக் கருத்தில் கொண்டு, புதிய மின் சக்தி உற்பத்தி நிலையங்கள் பல அமைக்க இவ்வரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும், மாநிலம் முழுவதும் மின் கட்டணம் செலுத்தும் முறை கணினிமயமாக்கப்படும்.

32. சென்னை மாநகரின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதில் இந்த அரசு தொலைநோக்குப் பார்வையுடன் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. சென்னை மாநகரின் குடிநீர்ப் பிரச்சினைக்கு நீண்ட காலத் தீர்வாக, கடல் நீரைக் குடிநீராக்கும் இரு திட்டங்களை இவ்வரசு மேற்கொண்டுள்ளது. எதிர்காலப் போக்குவரத்துத் தேவைகளைக் கருத்தில் கொண்டு மெட்ரோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும் உலக வங்கி உதவியுடனான தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-III மற்றும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனரமைப்புத் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் சென்னை மாநகருக்குத் தேவையான சாலைகள் மற்றும் மேம்பாலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





33. இந்த அரசு எடுத்த முயற்சிகளின் பயனாக, தமிழ்நாட்டில் தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் ஆறு மாவட்டங்களில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்துமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளோம்.

34. படித்து வேலையின்றி இருக்கும் இளைஞர்களின் துயர் துடைக்கும் வகையில், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்திருப்போருக்கு, மாதமொன்றுக்கு ரூபாய் 300 வரையில் உதவித் தொகையாக வழங்கும் திட்டம் 11–11–2006 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து நடைபெறும் இத்திட்டத்தின்கீழ் இதுவரை 2.50 இலட்சம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பயனடைந்துள்ளனர் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

35. இந்த அரசு பதவியேற்றவுடன், கடந்த ஐந்தாண்டுகளில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு அரசுப் பணிகளில் வேலைவாய்ப்புகள் கிடைக்காதிருந்த நிலையை அகற்றும் வண்ணம் அரசுப் பணியில் சேருவதற்கான வயது உச்சவரம்பை ஐந்து ஆண்டுகள் தளர்த்தி, மாநில அரசிலுள்ள பல்வேறு பணிகளிலுள்ள காலியிடங்களை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம், சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம மற்றும் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் ஆகியவற்றின் மூலம் விரைந்து நிரப்பிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

36. ஏழை மகளிருக்கும், ஆடவருக்கும் இலவச சேலை, வேட்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், பொங்கலையொட்டி, 1.64 கோடி சேலைகளும், 1.64 கோடி வேட்டிகளும், ரூபாய 256 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டு வருகின்றன. சுமார் 50,000 நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதோடு, 3.28 கோடி ஏழை மக்களுக்கு இத்திட்டம் ஆண்டுதோறும் பயன் தரும்.

37. அமைப்புசாராத் தொழிலாளர்களுக்குச் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் கடந்த திமுகழக ஆட்சியில் அமைக்கப்பட்டு, பின்னர் கலைக்கப்பட்ட பல்வேறு நல வாரியங்கள் தற்போது மீண்டும் அமைக்கப்பட்டு, அவர்களுக்கான சமூகப் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது இந்த அரசின் பெரும் சாதனையாகும். மேலும்,

அண்மையில் கிராமக் கோயில் பூசாரிகளுக்கெனத் தனி நல வாரியம் அமைத்துள்ள இந்த அரசு, எந்தவிதச் சமூகப் பாதுகாப்புமின்றி இருக்கும் வீட்டுப் பணியாளர்களுக்கும் (domestic workers) தனி நல வாரியம் அமைத்திட முடிவு செய்துள்ளது என்பதைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். 11 நல வாரியங்கள் செயல்படத் தொடங்கி, இந்த ஆண்டில் இதுவரை 84,116 அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு சுமார் ரூபாய் 19.77 கோடி மதிப்பிலான பல்வேறு நல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

38. ஊனமுற்றோருக்கு மாதந்தோறும் வழங்கப்படும் உதவித் தொகையை ரூபாய் 200/–லிருந்து ரூபாய் 400/– ஆக இரு மடங்கு உயர்த்தி வழங்கியதோடு மட்டுமன்றி, ஊனமுற்றோரைத் திருமணம் செய்ய முன்வருபவர்களுக்கு அளிக்கப்படும் திருமண உதவித் தொகையையும் ரூபாய் 10,000/–லிருந்து ரூபாய் 20,000/– ஆக இரு மடங்காக உயர்த்தியுள்ளோம். சுயமாக வாழத் தேவையான கல்வி வாய்ப்புகளும், வேலைவாய்ப்புகளும் ஊனமுற்றோருக்குக் கிடைத்திட ஆவன செய்வோம். ஊனமுற்றோருக்கு முழுமையான சமூகப் பாதுகாப்பை அளிக்கும் வகையில் அவர்களுக்கெனத் தனி நல வாரியம் ஒன்று அமைக்கப்படும்.

39. நாள்தோறும் இயற்கையோடு போராடி வாழ்க்கைப் பயணம் நடத்தும் மீனவர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள இந்த அரசு, அவர்களுக்குத் தேவையான சமூகப் பாதுகாப்பை வழங்கும் வகையில், விவசாயத் தொழிலாளர்கள் நலன் காக்க அமைக்கப்பட்டுள்ள நல வாரியம் போன்றே, தனி மீனவர் நல வாரியம் அமைத்து, அதைப் போன்றே அனைத்து உதவிகளையும் வழங்கும்.

40. 1989 ஆம் ஆண்டு இந்த அரசால் தருமபுரி மாவட்டத்தில் தொடங்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழு இயக்கம், இன்று மாநில அளவில் மகத்தான ஒரு சக்தியாக உருவெடுத்துள்ளது குறித்து இந்த அரசு பெருமிதம் கொள்கிறது. மகளிர் சுய உதவிக் குழுக்கள் தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட முழு ஆதரவையும், ஊக்கத்தையும் இந்த அரசு அளிக்கும். வெறும் சிக்கனச் சேமிப்பு அமைப்புகளாக மட்டுமின்றி, வருவாய் ஈட்டும் பொருளாதார நடவடிக்கைகளை (Economic activities) மேற்கொண்டு, அவர்தம் குடும்பங்களிலும், ஒட்டுமொத்தச் சமுதாயத்திலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் மகளிர் சுய உதவிக் குழு இயக்கம் மேலும் வலுப்பெற அரசு ஆவன செய்யும்.

41. வேலைவாய்ப்பில்லாத இளைஞர்களுக்குத் தகுந்த வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி, அவர்களது வாழ்க்கைத் தரத்தை



மேம்படுத்த, 10,000 இளைஞர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும் என்று இந்த அரசு அறிவித்துள்ளது. இதன்படி, 3,500 இளைஞர் சுய உதவிக் குழுக்கள் இதுவரை அமைக்கப்பட்டுள்ளன. இந்த இளைஞர்களுக்குத் தகுந்த வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும்வண்ணம், தொழில் நிறுவனங்களுடன் இணைந்து தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

42. ஏழை எளியோர், ஊனமுற்றோர் போன்ற சமுதாயத்தின் மிகவும் பின் தங்கிய பிரிவினரின் முன்னேற்றத்திற்கு 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டத்தின்மூலம் இவ்வரசு வழிவகை செய்யும். தற்போது முதல் கட்டமாக பதினைந்து மாவட்டங்களில் தொடங்கப்பட்டு, பதினைந்து ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் ரூபாய் 717 கோடி மதிப்பீட்டிலான இந்த 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டம், அடுத்த பன்னிரண்டு மாதங்களில் 70 ஒன்றியங்களில் செயல்படுத்தப்படும்.

43. ஒரு நூறு ஆண்டுகளுக்கும் மேலாக உலகத் தமிழர்களும் பரிதிமாற் கலைஞர் (சூரியநாராயண சாஸ்திரி) போன்ற தமிழறிஞர்களும் கண்டு வந்த கனவை நனவாக்கிடும் வண்ணம், தமிழைச் செம்மொழி என அறிவித்திடச் செய்து, சென்னையில் செம்மொழித் தமிழுக்கெனத் தனியே மத்திய அரசின் நிறுவனமொன்றை உருவாக்கிட வேண்டும் எனும் கோரிக்கையை வெற்றி பெறச் செய்தும், பள்ளிகளில் தமிழைக் கட்டாயப் பாடமாக்கிடச் சட்டமியற்றியும், அறிவியல் தமிழ் மன்றம் அமைத்தும், சென்னை உயர் நீதிமன்றத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் தமிழை வழக்கு மொழியாக்கியும், அன்னைத் தமிழை அனைத்து நிலைகளிலும் அரியணையேற்றுவதில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞரும், அவரது தலைமையிலான இந்த அரசும் அயராது முயன்று வருவது கண்டு, தமிழ்கூரு நல்லுலகம் அகம் மிக மகிழ்ந்து பாராட்டி வருகிறது.

44. அண்மைக் காலத்தில் இலங்கையில் வாழும் தமிழர்கள தங்கள் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு இன்றிச் சந்தித்து வரும் சொல்லொணாத் துயர் குறித்து இந்த அரசு ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. மத்திய அரசின் வழிகாட்டியாகத் திகழும் திருமதி சோனியா காந்தி அம்மையார் அவர்களுக்கும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது பற்றி எழுதியுள்ள கடிதங்கள், அக்கடிதங்களுக்கு அவர்கள் அளித்த பதில்கள் இலங்கைத் தமிழர்களுக்கு ஆறுதல் அளிப்பதாகவும், நம்பிக்கை ஊட்டுவதாகவும் இருக்கும் வேளையில், பல ஆண்டுகளாக நிலவி வரும் இலங்கைத் தமிழர்களின் இந்த வாழ்வாதாரப் பிரச்சினைக்கு வழிகாண

[2007 ஜனவரி 22

இந்திய அரசு விரும்புகின்ற வகையில், பேச்சுவார்த்தைகள் மூலமாக அமைதியான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று இந்த அரசு வலியுறுத்துகிறது.

45. 1989 ஆம் ஆண்டு பெண்களுக்குச் சமச் சொத்துரிமை அளிக்கும் சட்டத்தை இயற்றியும், 1996 ஆம் ஆண்டில் முதன் முதலாக பெண்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் 33 சதவிகித இட ஒதுக்கீட்டை வழங்கியும் பெண்ணுரிமை காத்தது இந்த அரசுதான் என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த முற்போக்குப் பயணத்தின் இலக்கான, நாடாளுமன்றம் மற்றும் சட்டப் பேரவைகளில் மகளிருக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு குறித்த சட்ட முன்வடிவு இன்னும் நிறைவேற்றப்படாத நிலையில் உள்ளது. தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே எடுத்துரைத்தவாறு, திருமதி சோனியா காந்தி அவர்கள் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவராக இருந்திடும் இந்தக் காலக்கட்டத்திலேயே இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால், அது மிகப் பொருத்தமான நிகழ்வாக அமையும் என்பதைக் கருத்தில் கொண்டு, இது குறித்து விரைந்து முடிவெடுத்து, பெண்ணுரிமையினை நிலைநாட்ட வழிவகுக்கும்படி இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

46. சமூக நீதியை நிலைநாட்டுவதில் நீண்ட நெடுங்காலப் பாரம்பரியம் கொண்ட இந்த அரசு, இக்கொள்கையை அனைத்துத் துறைகளிலும் முழுமையாகச் செயல்படுத்தத் தொடர்ந்து பாடுபடும். இந்த அரசு பதவியேற்றவுடன், சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் அல்லாத அரசு நிதியுதவி பெறாத அனைத்துத் தனியார் சுயநிதிக் கல்வி நிறுவனங்களில், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோருக்குக் கட்டாய இட ஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை இயற்றியது. மேலும், மத்திய அரசின் உயர் கல்வி நிறுவனங்களில் இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்பது குறித்து, தொடர்ந்து மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக, இதற்கான சட்டம் மத்திய அரசால் நிறைவேற்றப்பட்டது சமூக நீதிக்கான போராட்டத்திற்குக் கிடைத்த மற்றுமொரு மகத்தான வெற்றியாகும். தனியார் நிறுவனங்களிலும் இட ஒதுக்கீட்டு முறை பின்பற்றப்படத் தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று இந்த அரசு வலியுறுத்துகிறது.

47. இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர், தந்தை பெரியார் அவர்களின் நெஞ்சிலுள்ள முள்ளை அகற்றி அவரது கனவினை நனவாக்கும் வகையில், இந்துக்களில் தகுதி பெற்ற அனைத்துச் சாதியினரும் இந்து சமயத்



2007 ஜனவரி 22]

திருக்கோயில்களில் அர்ச்சகர் ஆகலாம் என்ற சமத்துவக் கொள்கையை நிலைநாட்டும் ஆணையை வெளியிட்டது. இதனை நடைமுறைக்குக் கொண்டு வருவது தொடர்பாக ஆலோசனைகள் வழங்குவதற்காக நீதியரசர் ஏ.கே. இராசன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழு தனது பரிந்துரைகளை அரசுக்கு வழங்கியது. இவ்வறிக்கையை ஆய்வு செய்து, உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகள் அனைத்தையும் ஏற்று அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

48. சிறுபான்மையினர் நலம் காத்து, மத நல்லிணக்கம் பேண கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் நீக்கம், முன்னறிவிப்பின்றி அரசு அலுவலர்களைப் பணி நீக்கம் செய்ய வகை செய்த டெஸ்மா சட்டம் இரத்து, பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளை 'கல்வி வளர்ச்சி நாள்' ஆக, காலமெல்லாம் இம்மாநிலம் கொண்டாடிப் போற்றிடுவதற்கான தனிச் சட்டம், தொழிற்கல்விப் பட்டப் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வை நீக்கி, கிராமப்புற மாணவர்களின் நலன் காப்பதற்கான சட்ட முன்வடிவு என, பதவியேற்ற முதல் எட்டு மாதங்களிலேயே, சமத்துவமும், சம நீதியும் தழைத்திட, பார் போற்றும் பல சட்டங்களை இயற்றி இந்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை நாடும், ஏடும் பாராட்டுகின்றன.

49. மனிதக் கழிவை மனிதனே எடுத்துச் சுமக்கும் கொடுமையை அறவே அகற்றி, இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் அனைவருக்கும் மறுவாழ்வு அளிக்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. இந்தத் தொழிலில் ஈடுபட்டு வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளவர்கள் வருவாய் ஈட்டக்கூடிய மாற்றுத் தொழில்களை மேற்கொள்ள ரூ.58.15 கோடி மதிப்பீட்டில் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

50. மத நல்லிணக்கச் சமுதாயம் காண விரும்பும் இந்த மதச்சார்பற்ற அரசு, மத நல்லிணக்கத்தைப் பேணிப் பாதுகாக்க உறுதி பூண்டுள்ளது. சிறுபான்மையினர் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள இந்த அரசு, பாரதப் பிரதமரின் பதினைந்து அம்சத் திட்டத்திலும், நீதியரசர் இராஜேந்தர் சச்சார் குழுவின் பரிந்துரைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ள சிறுபான்மையினர் முன்னேற்றத்திற்கான பிரதிநிதித்துவம் குறித்து ஆய்ந்து, அவர்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

51. திரையுலகுக்குப் பல சலுகைகளை அறிவித்ததோடு மட்டுமன்றி, திரைப்படங்களைக் காண வருவோர் பயன்பெறும் வகையில்

திரையரங்குகளின் கட்டணத் தொகையை இந்த அரசு குறைத்துள்ளது. இந்தக் கட்டணக் குறைப்பு, பொது மக்கள் மீண்டும் திரையரங்குகளுக்குச் சென்று திரைப்படங்களைக் கண்டுகளிக்க வகை செய்ததோடு, திரைப்படத் தொழிலுக்கும் புத்துயிர் அளித்துள்ளது.

52. நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபடும் உழவர்;
பட்ட கடன் பல கோடி முழுவதையும் தீர்த்து;
பசி தீர்க்கும் உணவுக்கும் அரிசி விலை அக்கணமே குறைத்து—
வாரம் இரு முட்டை சிறார்க்கு எனும் திட்டத்தை அளித்து;
யாரும் எதிர்பாரா பற்பல சாதனைகள் படைத்து
நாளும் நானிலச் செய்திகளை அறிந்திடவே நம்மவர்
வாழும் குடில்களிலும் வண்ணத் தொலைக்காட்சி அமைத்து,
கையகலத் தரிசு நிலமெனினும் கண்டிப்பாய் ஏழை உழவர்க்கே அளித்து,
காணி நிலம் வேண்டும் என்ற பாரதியின் கனவு பலித்திட வைத்து
களிப்பிலாடும் மயிலாய் கானம் பாடும் குயிலாய் மகிழ்ந்திட
கல்விக்கூடப் பிள்ளைகட்குக் கட்டணச் சுமை இறக்கி;
மூதாட்டி பெயரால் இருந்த முத்தான திருமணத் திட்டம்—
அதற்கும் உயிர் கொடுத்து ஐயாயிர ரூபாய் சேர்த்து
பரிவுடனே ஏழைப் பெண் மண விழாவுக்குப் பதினைந்தாயிரம் தந்து,
படித்து விட்டு வேலையின்றிக் காத்திருக்கும் இளைஞர்க்கு;
பணி கிடைக்கும் வரையில் திங்கள்தோறும் பண உதவி புரிந்து
கருவுற்ற பாவையர்க்குக் கருணைத் தொகை ஆறாயிரம்;
கலந்தாய்வு முறையினிலே இட மாற்றம் ஆசிரியர்க்கு!
முதியோர் உதவித் தொகை மேலும் அதிகரிப்பு,
முதற்கட்டமாக மூன்று இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு;
அடுக்களையில் தாய்மார்கள் அக மகிழ



எரிவாயு இணைப்புடனே இலவச அடுப்பு;
உதவாதினி உழவர் சந்தை என உதறியதை—
உடனடியாகப் புதுப்பித்து உழவர், நுகர்வோரை வாழ்வித்து;
ஊதியம், உழைப்போர்க்கு உயர்த்தி, ஊக்கப்படுத்தி
போதிய பயன்களனைத்தும் மழையெனப் பொழிந்துள்ள இந்த அரசு,
ஆண்டு கொண்டிருந்தால் மட்டும் போதுமென்றெண்ணாமல்
யாண்டும் நமது பணி நாட்டாட்சியில் மட்டுமன்றி;
நாடு, நகரம், பேரூர், சிற்றூர் — காடு மேடு கடந்து —
பட்டி தொட்டி எங்கணும்

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு எனத் தொடர்ந்து நடக்கும் எனும் உறுதியோடு, இந்தச் சிறப்புறு திட்டங்கள் செம்மையாய் நிறைவேற ஆதரவளித்தும், ஒத்துழைத்தும் இடித்துரைக்கும் கருத்துகளை எடுத்துரைத்தும், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையிலான இந்த ஆட்சிக்குக் கரம் கொடுத்து உரம் அளிக்கும் அவையில் உள்ளோர்க்கும், அருமைத் தமிழ்நாட்டின் அனைத்துப் பிரிவு மக்களுக்கும் நன்றி கூறி, இவ்வுரையை நிறைவு செய்கிறேன். வணக்கம், ஜெய்ஹிந்த்.

---

227442

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.